Registered as Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 36 கதிர் : 108 | ஞாயிற்றுக்கிழமை | பங்குனி 1 ஆம் நாள் 14 மார்ச் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 24+24 விலை : ரூ.40 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

ஜெனிவா விவகாரம் குறித்து

# மோடி - கோத்தா முக்கிய பேச்சு!

கொழும்பு, மார்ச் 14

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணை விவகாரம் சூடுபிடித்துள்ள நிலையில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுடன் தொலைபேசியில் நேற்று பேச்சு நடத்தினார். 23 ➤

## மாகாணசபைத் தேர்தலை உடனே நடத்த உத்தரவு

ஜனாதிபதி கோத்தாபய விடுத்தார்

கொழும்பு, மார்ச் 14

மாகாணசபைத் தேர்தலை எவ்வளவு விரைவாக நடத்த முடியுமோ அவ்வளவு விரைவாக நடத்துமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பணிப்புரை விடுத்துள்ளார். மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்குரிய சட்டத்திருத்தங்களை உடனடியாக மேற்கொண்டு தேர்தலை நடத்தவேண்டும் என்று அவர் அறிவுறுத்தி 23 ➤

முச்சந்தி முரளி




## தமிழகத்துடன் தாயகத்தை நெருக்கமுறச் செய்வோம்!

யாழ். –சென்னை விமான சேவை
காங். – காரைக்கால் கப்பல் சேவை
மன். – இராமேஸ்வரம் கப்பல் சேவை

விரைவில் ஆரம்பமாகும் என்று தூதுவர் உறுதியளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 14

தமிழகத்துடன் வடக்கு - கிழக்கு மக்களை மேலும் நெருக்கமடையச் செய்யும் வகையில், யாழ்ப்பாணம் 23 ➤

## புலமைப்பரிசில், உயர்தர பரீட்சைகள் ஒத்திவைப்பு?

*பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தகவல்*

கொழும்பு, மார்ச் 14

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகள் 23 ➤



ஈழத் தமிழர் விவகாரத்தில்

## இந்தியாவின் நிலைப்பாடு எப்போதும் ஒன்றுதான்!

*தமிழ்த் தேசியக் கட்சிப் பிரதிநிதிகளிடம் யாழில் வைத்துக் கூறினார் தூதுவர் பாக்லே*

யாழ்ப்பாணம், மார்ச் 14

ஈழத் தமிழர்கள் தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாடு மாறவில்லை. அன்று எத்தகைய நிலைப்பாட்டில் இந்தியா இருந்ததோ, இன்றும் அதே நிலைப்பாட்டில்தான் இருக்கின்றது. இவ்வாறு இலங்கைக் 23 ➤

## விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பயனின்றி சாவு!

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்ப்பாணம் நல்லூர் வீதியில் கடந்த 11ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார். சந்தியாப்பிள்ளை பீற்றர் கிறிஸ்ரோ லோகாஸ் (வயது- 59) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையைச் சேர்ந்தவர். அவர் கடந்த 11ஆம் திகதி வீதியால் சென்றுகொண் 23 ➤

## மேலும் 7 பேருக்கு வடக்கில் தொற்று

யாழ்ப்பாணம், மார்ச் 14

வடக்கு மாகாணத்தில் மேலும் 7 பேருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டது. அவர்களில் நால்வர் யாழ்ப்பாணத்தையும், இருவர் முல்லைத்தீவையும், ஒருவர் மன்னாரையும் சேர்ந்தவர்கள் 23 ➤

## தீவகத்தில் காலூன்றும் சீனா நகர்வை அவதானிக்கிறோம்!

கூறுகின்றார் இந்தியத் தூதுவர்

யாழ்ப்பாணத்தின் மூன்று தீவுகளில் இரட்டை மின் உற்பத்தித் திட்டத்துக்கு சீன நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருகின்றது என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்தார். (தொடர்புடைய செய்தி: பக்கம் 4)

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்

அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.70,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே

• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு

செலான் டிக்க்கடன் 011 200 88 88 செலான் வங்கி
Brand Finance Rating "A +" Fitch Rating: "A" (lka)

Fun BLASTER இப்போது புதுப்பொழிவுடன்

மாதம் முழுவதும் Fun ஆக இருக்க மிகச்சிறந்த UNLIMITED பக்கேஜ்

Facebook WhatsApp மற்றும் YouTube
உடன் மேலதிக டேட்டா*



ரூ.347/- மட்டுமே
மேலதிக வரிகள் இல்லை

செயற்படுத்தல் ரீலோட், MyDialog App அல்லது #678# மூலம்

*1GB Anytime Data மற்றும் 1GB Free Night Bonus உள்ளடக்கப்பட்டுள்ளது.

Dialog
எதிர்காலம் இன்றே.

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




# ஐ.நா. இணை அனுசரணையிலிருந்து விலகியமையைக் கண்டுகொள்ளவில்லை

## வெதும்புகிறார் கோத்தாபய

கொழும்பு, மார்ச் 14

இராணுவத்தினருக்கும், நாட்டின் இறையாண்மைக்கும் பெரும் அடியைக் கொடுத்த ஜெனிவா மனித உரிமைகள் சபையில் இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துதல் தொடர்பான முன்மொழிவுக்கு வழங்கப்பட்ட இணை அனுசரணை நீக்கிக் கொள்ளப்பட்டது. குறுகிய காலத்தில் நாட்டுக்காக எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கைகள் குறித்து எவரும் பேசுவதில்லை. இவ்வாறு ஆதங்கம் வெளியிட்டுள்ளார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச.

ஆளும் கட்சியின் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்களுடன் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில்,

நாட்டின் தேசியத்துக்கும் பாதுகாப்புக்கும் முன்னுரிமை அளித்து கட்சியின் கொள்கைகள் மற்றும் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றி, கடந்த 15 மாதங்களில் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஒரு தேசியவாத அரசு ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அதனை வீழ்த்துவதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சக்திகள் செயற்பட்டன. மஹிந்த ராஜபக்சவை வெளியேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட தவறான பரப்புரைகளுக்கு பலியாகி கடந்த ஐந்து ஆண்டுகளில் நாடு எவ்வளவு தூரம் பின்னடைந் துள்ளது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அதன் காரணமாக முழு நாட்டுக்கும், பிக்குகளுக்கும் முப்படையினருக்கும் ஏற்பட்ட அவல நிலையை மக்கள் அறிந்திருக்கிறார்கள்.



இந்தச் சக்திகள் அரசின் தற்போதைய திட்டங்களை நாசப்படுத்த மீண்டும் முயற்சிக்கின்றன. அதற்குப் பலியானால் ஏற்படும் விளைவுகள் குறித்து பொதுமக்களுக்கு அறிவுறுத்துங்கள்.

முப்படையினருக்கும் நாட்டின் இறையாண்மைக்கும் பெரும் அடியைக் கொடுத்த ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துதல் தொடர்பான முன்மொழிவுக்கு வழங்கப்பட்ட இணை அனுசரணை நீக்கிக் கொள்ளப்பட்டது.

குறுகிய காலத்தில் நாட்டுக்காக எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கைகள் குறித்து எவரும் பேசுவதில்லை. எவ்வாறாயினும், மக்கள் முன் வைக்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் மற்றும் கொள்கைகளைப் பாதுகாக்கும் அதே வேளையில் நாட்டின் முன்னேற்றத்துக்கும் உறுதி பூண்டுள்ளேன், என்று ஜனாதிபதி கோத்தாபய தெரிவித்தார் என அந்த அறிக்கையில் உள்ளது. (ஒ.5)

# புலிகளை மீளுருவாக்க மீண்டும் முயற்சியாம்!!!

## வடக்குக்கு வருகிறார் சரத் வீரசேகர

கொழும்பு, மார்ச் 14

இறுதிக்கட்டப் போரின் போது தப்பிச் சென்ற விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள், வடக்கிலுள்ள தமிழ் அரசியல்வாதிகளுடன் இணைந்து விடுதலைப் புலிகள் அமைப்பை மீளுருவாக்கம் செய்ய முயற்சிக்கின்றனர்.

இது தொடர்பில் நேரடியாக ஆராயவும், பாதுகாப்புத் தரப்பினருக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்கவும் வடக்கு மாகாணத்துக்கு குறிப்பாக யாழ்ப்பாணத்துக்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர செல்லவுள்ளார் என, கொழும்பு சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (ஒ.5)

# புர்காவுக்குத் தடை: கையெழுத்திட்டார் அமைச்சர் வீரசேகர



கொழும்பு, மார்ச் 14

இலங்கையில் புர்காவை (முஸ்லிம் பெண்கள் முகத்தை மூடி அணியும் ஆடை) தடை செய்வதற்கான அமைச்சரவைப் பத்திரத்தில், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர நேற்றுமுன்தினம் கையெழுத்திட்டுள்ளார். இந்தத் தகவலை அவரே வெளியிட்டுள்ளார்.

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழு புர்கா தடை குறித்த பரிந்துரையை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.இ)

உங்களை தேடி நாங்கள் வருகின்றோம்
18 மார்ச் 2021 காலை 10 மணி
SLT மண்டபம் யாழ்ப்பாணம்

உங்கள் கனவுகளுக்கு அப்பால் செல்லுங்கள்

சிறப்பு தேர்ச்சியான உள்ளூர் நிறுவனத்திலிருந்து உலக தரம் வாய்ந்த தகுதிகள்

SLT பயிற்சி நிலையம்

- தகுதி வாய்ந்த விரிவுரையாளர்கள்
- புதிய உபகரணங்களுடன் நவீன ஆய்வகம்
- நூலகம், சிற்றுண்டிச்சாலை, விளையாட்டு, பொழுதுபோக்கு மற்றும் விடுதி வசதிகள்
- இலகு கொடுப்பனவு திட்டங்கள்

உங்களுக்கு எம்மிடமிருந்து

BACHELOR OF ENGINEERING (B.Eng - UK)

Top 10 in the Guardian University League Table UK 2020

UGC RECOGNIZED

B.Eng (Hons) in Electrical & Electronic Engineering
B.Eng (Hons) in Electronics & Communication Engineering
B.Eng (Hons) in Electronics & Computer Engineering

PEARSON BTEC

Level 5 HND Diploma in Electrical and Electronic Engineering
Level 5 HND Diploma in Computing

OTHER COURSES

Certificate in Applied Information Technology (CAIT)
Advanced Certificate in Contact Centre Profession
Telecommunication Technician (NVQ 3/4)
Optical Fibre Courses
Datacom Courses
Electrical & Electronics Courses



Pearson | BTEC   University of Hertfordshire UH

வெலிசறை   மொறட்டுவை   கண்டி

துரித அழைப்பு: 0112 956 633
யாழ்ப்பாணம் SLT: 0212 222 231
slttc@sltnet.lk
www.slt.lk/training

www.sltmobitel.lk   SLTMOBITEL


# அம்பிகையின் கோரிக்கைக்கு ஓரணியில் வலுச்சேர்ப்போம்

## ரெலோ இளைஞர் அணி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 14

பிரிட்டன் அரசிடம் நான்கு கோரிக்கைகளை முன்வைத்து உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுவரும் அம்பிகைக்கு ஓரணியில் வலுச் சேர்ப்போம் என்று ரெலோ இளைஞர் அணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ரெலோவின் இளைஞர் அணித் தலைவர் சபா குகதாஸ் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

இறுதிப்போரின் போது இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட தமிழின அழிப்புக்கு நீதி கிடைக்க இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்தல் உட்பட நான்கு கோரிக்கைகளை முன்வைத்து பிரிட்டனில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் அம்பிகையின் அகிம்சை வழிப் போராட்டத்துக்கு வலுசேர்க்க வேண்டும் என்று அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

வெளியான ஐ.நா. மனித உரிமைகள் சபை ஆணையாளரின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை படித்து மனத் தைரியம் அடைந்த எம் இனத்திற்கு பூச்சிய அறிக்கையும் இறுதி வரையும் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளன.

ஆனாலும் தொடர்ந்தும் எமக்கான நீதி கிடைக்கும் வரை சர்வதேச நீதிப் பொறிமுறைகளை தீர்மானமாக எடுக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கோ குறாப் நாடுகளிடம் கோரிக்கை முன் வைத்துள்ளோம் என்றுள்ளது.

(ஐ-20)


AL - 2023

கொழும்பில் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை

கணித, உயிரியல் பிரிவு

தமிழ்மொழிமூலம் & ஆங்கிலமொழிமூலம்

ZOOM ஊடாக

ஆரம்பம்: 14.03.2021

உயிரியல்
- V.Umashanger B.Sc., PGDE
- R.Mahima B.Sc., PGDE

இணைந்த கணிதம்
- S.Premnath B.Sc.
- V.Rajaratnam B.Sc., PGDE

இரசாயனவியல்
- V.Parameshwaran B.Sc., PGDE
- S.V.Selvaranjan B.Sc.,PGDE

பௌதிகவியல்
- S.R.Jeyakumar B.Sc., PGDE
- S.Srikanagasabai M.Sc., PGDE

ICT
- R.Mathisugan B.Sc.

Noble Academy
6C Ramakrishna Terrace, Wellawatte Colombo - 06.
011 236 3831, 011 236 0848

Whatsapp: 076 758 0659 (Message only)



அபான்ஸ் எலைட் காட்சியறைகள் தினமும் இரவு 9.00 மணிவரை திறந்திருக்கும்.

Abans

உங்களுக்கு தேவையான நேரத்தில் தூய்மையான காற்றை அனுபவியுங்கள்.

பன்முக கொப்பர் மோட்டர் பேன்கள் அபான்ஸ் இடமிருந்து மட்டுமே!

BEAT THE HEAT



Cu

பெடெஸ்டல் பேன்

ABANS AFS101 ரூ. 6,990 விசேட விலை ரூ. 6,490

ABANS RDT-401 ரூ. 6,490

mistral MSF1651M ரூ. 10,990 விசேட விலை ரூ. 9,490

MITSUBISHI ELECTRIC LV16-GU-P-CYRD ரூ. 18,490

டேபிள் பேன்

ABANS AFT201 ரூ. 6,990 விசேட விலை ரூ. 6,390

mistral MTF16E20 ரூ. 7,390 விசேட விலை ரூ. 6,590

வோல் பேன்

mistral MWF1601M ரூ. 9,990 விசேட விலை ரூ. 8,990

ABANS YF-WA1602R ரூ. 5,190 விசேட விலை ரூ. 4,490

இண்டஸ்ட்ரியல் பேன்

ABANS DFP600-T-II ரூ. 18,490 விசேட விலை ரூ. 16,490

ABANS 50T-S ரூ. 17,990 விசேட விலை ரூ. 15,990

மிஸ்டிங் பேன்

PRODUCES WATER-COOLED MISTY AIR.

ABANS YD-207 ரிமோர்ட் கண்ட்ரோல் சகிதம் ரூ. 17,990 விசேட விலை ரூ. 15,990

சீலிங் பேன்   2 வருட உத்தரவாதம்

ACL CABLES ACL56A ரூ. 7,090

orient electric NEW AIR PLUS ரூ. 6,790 விசேட விலை ரூ. 5,990

0115 999 000   BuyAbans.com   நாடளாவிய அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் பெற்றிடுங்கள்.   * நிபந்தனைகள் உண்டு.   Abans

# தீவகத்தில் காலூன்றும் சீனா: நகர்வுகளை அவதானிக்கிறோம்

## கூறுகிறார் இந்தியத் தூதுவர்

**யாழ்ப்பாணம், மார்ச் 14**

**யாழ்ப்பாணத்தின் மூன்று தீவுகளில் இரட்டை மின் உற்பத்தித் திட்டத்துக்கு சீன நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருகின்றது என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.**

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியை, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே நேற்றுக் காலை சந்தித்தார். கொக்குவிலில் உள்ள தனியார் விடுதியில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

சந்திப்புத் தொடர்பில் கூட்டணியின் இணைப் பேச்சாளரும், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவருமான சுரேஸ் பிரேமசந்திரன் தெரிவித்ததாவது,

யாழ்ப்பாணத்தின் மூன்று தீவுகளில் சீன நிறுவனம் கால் பதிக்கவுள்ளமையை இந்தியத் தூதுவருக்குச் சுட்டிக்காட்டினோம். இதனைத் தடுப்பதற்கான அதிகாரம் எம்மிடம் இல்லை. ஆனாலும் சீனா அங்கு கால் பதிப்பது தமிழ் மக்களதும் இந்தியாவினதும் பாதுகாப்புக்கு கேள்விக்குறியே. இதனை அவருக்குச் சுட்டிக்காட்டினோம். இந்த விடயங்களை இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருகிறது என அவர் எமக்குத் தெரிவித்தார், -என்றார். (ஒ-5)

# தூதுவருடனான சந்திப்பில் தொலைபேசிக்கு அனுமதியில்லை



யாழ்ப்பாணம், மார்ச் 14

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயுடனான சந்திப்புக்குச் சென்றவர்கள், தமது கைத்தொலைபேசிகளைக் கொண்டு செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை.

கொக்குவிலில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்றுக் காலை சந்திப்புக்கள் நடைபெற்றன.

பல கட்சிகள் மற்றும் சிவில் சமூகத்தினரை தனித் தனியாக இந்தியத் தூதுவர் சந்தித்தார்.

இந்த சந்திப்புக்களுக்குச் சென்றவர்களது கைத் தொலைபேசிகள் அங்கு வாங்கி வைக்கப்பட்டன. பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன என்று கூறப்படுகின்றது. (ஒ-5)

# யாழில் கொரோனா அபாயம்; சுகாதார நடைமுறைகள் கட்டாயம்

## மாவட்டச் செயலர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 14

கொரோனா பரவலின் தற்போதைய அபாயகர நிலையில் பொதுமக்கள் தமது அன்றாடச் செயற்பாடுகளைக் கட்டாயமாக சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி முன்னெடுக்க வேண்டுமென யாழ். மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற தற்போதைய கொரோனா நிலைமைகள் தொடர்பாக ஆராயும் விசேட கூட்டத்தின் முடிவுகள் பற்றி கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது; இந்த வருடத்தின் கடந்த மூன்று மாதங்களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனாத் தொற்று உறுதியானவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது. கடந்த ஓகஸ்ட் மாதத்தில் இருந்து இதுவரை யாழ்ப்பாணத்தில் 401 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 204 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

அத்துடன், கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டோருடன் தொடர்புடைய ஆயிரத்து 756 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

இந்நிலையில், பொதுமக்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும். சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாதோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டுள்ள சில அறிவுறுத்தலுக்கமைய யாழ்ப்பாண மாவட்டத்தில் வழிபாட்டுத் தலங்களில் 50 பேர் மட்டும் கலந்துகொள்ள முடியும். அதேபோல், மரண வீடுகளில் 25 பேரையும் சமூகக் கூட்டங்களில் 150 பேரும் மாத்திரமே அனுமதிப்பது எனவும் திருமண நிகழ்வில் 150 பேராக மட்டுப்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஏனைய களியாட்ட நிகழ்வுகள் தடை செய்யப்பட்டுள்ளன. இருந்தபோதிலும் விளையாட்டு நிகழ்வுகள், ஏனைய நிகழ்வுகளுக்கு கட்டுப்பாட்டுடன் அனுமதி வழங்கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போதைய காலப்பகுதி ஒரு அபாயகரமான காலப்பகுதியாகம். எனவே, பொதுமக்கள் பீதி அடையாமல் தமது அன்றாடச் செயற்பாடுகளை சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி செயற்படுத்துவதன் மூலம் யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனாத் தொற்று நிலைமையைக் கட்டுப்படுத்த முடியும் -என்றார்

(ப)

# யாழ்ப்பாணம் விமான நிலையத்தில் மேலும் ஒரு முனையம் அபிவிருத்தி

## இந்தியத் தூதுவர் உறுதியளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் புதிதாக ஓர் முனையத்தை (ரேமினல்) இந்தியா அபிவிருத்தி செய்யவுள்ளது என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பக்லே தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியை, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே நேற்றுக் காலை சந்தித்தார்.

சந்திப்புத் தொடர்பில் கூட்டணியின் இணைப் பேச்சாளரும், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவருமான சுரேஸ் பிரேமசந்திரன் தெரிவித்ததாவது,

அபிவிருத்தி நடவடிக்கைகள் பலவற்றுக்கு இந்தியா உதவும் என்று தூதுவர் சந்திப்பின்போது தெரிவித்தார். குறிப்பாக காங்கேசன்துறை துறைமுகம் அபிவிருத்தி செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும், 3 ஆண்டுகளில் அவை நிறைவுறும் எனவும் சுட்டிக்காட்டினார்.

காங்கேசன்துறை துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்ட பின்னர் 4 ஆயிரம் தொடக்கம் 5 ஆயிரம் தொன் எடையுள்ள கப்பல்கள் வந்து செல்லக் கூடியதாக இருக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

பலாலியில் அமைந்துள்ள சர்வதேச விமான நிலையம் விரைவில் இயங்கத் தொடங்கும். சென்னையுடனான நேரடி விமான சேவை விரைவில் மீண்டும் ஆரம்பமாகும் என்று கூறிய தூதுவர், அந்த விமான நிலையத்தில் இன்னோர் முனையத்தை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியா உதவும் எனவும் குறிப்பிட்டார், -என்றார். (ஒ-5)

# அசாத் சாலிக்கு எதிராக நேற்றும் சிலர் முறைப்பாடு

கொழும்பு, மார்ச் 14



தேசிய ஒற்றுமை முன்னணியின் தலைவர் அசாத் சாலிக்கு எதிராக நேற்றும் சிலர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடுகளைப் பதிவு செய்துள்ளனர்.

பௌத்த தகவல் மையத்தின் பணிப்பாளர் அங்குலுகல்லே சிறி ஜினானந்த தேரர் மற்றும் தேசிய முன்னணியின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மொஹமட் முஸம்மில் ஆகியோரே முறைப்பாடுகளைப் பதிவு செய்துள்ளனர்.

முஸ்லிம் சட்டம் தொடர்பில் அண்மையில் அசாத் சாலி தெரிவித்த கருத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரியே இவர்களால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ற-இ)

## இந்தியத் தூதருடனான சந்திப்புக்கு

# இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தவிசாளர்கள் மாத்திரம் அனுமதி

யாழ்ப்பாணம், மார்ச் 14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், இலங்கைக்கான இந்தியத் தூதுவருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றபோது, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி யின் தவிசாளர்கள் மாத்திரமே அனுமதிக்கப்பட்டனர். கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ அமைப்பின் தவிசாளர் சந்திப்பில் கலந்து கொள்ளச் சென்றிருந்தபோதிலும் அவர் வெளியேற்றப்பட்டார்.


கொக்குவிலில் உள்ள விருந்தினர் விடுதியில் நேற்று இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மற்றும் வன்னித் தேர்தல் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சோ.சேனாதிராசா, வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான பா.கஜதீபன், ச.சுகிர்தன், கே.சயந்தன் மற்றும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த தவிசாளர்களான சோ.சுகிர்தன், அ.ஜெபநேசன், த.ஐங்கரன், க.சுரேன், அ.வேளமாலிகிதன், திருமதி சிவமங்கை ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் பங்கேற்பதற்கு ரெலோவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தி.நிரோஷ் கலந்து கொண்டார்.

அவர் கூட்டம் இடம்பெறும் அறையில் அமர்ந்த பின்னர், அவருக்கு அழைப்பு இல்லை என்று கூறி அங்கிருந்து வெளியேற்றப்பட்டார். (ஒ-5)




இப்புத்தாண்டில், நேர்த்தியின் பிரதிபலிப்பு
உங்கள் இல்லத்தில் செழித்தோங்கட்டும்.

இப்புத்தாண்டில் 30% கழிவுடன் உங்கள் வீட்டின் களிப்பை இரட்டிப்பாக்குங்கள். Rocell டைல்ஸ், குளியலறை மற்றும் உதிரிப்பாகங்கள். நாடு முழுவதிலுமுள்ள Rocell காட்சியறைகள் மற்றும் விற்பனை நிலையங்களில் கிடைக்கும்.

DentsuGrant

Rocell
என்றும் இனிமை

www.rocell.com | அழையுங்கள் 076 6 22 33 44 | காட்சியறைகள் வாரத்தின் 7 நாட்களும் திறந்திருக்கும்.

TILES | BATHWARE | ACCESSORIES

## உடையார்கட்டுச் சந்தியில் பொதுமலசலகூடம் தேவை

### புதுக்குடியிருப்பு சபை உறுப்பினர் அமர்வில் வலியுறுத்து

முல்லைத்தீவு, மார்ச் 14

முல்லைத்தீவு, உடையார்கட்டு சந்திப் பகுதியில் மலசலகூடம் ஒன்றை அமைக்க வேண்டும் என்று புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் ஆறுமுகம் ஜோன்சன் சபை அமர்வில் பிரேரணையை முன் வைத்துள்ளார்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் சபை அமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதிலேயே அவர் இந்தப் பிரேரணையை முன்வைத்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது உடையார்கட்டு சந்திப் பகுதியில் மக்கள் அதிக அளவில் ஒன்றுகூடுகின்றனர். அங்கு மலசல கூடங்கள் அமைக்கப்பட வேண்டும்.

அதேவேளை, மூங்கிலாறு கிராமத்திலுள்ள பிரதேச சபையின் வீதிகளுக்கு புதிய பெயர்களை அறிமுகம் செய்தல் வேண்டும். புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு உட்பட்ட மாங்குளம் நகரம் உட்பட பல இடங்களில் பொது மலசலகூடம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் தொடர்ச்சியாக முன்வைக்கப்படு கின்றன. பொது இடங்களில் போதியளவு மலசலகூட வசதிகள் இல்லை என்ற குறைபாடுகள் தொடர்ச்சியாக பொது மக்களால் தெரிவிக்கப்பட்டு வருகின்றன-என்றார். (ரு-13)

## மூளாய் கிராம அலுவலருக்கு "சமூகஜோதி" விருது



மூளாய், மார்ச் 14

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மூளாய் ஜே/171 கிராம அலுவலரான சி.சிவரூபனுக்கு சமூகஜோதி விருதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், உடுவில் உள்ள குபேரா கலைமன்றம் கடந்த சிவராத்திரி தினத்தன்று அந்த விருதை வழங்கியது.

வடக்கு மாகாண மக்களின் கலை, பண்பாடு, கலாசாரம் மற்றும் சமூக வளர்ச்சிக்காக இன,மொழி, சமய பேதம் கடந்து வடக்கு மாகாண ரீதியாக சேவையாற்றி வரும் மக்கள் நலன்பேணும், சமூக சேவையாளர்கள், கலைஞர்களைக் கௌரவிக்கும் விதமாகவே சிவரூபனுக்கு அந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

மூளாய் கிராம அலுவலான சிவரூபன், கிராம மக்களின் தேவைகளைப் புரிந்து அவர்களுக்கு ஏற்றால்போல் தன்னாலான முழு உதவிகளையும், சேவைகளையும், நேரகாலம் பார்க்காது திறம்பட ஆற்றிவருகிறார் என்று அந்தப் பகுதி மக்களால் தெரிவிக்கப்பட்டது. (ய)

வன்னி கோப் நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் மக்கள் சேவை மன்றத்தின் ஒழுங்குபடுத்தலின் கீழ் புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட பொருண்மியம் நலிந்த 26 மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. (ச-222)



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## இந்தியப் பருப்பு இனியும் வேகுமா ?

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தனது நேர்மையையும் பற்றுறுதியையும், தனக்கான பொறுப்புணர்வையும் வெளிப்படுத்த இறுதியானதும், அரியதானதுமான ஒரு வாய்ப்பு இந்தியாவுக்கு கிட்டியுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக புதிதாக முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணையே அந்த வாய்ப்பு. இதன்போது எடுக்கப்போகும் நிலைப்பாடுதான், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியாவின் உள்ளார்ந்த மனநிலையை பட்டவர்த்தமாக்கப்போகின்றது.

போர்க் காலத்திலும் சரி, போருக்குப் பின்னரான இதுநாள் வரையிலுமான தசாப்தத்துக்கும் மேலான காலப் பகுதியிலாயினும் சரி, இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இந்தியா சுயநலம் சார் அரசியல் நகர்வுகளையே மேற்கொண்டது. அது இரட்டைவேட அணுகுமுறையிலான மூலோபாயத்துடனேயே இலங்கைத் தமிழர் பிரச்சினையைக் கையாண்டது என்பது எல்லோரும் அறிந்ததே.

ஒரு புறம் தமிழ் மக்கள் மீது அக்கறையும் பரிவும் கொண்டதாகக் காட்டிக்கொண்டு, மறுபுறம் இலங்கை அரசைத் தனது பிடிக்குள் வைத்திருக்கவும், தனது அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்ளவதற்குமாகவே இந்தியாவின் வியூகங்கள் அமைந்திருந்தன. குறிப்பாக இலங்கையின் ஆட்சியாளரை, சர்வதேச அழுத்தங்கள் மற்றும் நெருக்கடிகளில் இருந்து பாதுகாக்கும் நோக்கம் இந்தியாவுக்கும் இருந்தது. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியா கையாண்ட தொலைநோக்குச் சிந்தனையற்ற நகர்வுகளால் இலங்கைத் தமிழ் மக்கள் ஏமாற்றத்தையும், தோல்வியையும் சந்திக்க வேண்டியிருந்தது.

மறுபுறத்தில் இந்தியா எந்த இலங்கையை இதுநாள்வரை போர்க் குற்றங்களில் இருந்து பொத்திப் பாதுகாத்து வந்ததோ, அதே இலங்கை இப்போது சீனாவின் செல்லப் பிள்ளையாக மாறிவிட்டது. இந்தியாவின் பரம எதிரியான சீனாவுடன் இலங்கை இணைந்து செயற்படுவது இந்திய நலனுக்கும் ஆபத்தானது. இந்த நிலையில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்படவுள்ள புதிய பிரேரணையில் இருந்து இலங்கையைப் பாதுகாக்க சீனா தனது முழு வலுவையும் பிரயோகிக்கும். அப்படியாயின் தனது ஜென்ம விரோதியோடு இலங்கைக்காக இந்தியா கைகோர்க்கப் போகின்றதா? அல்லது இதுதான் சீனாவின் மூக்குடைக்க சரியான சந்தர்ப்பம் என்று தமிழர் பக்கம் நின்று ஒரே கல்லில் இரு மாங்காய்களை இந்தியா அடிக்கப் போகின்றதா? என்பதே இப்போதைய கேள்வி.

வெறுமனே அறிக்கைகள் மூலமான ஆதரவு மற்றும் அனுதாப வார்த்தைகளால் சமாளித்துக்கொண்டும், வீடு, கட்டடம், கலாசார பிணைப்பு நடவடிக்கைகள் போன்ற நிவாரண மற்றும் சலுகைகளை வழங்குவதன் மூலமும் தமிழ் மக்களையும் மௌனிகளாக்கி விட முடியும் என இந்தியா நம்பக்கூடும். ஆனால் அப்படி நம்புவதைவிட அடிமுட்டாள்தனம் வேறெதுவுமில்லை. இந்தியாவின் ஒவ்வொரு நகர்வுக்குப் பின்னாலும் இருக்கும் இராஜதந்திரங்கள் ஈழத் தமிழர்கள் எல்லோருக்கும் அத்துப்படி. எனவே அவ்வளவு சுலபத்தில் சலுகைகளையும், உதவிகளையும் கொடுத்து ஈழத் தமிழர்களைப் பேய்க்காட்ட நினைக்கும் பருப்பு இனியும் இங்கு வேகாது.

இதேவேளை, இந்தியா இறுதி நேரத்தில் தனக்கு கைகொடுத்து ஆதரிக்கும் என இலங்கை வெளிப்படையாகவே அறிவித்துள்ளது. இந்தியாவை பக்தி சிரத்தையுடன் நம்பும் தமிழ்த் தலைமைகள் பிரிட்டன் முன்வைக்கும் புதிய தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவை அளிக்க வேண்டும் என வலியுறுத்துகிறார்கள். ஆயினும் இந்தியா நடுநிலை வகித்து வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாது நழுவிவிடும் என அரசியல் ஆய்வாளர் கள் சிலர் ஊகங்களின் அடிப்படையில் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் இந்தியா எந்த வகையில் தனது முகத்தை அடையாளப்படுத்தப் போகிறது?

இந்தியா ,தமிழ் மக்கள் சார்பான நியாயத்தைப் புரிந்துகொண்டு அவர்களது நம்பிக்கைகளைக் காப்பாற்றி அவர்களுக்கான நீதியைக் கோரும் வகையில் பிரேரணையை ஆதரிக்கப் போகிறதா? அல்லது மீண்டும் அரசுக்கு வாய்ப்பளிக்கும் கால நீடிப்பு போன்ற ஏதாவது நகர்வுக்கான முன்னெடுப்பு ஆலோசனையை முன்வைக்கப் போகிறதா? அல்லது நடுநிலை வகிப்பு என்ற மதில் மேல் பூனை என்ற நிலைப்பாட்டை கையாளப் போகிறதா?

பின்னிரு தெரிவுகளில் எதனை இந்தியா கையாண்டாலும் அது தமிழருக்குச் செய்யும் வரலாற்றுத் துரோகமாகவே காலத்தால் பதிவு செய்யப்படும். இந்தியா தன்னை திரிசங்கு நிலைக்கு தக்க வைக்க நினைத்தால் இந்தியாவின் மீதான ஈழத் தமிழரின் நம்பிக்கை குறித்த இறுதி அத்தியாயம் எழுதப்படும் வரலாற்று நிகழ்வும் நடந்தே தீரும்.




## சஹ்ரானை வழிநடத்திய நௌபருடன் தொடர்பை பேணிய அரசியல்வாதிகள் யார்?

### விசாரணை ஆரம்பம் என்கிறார் சரத்

**கொழும்பு, மார்ச் 14**

**ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரியென குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அடையாளம் காணப்பட்டுள்ள மொஹமட் இப்ராஹிம், மொஹமட் நௌபருடன் தொடர்பைப் பேணிய அரசியல்வாதிகளைக் கண்டறிவதற்கான விசேட விசாரணை ஆரம்பமாகியுள்ளது.**

புலனாய்வுப் பிரிவினர் மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஆகியோராலேயே இவ் விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

மொஹமட் நௌபர் என்பவர் நீண்டகாலமாக கட்டாரில் இருந்துள்ளார். இதன்போது இலங்கை உட்பட இதர நாடுகளில் உள்ள அரசியல்வாதிகளுள் யார், யார் இவருடன் தொடர்பைப் பேணியுள்ளனர் என்பதை கண்டறிவதே இதன் நோக்கம்.

2016 ஆம் ஆண்டு முதலே நௌபருடன், சஹ்ரானுக்குத் தொடர்பு ஏற்பட்டுள்ளது. அன்று முதல் ஈஸ்டர் தாக்குதல் இடம்பெறும் வரை சஹ்ரானை கருத்தியல் ரீதியில் இவரே வழிநடத்தியுள்ளார் என்று விசா



ரணைகளில் தெரியவந்துள்ளது என அமைச்சர் சரத் வீரசேகர அண்மையில் நாடாளுமன்றத்தில் அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ,44)

## சஹ்ரான் சி.ஐ.டியின் உளவாளி அல்ல!

### சரத் வீரசேகர தெரிவிப்பு

ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரான், புலனாய்வுப்பிரிவின் உளவாளி அல்ல என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

சஹ்ரான் அரச உளவாளி எனவும், அவருக்கு சம்பளம்கூட வழங்கப்பட்டுள்ளது எனவும் வெளியாகும் தகவல்கள் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

சஹ்ரான் புலனாய்வுப் பிரிவின் உளவாளி அல்ல எமது கொடுப்பனவு பட்டியலிலும் அவர் இல்லை. சஹ்ரான் தொடர்பில் ஏதாவது தகவல் இருந்தால் உடனடியாக புலனாய்வுப் பிரிவினருக்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். அதைவிடுத்து வதந்திகளுக்கு உயிரூட்டக்கூடாது.

புலனாய்வுப் பிரிவினர், சஹ்ரானிடமிருந்து எந்தவொரு தகவலையும் பெறவில்லை. புலனாய்வு அதிகாரிகளுக்கும் தொடர்பு இருக்கவில்லை. எனவே, இத்தகைய குற்றச்சாட்டுகளை நிராகரிக்கின்றோம்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க, புலனாய்வுப் பிரிவிடம் சென்று அழுது புலம்பியுள்ளார். தனது அறிவிப்புக்கு மன்னிப்பு கோரியும் உள்ளார். அவருக்கு எதிராக நிச்சயம் வழக்குத் தாக்கல் செய்யப்படும்-என்றார். (ற-44)

## காட்டு யானைத் தாக்குதலில் வயோதிபர் உயிரிழப்பு

மன்னார், மார்ச் 14

மேய்ச்சல் தரவையில் மாடு மேய்த்துக்கொண்டிருந்த வயோதிபர் ஒருவர் காட்டு யானைத் தாக்குதலில் உயிரிழந்துள்ளார். மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தேத்தாவாடி மேய்ச்சல் தரவையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவ தினத்தன்று குறித்த பகுதியில் மூவர் மாடு மேய்த்துக் கொண்டிருந்த போது திடீர் என அப்பகுதிக்கு வந்த யானை, அங்கு நின்ற மூவரையும் துரத்தியுள்ளது. இதன்போது இருவர் தப்பிச் சென்ற நிலையில் குறித்த வயோதிபர் யானையின் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்தார். உயிரிழந்தவர் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள நருவிலிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த என்.எம்.ஆபிரகாம் (வயது-69) எனத் தெரியவந்துள்ளது. இலுப்பைக்கடவைப் பொலிஸார், சடலத்தை மீட்டு மன்னார் மருத்துவமனையில் ஒப்படைத்தனர். (வ-56)


Paris
அகம் குளிரும் சந்தன நறுமணத்துடன்
கூடிய மூன்று நறுமணங்களில்...
Paris
Floral
COLOGNE SPRAY
FLORAL BOUQUET PERFUME
50ml
Paris
Floral Talc
WITH REAL FLORAL PERFUME
Paris
Sandalwood Talc
WITH REAL SANDALWOOD PERFUME
Paris
Jasmine Talc
WITH REAL JASMINE PERFUME
Paris
Jasmine
COLOGNE SPRAY
WITH REAL JASMINE PERFUME
50ml




# மின்சாரத்தடையை பயன்படுத்தி காணி ஆவணங்கள் அ.புரத்துக்கு

## சந்தேகம் வெளியிட்டார் சுரேஸ்

**கிளிநொச்சி, மார்ச் 14**

**அண்மையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இரவு இடம்பெற்ற மின்சாரத் தடையைப் பயன்படுத்தி வடக்கு மாகாணத்தில் இருந்த காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் ஆவணங்கள் அனுராதபுரத்துக்கு கொண்டு செல்லப்பட்டமை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்று ஈ.பி. ஆர்.எல்.எவ் அமைப்பின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.**

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

அண்மைக் காலங்களில் சர்ச்சைக்குரிய விடயமாக பேசப்பட்டு வரும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான வடக்கு மாகாண காணிகள் தொடர்பான ஆவணங்கள் வடக்கு மாகாண அலுவலகத்திலிருந்து இரவோடு இரவாக அநுராதபுரத்துக்கு கொண்டு செல்லப்பட்டமை கவலைக்குரிய விடயம். இதை நான் பல தடவை கூறியிருந்தேன்.

அண்மையில் இடம்பெற்ற மின்சாரத்தடையை சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி குறித்த ஆணைக்குழுவின் ஆவணங்கள் அனைத்தும் இரவோடு இரவாக அநுராதபுரத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இது எமக்கு பல சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் குறிப்பாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் காணிகளில் சிங்களக் குடியேற்றங்களை உருவாக்குவதற்காக இவ் இடமாற்றம் இடம்பெற்றிருக்கலாம் எனவும் சந்தேகங்கள் எழுகின்றன - என்றார். (ஜ-113)

# மகளிர் தின விழிப்புணர்வு

கிளிநொச்சி, மார்ச் 14


பெண்கள் வாழ்வுரிமைக் கழகத்தின் ஏற்பாட்டில், மகளிர் தின விழிப்புணர்வு நிகழ்வு நேற்று கிளிநொச்சி பாரதிபுரம் கிராம அபிவிருத்திச் சங்க வளாகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பெண்கள், சிறுவர் பாதுகாப்பு மற்றும் குடும்ப வன்முறை உள்ளிட்ட பல்வேறு விடயங்களைத் தாங்கிய வீதி நாடகமும் அரங்கேற்றப்பட்டது. (ற-6)



# வீதியை விட்டு விலகி காட்டுக்குள் பாய்ந்த 'கப்'

முல்லைத்தீவு, மார்ச் 14



கப் ரக வாகனம் ஒன்று வீதியை விட்டு விலகி காட்டுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளாகி உள்ளது. முல்லைத்தீவு மாங்குளம் கொக்காவில் பகுதிகளுக்கு இடைப்பட்ட ஏ9 வீதியில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கோழிகளை ஏற்றிக்கொண்டு கிளிநொச்சி நோக்கி பயணித்த வாகனமே விபத்துக்கு உள்ளாகியுள்ளது. இதில் பயணித்த எவருக்கும் பாதிப்பு ஏற்படாத நிலையில் வாகனம் புரண்டு சேதமடைந்துள்ளது. விபத்து தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-19)

# இனவெறிப் பரப்புரையில் விமல், மஹிந்தானந்த!

## சட்டத்துக்குள் அவர்களை சிக்கவைப்பேன் என்கிறார் ரிஷாத்

யாழ்ப்பாணம், மார்ச் 14

முஸ்லிம்களை வேண்டுமென்றே பழிவாங்கும் வகையில் ராஜபக்ச அரசு செயற்படுகின்றது. குறிப்பாக அமைச்சரவையிலுள்ள விமல் வீரவன்ச மற்றும் மஹிந்தானந்த அளுத்கமகே ஆகியோர் தங்கள் இன, மத வெறி பரப்புரைகளை பகிரங்கமாகவே மேற்கொண்டு வருகின்றனர். இதற்கு எதிராக சட்ட நடவடிக்கையை நாடியுள்ளேன். இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் அறிக்கை வெளிவந்துள்ள சூழலில், முஸ்லிம் தலைவர்களை இலக்கு வைத்து தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வரும் கருத்துக்கள் தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஈஸ்டர் தாக்குதலின் உண்மையான குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்கள் அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

ஆனால், ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்றது முதல் என் மீதும், என் சமூகத்தின் மீதும் இல்லாத, பொல்லாத குற்றச்சாட்டுக்களை அரசிலுள்ள சிலர் சுமத்தி வருகின்றனர். அமைச்சர்களான விமல் வீரவன்ச, மஹிந்தானந்த அளுத்கமகே ஆகியோரின் உளறல்கள் உச்சத்தில் உள்ளன.

ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் 2 ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் கைதுசெய்யப்பட்டனர். அதில் 250 க்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் மட்டும் தற்போது சிறைகளில் உள்ளனர். ஏனையோர் விடுவிக்கப்பட்டுள்ளனர். என்னையும் பல தடவைகள் அழைத்து விசாரணை செய்து சிறையில் வைக்க முயன்றனர். ஆனால், குற்றச்சாட்டுக்கள் எதனையும் நிரூபிக்க முடியாததால் என்னை விடுவித்தனர்.

தேவையில்லாமல் என்னைச் சீண்டிப் பார்க்கும் அமைச்சர் விமலுக்கு எதிராக குற்றப்புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளேன். அடுத்த வாரம் அவருக்கு எதிராக மேலதிக சட்ட நடவடிக்கையையும் நாடவுள்ளேன்.

முஸ்லிம் சமூகத்தை இந்த அரசு தொடர்ந்து அடக்க முயன்றால், அதன் விபரீதங்கள் ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச மட்டத்தில் உச்சில் இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிவைக்க விரும்புகின்றேன், என்றார். (ஒ.க.5.22)




## விவசாயிகளுக்கான தரவுகள் சேகரிப்பு

சாவகச்சேரி, மார்ச் 14

தென்மராட்சி தெற்கு தனங்களப்பு கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகளுக்கான தரவுகள் சேகரிப்பு தனங்களப்பு பொது நோக்கு மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் இடம்பெறவுள்ளது. பூர்த்தி செய்யப்படும் படிவங்கள் எதிர்காலத் தேவைக்காக கணினி மயப்படுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அமைப்புக்கு உட்பட்ட தோட்டம் மற்றும் நெற்செய்கை மேற்கொள்ளும் அனைத்து விவசாயிகளும் கடந்த வருடம் ஏக்கர் வரி செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு, சந்தாப் பணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு குடும்ப அட்டையின் முன்பக்கப் பதிவுப் பிரதி அல்லது குடும்ப அங்கத்தவர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கம், பிறந்த திகதி அடங்கிய விவரம் மற்றும் விவசாய வங்கிப் புத்தகம் ஆகியவற்றுடன் வர வேண்டும் என்று அமைப்பின் தலைவர் அறிவித்துள்ளார். (வ-9)



## இந்திராபுர பெண்களுக்கு பன்ன வேலைப் பயிற்சி!

பளை, மார்ச் 14

பளை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில், வேம்பொடுகேணி கிராம அலுவலர் பிரிவிலுள்ள இந்திராபுரம் கிராமத்தில் வாழும் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான பன்ன வேலைப் பயிற்சி வகுப்புகள் நேற்று முன்தினம் இந்திராபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

இந்திராபுரம் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவி அமலடெய்சி பரமானந்தம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக பளை பிரதேச உதவிப் பிரதேச செயலர் குணஜா குணரத்தினம் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினார். (ற-9)

## சாவ. மருத்துவமனையில் மீண்டும் கிளினிக் சேவை

சாவகச்சேரி, மார்ச் 14

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் கிளினிக் சேவைகள் வழமைபோல நாளை தொடக்கம் இடம்பெறும் என்று மருத்துவமனைப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

அஞ்சல் திணைக்களத்தால் நோயாளர்களுக்கு வீடுகளுக்கு மருந்துகள் விநியோகம் செய்வது நிறுத்தப்பட்டுள்ள நிலையில், கிளினிக் சேவைகள் வழமை போல இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனை வரும் நோயாளர்கள் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று பொறுப்பதிகாரி கோரியுள்ளார். (ய-9)

## தரம் பேணப்படாத வீதிப் புனரமைப்பு

### தர்மபுரம் மக்கள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, மார்ச் 14

கண்டாவளை, தர்மபுரம் கிராமத்தின் வீதிப் புனரமைப்பில் உரிய தரம் பேணப்படவில்லை என அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தர்மபுரம் கிராமத்தின் 13ஆம் யுனிற் பகுதியில் இருக்கும் 820 மீற்றர் நீளமான வீதிப் புனரமைப்பு புதினெட்டு மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வீதியின் 240 மீற்றர் தூரம் தார் வீதியாகவும் மிகுதி 580 மீற்றர் தூரம் கொங்கிறீட் வீதியாகவும் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கொங்கிறீட் வீதி அமைக்கும் போது தரமான சீமெந்து கலவை பேணப்படாமையால் வெடிப்பு ஏற்படுகின்றதை அவதானிக்க முடிகிறது இந்தத் தரத்தில் வீதி மக்கள் பாவனைக்கு விடப்பட்டால் சில நாள்களிலேயே இந்த வீதி சேதத்துக்குள்ளாகி மக்கள் போக்குவரத்து செய்ய முடியாத நிலை உருவாகும். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-12)


அபான்ஸ் எலைட் காட்சியறைகள் தினமும் இரவு 9.00 மணிவரை திறந்திருக்கும்.
அபான்ஸ்
வட்டி இல்லை
புத்தாண்டு ஜொலியோ ஜொலி
வட்டி இல்லை ஜொலி அதிகம்
ரூ. 50,000 வரை தள்ளுபடி
கடனட்டைகளுக்கு 48 மாதங்கள் வரை வட்டி இல்லை
கடனட்டைகளுக்கு 60 மாதங்கள் வரை நீடித்த இலகுதவணை திட்டம்
வாடகைக் கொள்வனவுகளுக்கு 18 மாதங்கள் வரை வட்டி இல்லை
இலவச நீடித்த உத்தரவாதம்
மாற்றீடு சலுகைகள்
LG LED தொலைக்காட்சி
32"
LGTV32LM550BPTA
3 வருட இலவச உத்தரவாதம்
மாற்றீடு விலை ரூ. 39,999
12 மாதங்களுக்கு வட்டியில்லை
LG ஹோம் தியேட்டர்
LG LHD627
மாற்றீடு விலை ரூ. 36,999
9 மாதங்களுக்கு வட்டியில்லை
acer LAPTOP
2 வருட இலவச உத்தரவாதம்
ACPCL515I511GVGA
FIRST TIME IN SRI LANKA
11th Gen Intel Core i5
15.6" FHD
Windows 10 Home
1TB HDD / 8GB DDR4 / 2GB VGA
விசேட விலை ரூ. 137,990
Authorized Reseller
APPLE PRODUCT
48 மாதங்கள் வரை வட்டி இல்லை.
கடனட்டைகளுக்கு
ரூ. 42,000/- வரை தள்ளுபடி
ஸ்மார்ட்போன்
TRCSL Approved
1 வருட உத்தரவாதம்
oppo A12
realme C15
vivo V20
3GB Ram + 32GB Rom ரூ. 26,990
4GB Ram + 64GB Rom ரூ. 34,999
8GB Ram + 128GB Rom ரூ. 69,990
JBL by HARMAN CHARGE 4
CHARGE 4 ரூ. 51,999
விசேட விலை ரூ. 46,799
LG
இன்வெர்டர் குளிர்சாதனப் பெட்டி
258L
18
36%
GL-K272SLBB ரூ. 94,990
விசேட விலை ரூ. 89,990
மாற்றீடு விலை ரூ. 86,990
LG WiFi INVERTER வளிச்சீராக்கி
2 YEAR WARRANTY + 3 FREE SERVICES
LGACINQ12JA2FB ரூ. 144,990
விசேட விலை ரூ. 132,990
12
Haier போத்தல் கூலர்
கொள்ளளவு: 240L | 300L | 372L
HRBC240JDL
விசேட விலை ரூ. 79,990 இலிருந்து
12
Abans FREEZER
200L
15
ABFRCH200AEL ரூ. 74,990
விசேட விலை ரூ. 62,990
Abans பூரண தானியங்கி சலவை இயந்திரம்
7.5KG
10 வருட இலவச உத்தரவாதம்
WSHING MACHINE COVER FREE + DIVA DETERGENT PACK FREE
18
ABWMFAU-75FAE ரூ. 49,990
ELECTRIQUE இலெக்ட்ரிக் அவன்
EQOV25RS1 ரூ. 16,990
12
HNB Credit cards
Sampath Cards
Nations TrustBank
HSBC
NDB bank
BOC
SEYLAN
DFCC BANK
நிபந்தனைகள் உண்டு. இங்கு புகைப்படத்தில் காண்பிக்கப்பட்டுள்ள உற்பத்திகள் நிறத்தில் வேறுபடலாம். முன்னறிவித்தலின்றி விலைகள் மற்றும் ஏனைய சலுகைகள் மாறுபடலாம். இலவச உற்பத்திகள் சாதாரண விலையில் ரொக்க பணத்திற்கு மாத்திரமே வழங்கப்படும். இலவச பரிசுகள் மற்றும் நீடித்த உத்தரவாதம் தெரிவுசெய்யப்பட்ட உற்பத்திகளுக்கு மாத்திரமே வழங்கப்படும்.
அமெரிக்க டொலர்களின் பெறுமதி அதிகரித்தால் எதிர்காலத்தில் உற்பத்திகளின் விலைகள் அதிகரிக்கும்.
0115 999 000
Buy Abans.com
நாடளாவிய அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் பெற்றிடுங்கள்.
Abans
ABSGDH



HNB ASSURANCE | HNB General Insurance

HNB அஸூரன்ஸ்

# லிய ஹரசர

பெண்ணியத்தின் பெருமைதனை கண்ணியமாய் காத்திடவே

## 2021 பெப்ரவரி 15 முதல் மார்ச் 31 வரையான காலப்பகுதிக்குள் எம்முடன் காப்புறுதி செய்யும் அனைத்து மகளிர்க்கும் விசேட சலுகைகள் காத்திருக்கின்றன:

1. HNB அஸூரன்ஸிடமிருந்து நீங்கள் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு ஆயுள் காப்புறுதிக்கும் (ஒற்றைத் தவணை காப்புறுதி தவிர) ஒரு மில்லியன் ரூபாய் வரையான மேலதிக ஒரு வருட இலவச ஆயுள் காப்புறுதி
2. மகப்பேற்று மற்றும் கருத்தரிப்பு தொடர்பான மருத்துவமனை செலவினத்திற்காக ஆகக்கூடியது வருடத்திற்கு 3 நாட்களுக்குரிய செலவினத்திற்காக, இது தற்போது செயற்பாட்டில் இருக்கும் மருத்துவமனை செலவினத்துடனான ஆயுள் காப்புறுதிக்கு
3. 2021 மார்ச் 8ம் திகதி முதல் டிசம்பர் 31ம் திகதிக்குள் பிறக்கும் ஒரு குழந்தைக்கு ரு. 5,000/- மதிப்புள்ள பரிசு வவுச்சர் வழங்கப்படும், இது தற்போது செயற்பாட்டில் இருக்கும் மருத்துவமனை செலவினத்துடனான ஆயுள் காப்புறுதிக்கு
4. HNB ஜெனரல் இன்ஸூரன்ஸிடமிருந்து பெற்றுக்கொண்ட மோட்டார் வாகன காப்புறுதிக்கு ரு. 500,000/- வரையான தனி நபர் விபத்து காப்புறுதியினை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்

சலுகை வழங்கும் மேம்பாட்டு பங்காளர்கள்

DURDANS HOSPITAL | VISION CARE | SWARNAMAHAL FOR ALL LIFE'S GOLDEN MOMENTS | DOUBLETREE by Hilton | SINGER

விலைக்கழிவுகள் சம்பந்தமான மேலதிக விபரங்களுக்கும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் லியஹரசர துண்டுப் பிரசுரத்தினை பார்க்கவும்.

**HNB Assurance PLC**
3rd மாடி, ஜஸ்லண்ட் பிஸ்னஸ் சென்டர்,
இல. 30, ஸ்ரீ உத்தரானந்த மாவத்தை, கொழும்பு 03.
www.hnbassurance.com | தொலைபேசி: 0114 384 384

**HNB General Insurance Ltd**
A fully owned subsidiary of HNB Assurance PLC
2nd மாடி, ஜஸ்லண்ட் பிஸ்னஸ் சென்டர்,
இல. 30, ஸ்ரீ உத்தரானந்த மாவத்தை, கொழும்பு 03.
www.hnbgeneral.com

Sagittarius Aim



Lifebuoy

## கொவிட் - 19 தொற்று ஏற்பட்டதைத் தொடர்ந்து இந்த வர்த்தகநாமம் தனது நோக்கத்திற்கு மறுவாழ்வு அளித்துள்ளது



கொவிட்-19 தொற்றுநோய் பரவ ஆரம்பித்த சமயத்திலேயே, பொதுவான நோய்களை மட்டுமல்லாது, கொரோனா வைரஸ் தொற்றுநோயையும் தடுப்பதற்கான எளிய மற்றும் பயனுள்ள முறையாக சவர்க்காரமிட்டு கை கழுவுவதன் முக்கியத்துவத்தை அது மீண்டும் வலியுறுத்த ஆரம்பித்தது.

வைரஸுக்கு எதிராக 99.9% செயல்திறனை உறுதிப்படுத்திய முதல் கைகளைச் சுத்தம் செய்யும் (ஹேண்ட்வோஷ்) வர்த்தகநாமமாக, லைஃப்போய் பொதுச் சேவை அறிவிப்புகள் மற்றும் குறித்த இலக்குடனான தொடர்பாடல்கள் மூலம் பொதுமக்களிடையே விழிப்புணர்வை அதிகரிப்பதை உறுதிசெய்ததுடன், நாடெங்கிலும் பொது இடங்களில் 100 க்கும் மேற்பட்ட கை கழுவும் மையங்களை அமைப்பதன் மூலம் தீர்க்கமான நடவடிக்கையை முன்னெடுத்து, பல மில்லியன் கணக்கான இலங்கையர்களின் சுகாதாரத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கு நேரடி பங்களிப்பை வழங்கியுள்ளது.

சிறுவர்கள் மத்தியில் கைகளைக் கழுவும் பழக்கவழக்க மாற்றத்தை ஊக்குவிப்பதற்காக உலகளாவிய கைகழுவும் தினம் 2020 (Global Handwashing Day) அன்று 'H for Handwashing' என்ற உலகளாவிய ஊக்குவிப்புப் பிரச்சாரத்தைத் தொடங்கியிருந்தது. சிறு வயதிலிருந்தே சிறுவர்கள் மத்தியில் கை கழுவும் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக கல்வி, சுகாதார, மனிதாபிமான மற்றும் பழக்கவழக்க மாற்ற வல்லுநர்களுடன் இணைந்து உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்கிய இந்த முயற்சியை நோக்கி லைஃப்போய் உலகளவில் நிதியை வழங்கும்.





புகழ்பெற்ற உள்நாட்டு துள்ளிசைப்பாடல் இரட்டையர்களான பாத்திய ஜெயக்கொடி மற்றும் சந்துஷ் வீரமன் ஆகியோரின் படைப்பில் மறக்கமுடியாத பாடல் மூலம் உலகளாவிய கை கழுவும் தினம் 2020 ஐ லைஃப்போய் இலங்கையில் கொண்டாடியது. அன்றாடக் குறிப்பாக 'கை கழுவுதல்' என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கு H என்ற எழுத்தை அவர்கள் ஊக்குவித்ததால், H என்றால் Handwashing என்று சொல்லும் அளவிற்கு சிறுவர்கள் கற்றுக்கொண்டனர்.

சவர்க்காரமிட்டு கை கழுவுவதன் மூலம் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்தை கொண்டுவருவதற்கான லைஃப்போயின் சமூக நோக்கத்தை ஊக்குவிப்பதில் சிறுவர்களை ஈடுபடச் செய்வதற்காக கல்வி அமைச்சுடன் இணைந்து 'H for Handwashing' முயற்சியின் கீழ் நாடு முழுவதும் சித்திரப் போட்டியொன்று ஆரம்பிக்கப்பட்டது.




### லைஃப்போய்: ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக சிறந்த சுகாதாரப் பழக்கததை ஊக்குவித்து வந்துள்ளது

யூனிலீவர் நிறுவனத்தின் உற்பத்தியான லைஃப்போய் ஒரு நூற்றாண்டுக்கும் முன்னர் அறிமுகமாக்கப்பட்ட காலத்திலிருந்து, ஒரு தெளிவான நோக்கத்தைச் சுமந்து வந்துள்ளது. கிருமிகள் மற்றும் நோய்களிலிருந்து பாதுகாப்பதன் மூலம் உயிர்களைக் காப்பாற்றுவதே அதன் தலையாய நோக்கம். 100 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து, லைஃப்போய் அதன் நோக்கத்தில் தொடர்ந்து கவனம் செலுத்தி வந்துள்ளமை கிருமிகளிடமிருந்து பாதுகாப்பு என்றால் இது லைஃப்போய் தான் என்று சொல்லும் அளவுக்கு அதன் பெயரை நிலைநாட்டியுள்ளது. நம்பகமான சுகாதார தீர்வுகளை வழங்குவதற்கான அதன் உலகளாவிய உறுதிப்பாட்டுக்கு ஏற்ப, இந்த வர்த்தகநாமமானது பல மில்லியன் கணக்கான இலங்கையர்களின் வாழ்வில் நல்விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

அத்தகைய நோக்கத்தை அடைவதற்கு வெறுமனே உற்பத்தியை அனைவரும் பெற்றுக்கொள்ளச் செய்வதையும் தாண்டிச் செல்ல வேண்டிய தேவை உள்ளது என்பதை இனங்கண்டு கொண்ட லைஃப்போய், உலகின் மிகப்பெரிய சுகாதார பழக்கவழக்க ஊக்குவிப்புத் திட்டங்களில் ஒன்றில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துள்ளதுடன், கடந்த தசாப்தத்தில் மாத்திரம் 40 நாடுகளில் 486 மில்லியனுக்கும் அதிகமான மக்களின் வாழ்வை ஏற்கனவே எட்டியுள்ளது.



### அன்றும், இன்றும், என்றென்றும் இலங்கையின் எதிர்காலச் சிற்பிகளுக்கு அறிவூட்டுதல் மற்றும் பாதுகாத்தல்

நேர்மறையான சுகாதார செய்திகளை ஊக்குவிப்பதற்கும், கை கழுவும் பழக்கவழக்கத்தை ஊக்குவிப்பதற்கும் ஆரம்பகால குழந்தைப் பருவ கற்றல் ஒரு முக்கிய பகுதியாகும் என்று லைஃப்போய் இனங் கண்டுள்ளது. ஏனெனில் குழந்தைகள் பாடசாலையில் தங்கள் சக மாணவர்களின் பழக்கவழக்கங்களின் செல்வாக்கினால் ஈர்க்கப்படுகின்றனர்.

எனவே, இந்த வர்த்தகநாமம் 2007 ஆம் ஆண்டு முதல் சுகாதார மற்றும் கல்வி அமைச்சுக்களுடன் இணைந்து சிறந்த கைச் சுகாதாரப் பழக்கவழக்கங்கள் தொடர்பில் சிறுவர்களுக்கு அறிவூட்டும் பணிகளை முன்னெடுத்து வந்துள்ளது. ஆண்டுதோறும் லைஃப்போய் ருபா. 5 மில்லியன் தொகையை முதலிட்டு, பாடசாலை சுகாதார நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் 2.5 மில்லியனுக்கும் அதிகமான மாணவர்களை எட்டியுள்ளது.





இந்த ஆண்டில் லைஃப்போய், யூனிலீவர் நிறுவனத்துடன் இணைந்து முறையாக கைகழுவும் நுட்பத்தைப் பற்றி மாணவர்களுக்கு அறிவூட்டுவதற்காக 10,000 பாடசாலைகளை எட்டுவதற்கான உறுதிப்பாட்டை எடுத்திருந்ததுடன், தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்காக சிறுவர்களிடையே கை கழுவும் பழக்கவழக்க மாற்றத்தை விரைவுபடுத்துவதற்காக 75 க்கும் மேற்பட்ட கை கழுவும் மையங்களையும் நிறுவியுள்ளது.

மேலும், ஆசிரியர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, ரு. 5 மில்லியன் பெறுமதியான சுத்திகரிப்பான் (சானிடைசர்) போத்தல்களை கபொத உ/த பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிக்கு நியமிக்கப்பட்ட ஆசிரியர்களின் பாதுகாப்பிற்காக கல்வி அமைச்சுக்கு லைஃப்போய் நன்கொடையளித்துள்ளது.

### மிக உயர்ந்த தர நிர்ணயங்களின் பக்கபலத்துடனான ஒரு பணி இலக்கு

சிறந்த சுகாதாரப் பழக்கவழக்கங்களை ஏற்படுத்துவதற்கான அதன் பல முயற்சிகளுடன் முன்னோக்கிப் பயணிக்கும் போது, எல்லாவற்றுக்கும் மேலாக தனது தயாரிப்புகளின் தரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதன் மூலம் உயிர்களைக் காப்பாற்றுவதற்கான அதன் நோக்கத்திற்கான உறுதிப்பாட்டில் லைஃப்போய் ஓயாத அர்ப்பணிப்புடன் உள்ளது. இது உள்ளக மற்றும் வெளிப்புற ஆய்வுகூடங்களில் நடத்தப்படும் தொடர்ச்சியான சோதனைகள் மூலமாக உறுதிப்படுத்தப்படுவதுடன், இத்தயாரிப்புக்கள் கிடைக்கும் ஒவ்வொரு நாட்டிலும் அங்கு நடைமுறையில் உள்ள ஒழுங்குமுறை இணக்கப்பாடுகளையும் தவறாது உறுதிப்படுத்தி வருகின்றது.

இலங்கையில், லைஃப்போய் உள்நாட்டு தரங்களுடன் தொடர்ந்து இணங்கும் வகையில் செயற்படுவதுடன், தேசிய ஔடதங்கள் ஒழுங்குமுறை அதிகார சபையில் (National Medicines Regulatory Authority) பதிவு செய்யப்பட்டுள்ளது. லைஃப்போய் சவர்க்காரங்கள், ஹேண்ட் வாஷ் (பம்ப்), பொடி வாஷ் மற்றும் ஹேண்ட் சானிடைசர்கள் ஆகிய தயாரிப்புக்கள் யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தால் ஹொரணையிலுள்ள அதன் தொழிற்சாலையில் ISO 9001 அங்கீகாரம் மற்றும் GMP அங்கீகாரம் ஆகியவற்றுடன் அனைத்து தர தேவைப்பாடுகளையும் பின்பற்றியவாறு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக மக்களுடன் ஈடுபாட்டு அனுபவத்தைக் கொண்ட ஒரு வர்த்தகநாமமாக, நுகர்வோர் மற்றும் அவர்களின் தேவைகள் விரைவாக மாறி வருவதை லைஃப்போய் இனங்கண்டுள்ளது. இந்த மாற்றங்களுடன் தனைத்தோங்கி, வெறும் 'சிவப்பு நிற சவர்க்காரக் கட்டி' என்பதையும் தாண்டி, சுகாதாரம் மற்றும் பிற நன்மைகளை வழங்கும் பல்வேறு பண்புகளைக் கொண்ட இயற்கை தயாரிப்புகளால் உற்பத்தி செய்யப்பட்ட தனிப்பயன் வடிவிலான சவர்க்கார வகைகளை புதிய யுகத்தின் வாடிக்கையாளர் தேவைகளுக்காக வழங்கி வருகிறது. மேலும் வாடிக்கையாளர்களுக்கு கூடுதல் சௌகரியத்தை வழங்குவதற்காக ஹேண்ட் வோஷ், பொடி வோஷ் மற்றும் ஹேண்ட் சானிடைசர் போன்ற பல்வேறு தயாரிப்பு வடிவங்களையும் கொண்டுள்ளது.

ஒரு தயாரிப்பு மற்றும் வர்த்தகநாமத்தின் வெற்றியின் ஒரு தெளிவான மதிப்பீடு முடிவுப் பாவனையாளர்களான மக்களின் அங்கீகாரம் மற்றும் அபிமானத்திலேயே தங்கியுள்ளது. 2019 ஆம் ஆண்டில் மாத்திரம், வருடாந்த SLIM Nielsen People's Awards என்ற மக்கள் தெரிவு விருதுகளில் லைஃப்போய் ஆண்டின் மிகச் சிறந்த இளையோர் தெரிவு விரைவாக விற்பனையாகின்ற வர்த்தகநாமம், ஆண்டின் தனிப்பட்ட பராமரிப்பு வர்த்தகநாமம் மற்றும் ஆண்டின் மிகச் சிறந்த விரைவாக விற்பனையாகின்ற வர்த்தகநாமம் ஆகிய விருதுகளை அள்ளிக் குவித்துள்ளது. இலங்கை பொதுமக்களால் நேரடியாக வாக்களிக்கப்படும் நடைமுறைகொண்ட இந்த விருதுகள் நிகழ்வானது லைஃப்போய் எவ்வாறு நீண்ட காலமாக மதிப்புமிக்கதாக இருந்தது என்பதற்கான ஒரு சிறிய அடையாளமாக இது காணப்படுவதுடன், அது ஏன் 'உலகின் முதற் தரத்தில் விற்பனையாகும் கிருமிகளிடமிருந்து பாதுகாக்கும் சவர்க்கார வர்த்தகநாமம்' என ஏறுநடை போட்டு வருகின்றது என்பதையும் புலப்படுத்துகின்றது.



# ஐ.சி.சி.க்கு பாரப்படுத்த பிரிட்டன் தயங்குவது ஏன்?

## நாடு கடந்த தமிழீழ அரசு கேள்வி

**கொழும்பு, மார்ச் 14**

**இலங்கையை சர்வதேச நீதிமன்றத்தில் பாரப்படுத்தும் முயற்சிகளுக்கு ஆதரவளிக்க மறுத்துள்ள பிரித்தானியா, 'ஐ.நா. பாதுகாப்பு சபையில் அதற்கு போதிய ஆதரவு இல்லை' என்று காரணம் கூறியுள்ளதை நாடு கடந்த தமிழீழ அரசு கேள்விக்குட்படுத்தியுள்ளது.**

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை நிறுவுவதில் முன்னுக்கு நின்று உழைத்த பிரித்தானியா, இன்று தனக்குத்தானே ஐயுற்று, தன் அற வலிமையைத் துறந்து, இன அழிப்புக்கும் மானிடத்துக்கு எதிரான குற்றங்களுக்கும், போர்க் குற்றங்களுக்கும், இரையானவர்களுக்கு நீதியைத் தேட, அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தைப் பயன்படுத்த முடியாதுள்ளமை பெரிதும் வருத்தத்திற்குரியது என்று நாடு கடந்த தமிழீழ அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நாடு கடந்த தமிழீழ அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

ஐ.நா. பாதுகாப்பு சபையில் போதிய ஆதரவு இல்லை என்று பிரித்தானிய அரசு கூறியிருப்பது அப்பட்டமான தீச்செயல் என்று சொல்ல முடியாவிட்டாலும், உயர்ந்தபட்சமாக அவசரப் போக்கு, குறைந்தபட்சமாக ஆதாரமற்றது என்றுதான் சொல்ல வேண்டும். இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு, ஐ.நா. பாதுகாப்புச் சபைக்குள் எதிர்ப்புகள் எவையும் இருக்கின்றன என பிரித்தானியாவுக்குத் தகவல் கிடைத்திருந்தால், அதன் விவரங்களை பொதுவெளியில் வெளிப்படுத்த வேண்டும். ஐ.நா. பாதுகாப்புச் சபையில் தடுப்பதிகாரம் படைத்த உறுப்பு நாடு என்ற முறையில் பிரித்தானியாவுக்குள்ள நம்பகத்தன்மையைக் காக்க இது பெரிதும் பயன்படும் - என்றுள்ளது. (ப)

## கர்தினாலின் ஒத்துழைப்புடனேயே ஆணைக்குழு செயற்பட்டது!

### கோத்தா தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 14

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் ஒப்புதலுடனும் நம்பிக்கையின் அடிப்படையிலுமே செயற்பட்டது. இவ்வாறு ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

'ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை சம்பந்தமாக எதிர்க்கட்சியினர் பல்வேறு கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். பெப்ரவரி முதலாம் திகதி ஒப்படைக்கப்பட்ட இந்த அறிக்கை 28 நாள்களுக்குள் அமைச்சரவை மற்றும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. ஆணைக்குழுவின் அறிக்கையை மறைக்க முயற்சிப்பதாக எதிர்க்கட்சி தவறான பரப்புரைகளை மேற்கொள்கின்றது. தேசிய பாதுகாப்பைப் பாதிக்கும் விடயங்களைத் தவிர ஏனைய அனைத்து விவரங்களும் மக்கள் முன் வைக்கப்பட்டுள்ளன- என்றார் கோத்தாபய. (ஓ.5)

## மாகாண சபையின் நிறுவனங்களை அரச அதிகாரிகள் கையாள முடியாது

### தேர்தலை நடத்துமாறு ஐ.தே.க வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 14

மாகாண சபைகளுக்குச் சொந்தமான நிறுவனங்களை அரச அதிகாரிகளின் கீழ் கொண்டுவந்து நிர்வகிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அதனால் மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்தி மக்கள் பிரதிநிதிகளை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்டத் தலைவி சாந்தினி கோன்காகே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

மாகாணசபைத் தேர்தலை நடத்தி அதற்கான மக்கள் பிரதிநிதிகளை நியமிக்காமல் அரசு மாகாணசபைக்கு உரித்தான நிறுவனங்களின் நிர்வாகத்தை அரச அதிகாரிகளின் கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுத்துவருகின்றது. மக்கள் பிரதிநிதிகளால் நிர்வகிக்கப்பட வேண்டிய நிறுவனங்களை நிர்வகிக்க அரச அதிகாரிகளை நியமித்து, அரசுக்குத் தேவையான விதத்தில் நிர்வாகத்தை மேற்கொள்ள வைப்பதை அனுமதிக்க முடியாது. மாகாணசபையில் பெண்கள் பிரதிநிதித்துவத்தை 25வீதமாக அதிகரிப்பதற்கான பிரேரணை ஒன்றையும் கட்சியின் பெண்கள் அமைப்பு நிறைவேற்றி இருக்கின்றது. சர்வதேச பெண்கள் தின நிகழ்வில் இந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. இந்தப் பிரேரணையை மாகாணசபையில் உள்வாங்க மாகாண சபைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள வேண்டுமெனவும் பிரேரித்திருக்கின்றோம் - என்றார். (ப)

## சீனியிலும் தேநீரிலும் கை வைத்தது அரசு

### காவிந்த ஜயவர்தன எம்.பி சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 14

வரலாற்றில் பேசப்படும் ஒன்றாக ஆகியுள்ள அரச சீனிக் கொள்ளையூடாக, நாட்டு மக்களின் வரிப்பணம் கொள்ளையிடப்பட்டுள்ளதுடன், நாம் அருந்தும் தேநீருக்குக் கூட பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாம் சிறுவயதில் அந்தரே சீனி உண்ட கதையைக் கேட்டுள்ளோம். அதில் 'உனது வாயிலும் சீனி எனது வாயிலும் சீனி ' என்று அந்தரே கூறியிருப்பார். அதேபோன்று தற்போதைய அரசு 'உனது வாயிலும் சீனி எனது வாயிலும் சீனி' என்று கூறிக்கொண்டு தனது சகாக்களுக்கு கொள்ளையிடுவதற்கு வாய்ப்பளித்து வருகின்றது. பட்டப் பகலில் மத்தியவங்கி கொள்ளையில் ஈடுபட்ட கொள்ளையர்களை கைதுசெய்து தண்டிப்பதாகத் தெரிவித்தே அரசு ஆட்சிக்கு வந்தது. ஆனால் தற்போது தங்களது சகாக்களுடன் இணைந்து சீனிக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளது. இதன் மூலம் 15 மில்லியன் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது. சாதாரண மக்களின் வரிப் பணத்தை கொள்ளையிட்டமை மட்டுமன்றி, நாம் அருந்தும் தேநீரிலும் தலையீட்டைச் செய்துள்ளது. நாட்டு மக்களின் வரிப்பணம் கொள்ளையிடப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அத்தகைய நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்காது இருப்பது தொடர்பில் அரசு பொறுப்புக் கூற வேண்டும் - என்றார். (ப)

## பெரஹர விழாவுக்கான யானைகள் பற்றாக்குறை

கொழும்பு, மார்ச் 14

பெரஹர விழாவுக்கு பழக்கப்படுத்தப்பட்ட யானைகளுக்கு நிலவும் பற்றாக்குறையால் எழும் பிரச்சினைகள் தொடர்பில் மகா சங்கத்தினர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர். ஜனாதிபதி தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த விடயம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மகா சங்கத்தினர் மற்றும் பழக்கப்படுத்தப்பட்ட யானை உரிமையாளர்கள் அமைப்பின் பிரதிநிதிகளும் இக் கலந்துரையாடலில் பங்குபற்றினர். 1980 ஆம் ஆண்டுகளில், இலங்கையில் இவ்வகை யானைகளின் எண்ணிக்கை 300 முதல் 350 வரை இருந்தன. தற்போது யானைகளின் எண்ணிக்கை 107 ஆக குறைவடைந்துள்ளது. அவற்றில் சுமார் 80 யானைகள் 50 வயதுக்கு மேற்பட்டவை என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## சீனி இறக்குமதி மோசடி: பணத்தை மீளப்பெற வேண்டும்

### திஸ்ஸ அத்தநாயக்க வலியுறுத்து



கொழும்பு, மார்ச் 14

சீனி இறக்குமதி வரிச் சலுகை மூலம் இடம்பெற்ற மோசடி தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து, மோசடி செய்யப்பட்ட பணத்தை மீளப் பெற்றுக்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

சீனி விலையைக் குறைப்பதற்காகவே இறக்குமதி வரி குறைக்கப்பட்டுள்ளது என்று அரசு தெரிவித்து வந்தாலும், அது நிறைவேறவில்லை. இந்த வரிக்குறைப்பு ஊடாக ஒரு கிலோ சீனியை 85 ரூபாவுக்கு விற்பனை செய்வதற்கு அரசு எதிர்பார்த்திருந்தபோதிலும் அப்போது, ஒரு கிலோ சீனியின் விலை 130 ரூபா வரை அதிகரித்திருந்தது. மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் அரசு தொடர்ந்தும் குற்றம் சுமத்தி வந்தாலும், அதனைவிடவும் அதிகளவான பணமோசடி சீனி இறக்குமதி வரிக் குறைப்பின் ஊடாக இடம்பெற்றுள்ளது. கொவிட் 19 தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதற்காக 10 மில்லியன் ரூபா பணத்தை தங்களுக்கு பெற்றுக் கொடுக்குமாறு அரசு உலக வங்கியிடம் கோரிக்கை விடுத்து வருகின்றது. இந்த சீனி மோசடியின் காரணமாக அரசுக்கு கிடைக்காமல் போயுள்ள பணத்தொகை கிடைக்கப் பெற்றிருந்தால், தடுப்பூசிகளை எடுத்துவருவதற்கு அதனைப் பயன்படுத்தியிருக்கலாம்.

இந்நிலையில் அரசு தங்களுக்கு ஆதரவளித்த நபர்களுக்கு நன்மையளிக்கும் எண்ணத்திலேயே இவ்வாறு வரிகுறைப்பைச் செய்துள்ளது என்பது உறுதியாகியுள்ளது. இந்த நிலையில் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு , சம்பந்தப்பட்ட நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அதை விடுத்து இதனை மறைப்பதற்கு அரசு முயற்சிக்கக் கூடாது. இதேவேளை இவ்வாறு மோசடியில் ஈடுபட்ட நபர்களிடமிருந்து மோசடி செய்யப்பட்ட பணத்தை மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்-என்றார். (ப)







ஒட்டுசுட்டான் வித்தியாபுரம் கிராமத்தில் தந்தையை இழந்த மற்றும் வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் தாய்த்தமிழ் பேரவையின் ஒழுங்கமைப்பில் அமரர் வன்னியசிங்கம் கார்த்திகேசுவின் பிள்ளைகளின் நிதிப்பங்களிப்பில் வழங்கப்பட்டன. (ய-222)

## சாவகச்சேரி நகர சபை வட்டாரப் பிரிப்பில் தவறு

### மக்கள் சுட்டிக்காட்டு

சாவகச்சேரி, மார்ச் 14

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள நிலையில் சாவகச்சேரி நகர சபையின் 10ஆம் மற்றும் 11ஆம் வட்டாரங்களின் எல்லைகள் தொடர்பான திருத்தங்கள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வட்டார எல்லைகள், மாற்றியமைக்கப்பட்டபோது நகரசபையின் கோயிற் குடியிருப்பு வட்டாரம் கடல், தரை என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. பதிவுகளின் பிரகாரம், கடல் பிரிவு வட்டாரத்தில் பதிவில் உள்ளவர்கள் தரைப் பகுதியிலும், தரைப்பகுதி பதிவில் உள்ளவர்கள் கடல் பிரிவிலும் பதிவு செய்யப்பட்டுள்ளனர். கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட போது. இந்தத் தவறு சுட்டிக்காட்டப்பட்டது. தேர்தல்கள் ஆணைக்குழு இந்தத் தவறு அடுத்த உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னர் சீர் செய்யப்படும் எனத் தெரிவித்திருந்தது. ஆனால் அதன் பின்னர் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல், மற்றும் பொதுத் தேர்தலிலும் இந்த தவறு திருத்தப்படாத நிலையில் மக்கள் வாக்களித்தனர். எனவே அடுத்த உள்ளூராட்சி தேர்தல் காலத்துக்கு முன்னர் இதைச் சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கேட்டுள்ளனர். (வ-9)

## ஊரெழு ஞானவைரவரில் பாரம்பரிய கலை நிகழ்வு

கொடிகாமம், மார்ச் 14

ஊரெழு ஞானவைரவர் ஆலய சிவராத்திரி நிகழ்வு ஆலயத்தின் தலைவர் முகுந்தன் தலைமையில் ஆலய வளாகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றது.



சிவராத்திரியை முன்னிட்டு ஆலய நிர்வாகத்தால் முன்னெடுக்கப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. அதைத் தொடர்ந்து பாரம்பரிய கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி நகரசபை முன்னாள் உறுப்பினர் ஞா.கிஷோர் மற்றும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் சி.அகீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-159)

## ஊமையார் துவரங்குளம் 8.6 மில்லியனில் சீரமைப்பு

மன்னார், மார்ச் 14

மடு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஊமையார் துவரங்குளத்தை 8.6 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் "நீர்ப்பாசன செழிப்பு" எனும் 5 ஆயிரம் கிராமிய விவசாயக் குளங்கள் மற்றும் அணைக்கட்டுகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் இந்தக் குளம் சீரமைக்கப்படுகிறது.

இதற்கான ஆரம்ப நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், மன்னார் மாவட்டச் செயலர் திருமதி. ஸ்டான்லி டி மெல், மடுப் பிரதேச செயலர் நிஜாகரன், மத்திய நீர்ப்பாசன பணிப்பாளர், வி[illegible]சாய உதவிப் பணிப்பாளர், நீர்ப்[illegible]ன பொறியியலாளர்கள் மற்றும் [illegible] அமைப்புக்களின் பிரதிநிதி[illegible] பலரும் கலந்து கொண்டன[illegible] மாவட்டத்தில் "நீர்ப்பாசன [illegible] திட்டத்தின் கீழ் சுமார் 138 [illegible] சீரமைக்கப்படவுள்ளமை குறி[illegible]கது.

## விற்பனைக்கு

மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறுட், ரகன் புறுட், தென்னங்கன்று, செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்ஸா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மாங்குஸ்த்தான், ஏலக்கா, சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

## பணிப்பெண் தேவை

வயோதிபர்களை பராமரிப்பதற்கு முழு நேரமாகவோ அல்லது பகுதி நேரமாகவோ வேலை செய்யக்கூடிய பணிப் பெண் தேவை.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு
021 224 3698, 076 920 4051

## வீடு வாடகைக்கு

இல. 808/4, காங்கேசன்துறை வீதியில் (தட்டாதெருவிற்கு அருகாமையில்) 5 அறைகள், இரு வாகனத்தரிப்பிடங்களுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்களுக்கு.

071 377 0015, 076 746 6550

## வகுப்புகள்

தரம் 6 - 11 வரையான வகுப்புகளுக்கு விஞ்ஞானம்/ கணிதம் ஆகிய பாடங்கள் (தமிழ்/ஆங்கிலம்) மொழி மூலம் தனியாகவோ, குழுக்களாகவோ கற்பிக்கப்படும்

தொடர்புகளிற்கு: 077 639 1935

## திருமண சேவை

விசேடமாக கிறிஸ்தவ ஆவிக்குரிய சபைகளுக்காக உருவாக்கப்பட்ட திருமண இணையத்தளம்
www.kirubaimatrimony.com
பதிவுகள் இலவசம்.

தொடர்பு: 011 773 2288, 076 197 2285

## வேலையாட்கள் தேவை

கைதடியில் இயங்கிவரும் பிளாஸ்ரிக் போத்தல் உற்பத்தி தொழிற்சாலை ஒன்றிற்கு பின்வரும் தொழில்களுக்கு வேலையாட்கள் தேவை.

1. இயந்திர இயக்குனர்
2. பொதியிடல்
3. காவலாளி

அனுபவம் தேவையில்லை.

தொடர்புகளுக்கு
077 403 5812, 021 223 1770

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1985ம் ஆண்டு பிறந்த சூரியன் செவ்வாய் 3ல் உள்ள கிரகபாவம் 32 உடைய பொறியியலாளர் ஆக அரச தொழில்புரியும் (நீர்ப்பாசனத் திணைக் களம்) மணமகனுக்கு தகுந்த மண மகள் தேவை.

தொடர்பு: (பெற்றோர்)
077 025 5934, 077 348 6008

## விற்பனைக்கு

வட்டுக்கோட்டை மூளாய் வீதி, உடுக்கியவளை பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் வீடும் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு 077 819 1314

## பணிப்பெண் தேவை

யாழ் நகருக்கு அருகாமையில் உள்ள வீடு ஒன்றில் சிறு பிள்ளையை பராமரிப்பதற்கு பெண் உதவியாளர் தேவை.
35 – 50 வயதிற்கு இடைப்பட்டவர்கள் தொடர்பு கொள்ளவும்.

070 206 3321

## சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்

சுற்றுலாத்துறை அமைச்சு

சுற்றுலா மற்றும் ஏற்பாட்டியல் துறைகளுக்கான மனித வளத்தினை மேம்படுத்தும் வகையில் கல்வியும் பயிற்சியும் வழங்கும் நாட்டின் முதன்மை நிறுவனம்



யாழ்ப்பாணம் SLITHM ல்
2021 ஏப்ரலில்
ஆரம்பிக்கப்படும் கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பாடநெறி கைவினைமட்டம்
(முழு நேரம் 03 மாதங்கள்)

| விடயம் | கட்டணம் |
|---|---|
| ஹோட்டல் வரவேற்பு கோட்பாடுகள் (Front Office / Reception) | ரூ.3000 |
| உணவு மற்றும் பானங்கள் (Food and Beverage) | ரூ.4500 |
| சமையல் கோட்பாடுகள் (Cookery) | ரூ.4500 |

வெற்றிகரமாக திட்டத்தை நிறைவு செய்த பின்னர்
சுற்றுலாத்துறையில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் ஒன்று வழங்கப்படும்
(வெளிநாடுகளில் கூட இச் சான்றிதழைப் பயன்படுத்தி வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளலாம்)
SLITHM இன் உயர் டிப்ளோமா கற்கைகளுக்கான மேலதிக தகைமையாகும்

பதிவுக்கட்டணம் ரூ. 500/-
நுழைவுத் தகுதிகள் 17 வயதுக்கு மேல் O/L வரை கல்வித் தகைமை கொண்டவராக இருத்தல்.


March 8ம் திகதி முதல் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம்

முகவரி :
பதிவாளர், SLITHM, 78, காலி வீதி, கொழும்பு 03.

இணையம் : http://slithm.edu.lk
விசாரணைகளுக்கு : 077 595 6119

## AFTER O/L ... THE NEXT YOU

New Intake in March
புதிய வகுப்புகள் ஆரம்பம் 2021 மார்ச் 20ல் இருந்து..
உங்கள் எதிர் காலத்திற்குரிய சரியான தெரிவு.



PROFESSIONAL DEVELOPMENT PROGRAMMES (PDP)

- *Certificate Programme in IT Application*
- *Certificate Program in Microsoft Office*
- *Certificate in General English*

SLIIT IS YOUR BEST DIRECTION

SLIIT JAFFNA CENTRE

SLIIT UNI
THE KNOWLEDGE UNIVERSITY

#330, Stanley Road, Jaffna.
Tel: 021 7 204 204, 077 3 785 207.
E-mail: sliitjaffna2@gmail.com
Web: www.sliit.lk

## TAPROBANE SEA FOODS (PVT) LTD.

"A Leader in Sustainable & Socially Responsible Seafood"

# VACANCY ADVERTISEMENT

We Taprobane Seafood (PVT) Ltd are one of the leading and Sri Lanka's largest seafood processor & exporter. Having recognized by world class certifications Such as FSSC 2200, BRA, ETU and Etc...we are exporting pasteurized canned seafood to our loyal customers in USA & Europe.

We are operating more than 10 processing factories in Northern Province and providing more than 1000 employment opportunities. There is a wide range of opportunity to you to be a part of ever growing strongest seafood company in Sri Lanka.

**We are looking for**

- Factory Manager (Female)
  BSc in Science/ Aquaculture/ Agriculture/ Food Science or Diploma qualifications in relevant fields with one year experience is preferred.
- Food Quality Controller (Male)
  BSc in Science /Aquaculture/Agriculture/ Food Science or Diploma qualifications in relevant fields with one year experience is preferred.
- Finance Executive (Male & Female).
  Degree / HNDA & Part Qualified - CIMA , ACCA , CMA & Other equivalents One year audit experience is preferred
- Procurement Officer (Male)

A/L, minimum passes. Any industrial prior experience is an additional advantage Salary is negotiable & Company maintained accommodations are available. Should be able to work in Mannar/ Jaffna / Kilinochi If you think you are a right candidate, please forward your CV.

**Address**

1. tsfdangotuwa@gmail.com
2. Operations Manager, 765/A, Beach Road, Passaiyoor, Jaffna.
3. Contact: 0778925775 (9am – 11am ) & 0768267637 (3pm -5pm)

## யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

Jaffna International Trade Fair

12 EDITION

வடக்கிற்கான உங்களது நுழைவாயில்

jitf.lk
www.jitf.lk

JITF 2021

CONCURRENTLY WITH
Higher Education & Career Exhibition
KALVI JAFFNA 2021

March மார்ச்
26 27 28

10.00 மு.ப - 8.00 பி.ப

Muttraweli Grounds
(Next to Jaffna Fort)

முற்றவெளி மைதானம்
(யாழ் கோட்டைக்கு அருகில்)

MAIN SPONSOR INSEE CEMENT
OFFICIAL PARTNERS

ORGANIZED UNDER
MINISTRY OF HEALTH GUIDELINES
சுகாதார அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

More information: Imalka +94 71 7488107
imalka@saexhibitions.com

## காணி விற்பனைக்கு

கோப்பாய் பருத்தித்துறை வீதியில் நாவலர் பாடசாலைக்கு மேற்காக நிலப்பரப்பு 10 குளி 15.79 வீட்டுடன் விற்பனைக்கு உள்ளது. தரகர் தலையீடு வேண்டாம். விவரங்களுக்கு கீழுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் பிற்பகல் 3.00 மணிக்கும் 6.00 மணிக்கும் இடையில் தொடர்பு கொள்ளவும்.

**0447 447 900 636, 076 321 1889**

## பஸ் விற்பனைக்கு

மொடல் பவர்ஸ்ரேறிங் JOUREY - L, 29 பஸ் விற்பனைக்கு

கச்சேரி – யாழ்ப்பாணம் றூட் குத்தகைக்கு தரப்படும்.

தொடர்பு: **077 753 1461**

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1993ல் சதயம் 3ம் பாதத்தில் பிறந்த Software Engineer மணமகனுக்கு படித்த மணமகள் தேவை. செவ்வாய் தோசம் இல்லை.

தொடர்பு: **076 671 6161**

## வீடு வாடகைக்கு தேவை

சிறு கைத்தொழில் செய்ய வீடு வாடகைக்குத் தேவை.

**074 192 5944**

## வீடு வாடகைக்கு தேவை

Guest House நடத்துவதற்கு இணைந்த குளியலறைகளுடன் வாகனத் தரிப்பிட வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு தேவை.

தொடர்பு **077 285 0821**

## வீடு வாடகைக்கு

செட்டித்தெரு லேன் நல்லூரில் வீடு வாடகைக்கு உண்டு. அரச, வங்கி, பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது. தரகர் தேவையில்லை.

**077 222 3132**

## உணவுப் பார்சல் விநியோகம்

தங்கள் இடங்களுக்கே நேரடியாக உணவுப் பார்சல்கள் விநியோகம் செய்யப்படும்

**077 588 9571**

## காணி விற்பனைக்கு

உரும்பிராயில் நீளமான பலாலி வீதி முகப்பைக் கொண்ட 14 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. அண்மையில் கட்டப்பட்ட சுற்று மதிலுடன் மின்சாரத் தொடர்பும் சொந்த கிணற்றிலிருந்து Pump மூலம் தண்ணீர் விநியோகமும் உள்ளன.

தொடர்புகளுக்கு: **077 629 3710**

(கிழமை நாள்களில் 2p.m. to 10 p.m. / சனி, ஞாயிறு 9 a.m. to 10 p.m. அழைக்கவும்)

## வேலையாள்கள் தேவை

மோட்டர் உதிரிப்பாக விற்பனை நிறுவனத்துக்கு விற்பனையாளர் (ஆண், பெண் இருபாலாரும்) மற்றும் வாகன சாரதி தேவை.

**075 632 8578**

## வேலையாள்கள் தேவை

- ஹாட்வெயார் அனுபவம் உள்ளவர்கள்
- பொருள் ஏற்றி இறக்குபவர்கள்
- திறமைகேற்ப ஊதியம் வழங்கப்படும்
- தங்குமிடம், உணவு இலவசம்

**077 847 3222, 021 222 2121**

## விசா ஆலோசனை சேவை

எம்மால் ருமேனியா, பெலருஸ், இத்தாலி, இலண்டன் ஆகிய நாடுகளுக்கும் சகல மத்திய கிழக்கு நாடுகளுக்கமான ஆண்/பெண் இருபாலாருக்குமான விசா ஆலோசனை மேற்கொள்ளப்படும். சனி, ஞாயிறு மற்றும் கிழமை நாள்களில் 4 மணியின் பின்னர் தொடர்புகொள்ளவும்.

**077 604 0373, 077 532 6379**

## பணிப்பெண் தேவை

கொழும்பு தெகிவளை சிறிய குடும்பமொன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து சமையலும் வீட்டு வேலைகளும் செய்யக்கூடிய 40-55 வயதுக்குட்பட்ட பணிப்பெண்ணொருவர் தேவை. தற்போது யாழ்ப்பாணத்தில் சந்திக்கலாம்.

தொடர்புக்கு: **071 450 9450**

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தின் நீண்டகால பாரம்பரியமிக்க உயர்தர சைவ உணவகம் மற்றும் குளிர்பான நிலையத்திற்கு.

1) **சமையலாட்கள் (முன்னனுபவம் விரும்பத்தக்கது.)**
2) **உணவு பரிமாறுபவர்கள்**
3) **காசாளர் (முழுநேரம்), காசாளர் (பகுதி நேரம்)**
4) **சிட்டை எழுதுனர்**

**கவர்ச்சிகரமான கொடுப்பனவு / ஏனைய சலுகைகள்**

உடன் தொடர்புகளுக்கு: **074 159 6978**

## கல்யாணமாலை வட சர்வதேச திருமணசேவை

குஞ்சர் கடையடி அருகில் யாழ். பருத்தித்துறை பிரதான வீதி, இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.

வைபர்: **076 885 6925** தொ.பே: **077 857 8528**

எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு ஜாதகம் கைவசமுண்டு

முகநூல்: **KalyanamalaiVada.com** இல் பார்வையிட்டு அழையுங்கள்.

## நான்காமாண்டு நினைவலைகள்



**பிறப்பு 17-09-1972** திருமதி **இறப்பு 14-03-2017**

### சுகுணதாஸ் டெல்வின் டெறிற்ரா

நீங்கள் விட்டுச் சென்ற இடத்தில் தான்
இன்னும் நின்று கொண்டிருக்கின்றோம்
நீங்கள் வரும் நாளை பார்த்தபடி

நினைவுகள் நீண்டு கொண்டிருக்கின்றன
நான்கு ஆண்டுகளாக
அன்பைப் பொழிய ஆயிரம் பேர்
இருந்தும் உங்கள் அன்போடு ஒப்பிட
முடியவில்லை எம்மால்

தவிக்கின்றோம் உம்பிரிவை எண்ணி
வந்து விடுங்கள் விதிகளை மீறி
ஒரு முறைதான் வாழ்ந்து பார்ப்போம்.
அன்னையே!

**215/16 இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.**

**பிரிவால் துயருறும் குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

### திருமதி விக்கினேஸ்வரி வாமதேவன்

**தோற்றம் 03.08.1952** **மறைவு 11.03.2021**



யாழ்ப்பாணம் ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் நோர்வேயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விக்கினேஸ்வரி வாமதேவன் அவர்கள் கடந்த (11.03.2021) வியாழக்கிழமை நோர்வேயில் காலமாகி விட்டார் .

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைரெட்ணம் சொர்ணகாந்திமலர் தம்பதிகளின் அன்பு புதல்வியும் காலஞ்சென்றவர்களான சண்முகம் லஷ்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சண்முகம் வாமதேவன் (அத்தியடி) அவர்களின் அன்பு மனைவியும் கீதாஞ்சலி (லண்டன்) ரஞ்சனி (மனோ - நோர்வே) பிரதீபன் (இலங்கை) ஆகியோரின் அன்புத் தாயாரும் ரமேஷ், விஜயகுமார் (விஜி) ஆகியோர் அன்பு மாமியாரும் லக்ஷிகா, லதூசன், ஆகாஸ், அபிஷா, ஆகியோரின் அன்பு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான விக்கினேஸ்வரராஜா, ரஜேஸ்வரி மற்றும் ஆனந்தராஜா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பிறேம், சாங்கரி ஆகியோரின் அன்பு பெரியம்மாவும், கவிதா, அரவிந்தன், தயாழினி, ஆதிரன், ஆரணி, ஆகியோரின் ஆசை மாமியாரும் காலஞ்சென்றவர்களான மகாதேவா, கரிதேவா, ஜெயதேவா, புத்ததேவா, தயாளதேவா மற்றும் சிறிதேவா (கனடா) நீலதேவி, அனுஜாதேவி, காலஞ்சென்ற சூரியகுமார், கமலாதேவி மற்றும் புஸ்பராணி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்**
**குடும்பத்தினர்**

**பிரதீபன் ( மகன் -இலங்கை ) 0094 776095604**
**ஆனந்தராசா ( சகோதரன் - சுவிஸ் ) 0041789424007**
**ரமேஷ் ( லண்டன் ) 0447717511565**
**விஜயகுமார் ( நோர்வே ) 004790020439**

## உணவக வேலைவாய்ப்பு

கொழும்பு - தெஹிவளை நதிமாலையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சைவ உணவகத்திற்கு சமையற்காரர்கள் (Chefs), பரிமாறுபவர்கள் (Waiters) உடனடியாகத் தேவை.

தொடர்பு: **076 421 8628**

## மணமக்கள் தேவை

தங்கள் தகுதிக்கு ஏற்ற மணமக்களை தெரிவு செய்ய எம்முடன் தொடர்பு கொள்ளவும். வெளிநாட்டில் உள்ள 1980 - 1993 வரையுள்ள மணமகனுக்கு படித்த மணமக்கள் தேவை. 1984 - 1995 வரையுள்ள மணமகளுக்கு படித்த (பல்கலைக்கழகம் முடித்த) மணமகன் தேவை. மற்றும் ஊரிலுள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு : **077 023 7639, IMO: 0094 764752219**
**Whats App: 004917643399372**

## வெளிநாட்டில் உங்கள் பட்டப் படிப்பைத் தொடர விரும்புகின்றீர்களா?

### உங்கள் சர்வதேச பட்டத்தைப் பெறுங்கள்

- ✓ஐக்கிய இராச்சியம்
- ✓கனடா
- ✓ஆஸ்திரேலியா
- ✓மலேசியா
- ✓நெதர்லாந்து
- ✓ஜேர்மனி
- ✓ஸ்பெயின்
- ✓லாட்வியா
- ✓பெலாரஸ்
- ✓ஸ்வீடன்

அல்லது சிங்கப்பூர்



எமது சேவைகள்:

**கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான வருகை விசா, மாணவர் விசா மற்றும் பல...**

எம்முடன் தொடர்பு கொள்ள :

No.19,1/1, Darly Road, Maradana, Colombo-10.
+94 77 728 8193 | +94 76 811 8120
ASCEND OVERSEAS EDUCATION CONSULTANTS
ascend.educon@gmail.com

**ASCEND OVERSEAS EDUCATION CONSULTANTS**
எங்களுடன் உங்கள் உயர்கல்வி இலக்குகளை அடையுங்கள்

## வேலையாட்கள் தேவை

### சுரேஸ் மோட்டோர்ஸ் அன் எஞ்சினியரிங்

1) வரவேற்பாளர் பெண்கள் (சம்பளம் 20, 000 இற்கு மேல்)
2) உதிரிப்பாக விற்பனையாளர் பெண்கள்
3) மெக்கானிக் வேலைகள் தெரிந்தவர்கள் இருபாலாரும்
4) பழக விரும்புபவர்கள் இருபாலாரும்.
5) பெயிண்டிங் வேலை தெரிந்தவர்கள்.

**சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்**
**EPF, ETF வசதி செய்து கொடுக்கப்படும்.**

நுணாவில் மேற்கு சாவகச்சேரி

தொடர்பு **077 706 4110**

## கேள்வி மனு கூறல்

காரைநகர் அபிவிருத்தி சபைக்கு சொந்தமான சிறிய ரக **நீர்த்தாங்கி வாகனம்** (5000 லீற்றர் வாகன வகை ISUZU) விற்பனை செய்ய நிர்வாகம் தீர்மானித்திருப்பதால் ஆகக்கூடிய விலை கூறுபவர்களுக்கு வாகனம் விற்கப்படும்.

**வாகனம் பார்வையிட வேண்டிய இடம்**

**காரைநகர் அபிவிருத்தி சபை**
**மணற்காட்டு அம்மன் வீதி,**
**காரைநகர்**


**T.P : 021 221 1757, 077 977 8784**

**குறிப்பு : 11.03.2021 தொடக்கம் 25.03.2021** வரையான காலப்பகுதியில் வாகனத்தை நேரடியாக பார்வையிட்டு விலை மனு கூறலை மேற்காணும் விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

**பதிவுத்தபால் கிடைக்க வேண்டிய இறுதி திகதி 28.03.2021**

**தலைவர்**
**திரு.இ.சிவசுப்பிரமணியம்.**

# பாராட்டும் சேவைநயப்பும்




திருநெல்வேலி பழங்கிணற்றடி
**ஸ்ரீ வீரகத்தி விநாயகர்** ஆலயத்திலே ஐம்பத்தாறு ஆண்டுகளாகத் (56) தொடர்ந்து விநாயகப் பெருமானின் திருமேனிதீண்டிப் பூசை புட்காரங்கள் செய்துவரும்

## பிரம்மஸ்ரீ வைரவநாதக்குருக்கள் ஜெயதீஸ்வரக்குருக்கள்

அவர்களின் சேவையை விதந்து பாராட்டி விழாவெடுக்கத் தேவஸ்தானத்தினர் தீர்மானித்துள்ளனர்

**பாராட்டு நிகழ்வு**

**இன்று (14.03.2021) ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு ஆலய முன்றலிலே நடைபெறும்.**

குருக்களின் சேவையைப் பாராட்டியும் அருளாசியைப் பெறவும் அடியார்களை அன்புடன் அழைக்கின்றோம்.

சுகாதார நடைமுறைகளைப் பேணி விழா நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

பழங்கிணற்றடி
ஸ்ரீ வீரகத்தி விநாயகர்
தேவஸ்தானம்

### மோட்டர் சைக்கிள் தேவை

பொக்சர் CT 100 /TVS விக்டர்
பெசன் / பெசன்பிளஸ்
077 466 9597

### வாடகைக்கு

சுன்னாகம் (ஏழாலை) பகுதியிலுள்ள கீழ்தள வீடு சிறந்த தொழில்புரியும் குடும்பத்திற்கு வாடகைக் உண்டு. நீண்டகால குத்தகைக்கும் வழங்கப்படலாம்.
077 344 4801

### சேவை

நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சினேக பூர்வமான சேவை.
**AAA Gold Center**
076 568 4346

### தேவை

கொழும்பு தெஹிவளையிலுள்ள வீடொன்றில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு யாழ்ப்பாணத்தை சேர்ந்த யாழ்ப்பாண சமையல் தெரிந்த 25 - 45 வயதிற்கிடைப்பட்ட பெண்ணொருவர் தேவை.
077 142 0492

### விற்பனைக்கு

மூன்று கிழமை ஊர்க்கோழிக்குஞ்சுகள்
விற்பனைக்கு விலை - 165/=
Contact Num: 076 678 8479
இடம்: நல்லூர்

### வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் உள்ள பலசரக்கு மொத்த நிலையத்துக்கு வேலையாட்கள் தேவை.
சிட்டை எழுதுனர். களஞ்சிய பொறுப்பாளர். விற்பனை பிரதிநிதி உடன் தேவை.
தொடர்பு:- **076 0094 946**

### வீடு வாடகைக்கு

யாழ் பரமேஸ்வரா கல்லூரி வீதி. 1ம் ஒழுங்கையில். வீடு வாடகைக்கு உண்டு. 3 அறைகள். சமையல் அறை. Hall, Washrooms சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு. மாத வாடகை ரூபா. 22000/=
தொடர்புகளுக்கு: குகன்
**077 773 9185**

**தென்மராட்சியில் புதிய ஒழுங்கமைப்பு மாற்றங்களுடன்**
**24-ஆவது ஆண்டில் தடம்பதிக்கும்**

# CHEMISTRY CENTRE

**2023 A/L கணித விஞ்ஞானப் பிரிவுகள் ஆரம்பம்**
**15.03.2021 மாலை 4.00 மணி**

| | |
|---|---|
| பௌதிகவியல் | : திரு.தி.ஐங்கரன் |
| உயிரியல் | : 1. திரு.அ.சஞ்சீவ் |
| | 2. பிரபல ஆசிரியர் |
| இணைந்த கணிதம் | : திரு.சி.சுதன் |
| இரசாயனவியல் | : திரு.க.பவான் |

(வகுப்புகள் யாவும் ZOOM முறையில் இல்லாமல் நேரடியான கண்காணிப்பில் நடைபெறும்)
(அனுமதிகள் வரையறுக்கப்பட்டவை)

தொலைதூர பிரயாணக் களைப்பின்றி, மட்டுப்படுத்திய மாணவர்களுடன் தொடர் பரீட்சைகள், பின்னூட்டல் களுடன் உரிய நேரத்திலான பாடத்திட்ட நிறைவு, முறை யான வழிப்படுத்தல்களால் கூடிய பெறுபேற்றினைப் பெற கடின உழைப்புடன் செயற்பட விரும்புபவர்கள் மட்டும் இணையலாம்....!!

(2021, 2022 கணித, விஞ்ஞானப் பிரிவு வகுப்புகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன)

அரசடிச் சந்தி, இந்து ஆரம்ப பாடசாலை வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.
-நிர்வாகக்குழு- 077 911 2279



## மரண அறிவித்தல்



### திருமதி தங்கராணி சிவானந்தம்

தோற்றம் 10.04.1945 — மறைவு 27.02.2021

வல்வெட்டித்துறை ஊரிக்காட்டை பிறப்பிடமாகவும். வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கராணி சிவானந்தம் கடந்த 27.02.2021 அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2021) ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டித்துறை ஊரிக்காடு நிறுவைத்தம்பையில் உள்ள அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் வல்வெட்டித்துறை ஊரிக்காடு பொது மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

+94777684131

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 05 - 11 - 1946



மறைவு 13 - 03 - 2021

### ஆறுப்பிள்ளை முருகையா

தண்ணீர்த்தாழ்வு, கட்டுவனைப் பிறப்பிடமாகவும், பழனி ஆண்டவர் கோயிலடி கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுப்பிள்ளை முருகையா அவர்கள் நேற்று (13.03.2021) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ் சென்ற ஆறுப்பிள்ளை இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், பொன்னுத்துரை மீனாட்சி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் மனோன்மணியின் ஆசைக் கணவரும், கலைவாணி, முகுந்தினி, மோகனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராஜா, சத்தியநாதன், மகேஸ்வரநாதன் ஆகியோரின் மாமாவும் காலஞ் சென்ற ஞானசுந்தரம், காலஞ்சென்ற சச்சிதானந்தம், பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற கமலராணி, பத்மாவதி, திலகவதி, சிவக்கொழுந்து, சிவபாக்கியம் காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி, கோபால், சிவலோகம், கனகலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுபாகர், சாருகா, அபிகா, ஆருகாசாருகன், மேனன், தர்சன், உமேஷ், டயானி ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு கோண்டாவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக கோண்டாவில் கட்டையடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


கோண்டாவில்
077 396 1074, 077 920 8676

தகவல்
குடும்பத்தினர்

## 11 ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்

### அமரர் சவரிமுத்து தேவசகாயம்

மண்ணில் 08.02.1923 — விண்ணில் 14.03.2010



வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
எங்களை வானுயர பெயர் விளங்க வைத்த
அன்புத் தெய்வம் பப்பா நீங்கள்
இறைவனுடன் இணைந்திருப்பீங்கள் என்பது
எமது அசைக்க முடியாத நம்பிக்கை
எமக்காக இறைவனை வேண்டி
கொள்ளுங்கள்.

இல. 28, றக்கா வீதி,
சுண்டிக்குளி.

என்றும் பசுமை நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் , பூட்டப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 23 - 07 - 1936



மறைவு 12 - 03 - 2021

### நாகலிங்கம் சுந்தரலிங்கம்

(தலைவர், வலி கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி)

சேவைக்காலம் :


17.04.2001 தொடக்கம் 23.05.2005 வரை பணிப்பாளர் சபை உறுப்பினர்
23.05.2005 தொடக்கம் 12.03.2021 வரை தலைவராக உள்ளார்.

எமது சங்கத் தலைவர் 12.03.2021 வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தி யுள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த் திப்பதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
வலி கிழக்கு தென் பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 01 . 1962



மறைவு 12 . 03 . 2021

### பாலசுப்பிரமணியம் விமலகாந்தன்

கொழும்பு விவேகானந்தசபை (ஆயுட்கால உறுப்பினர்)
கொழும்பு இந்து கலை கலாச்சார மன்றம் (கௌரவ செயலாளர்

மூளாய் சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும். ஸ்ரேசன் றோட். கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் விமலகாந்தன் நேற்று முன்தினம் (12.03.2021) வெள்ளிக் கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் புஸ்பலட்சுமியின் அன்புக் கணவரும். காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணி ...ம் - பொன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரரும். காலஞ்சென்றவர்களான சுப்பிரமணிய... - இராசலட்சுமி தம்பதியரின் (அல்லைப்பிட்டி) அருமை மருமகனும். யனேஷ்வரன். த... வரன். யதீஸ்வரன். ரமேஷ்வரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் வளர்ப்புத் தந்தையும் ஆ...

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் ... மணியளவில் இல.200. கணேஸ்வரம். அளவெட்டி இல்லத்தில் நடைபெற்று பூ... தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவு

No.: 4 றஞ்சன் வீதி,
புகையிரத வீதி,
கொழும்பு - 06

தகவல் : மனைவி:
திருமதி புஷ்பலட்சுமி விமலகா...
077 854 9798, 076 135 22...

# மருந்து வகைகளுக்கு நாட்டில் தட்டுப்பாடு

## முன்னாள் சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டு

**கொழும்பு, மார்ச் 14**

**நாட்டில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், அறுவைச் சிசிக்கைளை முன்னெடுப்பதில் கூட சிக்கல் காணப்படுகிறது. என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.**

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

புற்றுநோய் உள்ளிட்ட பல நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் லட்சக்கணக்கில் பணத்தைச் செலவிட்டு மருந்துகளைக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

புற்று நோய் உள்ளிட்ட முக்கிய நோய்களுக்கான மருந்துகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் நோயாளர்கள் பணம் கொடுத்து மருந்துகளைக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

எமது ஆட்சிக் காலத்தில் மருந்துகளுக்கான விலை குறைக்கப்பட் டது. ஆனால் தற்போது மருந்துகளின் விலை பெரிய அளவில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நாம் தீவிர நிலை நோயாளிகளுக்கு இலவசமாக மருந்துகளை வழங்கினோம். தற்போது அந்தச் சலுகையும் நீக்கப்பட்டுள்ளது. இதனால் வறிய மக்கள் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத் துள்ளனர்.

தனியார் மருந்தகங்கள் உள்ளிட்டவை தத்தமது விருப்பத்துக்கு ஏற்ப மருந்துகளின் விலையை அதிகரிப்பதற்காகவா எமது அரசில் மருந்துகளின் விலைக் கட்டுப்பாட்டுக்கான சுயாதீன ஆணைக்குழு அமைக்கப்பட்டது? மருந்துத் தட்டுப்பாடு தீர்க்கப்படாத நிலையில் மருத்துவமனைக் கட்டட நிர்மாணப் பணிகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இவற்றுக்கு நிதி இல்லை என்று கூறும் அரசு, சீனி இறக்குமதி வரிச் சலுகை மூலம் 15 பில்லியன் ரூபா மோசடியில் ஈடுபட்டுள்ளது. இது இலங்கை வரலாற்றில் இடம்பெற்ற பெரும் மோசடியாகும் - என்றார்.

(த-இ)

# பாதிக்கப்பட்ட ஓய்வூதியர்கள் ரெலி மெயில் போராட்டம்

கொழும்பு, மார்ச் 14

2016ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அரசாங்க சேவையில் இருந்து ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியத்தை வழங்குமாறு கோரும் "ரெலி மெயில் போராட்டம்" நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது என்று ஓய்வூதியதாரர்களின் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய இயக்கத்தின் உபதலைவர் ஏ.எல்.எம்.முக்தார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

பாதிக்கப்படுகின்ற சுமார் ஒரு லட்சத்து 20 ஆயிரம் பேர் அன்றைய தினம் ஜனாதிபதிக்கு முகவரியிட்டு, இவ்ரெலி மெயில்களை அனுப்புவதற்குத் தேவையான அறிவுறுத்தல்களை மேற்படி சங்கம் நாடாளாவிய ரீதியில் உள்ள அதன் அங்கத்தவர்களுக்கு வழங்கியுள்ளது.

ஜனாதிபதி அவர்களே "2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்ற அரச ஊழியர்களுக்குரிய ஓய்வூதிய அதிகரிப்பை உங்கள் முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தின் தீர்மானம் மூலம் நிறுத்தி வைத்துள்ளீர்கள். இது மிக அநீதி யானது. இதனை எமக்கு விரை வாக வழங்குங்கள்." எனக்கோரி ரெலிமெயில் அனுப்பப்படும். என்றார்.

(ஜ-இ)

# பங்களாதேஷ் பறக்கிறார் மகிந்த

கொழும்பு, மார்ச் 14

பிரதமர் மகிந்த ராஜபக்ச எதிர்வரும் வெள்ளிக்கிழமை பங்களாதேஸுக்கு உத்தியோகபூர்வ பயணம ஒன்றை முன்னெ டுக்கவுள்ளார்.

பங்களாதேஷ் அரசு விடுத்த அழைப்புக்கு அமைய, இந்தப் பயணம் அமையவுள்ளது என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. இந்தப் பயணத்தின்போது, அந்த நாட்டின் அரச நிகழ்வுகளில் பிரதமர் மகிந்த ராஜபக்ச பங்கேற்கவுள்ளதுடன், பங்களாதேஷின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரைச் சந்தித்தும் கலந்துரையாடவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ப)


## கொக்குவில் இந்துக் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம்
## (தாய்ச் சங்கம்)

வருடாந்த பொதுக்கூட்டமும்
2021/2022 காலப்பகுதிக்கான நிர்வாகசபை
தெரிவிற்கான வாக்கெடுப்பும்

**2021/2022 காலப்பகுதிக்கான புதிய நிர்வாகசபை தெரிவிற்கான வாக்கெடுப்பு**

காலம் :- 2021.03.21 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் :- காலை 8.00 மணி முதல் காலை 10.00 மணி வரை
இடம் :- கொக்குவில் இந்துக் கல்லூரி, பஞ்சலிங்கம் கேட்போர் கூடம்

**வருடாந்த பொதுக்கூட்டம்**

காலம் :- 2021.03.21 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் :- காலை 10.30 மணி
தலைமை :- திரு. ஆ.சத்தியமூர்த்தி
இடம் :- கொக்குவில் இந்துக் கல்லூரி, பஞ்சலிங்கம் கேட்போர் கூடம்

அங்கத்தவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
விக்னேஸ்வரன் தயாபரன்
செயலாளர்
077 - 6080926

## மரண அறிவித்தல்

மழலையாய் 04 . 12 . 1961



மகிமையாய் 12 . 03 . 2021

**சந்தியாப்பிள்ளை பீற்றர் கிறிஸ்ரோ லோகஸ்**

ஊர்காவற்துறையை பிறப்பிடமாகவும் ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட பீற்றர் கிறிஸ்ரோ லோகஸ் (ஞானம்) அவர்கள் 12.03.2021 வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் யாழ் மாநகர சபையின் மின்சார பகுதியின் உத்தியோகத்தரும், காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை றோசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மேரி கிளாரம்மாவின் அன்பு கணவரும், பிரசாந்தன் (கிங்சிலி-சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்), பிரதீபன் (குமார்- பொலிஸ் சட்ட பிரிவு, கொழும்பு தலைமையகம்) ஆகியோரின் அன்பு தந்தையும், இம்மானுவேல், காலஞ்சென்றவர்களான றீற்றாம்மா, சேவியர் அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், சங்கீதாவின் மாமனாரும் ஜொயல், அபிகேல் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2021) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, கோப்பாய் கானான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்,

**52/27, ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர். 077 220 3129**

## இன்றைய நாள்

**மேடம்:** தாமதித்த விஷயங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும். மகிழ்ச்சி வரும். நற்செய்தி உண்டு. செலவுக்கேற்ற வரவு வரும். வேலை பளு கூடும். உற்சாகத்துடன் பணி செய்வீர்கள். கலை ஆர்வம் வரும்.

**இடபம்:** பதற்றத்தையும் வேகத்தையும் குறைத்துக் கொள்ள வேண்டும். கலகலப்பு அதிகரிக்கும். நெருங்கிய ஒருவர் மனம் திறப்பார். மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்**நிதிப் பற்றாக்குறை சம்பந்தமான பிரச்சினைகள் தீரும். கஷ்டங்களை ஒதுக்கி நம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். மனதில் உள்ள உற்சாகம் குறையாமல் பார்த்துக்கொள்வீர்கள்.

**கடகம்:** எதையும் திட்டமிட்ட வகையில் செய்து முடிப்பீர்கள். கணவரின் ஆரோக்கியத்தில் இருந்த பிரச்னை தீரும். படபடப்பான அவசரச்செயல் வேண்டாம். வம்பு பேசாதீர்கள்.

**சிம்மம்:**அலுவலகத்தில் யாரிடமும் உங்களின் பொறுப்பை ஒப்படைக்காதீர்கள். நம்பிச் செய்தவை நல்லவிதமாக முடியும். வாழ்க்கைத்துணை உங்களுடைய சூழ்நிலையைப் புரிந்து கொள்வார்.

**கன்னி:** பணியாளர்கள் வெற்றி பெறுவர். பிரச்சினைகளை சமாளிப்பீர்கள். நட்பு விரிவடையும். பணியாளர்களுக்குப் புதிய பொறுப்புகள் வரும்.

**துலாம்:** இடமாற்றத்தால் நன்மை உண்டு. புது பங்குதாரர் சேர்க்க வேண்டாம். மனத்திருப்தி உண்டாகும். கணவருக்குப் பதவி உயரும். அணுகுமுறை மூலம் கடினமான பணிகளை முடிப்பீர்கள்.

**விருச்சிகம்:** புதிய விடயங்கள் கற்பீர்கள். பிரச்சினை ஒன்றுக்குத் தீர்வு கிடைக்கும். குழப்பங்கள் தீரும். காதல் விவகாரங்களில் மனம் ஈடுபடும். நல்லவர்களின் தொடர்பால் நலம் காணுவீர்கள்.

**தனுசு:** உற்சாகத்தினாலேயே சில முடிவுகள் எடுப்பதில் குழப்பம் ஏற்படும். பொறுமையுடன் விஷயங்களை கையாள்வது அவசியம். சஞ்சலங்கள் விலகும். நல்ல நண்பர்களின் பழக்கம் கிடைக்கும்.

**மகரம்:** பிரச்சினை முடிவுக்கு வரும். எண்ணம் நிறைவேறும். மனவருத்தம் தீரும். பிள்ளைகளின் வாழ்வில் முன்னேற்றம் உண்டு கோபத்தைக் குறைக்க வேண்டும். புதிய வாய்ப்பு பெறுவீர்கள்.

**கும்பம்:** அதிகாரிகள் உங்கள் மீது நம்பிக்கை வைத்துப் பொறுப்பு அளிப்பர். கவலை தீரும். மேலதிகாரியின் செயலால் நன்மை பெறுவீர்கள். ஆரோக்கியம் சிறக்கும்.

**மீனம்:** நிதானமான நாள். நட்புத் தொடர்புகள் புதுப்பிக்கப்படும். முன்னேற்றம் கருதி முக்கியப் புள்ளிகளைச் சந்திப்பீர்கள். இனிய சம்பவங்கள் நிகழும். தடை, தாமதங்கள் நீங்கும்.

## தவக்கால சிந்தனை

# பணி சிறிதாயினும் மாற்றம் பெரிதாகும்

ஒருநாள் இரண்டு நண்பர்கள் கடற்கரை வழியாக நடந்து சென்று கொண்டிருந்தார்கள். அதில் ஒருவர் ஆங்காங்கே இறந்து கிடக்கும் சிறிய மீன்கள் பலவற்றைக் கண்டார். ஒவ்வொரு முறையும் பெரிய அலைவரும்போது மீன்கள் கரையொதுங்கி துடித்து மடிவதைக் கண்டு அவற்றின் மேல் இரக்கமுற்றார். தன்னால் இயன்றளவு மீன்களை ஒவ்வொன்றாக எடுத்துக் கடலில் விட்டார்.

இதனைக்கண்டு நகைத்தபடி அவரது நண்பர் "இங்கே ஆயிரக்கணக்கான மீன்கள் மடிகின்றபோது சில மீன்களைக் காப்பாற்றி நீ என்ன செய்யப்போகிறாய்?"என்றார். அதற்கு அவர் துடிதுடித்து இறக்கப்போகிற இந்த மீனின் வாழ்க்கையில் என்னால் ஓர் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்றபடி அடுத்த மீனையும் எடுத்து கடலில் விட்டார்.

சமூகப் பணியென்பது பெரிதாக வெட்டிப்பிடுங்குவதோ வாய்ப்பந்தல் போடுவதோ அல்ல. பிறருக்குத் தெரியாமல் தன்னடக்கத்துடன் சிறிய சிறிய நற்செயல்களில் ஈடுபடும்போது பிறருக்கு முன்னுதாரணமாகவும் உதவியாகவும் அமையும்.

ஆதிக்க வர்க்கத்தாலும் அடக்கு முறைகளாலும் அடிமைப்படுத்தப்பட்டு தாழ்த்தப்பட்டு முகவரியற்று நாதியற்றுவாடும் மக்களுக்காக குரல்கொடுப்பதும் கைதூக்கி விடுவதும் சமத்துவம் கொடுப்பதும் இறை இரக்கத்தை பரிவை பகிர்ந்துகொள்ளும் வழிகளாகும். ஒவ்வொருவரும் தன்னாலான பணிபுரிய முற்படும்போது சமூக, பிராந்திய, தேசிய மட்டத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும்.

**எஸ்.யேசுதாஸ்,**
**கொழும்புத்துறை**

# இரட்டைக் குழந்தைகளின் பிறப்பு வீதம் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 14



உலகில் இரட்டைக் குழந்தைகளின் பிறப்பு இதற்கு முன்னர் ஒருபோதும் இல்லாத அளவு உச்சத்தை எட்டியுள்ளது என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தாமதமாக குழந்தை பெற்றுக்கொள்வதும், ஐ.வி.எப் போன்ற மருத்துவ தொழில்நுட்பங்களின் உதவியுடன் குழந்தை பெற்றுக் கொள்வதுமே இதற்கு முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது.

தற்போது ஆண்டுதோறும் 1.6 மில்லியனுக்கு மேற்பட்ட இரட்டையர்கள் பிறக்கின்றனர் என "ஹியூமன்ரீபுரொடக்சன்" எனும் அறிவியல் சஞ்சிகையில் வெளியான ஆய்வுக் கட்டுரை குறிப்பிடுகிறது.

அதாவது 42 குழந்தைகளில் ஒன்று இரட்டையர்களில் ஒருவராக பிறக்கிறது. 1980 களின் நிலைமையைவிடவும், இப்போது இரட்டையர் பிறப்பு மூன்றில் ஒரு பங்கால் அதிகரித்துள்ளது. 2010ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை 165 நாடுகளில் பதிவான இரட்டையர் பிறப்பு விகிதத்தைச் சேகரித்து, அதை 1980ஆம் ஆண்டு தொடக்கம் 1985ஆம் ஆண்டு வரையான காலகட்டத்துடன் ஆய்வாளர்கள் ஒப்புநோக்கினர். அதன்படி முன்பு ஆயிரத்துக்கு 9 பிரசவங்களில் இரட்டைக் குழந்தைகள் பிறந்திருந்த நிலையில், இப்போது அந்த எண்ணிக்கை 12 ஆக அதிகரித்துள்ளது.

உலகில் பிறக்கும் இரட்டையர்களில் 80 வீதமானவர்கள் ஆசிய, ஆபிரிக்கக் கண்டங்களைச் சேர்ந்தவர்கள் என்று அந்த ஆய்வில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-இ)

# கணவனின் ஆயுள் காக்கும் காரடையான் விரதம் இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 14

கணவரின் ஆரோக்கியத்துக்காகவும் தீர்க்க ஆயுளுக்காகவும் செய்யப்படும் காரடையான் விரதம் இன்று இந்து மக்கள் வாழும் நாடுகளில், பெண்களால் கடைப்பிடிக்கப்படவுள்ளது. இரவு 7.30 மணி முதல் 8.30 மணி வரை இந்த விரதம் கடைப்பிடிக்கப்படவுள்ளது. இந்த நேரத்தில் பெண்கள், பூசை செய்து வழிபட்டு, அம்பாளுக்கு நைவேத்தியம் செய்து, பிரார்த்தனை செய்யவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணவர் நீண்ட காலம் நோய் நொடியில்லாமல் வாழ்வதற்காக கடைப்பிடிக்கப்படும் கேதார கௌரிவிரதம், வரலட்சுமி விரதம் போன்றே இந்தக் காரடையான் நோன்பு விரதத்தையும் இந்துப் பெண்கள் கடைப்பிடிக்கின்றார்கள். தமிழ் நாட்டில் இந்த விரதம் மிகவும் பிரசித்தி பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ப)

# ஐந்து பேருக்கு 25 கோடி ரூபா

கொழும்பு, மார்ச் 14

அபிவிருத்தி லொத்தர் சபையின் கோடிபதி சீட்டிழுப்பின் வெற்றியாளர்கள் ஐவருக்குப் பிரதமர் மஹிந்த ராஜபக்சவால் காசோலைகள் அலரி மாளிகையில் வைத்து நேற்று முன்தினம் வழங்கிவைக்கப்பட்டன. கோடிபதி கப்ருக 687 மற்றும் 689, சனிக்கிழமை அதிஷ்டம் 3,507, 3,543 மற்றும் அபிவிருத்தி அதிஷ்டம் 411 ஆகிய வெற்றி வாரங்களின் வெற்றியாளர்களுக்கு இவ்வாறு காசோலைகள் வழங்கப்பட்டன. வஞ்சாவல, பேராதனை, லுணுவில, புஸ்ஸல்லாவ மற்றும் கஹவத்த பிரதேசங்களின் சீட்டிழுப்பு வெற்றியாளர்களுக்கு வழங்கப்பட்ட மொத்தத் தொகை 25 கோடி ரூபாவுக்கும் அதிகமாகும். (வ-இ)

# ஜிகாத் கொள்கையைப் பரப்பினாராம் கொழும்பில் ஒருவர் ரி.ஐ.டி.யால் கைது

கொழும்பு, மார்ச் 14

நாட்டில் ஜிகாத் கொள்கையைப் பரப்பி அதனை ஊக்குவிக்கும் வகையில் கட்டுரைகளை எழுதியுள்ளார் என்ற சந்தேகத்தில் மாவன்னவலயைச் சேர்ந்த ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தெமட்டகொடவில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் பயங்கரவாத விசாரணை பிரிவினரால் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் ஜமாத் - இ இஸ்லாமி அமைப்பின் வெளியீடுகளில் வஹாபிசம் மற்றும் ஜிகாத்தை ஊக்குவிக்கும் கட்டுரைகளை எழுதியுள்ளார் எனவும் இவரிடமிருந்து மீட்கப்பட்ட ஆவணங்களை ஆராய்ந்துவருகிறோம் எனவும் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (வ-இ)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப்பயில
**ஆசிரியர் விஸ்வப்பிரம்ம ஸ்ரீ நடராஜா விக்னேஸ்வரன்**
ஆச்சாரியார் (24 வருட அனுபவம்)
இல. 424/3, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
077 675 1649

**நாகபூஷணி திருமண சேவை**

வைத்தியர், பொறியிலாளர், கணக்காளர், சட்டத்தரணிகள், ஆசிரியர்கள், அரச உயர் உத்தியோகத்தர், தனியார் துறையினர் மற்றும் உள்நாட்டு/வெளிநாட்டு மண மக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர்.
நீங்கள் விரும்பும் மணமக்களை மிகப் பொருத்தமாக துரித கதியில் திருமணம் செய்து தரப்படும்.

**077 138 7596, 021 222 9306**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**பணிப்பெண் தேவை**

யாழ். வீட்டில் தங்கி வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.
**076 9294 696**

**பணிப்பெண் தேவை**

யாழ். வயோதிப பெண் ஒருவரை வீட்டில் இருந்து பாரப்பதற்கு பணிப்பெண் தேவை. தகுந்த சம்பளம் தரப்படும்.
**076 9294 696**

**CAR FOR SALE**


Mitsubishi Eclipse Cross, 1500 CC, Pearl White 2019 Model with Sun roof for Sale
(Mileage, 2,300km)
**Contact : 076 538 7407**

# காணி விற்பனைக்கு

நொத்தாரிஸ் தோட்டம் கரணவாய் மேற்கில் அமைந்துள்ள நி.பர 21 விஸ்தீரணம் கொண்டதும், ஈரப்பலா மரங்களும், 100 தென்னம் பிள்ளைகளும், எக்காலமும் நீர் வற்றாத வெட்டுக் கிணறும், வேறுகிணற்றில் 4 அடி வழி வாய்க்காலும், ஒருநாள் தண்ணீர் பங்கும், நான்கு பக்கமும் கொங்கிறீட் தூண் நிறுவப்பட்டு முட்கம்பியால் அடைக் கப்பட்ட வேலியுடன் கூடிய தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு. (நீதி மன்றால் பிரிவிடல் செய்யப்பட்ட உறுதி) 4" வாட்டப்பம் புதித்தாகப் போடப்பட்டது. பருத்தித்துறை யாழ்ப்பாண வீதிக்கு 1/4 மைல் தூரத்தில் உள்ளது.

நேரில் தொடர்பு கொள்ளவும்
**வே.தம்பிப்பிள்ளை**
**"சிறிபதி இல்லம்"**
**இலகடி, அல்வாய் கிழக்கு**
**அல்வாய்.**
**T.P: 076 332 1357**

# மரண அறிவித்தல்



பிறப்பு 12 . 09 . 1945
இறப்பு 10 . 03 . 2021

## திருமதி மாணிக்கவாசகர் இரத்தினேஸ்வரி

**(சுழிபுரம் மேற்கு / சுவிஸ்சர்லாந்து)**

மாத்தளையைப் பிறப்பிடமாகவும், சுழிபுரம் மேற்கு, திருகோணமலை, சுவிற்சர் லாந்தை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கவாசகர் இரத்தி னேஸ்வரி அவர்கள் கடந்த (10.03.2021) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் வள்ளியம்மை தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான தம்பையா வள்ளிப்பிள்ளை தம்பதி யரின் மருமகளும், அமரர் மாணிக்கவாசகரின் (துறைமுக அதிகார சபை) அன்பு மனைவியும், ரமேஸ் (இங்கிலாந்து), கோணேஸ் (சுவிற்சர்லாந்து) ஆகியோரின் ஆருயிர்த் தாயும், கோபிகா, ஜெயராணி ஆகியோரின் அருமை மாமியும், அனோஷ்கா, தகவினி, காவியன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ் சென்றவர்களான சிவசுப்பிரமணியம், சிவபாதசுந்தரம் மற்றும் பரமேஸ்வரி (நியூஸிலாந்து), மகேஸ்வரி, சிவப்பிரகாசம் (மலேசியா) சிவசிதம்பரம் (அமரர்), குகனேஸ்வரி, ஞானேஸ்வரி (அமரர்), பரமேஸ்வரன் (அமரர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சோபியா, சரோஜினி, இராமலிங்கம் (அமரர்), கனகசூரியர் (அமரர்), மயில்வாகனம் (அமரர்), தனபாலசிங்கம், சிவசிரோன்மணி, தெய்வ நாயகி, டெய்சி மல்லிகா மற்றும் காலஞ்சென்றவர்களான செல்லையா, இராசையா, சின்னையா, சிவபாக்கியம் ஆகியோரின் மைத்துனியும், ஞானியார் பொன்னம் பலம் (அமரர்) அவர்களின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.03.2021) திங்கட்கிழமை சுவிற்சர் லாந்து Luzevn இல் முற்பகல் 10.00 மணிக்கு (இலங்கை நேரம் பிற்பகல் 2.30) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

## 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு நேற்றுத் தொடக்கம் தடுப்பூசி



கொழும்பு, மார்ச் 14

மேல் மாகாணத்தில் 60 வயதுக்கு மேற் பட்டவர் களுக்கு நேற்று முதல் கொரோனாத் தடுப்பூசி செலுத்துவதற்கு முன்னுரிமை வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

அதன்படி, மேல் மாகாணத்தில் உள்ள முதியோர் இல்லங்களில் உள்ளவர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட வுள்ளது என்று கொழும்பு மாநகர சபையின் தலைமை சுகாதார மருத்துவ அதிகாரி ருவன் விஜயமுனி தெரிவித்துள்ளார்.

நாட்டில் பதிவாகும் கொரோனா உயிரிழப்புகளில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களே அதிகம் என்பதால் அவர்களுக்கு தடுப்பூசி செலுத்த முன்னுரிமை வழங்கப்படும் என்று சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

(ஐ-இ)

**விற்பனைக்கு**

எம்மிடம் KN 95 மாஸ்க் மொத்த மாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
கல்வியங்காடு **071 305 5832**

**உடல் எடை குறைய வேண்டுமா?**

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?
**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம்
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

**தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?**

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா?
➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணைய் குளிசை

**கருமை நிறம் நீங்க வேண்டுமா?**

**077 210 6155   221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**

# வேலையாட்கள் தேவை

IT / Application Support Specialist க்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது. Basic Computer Hardware, Windows 7/10 MySQL / MSSQL அறிவு அவசியம்.

சாவகச்சேரிக்கு அண்மையில் வசிக்கும் தமிழ், ஆங்கிலம் பேசத் தெரிந்த ஆண்கள் விரும்பத்தக்கது.

**தகுதியுடையவர்கள் சுயவிபரக் கோவையை**
accounts@lankatec.com
**எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் கிளிநொச்சியில்..

**Diploma in Spoken English**

முழு / பகுதி நேரம்
முழுநேரப் பாடநெறிகள் திங்கள் தொடக்கம் வெள்ளி வரை தினமும் 4 மணித்தியாலங்கள் நடைபெறுகின்றன.

*Now prepare for your* Academic / General **IELTS**
6.5 band score இங்கு உத்தரவாதம்
idp Exam Centre

Spouse ( Family ) விசாவில் செல்லவுள்ளவர்களுக்கு UK அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில சான்றிதழுக்கான பாடநெறி
**IELTS LIFE SKILLS A1**

பிரான்ஸ் மொழிப் பாடநெறி **French**

BRITISH COLLEGE of Education
More information **0777-695605**

23, Kachcheri nallur Rd, Jaffna. Tel : 021-4927113
A9 Road, Kilinochchi. Tel : 021-4927114
55, A9 Road, Vavuniya. {next to new bus stand}. Tel : 024-4930042
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் கந்தையா அன்னம்மா

(சொந்த இடம் உருத்திரபுரம் 159 D.10)

என் அன்பான அம்மா
இன்றோடு 3 வருடங்கள் போனதம்மா
எம்மைத் தாலாட்டி வளர்த்தவளே
கொஞ்சமேனும் கலங்காமல் காத்தவளே
வஞ்சம் இல்லா தாய் அம்மா
எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும்
உன் நினைவு என்னை விட்டு அகலாது.

பிறப்பு 01.05.1927
இறப்பு 14.03.2018

மகள் - த.யோகமலர்
மருமகன், பேரப்பிள்ளைகள்
ஆனைக்கோட்டை.

# சூத்திரதாரியை வெளிக்கொணர புதிய திட்டத்தை ஆரம்பியுங்கள்

## எதிர்க் கட்சி வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 14

ஈஸ்டர் தாக்குதலின் உண்மையான சூத்திரதாரிகளை வெளிக்கொணர அரசியல் பேதங்களைக் கைவிட்டு புதிய திட்டத்தை தொடங்குமாறு எதிர்க்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. செப்ரெம்பர் 11 தாக்குதலுக்குப் பின்னால் உள்ள சூத்திரதாரிகளை அடையாளம் கண்டு தண்டிக்க அமெரிக்க அரசு எடுத்த நடவடிக்கைகளை இலங்கை ஒரு உதாரணமாகக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஈஸ்டர் தாக்குதல்களின் முக்கிய சூத்திரதாரி ஓடி மறைவதற்கு முன், உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

(ப)

கால்துடைப்பான் விவகாரம்;

# தூதரகத்தை அணுகியது வெளிவிவகார அமைச்சு

கொழும்பு, மார்ச் 14

இலங்கை தேசியக் கொடி அச்சிடப்பட்ட பாதணி மற்றும் கால்துடைப்பான் விரிப்புகள் அமேசான் ஒன்லைன் விற்பனைக்கு எதிராக நடவடிக்கை எடுக்க இலங்கையின் வெளியுறவு அமைச்சகம் சீனாவின் பீஜிங்கில் உள்ள இலங்கை தூதரகத்தை அணுகியுள்ளது. சீனாவைத் தளமாகக் கொண்ட வீட்டு வாசல்களின் கால்துடைப்பம் உற்பத்தியாளரை தொடர்பு கொள்ளுமாறு வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் ஜெயநாத் கொலம்பேஜ் இலங்கை தூதரகத்துக்குத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தேசியக் கொடியை வீட்டு கால்துடைப்பமாக விளம்பரம் செய்வது குறித்து வெளியுறவுச் செயலாளர் இலங்கையில் உள்ள சீனத் தூதரகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. அட்மிரல் ஜெயநாத் கொலம்பேஜ் வோஷிங்டன் டி.சி.யில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கும், அமேசானுடன் இந்த விடயத்தைப் பின்தொடருமாறு அறிவுறுத்தியுள்ளார்.

(ப)

### விற்பனைக்கு

இரும்புபெட்டி விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு 077 773 0567

### பணிப் பெண் தேவை

ஆனைக்கோட்டையிலுள்ள அரச உத்தியோகத்தர் குடும்பம் ஒன்றின் பிள்ளையை பராமரிப்பதற்கு பணிப் பெண் தேவை. (சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)

077 543 8843, 077 466 9445

### வேலையாள் தேவை

உணவகத்திற்கு வேலையாள் தேவை.

T.P: 077 358 0646
077 809 8991

### கணினி ஆசிரியர் தேவை

சண்டிலிப்பாயில் இயங்கிவரும் முன்னணி கல்வி நிறுவனம் ஒன்றிற்கு கணினி கற்பிப்பதற்கு முழு நேர அல்லது பகுதி நேர ஆசிரியர் தேவை. முழுமையான கல்வித்தகைமை மற்றும் வேலை முன் அனுபவங்களை உள்ளடக்கிய சுயவிபரக்கோவையினை 17.03.2021 ஆம் திகதிக்கு முன் manipayeducation@gmail என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பிவைக்கவும்.

DMI COMPUTER EDUCATION

TVEC Reg.No.:P25/0056

O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு - I - 15/03/2021 - Mon
பிரிவு - II - 17/3/2021 - Wed
பிரிவு - III - 22/3/2021 - Mon



Dip.in Information Teachnology
Dip.in Office Automation
Dip.in PC Application
Dip.in Microsoft Office
Dip.in Web Designing
Hardware,Mulitmedia,
Auto CAD,Java,C++,PHP
NVQ COURSES( ICT-Full Time,CAA Full/Part Time)

IT & ENGLISH
DUAL DIPLOMA

- Microsoft online பரீட்சைகளூடாக Microsoft தலைமை அலுவலகத்திலிருந்து தலைமை செயலதிகாரியின் கையொப்பத்துடனான Microsoft specialist சான்றிதழ்கள்.
- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட NVQ சான்றிதழ்களை வழங்கிவரும் ஒரேஒரு தனியார் கணினி நிறுவனம்

ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க யாழில் பெருமளவு மாணவர்கள் தெரிவு செய்யும்
Diploma in English
Spoken English

## DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம் No.113, கன்னாதிட்டி வீதி (சயன்ஸ்ஹோல் அருகாமை) 021 222 4403


| M.M.V. வீதி, (மத்திய மகா வித்தியாலயம் அருகாமை காளி கோவில் முன்பாக) | கண்டி வீதி, (HNB வங்கி அருகாமை) | No.130, கே.கே.எஸ் வீதி, (NSB வங்கி அருகாமை) | சீரணிச்சந்தி | A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய கல்லூரி முன்பாக) |
|---|---|---|---|---|
| நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |

### (22) விற்பனைக்கு (22)

யாழ் பலாலி வீதியில் பரமேஸ்வரா சந்திக்கு அண்மையில் 3 பரப்பு காணியும், யாழ் நல்லூர்க் கோயிலுக்கு அண்மையில் 5 பரப்புக் காணியும், யாழ் ஆஸ்பத்திரி வீதியில் CTB பஸ்தரிப்பிடத்திற்கு முன்பாக 15 அடி அகலம் 200 அடி நீளமும் கொண்ட தனிக் கடையும், யாழ் ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக 20 அடி அகலமும் 100அடி நீளமும் கொண்ட 3 மாடி புதிய கடையும், யாழ் ஆஸ்பத்திரி வீதி சிக்னலுக்கு அண்மையில் வேம்படி வீதியில் 3 பரப்பு காணியும், யாழ் பிரவுண் வீதியில் 4 பரப்புக் காணியும், யாழ் நல்லூருக்கு அண்மையில் கோயில் வீதியில் 4 பரப்புக் காணியும், யாழ் கந்தப்புசேகரம் வீதியில் 10 பரப்பு காணியும், கொழும்பு வெள்ளவத்தையில் 2 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

077 723 2535

## மரண அறிவித்தல்



### அருட்திரு.அருளானந்தம் கிங்ஸ்லி சுரேந்திரன்

(சபைக்குரு, பண்டத்தரிப்பு, அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை)

கரவெட்டி மத்தி கரவெட்டியை பிறப்பிடமாகவும், பண்டத்தரிப்பு சண்டிலிப்பாய் வீதி 'ராணிவிலா'வை வதிவிடமாகவும் கொண்ட அருட்திரு.அருளானந்தம் கிங்ஸ்லி சுரேந்திரன் அவர்கள் நேற்று (13.03.2021) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருளானந்தம் சிவக்கொழுந்து தம்பதிகளின் புதல்வரும், காலஞ்சென்ற செல்வசாமி அமிர்தமலர் தம்பதிகளின் அன்பு மருமகனும், எமி அஜித்தா சுரேந்திரன் அவர்களின் அன்புக் கணவரும், அலன், அபிஷேக் (ஆசிரியர் பரி.யோவான் கல்லூரி), ஆன் அபிஷாரா ஆகியோரின் பாசமிகு தகப்பனும், சுகுனவதனி (யாழ்ப்பாணம்), சுகுனேந்திரன் (பிரான்ஸ்), புனிதவதனி (கொழும்பு ), சுவர்ணவதனி (UK), சாம் சுபேந்திரன் (போதகர் மெதடிஸ்த திருச்சபை, புளியந்தீவு), சாமிளா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகோதரனும், அனிற்றா, சிவகுமாரி (பிரான்ஸ்), நோயல் ஜெயகிஷன் (கொழும்பு), அனுஷா (ஆசிரியர், மட்டக்களப்பு), Dr.அனுஷியா குணராஜ் ஆகியோரின் மைத்துனரும், ஹனா, ஜோயனா ஆகியோரின் பெரியப்பாவும், அனா, எமி, ஜோயல், ஜொனத்தன் ஆகியோரின் சித்தப்பாவும், ஹெலன், பிரீத்தி, ஆத்மிகா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14.03.2021) ஞயிற்றுக்கிழமை பண்டத்தரிப்பு இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (15.03.2021) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியிலிருந்து பண்டத்தரிப்பு அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை ஆலயத்தில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு தொடர்ந்து மாலை 3.30 மணிக்கு நல்லடக்க ஆராதனை இடம்பெற்று அருகிலுள்ள பண்டத்தரிப்பு அமெரிக்கன் சிலோன் மிஷன் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
077 825 9941
021 225 2579

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு
27 . 05 . 1943



இறப்பு
12 . 03 . 2021

### திருமதி மேரிலூட்ஸ் அன்ரன் பாலசிங்கம் (ராஜவதி)

இளவாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ராஜவதி என்று அழைக்கப்படும் திருமதி மேரிலூட்ஸ் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் நேற்று முன்தினம் (12.03.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை எலிசபேத் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பிஜயா மேரிதிரேசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், அன்ரன் பாலசிங்கம் (ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி) அவர்களின் அன்பு மனைவியும், ரஞ்சிதம் (பிரான்ஸ்), ராணி (சுவிஸ்), பிலிப் ராஜநாயகம், பவி (கனடா), ஜெயா, வசந்தா (பிரான்ஸ்), சாந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஜோச், அன்ரன், நிர்மலாதேவி, ஜோசேப், ராயு மற்றும் கிறகரி, ஜெயந்தி ஆகியோரின் அன்பு மச்சாளும், காலஞ்சென்றவர்களான ஞானரத்தினம், துரைசிங்கம் மற்றும் பற்றிமா, இராஜகுலசிங்கம், நீற்றா மரியா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதி ஆராதனை திருப்பலிக்காக பூதவுடல் அவரது இல்லத்தில் இருந்து நாளை (15.03.2021) திங்கட்கிழமை மு.ப. 9.30 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு இளவாலை அன்னம்மாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: கணவர்
அன்ரன் பாலசிங்கம்
(ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி)
தொடர்பு இல: 071 860 9153

# பண்டிகை காலங்களில் கொரோனா அலைக்கு சாத்தியம்

## உபுல் ரோஹண எச்சரிப்பு



**கொழும்பு, மார்ச் 14**

**இலங்கையில் எதிர்வரும் பண்டிகைக் காலங்களில் அடுத்த கொரோனா அலைக்கான ஆபத்து ஏற்பட்டுள்ளது என பொதுச் சுகாதார ஆய்வாளர்கள் சங்கத் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது, பண்டிகைக் காலங்களில் கொரோனாத் தொற்றிலிருந்து மக்களைக் காப்பாற்றும் பொருட்டு அரசாங்கம் தகுந்த கொள்கைகள் தொடர்பான தீர்மானங்களை எடுக்க வேண்டும். அவ்வாறு இல்லையெனில், அடுத்த அலைக்கான ஆபத்தை எதிர்நோக்க வேண்டி வரும். இது குறித்து பொதுமக்கள் பண்டிகைக் காலங்களில் விழிப்புடன் செயலாற்ற வேண்டும். அத்துடன் அவர்கள் இயன்றவரை தங்களது பயணங்களை மட்டுப்படுத்த வேண்டும் -என்றார். (ந-44)

# உரிமைகளை நசுக்க இடமளிக்க மாட்டோம்

## மஸ்தான் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, மார்ச் 14

பல சமூகங்கள் வாழ்கின்ற நாட்டில் உரிமை சார்ந்த பிரச்சினைகள் இருக்கின்றன. அதனை நசுக்கும் அளவுக்கு நாம் பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணி ஆவணங்களைக் கையாளும் அலுவலகம் வடக்கில் இருப்பதே எனது விருப்பம். எல்.ஆர்.சி. காணிக்குரிய ஆவணங்களே அநுராதபுரத்துக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளன. அது கடந்த காலங்களிலும் அநுராதபுர பிராந்திய காரியாலத்தால்தான் பார்க்கப்பட்டிருந்தது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் எனது கோரிக்கைக்கு அமையவே வடக்கு மாகாணத்துக்கு வந்தது என்றார். (த-110)

## இலங்கை விவகாரம்;

# பிரிட்டன் நாடாளுமன்றில் உறுப்பினர்கள் விவாதம்

கொழும்பு, மார்ச் 14

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றுக்கான பிரித்தானியாவின் நடவடிக்கைகள் குறித்து அந்நாட்டு நாடாளுமன்றத்தில் விவாதம் ஒன்று இடம்பெறவுள்ளது.

அதன்படி எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவுள்ள குறித்த விவாதத்தில் இலங்கை தொடர்பான பிரித்தானியாவின் கடமை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் விவாதிக்கவுள்ளனர். நாடாளுமன்றத்தின் பின்வரிசை உறுப்பினர்களான சியோபேன் மெக்டோனாக், எலியட் கோல்பர்ன் மற்றும் சேர் எட்வர்ட் டேவி ஆகியோர் குறித்த விவாதத்தில் பங்கு கொள்ளவுள்ளனர். (ப)

# ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் அறிக்கையில் குறைபாடுகள்

## ஒத்துக்கொள்கிறார் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம

கொழும்பு, மார்ச் 14

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பான அறிக்கையில் குறைபாடுகள் காணப்படுகின்றன. அவை திருத்தி அமைக்கப்படும் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

இஸ்லாமிய அடிப்படைவாதக் கொள்கையை உடையவர்களை அரசில் ஒருபோதும் இணைத்துக் கொள்ள மாட்டோம் என்பது பொதுஜன பெரமுனவின் அடிப்படைக் கொள்கையாக காணப்பட்டது. நாட்டில் இஸ்லாமிய அடிப்படைவாதம் தலைத்தூக்க முடியாத அளவுக்கு தேசிய பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அரசுக்குள் இஸ்லாமிய அடிப்படைவாத கொள்கை யுடையவர்கள் உள்ளார்கள் என கைத்தொழில்துறை அமைச்சர் விமல் வீரவன்ச குறிப்பிட்டுள்ள கருத்து முற்றிலும் தவறாகும். அடிப்படைவாதக் கொள்கைகையைக் கொண்டவர்களை உள்ளடக்கி ஆட்சியமைக்கவில்லை. முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் கருத்துக்கள் அரசு தொடர்பில் மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டைத் தோற்றுவிக்கும். ஆகவே அரசின் உறுப்பினர்கள் அனைவரும் பொறுப்புடன் செயற்படுதல் அவசியமாகும். ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களைப் பாதுகாக்க வேண்டிய தேவை அரசுக்குக் கிடையாது. கறுப்பு ஞாயிறு தின போராட்டம் தொடர்பில் தற்போது கருத்துரைக்கும் எதிர்த்தரப்பினர் கடந்த கால நிகழ்வுகளை மறந்து விட்டார்கள். ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பான அறிக்கையில் ஒரு சில குறைபாடுகள் காணப்படுகின்றன. அந்தக் குறைபாடுகள் பரிசீலனை செய்யப்படுகின்றன. அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பல யோசனைகள் இனி வரும் காலங்களில் முறையாகச் செயற்படுத்தப்படும் -என்றார். (ப)

## தண்ணீர் விநியோகத்துக்கான

# குழாய்கள் இறக்குமதியில் ரூ.6 கோடி அரசுக்கு நட்டம்

## நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் அறிக்கை

கொழும்பு, மார்ச் 14

ஜெய்கா நிறுவனத்தின் நிதியுதவியுடன் 2013ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட கிழக்கு மாகாண நீர் வழங்கல் அபிவிருத்தித் திட்டத்துக்காக 'டிஐ' குழாய்கள் மற்றும் துணைக் கருவிகளை இறக்குமதி செய்யும்போது இடம்பெற்ற மோசடி காரணமாக 6 கோடி ரூபாவுக்கும் அதிக பணத்தை அரசு மேலதிகமாகச் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது என்பது கண்டறியப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற அரச பொறுப்பு முயற்சிகள் குழுவில் இந்த விடயம் தெரியவந்துள்ளது என்று நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்குத் தேவையான 'டிஐ' குழாய்கள் மற்றும் துணைக் கருவிகளை இறக்குமதி செய்யும் பொறுப்பு திறைசேரியால் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு வழங்கப்பட்டதுடன், இதற்கான ஒப்பந்தத்தை அக்சஸ் இன்டர்நெஷனல் தனியார் நிறுவனத்துக்கு சபை வழங்கியிருந்தது. இந்தப் பொருள்களுக்கு வரியைச் செலுத்தாது களஞ்சியக் கிடங்கில் வைப்பதற்கு சுங்கத் திணைக்களம் அனுமதி வழங்கியிருந்தது .

அவற்றின் பெறுமதி 51 லட்சத்து 39 ஆயிரத்து 621 அமெரிக்க டொலராக இருந்தபோதும், அவற்றை களஞ்சியத்திலிருந்து விடுவிக்கும்போது தேசிய ரீதியில் தயாரிக்கப்பட்ட பற்றுச்சீட்டில் மொத்தப் பெறுமதி 63 லட்சத்து 50 ஆயிரத்து 364 அமெரிக்க டொலர்கள் என போலியான தகவல்கள் குறிப்பிடப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, குறிப்பிட்ட தனியார் நிறுவனம் 12 லட்சத்து 7 ஆயிரத்து 98 டொலர் இலாபத்தைப் பெறுவதற்கு வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுத்தமை தொடர்பிலும் குழு கவனம் செலுத்தியது என்று நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதவிர, போலியான பற்றுச்சீட்டுத் தயாரித்தமை, போலியான தகவல்களை வழங்கி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி மோசடியாகப் பெறப்பட்டுள்ள நிலையில், இதனை விசாரணைசெய்த சுங்கத் திணைக்களம் இது அக்சஸ் நிறுவனத்தின் தவறு இல்லையென்று விசாரணையை முடிவுக்குக் கொண்டுவந்தமை குறித்தும் அரச கணக்குகள் பற்றிய குழு கவனம் செலுத்தியது.

இந்தவிவகாரம் குறித்து விசாரணை நடத்துவதற்கு புதிய குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்த விசாரணை அறிக்கையை ஏப்ரல் முதலாம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க முடியும் என்றும் சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கூறியிருந்தார் என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-இ)

# சஜித் அணி எம்.பிக்கும் தாவியது கொரோனா

கொழும்பு, மார்ச் 14

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல் ஹலீமுக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

இலங்கை நாடாளுமன்றில் கொரோனாத் தொற்று உறுதியாகிய 8 ஆவது நாடாளுமன்ற உறுப்பினர் இவர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே தயாசிறி ஜெயசேகர, ரவூப் ஹக்கீம், வாசுதேவ நாணயக்கார, பியல் நிஷாந்த, வசந்த யாப்பா பண்டார மற்றும் அருந்திக பெர்னாண்டோ மன்றும் சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி ஆகியோருக்கு தொற்று உறுதியாகி அவர்கள் அதிலிருந்து மீண்டிருந்தனர். இவ்வாறானதொரு நிலையில் அப்துல் ஹலீமுக்கும் தற்போது தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ப)

## மரண அறிவித்தல்

பிறப்பு 17 . 06 . 1977



இறப்பு 12 . 03 . 2021

**யேசுதாசன் டெல்சன் (வசந்தன்)**

120/06, சொலமன் லேன் கொய்யாத்தோட்டத்தினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யேசுதாசன் டெல்சன் அவர்கள் கடந்த (12.03.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2021) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, நல்லடக்கத்திற்காக கொட்டடி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
076 7171280

## மோடி....

புதுடில்லியிலுள்ள இந்தியப் பிரதமர் அலுவலகம் நேற்றுப் பிற்பகல் இந்தத் தகவலைத் தெரிவித்தது.

இருவரும் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபை விவகாரத்தையொட்டி உரையாடினர் என தகவல்கள் தெரிவித்தன. எனினும், சர்வதேச அமைப்புகளில் இரு நாட்டு ஒத்துழைப்பு தொடர்பில் இருவரும் உரையாடினர் என்ற சாரப்பட இந்தியப் பிரதமரின் அலுவலக செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட் டுள்ளது. அது ஜெனிவா விவகாரம்தான் என அவதானிகள் குறிப்பிட்டனர்.

'இரண்டு நாடுகளுக்கும் இடையில் இரு தரப்புகள் மற்றும் பல தரப்புகள் சம்பந்தப்பட்ட சர்வதேச அரங்குகளில் தற்போது பேணும் ஒத்துழைப்பு உட்பட பல தரப்பட்ட விடயங்களை மேலோட்டமாகப் பேசினார். இப்போதைய கொரோனா சவால் உட்பட்ட விடயங்களில் இரண்டு நாடுகளின் உரிய அதிகாரிகள் ஒழுங்கு முறையான தொடர்பாடலைப் பேண வேண்டும் என இருவரும் இணங்கினர். இந்தியாவின் அண்டை நாடுகளுக்கான முக்கியத்துவத்தில் இலங்கை முதன் நாடாக உள்ளது என்பதை பிரதமர் மோடி மீண்டும் வலியுறுத்தினார்' என்று இந்தியப் பிரதமரின் அலுவலகச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-22)

## மாகாண...

யுள்ளார். சிறிலங்கா பொதுஜன பெரமுனவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாணசபைக் குழுவுடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

மாகாணசபைத் தேர்தலை ஜூன் மாதம் நடத்துவதற்கு அரசு எதிர்பார்க்கிறது என துறைசார் இராஜாங்க அமைச்சர் அண்மையில் தெரிவித்திருந்தார். ஜூன் மாதம் புதிய முறையிலேயோ அல்லது பழைய முறையிலேயோ மாகாணசபைத் தேர்தலை நடத்துவது என்றால் இந்த மாத இறுதிக்குள் சட்டத் திருத்தம் முன்வைக்கப்பட வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு கூறியிருந்தது. இவ்வாறானதொரு நிலையிலேயே கோத்தாபய ராஜபக்சவின் மேற்படி பணிப்புரை வெளியாகியுள்ளது.

'மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள சட்ட வரைவு அல்லது அதில் உள்ள குழப்பங்களை நீக்கி மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவும். தொகுதி முறை, எல்லை நிர்ணயம், ஐம்பதுக்கு ஐம்பது, பெண்களின் அமைப்பு உள்ளிட்ட கடந்த அரசால் கொண்டு வரப்பட்ட சட்ட வரைவு அவர்களாலேயே தோற்கடிக்கப்பட்டது. இந்த நிலையில் மாகாண சபைகள் இப்போது மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் செயற்பட்டு வருகின்றன. இந்த நிலைமை குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி தேர்தல்களை விரைவாக நடத்த வேண்டும்' என்று கோத்தாபய தெரிவித்துள்ளார். (ஒ,5)

## தமிழகத்துடன்...

சர்வதேச விமான நிலையத்திலிருந்து சென்னை விமான நிலையத்துக்கான நேரடி விமான சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படும். காங்கேசன்துறையிலிருந்து காரைக்காலுக்கும், தலைமன்னாரிலிருந்து இராமேஸ்வரத்துக்கும் நேரடிக் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படும். இவையனைத்தும் வெகு விரைவில் மேற்கொள்ளப்படும் என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கட்சிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளை நேற்றுக் காலை தனித் தனியே சந்தித்துப் பேச்சு நடத்தினார். இந்தப் பேச்சுக்களின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். (ஒ,த,5,22,56,213)

## புலமைப்பரிசில்...

ஆகியவை ஒத்திவைக்கப்படலாம். இருப்பினும் கல்வி அமைச்சுடன் கலந்துரையாடி இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் இவ்வாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்தார். தற்போதைய கொரோனா நிலைமை காரணமாக இவ்வாறானதொரு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். கல்வி அமைச்சுடன் இது தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது. அதன் பின்னரே பரீட்சைத் திகதிகள் அறிவிக்கப்படும். மாணவர்களின் கற்றலுக்கு, மேலதிக காலத்தைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கிலேயே இந்த ஒத்திவைப்பு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கூறியுள்ளார். (ஒ,இ)

## இந்தியாவின்...

கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கட்சிகளான, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளை தூதுவர் நேற்றுக் காலை தனித் தனியே சந்தித்துப் பேச்சு நடத்தினார். இந்தப் பேச்சுக்களின் போதே அவர் இந்த விடயத்தை எடுத்துரைத்துள்ளார். ஈழத் தமிழர்கள் நலனில் இந்தியாவுக்கு எப்போதும் அக்கறை உண்டு. ஈழத் தமிழர்களுக்கு இந்தியா அன்று எவ்வாறு உதவியதோ அதே போன்று இன்றும் உதவுகின்றது. அரசியல் மற்றும் அபிவிருத்தி ஆகிய இரண்டு விடயங்களிலும் ஈழத் தமிழர்களைப் பலப்படுத்த வேண்டிய தேவை இருக்கின்றது.

ஈழத் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு தாமதப்படுகின்றது. ஆனால் அபிவிருத்தி தாமதப்படக் கூடாது. ஈழத் தமிழர்களின் அபிவிருத்திக்காக இந்தியா பல்வேறு திட்டங்களை முன்னெடுக்கின்றது. இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்ட மாகாணசபை முறைமையில் குறைபாடுகள் உள்ளன. அவை தீர்க்கப்பட வேண்டும் - என்றார். (ஒ,5)

## மேலும்...

என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் ஆய்வுகூடத்தில் 485 பேரின் மாதிரிகள் நேற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போதே ஏழு பேருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணத்தில் உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவரும் சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரும் ஏற்கனவே தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் சுயதனிமைப்படுத்தப்பட்டவர்கள். அதேநேரம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட இருவருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து சென்றுள்ளார். மற்றையவர் கொரோனாத் தொற்று அறிகுறிகளுடன் சேர்க்கப்பட்டவர்.

**முல்லைத்தீவு**

புதுக்குடியிருப்பு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் கொரோனாத் தொற்றுடன் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரும் கிளிநொச்சி ஆடைத்தொழிற்சாலையில் கொரோனாத் தொற்றுக்கு உட்பட்டவருடன் தொடர்பைப் பேணியவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் தனிமைப்படுத்தப்பட்டவர்கள்.

**மன்னார்**

மன்னாரிலும் தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் மன்னார் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் மேலும் தெரிவித்தார். (ம-26)

## விபத்தில்...

டிருந்தபோது 'பிக்கப்' ரக வாகனமொன்று அவரை மோதியுள்ளது. இதையடுத்து அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். (ம-26)

---

க.பொ.த. சா.தர மாணவர்களுக்கு

# செயன்முறைப் பரீட்சை மே மாதம் நடைபெறும்

கொழும்பு, மார்ச் 14

2020ஆம் ஆண்டு கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான செயன்முறை பரீட்சையை எதிர்வரும் மே மாதம் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பி.பூஜித தெரிவித்தார். மார்ச் தொடக்கம் ஏப்ரல் மாதம் வரை மாணவர்களுக்கு பயிற்சிக்குரிய காலத்தை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கை எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. முதற்கட்டமாக மார்ச் 27 தொடக்கம் ஏப்ரல் 5ஆம் திகதிவரை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் முன்னெடுக்கப்பட வுள்ளன. இந்தப் பணியில் 30 ஆயிரம் பேர் ஈடுபடுத்தப்படவுள்ளனர். ஏப்ரல் 6ஆம் திகதி தொடக்கம் மே மாதம் 5ஆம் திகதி வரை இரண்டாம் கட்ட மதிப்பீட்டு பணிகள் இடம்பெறவுள்ளன.

இந்தப் பணியில் 10 ஆயிரம் பேர் ஈடுபடவுள்ளனர். கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டில் ஈடுபடும் தலைமை அதிகாரிகளுக்கான கலந்துரையாடல் நேற்று ஆரம்பித்தது. இன்றும் நடைபெறும் என்று ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (து-இ)

---

# உக்கும் கழிவுகளை இனிமேல் உள்ளூராட்சி சபைகள் ஏற்கா!

யாழ்ப்பாணம், மார்ச்.14

எதிர்வரும் காலத்தில் எந்தவொரு உள்ளூராட்சி சபையும் உக்கும் கழிவுகளை பொதுமக்களிடம் இருந்தோ அன்றி அரசாங்க மற்றும் நிறுவனங்களில் இருந்தோ பெறுவதில்லை என்று தீர்மானிக்கபட்டதுடன், தரம் பிரித்து வழங்கும் பிளாஸ்ரிக் பொலித்தீன், தகரம், கண்ணாடி போன்றவற்றை பெறும் நடைமுறையே ஏற்றுக்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் உக்கும் கழிவு உக்காத கழிவு முகாமைத்துவம் தொடர்பில் பல்வேறு கோணத்தில் ஆராயும் கலந்துரையாடல் அண்மையில் நடைபெற்றது. அதிலேயே சபைகளின் தவிசாளர்கள் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

வீடுகளில் இருந்து வரும் உக்கும் கழிவுகளை அந்தந்த வீட்டுப்பிரதேசத்துக்குள்ளேயே புதைப்பதுடன், அதனை பயிர்கள் , மரங்கள் நாட்டி வளமுள்ளதாக மாற்றும் நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளது.

உக்கும் கழிவு உக்காத கழிவு பொறிமுறை தொடர்பாக வடக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் வாகன சாரதிகள், கிளினர்கள், சுகாதார தொழிலாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் கழிவுடன் வேலைசெய்யும் தொழிலாளர்கள், அலுவலர்களுக்கு முறையான 3 நாள் பயிற்சி வழங்கப்பட வேண்டும் என்றும் கலந்துரையாடலில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. (ஐ-50)



---

# சுகாதாரத் தொண்டர்களின் போராட்டம் கைவிடப்படாது

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ்ப்பாணத்தில் உணவுத் தவிர்ப்புப் போராட்டம் மேற்கொண்டுவரும் சுகாதாரத் தொண்டர்கள் தமது போராட்டம் இதுவரை கைவிடப்படவில்லை எனவும் தாம் போராட்டத்தை கைவிட்டோம் என்றும் வெளிவரும் செய்திகளில் உண்மையில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் உதயனுக்குத் தெரிவித்ததாவது: நாங்கள் மேற்கொள்ளும் உணவுத் தவிர்ப்புப் போராட்டம் கைவிடப்பட்டுவிட்டது என்றும் எதிர்வரும் நாள்களில் யாழ்ப்பாணம் வரும் அமைச்சர்களுடன் நாங்கள் பேசவுள்ளோம் என்றும் ஆளுங்கட்சியின் யாழ்ப்பாண அமைப்பாளர்கள் தெரிவித்தனர் என்று பொய்யான செய்திகள் வெளியிடப்படுகின்றன. எமக்கான நியமனங்கள் வழங்கப்படும் வரை ஆர்ப்பாட்டத்தை கைவிடும் எண்ணம் இல்லை - என்றனர். (ம-319)

விஸ்டம்
விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி
இல.63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 077 248 7774

தொழினுட்பப் பிரிவில் ஒவ்வொரு வருடமும் தேசிய, மாவட்ட முதல் நிலைச் சாதனையாளர்களை உருவாக்கி வருகின்ற அதே ஆசிரியர்களின் வழிகாட்டலில்
14.03.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு
புதிய பிரிவு ஆரம்பம்
A/L 2023
தொழினுட்பப்பிரிவு
பொறியியல் தொழினுட்பவியல்
உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்
தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
ICT, கணிதம்(7), விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம், ஊடகக்கல்வி
077 248 7774 , 076 552 9093, 021 221 7860


கொள்ளுப்பிட்டி சந்தை வளாக

# அபிவிருத்தித் திட்டம் பிரதமரால் வெளியீடு

கொழும்பு, மார்ச் 14

கொள்ளுபிட்டி சந்தை வளாக அபிவிருத்தி தொடர்பான உத்தேச திட்டம் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் அலரி மாளிகையில் வெளியிடப்பட்டது.

தற்போது கொள்ளுபிட்டி சந்தை அமைந்துள்ள இடத்தில் 39 மாடிகள் கொண்ட புதிய சந்தையுடன் கூடிய குடியிருப்பு கட்டடத் தொகுதியை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது மாடிகள் முழுமையாக சந்தைத் தொகுதிக்காக ஒதுக்கப்பட்டு எட்டாவது மாடியில் இருந்து மேல் நோக்கி இரண்டு கோபுரங்களில் கட்டப்படும் 30 மாடிகள் சொகுசு குடியிருப்பு கட்டடங்களைக் கொண்டதாக அமையவுள்ளது.

அதற்கமைய, சாதாரண வர்த்தகர்கள் தங்கள் விளைபொருள்களை விற்பனை செய்வதற்கு புதிய சந்தை வளாகத்தில் நிச்சயமாக இடம் ஒதுக்குமாறும் பிரதமர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

கொழும்பு மாநகர சபையின் ஒப்புதலைத் தொடர்ந்து, உத்தேச திட்டம் ஒப்புதலுக்காக அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. மூன்று ஆண்டுகளில் நிறைவுபெறும் என எதிர்பார்க்கப்படும் இந்தப் புதிய திட்டத்துக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் அடிக்கல் நடுவதற்கு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ச-இ)


airtel
மாதத்திற்கே
UNLIMITED
ரூபா.286/- மட்டுமே!
YouTube
TRC/AIR/PRO/20/06
இப்பொழுது My Airtel App / recharge.airtel.lk / *286# ஐ அழைப்பதன் ஊடாகவும் இத்த பேக்கேஜை செயற்படுத்த முடியும்.



**வாடகைக்கு**
மருத்துவ கல்லூரிக்கு அருகாமையில் அறைகள் வாடகைக்குண்டு (பெண்கள்)
தொடர்பு 077 339 4979

**வேலையாள் தேவை**
ஆலயத்தில் அலுவகை வேலைக்கு ஆள் தேவை.(ஓய்வு பெற்றவர்கள்). யாழ் நகரை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.
077 959 9527

**பெண் பணியாளர் தேவை**
தனியார் நிறுவனம் ஒன்றிற்கு பெண் அலுவலகர் உத்தியோகத்தர் தேவை.
Ph: 077 408 8241

**விற்பனைக்கு**
4 அடி சுற்றுள்ள இலுப்பையும்
3½ அடி சுற்றுள்ள நாவல் மரமும்
விற்பனைக்கு
077 869 1671

**வேலை வாய்ப்பு**
பளை இந்திராபுரம் A9 வீதி அருகே இயங்கும் தும்புமில்லிற்கு வேலையாட்கள் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
சம்பளம் - 20,000
தொடர்புக்கு: 076 008 6185

**சிங்களம் கற்பதற்கு**
தரம் 6 தொடக்கம் தரம் 10 வரையான மாணவர்களுக்கு ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தரால் சிங்களம் கற்பிக்கப்படும்.
தொடர்பு 071 867 1055

**மணமகள் தேவை**
யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வயது 39 தற்பொழுது அமெரிக்காவில் வசிக்கும் திருமணம் முடித்து குறுகிய காலத்தில் விவாகரத்து ஆன பிள்ளைகள் அற்ற மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 0012816736012
rameshmaniam467@gmail.com

**AL Combined Mathematics**
புதிய பிரிவு (2023) யாழ்ப்பாண நகரில் English Mediam Classes begins on 17.03.2021 யாழ்ப்பாணம், கொழும்பு பிரபல ஆசிரியர் S.Thuraiappah, BSc (Maths) PGD (Statistics) Clock Tower Road, Jaffna. After school Classes, two days Per week.
Contact 077 663 0793
or SMS to 077 489 6311




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

மலை : 33
வள்ளுவர் ஆண்டு : 2051
பங்குனி 1
ஞாயிற்றுக்கிழமை (14.03.2021)
சிகரம் : 39

Registered as a Newspaper



சஞ்சீவி

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

அம்பிகையென்றிடும் அன்னையவள் அன்னமின்றி
அம்பாகி தொடுத்திட்ட பட்டினிப் போரினால் – தெம்பாகி
ஐ.நா.வையே அசைத்திடும் ஆற்றல் கொண்டங்கே
கை நாமும் கோர்த்து நிற்போம் நீதிக்காகவே!

—ஒட்டுக்குழுச் சுவாமிகள்



# வேட்டையாடு விளையாடு!





## இலத்திரனியல் வல்லூறுகளுக்கு ஆப்பு

மையலோன்

இலங்கை விமானப்படையின் 70 ஆம் ஆண்டு நிறைவு விழாவில், வானத்தில் நிகழ்ந்த விமானங்களின் சாகசங்களை விடவும் அதிக கவனத்தை ஈர்த்த விடயம், விமானப்படை வீரர்கள் சிலர் ஏந்தியிருந்த புதிய, பார்க்கவே அச்சத்தை உண்டுபண்ணக்கூடிய வடிவமைப்பில் இருந்த ஆயுதம் ஒன்றுதான். துப்பாக்கியை விடவும் அளவில் பெரிதான இந்த ஆயுதத்தின் பெயர், ட்ரோன் ஜாமர்.

புலிகளுடனான போரின் போது கூட பயன்படுத்தப்படாத இந்த அதிநவீன ஆயுதத்தை எதற்காக இலங்கை இப்போது வைத்திருக்கிறது? அதற்கான அவசியம் என்ன? வல்லரசு நாடுகளில் மட்டுமே பயன்பாட்டில் உள்ள இந்த ட்ரோன் ஜாமர்கள் எப்படி இலங்கை விமானப்படைக்குக் கிடைத்தன? இந்த ட்ரோன் ஜாமர்களின் சூத்திரதாரிகள் யார்? என்று பல வினாக்கள் அந்த நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு எழவே செய்தன. அதற்கான பதில்களை நாமும் தேடினோம்.

### ட்ரோன்

அண்மைக் காலமாக அதிகம் அறியப்படும், பேசப்படும் ஒரு சொல் ட்ரோன். ட்ரோன் கமரா, ட்ரோன் விமானம் என்று விரிகின்றது இந்த விடயப்பரப்பு. ஆளில்லாது இயக்கப்படும் தொழில்நுட்பத்தைக் குறிக்கின்றது ட்ரோன் என்ற சொற்பதம். சுருங்கச் சொன்னால் தரையில் இருந்து இயக்கப்படும் வான்கலப் பொறிமுறை என்று கூறலாம். ட்ரோன் விமானங்களை வடிமைத்துள்ள வல்லரசு நாடுகள் அவற்றின் மூலம் நாடுகளுக்குள் ஊடுருவித் தாக்குதல்களை மேற்கொண்ட சம்பவங்களை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இந்த ட்ரோன் தாக்குதல்களில். அமெரிக்கா முதலிடம்தான். ஈரானில் ஆளில்லா விமானங்கள் (ட்ரோன்) மூலம் நடத்திய தாக்குதலில் அந்த நாட்டின் முக்கிய தளபதியான சுலைமானைத் தீர்த்துக் கட்டியிருந்தது அமெ ரிக்கா. தலிபான்களுக்கு எதிரான தாக்குதல்களிலும் அமெரிக்கா ட்ரோன் விமானங்களையே அதிகம் பயன்படுத்தியது.

பொதுவாக ட்ரோன்களை ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம். 250 கிராம் எடை கொண்டது நேனோ ட்ரோன். 250 கிராமில் இருந்து 2 கிலோ வரை எடை இருக்கக்கூடியது மைக்ரோ ட்ரோன். 2 கிலோவிலிருந்து 25 கிலோ வரை எடை இருக்கக்கூடியது ட்ரோன் ஸ்மோல் ட்ரோன். 25 கிலோவிலிருந்து 150 கிலோ வரை எடை இருக்கக்கூடியது மீடியம் ட்ரோன். 150 கிலோவிற்கு மேல் இருப்பது லார்ஜ் ட்ரோன். இராணுவப் பயன்பாடு மற்றும் சினிமாக்களில் அதிக எடையுடன் கூடிய ட்ரோன்கள் பயன்படுத்தப்படுகின்றன.

### உதவும் ட்ரோன்

ட்ரோன் என்பதின் அர்த்தம் 'ஆளில்லா பறக்கும் வாகனம்' (Unmanned aerial vehicle) பல்வேறு பயன்பாடுகளுக்காக ட்ரோனை மனிதர்கள் பயன்படுத்திவருகிறார்கள். விவசாயத்தில் பயிர்களைக் கண்காணிக்க, உரம் மற்றும் மருந்து தெளிக்க ட்ரோன்கள் பல நாடுகளில் பயன்படுத்தப்படுகின்றன. இயற்கைப் பேரிடர் சமயத்தில், சேத மதிப்பைக் கணக்கிட, பாதிக்கப்பட்ட மக்களின் இருப்பிடத்தைக் கண்டறிய, சேதமடைந்த நகரத்தை மறுகட்டமைப்பது தொடர்பாக கணக்கெடுக்க எனப் பல்வேறு விஷயங்களுக்கு ட்ரோன்கள் பயன்படுத்தப்படுகின்றன.

### இலங்கையில் ட்ரோன்

இலங்கை போன்ற நாடுகளில் இப்படியான ஆளில்லா இராணுவ விமானங்களைக் கண்ணிலும் காண முடியாது. எம்மைப் பொறுத்தவரையில் ட்ரோன் என்றால், திருமண வீடுகளில் பறந்து படம் எடுக்கும் ட்ரோன் கமராக்கள்தான். இதற்காகப் பெரும்பாலும் 2 கிலோ எடை கொண்ட ட்ரோன்களை நாம் பயன்படுத்துகிறோம். கொரோனா முடக்க நேரத்தில் ட்ரோன் கமராக்கள் மூலம் பொலிஸார் கண்காணிப்புகள் மேற்கொண்டிருந்தனர். இலங்கையில் ட்ரோன் பயன்பாடு பெரிய அளவில் பேசப்படாத போதும், 2019ஆம் ஆண்டு நடந்த ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் பாதுகாப்பு அமைச்சு ட்ரோன் தொடர்பில் அதிக கவனம் செலுத்த ஆரம்பித்தது. அனுமதி பெற்றே ட்ரோன் கமராக்களை இயக்க முடியும் என்று நடைமுறைகளை இறுக்கியிருந்தது.



### ட்ரோனின் அபாயம்

படம் எடுக்கும் ட்ரோன் கமராக்களால் என்ன பிரச்சினை?.

" கலியாண வீட்டில நிம்மதியாய்ச் சாப்பிட முடியேல்லை!, சாவகாசமா ஒண்டுக்கு, இரண்டுக்கு போகேக்க திடீரெண்டு பறக்க விட்டுப் பயப்பிடுத்துறாங்க" என்று நீங்கள் நினைப்பது புரிகின்றது. ஆனால இதெல்லாம ஜுஜுஅப்பி!. இதையெல்லாம் விடவும் மிகவும் ஆபத்தான விடயங்கள் இருக்கின்றன. நாணயத்துக்கு இரு பக்கங்கள் போன்று ஒவ்வொரு விடயத்துக்கும் இருபக்கங்கள் இருப்பது இயல்புதானே. இந்த ட்ரோன் கமராக்களை நாசகார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துபவர்களும் இருக்கின்றனர். பலமைல் தூரத்தில் இருந்து ட்ரோன் கமராக்களைப் பயன்படுத்தி நிலைமைகளை அவதானிக்க முடியும் என்பது இங்குள்ள மிக முக்கியமான பிரச்சினை. துல்லியமான கமராக்கள் பொருத்தப்பட்ட ட்ரோன்களை இப்போது சில லட்சரூபாயிலேயே வாங்கிக் கொள்ள முடியும் என்பது அவர்களுக்கு வரப்பிரசாதம் தான். சின்ன ஒரு உதாரணம். 2018ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி வெனிசுவேலா நாட்டு ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரா இராணுவ அணிவகுப்பொன்றில் கலந்துகொண்டார். அப்போது திடீரென எங்கிருந்தோ இரு ட்ரோன் கமராக்கள் பறந்து வந்தன. அந்த டிரோன்களில் கமராக்களுக்குப் பதில் குண்டுகள் பொருத்தப்பட்டிருந்தன. நிக்கோலஸ் மதுராவின் அதிர்ஷ்டம் அதில் ஒன்று திட்டமிட்ட நேரத்துக்கு முன்பாக வானத்தில் வெடித்துச் சிதறியது. சுதாரித்துக் கொண்ட மெய்ப்பாதுகாவலர்கள் மதுராவை அங்கிருந்து அவசர அவசரமாகத் தூக்கிச் சென்றனர். சிறிது நேரத்தில் மற்றைய ட்ரோனும் வெடித்துச் சிதறியது. ட்ரோன் கமரா மூலமும் சங்கு ஊத முடியும் என்று இப்போது புரிகின்றது அல்லவா.

### இலங்கையின் கையில் அதிநவீன ஆயுதம்

இலங்கையில் இறுதிப்போரின் போது படையினர் பயன்படுத்திய ஆளில்லா உளவு விமானங்களே இந்த ட்ரோன் களின் மூதாதைகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(22ஆம் பக்கம் பார்க்க)

○ நிலாந்தன்

# தாயின் பசி!



ஐ.நா. எனப்படுவது எங்கள் எல்லோரையும் இணைக்கும் ஒரு அற்புதமான கருத்து. அது மேலும் பலம் அடைவதை, மேலும் சிறப்பானதாக, உறுதியான நிலைப்பாடு டைய ஒன்றாக வருவதை விரும்புகிறேன். ஆனால் இப்பொழுதும் ஐ.நா.மனித உரிமைகளோடு தொடர்பே இல்லாத அரசியல் நலன்களின் செல்வாக்குக்கு உள்ளாகிறது. அது ஐநாவை அமைப்பு ரீதியாக ஊழல் மிகுந்தது ஆக்கிவிட்டது. நான் நம்புகிறேன் நாங்கள் ஐநாவை மக்களுக்கு சேவை செய்யும் ஒன்றாக மாற்றவேண்டும்.

அரசியல்வாதிகளுக்கு சேவை செய்யும் ஒன்றாக அல்ல. எனது படம் ஆகிய Quo Vadis Aida ஐ.நா.வின் முடிவுகளின் சுயாதீனம் மற்றும் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான உறுதியான நிலைப்பாடு குறித்த கேள்விகளை எழுப்ப உதவும் என்று நான் உண்மையாகவே நம்புகிறேன் ....."

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் 'Quo Vadis Aida' என்ற திரைப்படத்தின் நெறியாளர் ஜஸ்மிலா ஸ்பானிக். அவர் ஸ்ரெபெர்னிகா இனப்படுகொலையில் தனது 17வது வயதில் தப்பிப்பிழைத்த ஒரு பெண். ஐ.நா.வில் பல ஆண்டுகள் வேலை செய்தவர். அண்மையில் அனைத்துலக மகளிர் தினத்தையொட்டி டைம்ஸ் சஞ்சிகை அவரை நேர்கண்ட பொழுது அவர் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார். அவருடைய சர்ச்சைகளோடு பாராட்டப்பட்ட திரைப்படம் ஆகிய 'Quo Vadis Aida' இப்பொழுது ஒஸ்கார் விருதுக்கும் பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது.

1995இல் ஸ்ரெபெர்னிகா இனப்படுகொலையில் எண்ணாயிரத்துக்கும் குறையாதவர்கள் கொல்லப்பட்டார்கள்; பெண்கள் சிதைக்கப்பட்டார்கள். அதில் தப்பிப் பிழைத்த ஜஸ்மிலா கூறுகிறார்

"......ஸ்ரெபெர்னிகாவில் இப்பொழுதும் அன்னையர் தங்கள் பிள்ளைகளின் அல்லது கணவன்மார்களின் அல்லது உறவினர்களின் எலும்புத் துண்டுகளை தேடிக்கொண்டிருப்பதாக. ஏதாவது ஒரு எலும்பு மிச்சம் கிடைத்தால் அதைப் புதைத்து ஒரு கல்லறையைக் கட்டிவிடலாம் என்று காத்திருப்பதாக. அந்தப் பெண்களின் உறுதியை கௌரவித்து அவர்களுக்கு சமாதானத்துக்கான நோபல் பரிசு கொடுக்க வேண்டும் "என்றும் கூறுகிறார்.

அன்னையரின் துக்கம் அல்லது அன்னையரின் ஆவேசம் அல்லது அன்னையரின் காத்திருப்பு உலகம் முழுவதிலும் போராட்டங்களை பின்னிருந்து இயக்கியிருகிறது. தேற்றப்படவியலாத தாய்மாரின் துக்கம் ரஷ்யாவின் ஸ்தெப்பி வெளியில் தொடங்கி வல்லை வெளி, வாகரை வெளி, கைதடி வெளி வரையிலும் நிரம்பியிருக்கிறது. தமிழ் மக்களுடைய ஆயுதப் போராட்டத்தில் அடைக்கலம் தந்த வீடுகள் என்று அழைக்கப்படும் அநேகமான வீடுகளில் தாய்மாரின் தியாகத்தை அர்ப்பணிப்பை துணிச்சலை காணலாம். போருக்குப் போன தமது பிள்ளை களுக்காகவும் அல்லது காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளுக்காகவும் உபவாசம் இருக்கும் ஆயிரக்கணக்கான அன்னையர்களின் கதை வெளியே தெரிய வருவதில்லை.

எனக்குத் தெரிந்து பல அன்னையர் இருவேளை உணவைத் துறந்து அல்லது ஒருவேளை உணவைத் துறந்து அல்லது சோற்றைத் துறந்து பாண் மட்டும் சாப்பிட்டு கொண்டு பிள்ளைகளுக்காக காத்திருப்பதை கண்டிருக்கிறேன். ஏற்கனவே பிள்ளை வரம் கேட்டு மண்சோறு சாப்பிடும் ஒரு பாரம்பரியத்தை கொண்ட மக்கள் நாங்கள். எனவே தவமிருந்து பெற்ற பிள்ளைகளை காப்பாற்றுவதற்காக தவமிருக்கும் அன்னையரின் தியாகத்தை கழித்துவிட்டு ஒரு விடுதலைப் போராட்டத்தின் ஒட்டுமொத்த தியாகத்தை குறித்து கதைக்க முடியாது. அண்மையில் கூட புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த ஓர் அன்னை காலமானார். அவருடைய வீடு ஆயுதப் போராட்டத்தின் தொடக்க காலங்களில் பலருக்கு புகலிடமாக இருந்த ஒரு வீடு என்பதை முகநூல் பதிவுகளை பார்த்தால் தெரியும். இப்பொழுதும் அவ்வாறு அடைக்கலம் கொடுத்த பல வீடுகள் அமைதியாக நிகழ்கால அரசியல் போக்கில் தலையிடாது அமைதியாக சாட்சிகளாக பார்த்துக் கொண்டிருக்கின்றன.

அதேசமயம் காணாமலாக்கப்பட்ட தமது பிள்ளைகளைத் தேடி மற்றொரு தொகுதி அன்னையர்கள் வீதியோர குடில்களில் அல்லது தீச்சட்டி தலையில் சுமந்தபடி போராடிக் கொண்டிருக்கிறார்கள். அன்னையரின் தியாகம் பசி, தூக்கம், காயம், கண்ணீர் என்பவற்றால் வனையப்பட்டதே எந்த ஒரு போராட்டமும்.

அப்படி ஓர் அன்னைதான் இப்பொழுது பிரித்தானியாவில் உண்ணாவிரதம் இருக்கிறார். இந்தக்கட்டுரை முதலாவதாக அவருடைய பசியை மதிக்கிறது; அவருடைய ஓர்மத்தைக் கௌரவிக்கிறது. அவருடைய போராட்டத்துக்கு பக்கபலமாக யாழ்பாணத்திலும் கிழக்கிலும் சுழற்சி முறையில் உண்ணாவிரதப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. புலம் பெயர்ந்த தமிழ்ப் பரப்பிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படு கின்றன.

பல்கலைக்கழக மாணவர்களின் சுழற்சி முறை உண்ணாவிரதப் போராட்டத்தில் பெரும்பாலான நேரத்தில் மிகச்சிலரையே போராட்ட மேடையில் காண முடிகிறது. சில சமயங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அங்கே வந்து இருப்பார்கள். கட்சிகளின் உறுப்பினர்கள் அங்கே வந்து இருப்பார்கள். அண்மையில் தென்னிலங்கையிலிருந்து மதகுருக்கள் வந்து இருந்தார்கள். ஆனாலும் பெரும்பாலான நேரங்களில் அந்த மேடை மிகச்சிலரோடு வெறிச்சோடிக் காணப்படும். இரவுகளில் உண்ணாவிரதம் இருக்கும் மாணவர்களோடு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை சேர்ந்த சிலர் வந்து தங்குகிறார்கள். மற்றும்படி கட்சிகள் இது விடயத்தில் தங்கள் பங்களிப்பை போதிய அளவு செய்யவில்லை என்று உணரப்படுகிறது. சில கட்சித் தலைவர்களிடம் கேட்டேன். அவர்கள் கூறுகிறார்கள் இந்த போராட்டத்தை தொடங்கும்போது மாணவர்கள் தம்மோடு கலந்துபேசவில்லை என்றும் அதற்குரிய கட்டமைப்பு எதையும் உருவாக்கவில்லை என்றும். மாணவர் அமைப்புக்குள்ளும் ஒன்றிணைந்த செயற்பாடு இல்லை. மாணவர்கள் அழைத்தாலும் அழைக்காவிட்டாலும் கட்சிகள் பங்களிப்புச் செய்யலாம் தானே?

இந்தப்போராட்டத்தில் முன்நின்று செயற்படும் ஒரு மாணவர் தன்னுடைய இரண்டு நாள் பரீட்சைகளை எழுதவில்லை என்று தெரிகிறது. அந்த நாட்களில் அவருக்கு பதிலாக போராட்டத்தை பொறுப்பேற்க வேறு மாணவர்கள் இல்லை? இதுதான் நிலைமை. மிகச் சிலரின் தியாகத்தை பெருந்திரள் மக்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்களா? அல்லது மக்களைப் பங்காளிகளாக மாற்றத் தேவையான அரசியல் தரிசனம் சம்பந்தப்பட்ட மாணவர்களிடம் இல்லையா? தாயகத்தில் மக்கள் போராட்டங்கள் எந்த அளவுக்கு மக்கள் மயப்பட்டிருக்கின்றன என்பதற்கு இப்பொழுது முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் ஆகப் பிந்திய எடுத்துக்காட்டு. அதிலும் குறிப்பாக பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான போராட்டத்தின் பின்னரான எடுத்துக்காட்டு.

இவ்வாறான ஒரு போராட்டச்சூழலை முன்வைத்து இக்கட்டுரை பின்வரும் கேள்விகளை எழுப்புகிறது.

முதலாவது கேள்வி, உலக சமூகத்திடம் நீதி கேட்டுப் போராடுவது என்பது ஐ.நா. நோக்கிப் போராடுவதா? அது தனிய ஜெனிவா மைய அரசியல் மட்டுமா? இந்தக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட திரைக் கலைஞரின் கூற்றை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். ஐ.நாவை நம்புவதில் இருக்கும் ஆபத்தை அவர் உணர்த்துகிறார். அவர் ஐ.நா.வில் பல ஆண்டுகள் வேலை செய்தவர் என்பதையும் இங்கு சேர்த்துக் கவனிக்க வேண்டும்.

இரண்டாவது கேள்வி, கடந்த பத்தாண்டுகளில் ஈழத் தமிழர்கள் மத்தியில் நிகழ்ந்த சாகும்வரையிலான உண்ணாவிரதங்கள் ஏன் வெற்றி பெறவில்லை? அரசியல் கைதிகளும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெற்றோரும் சாகும் வரையிலும் உண்ணாவிரதம் இருந்தார்கள். ஆனால் வெற்றி பெறவில்லை. கடந்த பத்தாண்டுகளில் யாரும் இறுதிவரை போராடவில்லை. அதற்காக இந்தக்கட்டுரை உண்ணாவிரதிகள் சாகவேண்டும் என்று கேட்கவில்லை. சாகும் வரை உண்ணாவிரதம் என்பது ஒரு கடைசிப் போராடம்.

மூன்றாவதுகேள்வி, இவ்வாறான போராட்டங்களை யார் முன்னெடுப்பது ஒப்பீடளவில் சிறந்தது? அதை பிரபல்யமாக இருக்கும் அரசியல்வாதிகள் முன்னெடுப்பதே சிறப்பு என்று மு.திருநாவுகரசு அண்மையில் கூறியிருக்கிறார். மக்கள் பிரதிநிதிகளுக்கு ஊடகக்கவர்ச்சி உண்டு. அனைத்துலக அளவில் அங்கீகாரம் உண்டு. அவர்களை மக்கள் தமக்காகப் போராடத் தானே தெரிந்தெடுத்தார்கள்? எனவே அவர்கள் தியாகம் செய்யட்டும். அதன்மூலம் முன்னுதாரணமாகட்டும். அவர்களுக்குள்ள ஊடகக்கவர்ச்சி மற்றும் அங்கீகாரம் என்பவற்றை முதலீடாக்கி அவர்கள் சாகும் வரையிலும் உண்ணாவிரதம் இருக்கும் பொழுது அது உலகத்தைத் திரும்பிப் பார்க்க வைக்கும். அவர்களுக்கு வாக்களித்த மக்களையும் ஏதோ ஒரு உணர்ச்சி புள்ளியில் இணைக்கும். எனவே மக்கள் பிரதிநிதிகள்தான் சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை முன்னெடுக்க வேண்டும்.

ஆனால் கடந்த பத்தாண்டுகளில் தமிழ் மக்கள் மத்தியில் எந்த ஒரு கட்சித் தலைவரும் அவ்வாறு சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கவில்லை. அது மட்டுமல்ல சட்ட மறுப்பாக போராடிய காரணத்தால் யாருமே இதுவரை சிறைக்கும் போகவில்லை. தலைவர்களும் சிறைகளை நிரப்பவில்லை. தொண்டர்களும் சிறைகளை நிரப்பவில்லை. இப்படிப்பட்ட மிக வறுமையான ஒரு போராட்டச் சூழலில்தான் யார், யாரோ தன்னார்வமாக சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கிறார்கள். யார், யாரோ போராட்டத்தை முன்னெடுக்கிறார்கள். தலைவர்கள் அவர்களின் பின் இழுபடுகிறார்கள். நாலாவது கேள்வி, இது போன்ற போராட்டங்களை உலகம் எப்படிப் பார்க்கிறது? சீனாவால் ஆக்கிரமிக்கப்பட்ட தீபெத் பிரதேசத்தில் இதுவரையிலும் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் தீபெத்தின் விடுதலைக் காக தீக்குளித்து இறந்திருக்கிறார்கள். ஆனால் அந்த தியாகங்களெவையும் உலகத்தின் மனச்சாட்சியை உலுப்பவில்லை. ஏன் அதிகம் போவான்? உலகப் பேருடகங்கள் அந்தத்தீக்குளிப்புக்களைக் கண்டுகொள்வதேயில்லை. ஏன்? ஏனெனில் ஒரு போராட்டத்தில் எவ்வளவு தியாகம் செய்யப்படுகிறது என்பதல்ல இங்கு முக்கியம்.




4






# காணி ஆவண மாற்றம் எதற்கான அத்திபாரம்?

அ.நிக்ஸன்

இன அழிப்புக்கான சர்வதேச விசாரணை கோரப்பட்டு வரும் நிலையில், அமெரிக்கா. பிரித்தானியா மற்றும் இந்தியா போன்ற நாடுகள் அதனைப் பொருட்படுத்தாமல், இலங்கை ஒற்றையாட்சி அரசுக்கான பொறுப்புக் கூறலை மாத்திரம் வலியுறுத்தி வருகின்றன. இந்த நிலையில் சிங்கள ஆட்சியாளர்கள் எந்தவிதமான பயமும் இன்றி மிகத் துணிவோடு தமிழர் தாயகத்தின் காணி ஆவணங்களை அதிகாரபூர்வமாக சிங்களப் பிரதேசங்களில் உள்ள மாவட்டச் செயலகங்களுக்கு மாற்றிக் கொண்டிருக்கின்றனர். கிழக்கு மாகாணத்தில் இது ஏலவே நடந்து முடிந்துவிட்டதொரு நிலையில் தற்போது வடமாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடுமையான எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் வட மாகாணத்துக்குரிய அனைத்து காணிகளுக்கான ஆவணங்களும் அநுராதபுர மாவட்ட செயலகத்துக்கு திங்கட்கிழமை இரவு எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன.

**சிங்கள - பௌத்த திணிப்புக்கான அத்திபாரம்**

1987ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலம் இலங்கை நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தின் படி வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு காணி அதிகாரம் வழங்கப்பட்டது. ஆனால் இன்று வரை அது நடைமுறைக்கு வரவில்லை. இந்த நிலையில் ஏற்கனவே வடக்கு கிழக்கு பிரதேசங்களில் காணிகள் அபகரிக்கபட்டு சிங்களப் பிரதேசங்களைச் சேர்ந்த தனியாருக்கு விற்கப்பட்டு வந்தன.

சில தனியார் நிறுவனங்களுக்கு குத்தகைக்கும் கொடுக்கப்பட்டு வந்தன. பௌத்த விகாரைகளுக்கும் புத்தர் சிலை வைப்பதற்கும் இலங்கை தொல்பொருள் திணைக்களத்தால் அனுமதியும் வழங்கப்பட்டுவந்தது. இந்த நிலையில் வடமாகாணத்துக்குரிய அனைத்து காணி ஆவணங்களும் அநுராதபுரத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளன. இதனால் வடமாகாணத்தில் உள்ள அனைத்து அரசகாணிகள்மற்றும்பொதுக் காணிகள் கொழும்பை மையப்படுத்திய இலங்கை அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் பகிரங்கமாகச் செயற்படவுள்ளன என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**கிழக்கில் என்ன நடந்தது?**

ஈழத் தமிழர் அரசியல் போராட்டம் 70 ஆண்டுகளைக் கடந்துவிட்ட நிலையில் இன்றும் இந்தக் காணி அபகரிப்பு தொடர்கின்றது. 1948ஆம் ஆண்டு கிழக்கு மாகாணம் திருகோணமலையில் ஆரம்பிக்கப்பட்ட சிங்கள குடியேற்றம் 1983ஆம் ஆண்டு ஆயுதப் போராட்டம் ஆரம்பித்ததால் தமிழ்ப் போராளிகளின் அச்சத்தின் காரணமாகத் தற்காலிகமாக கைவிடப்பட்டிருந்தது.

ஆனாலும் தமிழ் பேசும் மக்களின் கிழக்கு மாகாணம் திருகோணமலையில் சிங்களக் குடியேற்றம் இலங்கை இராணுவத்தின் ஒத்துழைப்புடன் நடைபெற்றது. சிங்களக் குடியேற்றங்களைச் செய்வதற்காக திருகோணமலை மக்கள் அச்சுறுத்தப்பட்டார்கள் இதனால் பலர் பாரம்பரியப் பிரதேசங்களில் இருந்து வெளியேறினர்.

அம்பாறை மாவட்டத்தில் இருந்து கிட்டத்தட்ட 20 ஆயிரம் குடும்பங்கள் தங்களுடைய நில புலங்களில் இருந்து வெளியேற்றப்பட்டனர். மேலும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இராணுவத்தினரின் தாக்குதல் அச்சத்தால், தாங்களவாகவே வெளியேறிவிட்டனர். முஸ்லிம்களின் காணிகளும் அபகரிக்கப்பட்டுள்ளன. முஸ்லிம்களின் காணிகளில் புத்தர் சிலைகள் பௌத்த விகாரைகள் கட்டப்பட்டுள்ளன. அதற்கான வரலாற்று ஆதாரங்களும் செயற்கையாகவே தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

அம்பாறை மாவட்டம் திகாமடுல்ல என்ற சிங்கள பெயரால் அழைக்கப்படுகின்றது. திருகோணமலை மாவட்டத்தில் 1983ஆம் ஆண்டு சில்வா எனப்படும் சிங்கள மாவட்டச் செயலர் முதல் முதலாக நியமிக்கப்பட்டார். அன்றில் இருந்தே தமிழ் பேசும் மக்களின் தாயகமான கிழக்கு மாகானத்தின் காணி ஆவணங்கள் திருகோணமலை சிங்கள மாவட்டச் செயலரின் கட்;டுப்பாட்டில் வந்துவிட்டன. 2006ஆம் ஆண்டு திருகோணமலை செயலகத்தில் காணிப் பதிவாளராக பணியாற்றிய முரளிதரன்என்பவர்திருகோணமலையில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை பாதுகாக்க முற்பட்டவேளை அவர் திடீரென காரணம் எதுவுமேயின்றி கொழும்புக்கு இடமாற்றப்பட்டார்.



இன்று திருகோணமலையில் தமிழர்களின் விகிதாசாரம் குறைவடைந்துவிட்டது. சேருநுவர என்ற புதிய சிங்கள பிரதேச செயலகமும் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் பல சிங்களப் பிரதேசங்கள் உருவாகுவதற்கான வாய்ப்புகளும் அங்குள்ளன. ஏனெனில் உள்ளூராட்சி சபைகளிலும் குடியேற்றப்பட்ட சிங்களவர்கள் உறுப்பினகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அத்தோடு திருகோண மலைத் துறைமுகத்தில் அமெரிக்காவின் ஆதிக்கமும் திருகோணமலையில் உள்ள எண்ணெய்க் குதங்கள் இந்தியாவுக்கா சீனாவுக்கா என்ற போட்டிகளும் திட்டமிடப்பட்டு தூண்டிவிடப்பட்டுள்ளன. இதேநிலமை கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் பெரும்பாலும் வாழும் மட்டக்களப்பிலும் தற்போது காணப்படுகின்றது. மட்டக்களப்பின் பல விவசாய கிராமங்களும் சிங்களவர்களுக்கு வழங்கப்படுகின்றன. மட்டக்களப்பில் மைலத்தன்வெளி மற்றும் மாதாவனை ஆகிய மேச்சல்தரை நிலங்கள் சிங்களவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

மட்டக்களப்பின் இயற்கை பிரதேசமான பாசிக்குடா சிங்களவர்கள் மயமாகி வருகின்றது. தனியாருக்குக் காணிகள் விற்கப்பட்டு கொழும்பை மையமாக கொ்ண்ட சுற்றுலா விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு மேலும் பல சுற்றுலா விடுதிகள் அமைக்கப்படவுள்ளன. போர் நடைபெற்ற காலங்களிலேயே கிழக்கு மாகாணம் சிங்ள மயப்படுத்தப்பட்டு செயற்கையான முறையில் தமிழர்களின் விகிதாசாரம் குறைக்கப்பட்டது. ஆனால் வடக்கு மாகாணத்தில் போர் நடைபெற்ற காலங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை அரசாங்கத்தால் செய்ய முடியவில்லை.

**எது இன நல்லிணக்கம்?**

2009ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னரான சூழலில் மிக இலகுவான காணி அபகரிப்புக்கள் நடைபெறுகின்றன. முன்னர் இராணுவமே காணிகளை அபகரித்தது. தற்போது கொழும்பை மையமாகக் கொண்டு இலங்கை ஒற்றையாட்சி அரசின் திணைக்களங்கள் மூலமாக காணி அபகரிப்புக்கள் இடம் பெறுகின்றன. அதற்கு இராணுவமும் பொலிஸாரும் பாதுகாப்புக் கொடுக்கின்றனர்.

அதன் ஒரு வடிவமே யாழ் செயலகத்தில் உள்ள வடக்கு மாகாணத்தின் காணி ஆவணங்கள் அனுராதபுரத்திற்கு மாற்றப்பட்டமையாகும். மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களின் காணி ஆவணங்களே எடுத்துச் செல்லப்பட்டதாக உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன. இவ்வாறானதொரு நிலையில் இன நல்லிணக்கம் யாருக்குத் தேவைப்படுகின்றது? இன நல்லிணக்கத்தின் உண்மைப் பொருள் என்ன என்பதுதான் இங்கே கேள்வி.


குறிப்பாக 197மற்றும் 2004ஆம் ஆண்டுகளின் பொதுத் தேர்தல் முடிவுகள் கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் பெரும்பான்மை என்பதை உறுதிப்படுத்துகின்றன. 1970 ஆம் ஆண்டுகிழக்கு மாகாணத்திலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவான பதினொரு பேரில் தமிழர்கள் ஆறுபேரும் முஸ்லிம் கள் நான்கு பேரும் சிங்களவர் ஒருவரும் தெரிவாகினர். 2004 ஆம் ஆண்டில் தமிழர்கள் ஏழுபேரும் முஸ்லிம்கள் ஆறுபேரும் சிங்களவர்கள் மூன்று பேருமாகப் பதினைந்து பேர் தெரிவு செய்யப்பட்டனர். ஆகவே செயற்கையான அத்துமீறிய குடியேற்றங்களுக்கு மத்தியிலும் தமிழர்களே கிழக்கு மாகாணத்தில் தனிப் பெரும்பான்மை என்பது தெரிகிறது. கிழக்கின் மூன்று மாவட்டங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமே ஒரே இனத்தவர்கள் தமிழர்கள் அறுதிப் பெரும்பான்மையாகவுள்ளனர். 2009 ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் மட்டக்களப்பில் சிங்களவர்கள் குடியேற்றப்படு வதோடு, சிங்கள விவசாயிகளுக்கும் தமிழ் மக்களுக்குச் சொந்தமான மேய்ச்சல்தரை நிலங்களும் பங்கிடப்படுகின்றன.

திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் 1983ஆம் ஆண்டில் இருந்து பகுதி பகுதியாக சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்ததாலும் அங்கு எந்தச் சமூகம் பெரும்பான்மையெனக் கூற முடியாது. ஆனாலும் தமிழர்களின் இடப்பெயர்வும் அதன் பின்னரான மீள் குடியேற்றங்களும் உரிய முறையில் இடம்பெற்றிருந்தால், இந்த இரு மாவட்டங்களிலும் தமிழ் மக்களே பெரும்பான்மையாக இருந்திருப்பர்.

**கிழக்கு மாகாணத்தினுடைய அவலம்**

ஜெனிவா மனித உரிமைச் சபையில் கூட கிழக்கு மாகாண மக்களின் பிரச்சினைகள் அதாவது காணி அபகரிப்புகள் தனித்துவமாகப் பேசப்படவில்லை. இலங்கை அரசாங்கத்தின் பொறுப்புக் கூறல் என்று சொன்னால், 1948ஆம் அண்டு முதல் கிழக்கில் இருந்து ஈழத் தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டமை மற்றும் செயற்கையான சிங்களக் குடியேற்றங்களால் விகிதாசாரம் குறைக்கப்பட்டமை போன்ற விடயங்களும் உள்ளடங்க வேண்டும். தனியே பொறுப்புக்கூறல் என்பது தனியே போர்க்குற்றம். மனித உரிமை மீறல்களுக்கானதல்ல. இன அழிப்பு என்பது தனியே இராணுவத்தினரால் பொதுமக்கள் கொல்லப்பட்ட விவகாரம் மாத்திரமல்ல. மரபுரீதியான கலாசாரங்கள் அழிக்கப்படுவது பண்பாடுகள் சிதைக்கப்படுவது.

காணிகள் அபகரிக்கப்படுவது மற்றும் தமிழ் மக்கள் பெரும்பான்மையாகவும் பாரம்பரியமாகவும் வாழும் பிரதேசங்களில் செயற்கையான முறையில் மற்றுமொரு இனத்தைத் திட்டமிட்டுக் குடியேற்றிவிட்டு பின்னர் அந்த இனத்தைப் பெரும்பான்மையாகக் காண்பிப்பது உள்ளிட்ட பல பலவிடயங்களும் இன அழிப்பு என்பதற்குள் அடங்கும்.



# பேரதிசயத்துக்கான காத்திருப்பு



ந.பரமேஸ்வரன்

இறைமை.
இந்த இறைமை என்ற ஒற்றைச் சொல்லை வைத்தே இரண்டாம் உலகப்போரின் பின்னர் அல்லது பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலையான பின்னர் உலகில் பல நாடுகள் தத்தமது நாடுகளில் வாழும் சிறுபான்மையினர் மீது ஒடுக்குமுறைகளைப் பிரயோகித்து வருகின்றன. இவ்வாறு பெரும்பான்மையின ஆட்சியாளர்கள் சிறுபான்மையினர் மீது மோசமான ஒடுக்குமுறைகளைப் பிரயோகித்து வருவது பற்றி ஏனைய நாடுகளோ ஐ.நா.வோ கவலைப்படுவதில்லை. ஜனநாயகம் என்ற பெயரில் பெரும்பானமையினரால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்கள் பற்றி எவரும் பெரிதாக அலட்டிக்கொள்வதில்லை.

இலங்கை, மியான்மர், பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற ஆசிய நாடுகளில் இவ்வாறான இன, மத ரீதியாக அந்தந்த நாட்டு ஆட்சியாளர்களால் சிறுபான்மையினர் மிக மோசமாகத் துன்புறுத்தப்படுகின்றனர். அவ்வப்போது ஆட்சியாளர்களின் ஒடுக்குமுறை காரணமாக சிறுபான்மையினர் தாம் வாழ்ந்து வந்த அல்லது தமது சொந்த நாட்டை விட்டு அகதிகளாகத் தப்பிச்செல்லும் சம்பவங்களும் காலத்துக்குக்காலம் இடம்பெறுகின்றன. இவ்வாறு துன்புறுத்தல்களுக்கு ஆளாகும் சிறுபான்மையினர் மீது ஐ.நா.வோ அல்லது ஏனைய நாடுகளோ அக்கறை செலுத்தியதாகவோ, சிறுபான்மையினர் மீதான வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது நிறுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதையும் எடுத்ததாகவோ தெரியவில்லை. அவ்வப்போது கண்டனம் தெரிவிப்பதுடன் தமது கடமை முடிந்து விட்டதாகவே ஐ.நா.வும் சர்வதேசமும் கருதுகின்றன. கண்டன அறிக்கைகளுக்கு அப்பால் உருப்படியான நடவடிக்கைகள் எதனையும் எடுக்க சர்வதேச சமூகத்தால் முடியவில்லை.

மியான்மரில் இப்போதும் ரோஹிங்கிய முஸ்லிம்கள் அகதிகளாக வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள் (இராணுவப்புரட்சி ஏற்படுவதற்கு முன்னர்) மியான்மர் ஆட்சியாளர்கள் முதல் முதலில் கைவைத்து தமிழர்கள் மீது தான். 1960 ஆம் ஆண்டு மூன்று லட்சம் தமிழர்கள் பர்மாவிலிருந்து (இப்போதைய மியன்மர்) வெறுங்கையுடன் வெளியேறுமாறு பர்மிய ஆட்சியாளர்களால் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். மியான்மரில் பிரித்தானியர் ஆட்சிக்காலத்திலும் தமிழர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. எனினும் மியான்மர் வரலாற்றிலேயே தமிழர்களுக்கெதிரான மோசமான ஒடுக்குமுறை 1960 லேயே இடம்பெற்றது. பாகிஸ்தான் ,பங்களாதேஷ் போன்ற நாடுகளிலும் இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் எதிராக அவ்வப்போது வன்முறைகள் இடம்பெற்று வருகின்றன. இதன் காரணமாக பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளிலிருந்து சிறுபான்மையினர் அகதிகளாக குடிபெயர்ந்து வருகின்றனர். இறைமை என்ற ஒரு சொல்லின் பெயராலேயே இந்த சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைகள் அங்கீகரிக்கப்படுகின்றன.

இலங்கை ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர், ஐ.நா.வுக்கான இலங்கைத்தூதுவர் ஆகியோரின் வாயிலிருந்தும் அடிக்கடி உதிரும் வார்த்தை இறைமை என்பது தான். இறைமை என்ற பெயரில் இடம்பெறும் பெரும்பான்மையினரின் சர்வாதிகாரம் பற்றி எவரும் கண்டு கொள்வதில்லை. இறைமையுள்ள ஒரு நாடு தனது குடிமக்கள் பற்றி வரைவிலக்கணம் செய்து கொள்ள வேண்டும் என்ற நியதியின் படியே மலையக மக்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டது. அனைத்து இனமக்களையும் சரிசமனாக நடத்துகின்ற காரணத்தினாலேயே சிங்கப்பூர், ஐரோப்பிய ,அமெரிக்க நாடுகளுக்கு நிகராக முன்னேற்றமடைந்துள்ளது.

இலங்கையில் மாறி மாறி பதவிக்கு வந்த சிங்கள ஆட்சியாளர்களால் தமிழர்களுக்கு எதிராக இன அழிப்பு நடவடிக்கைகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டன. இதற்கு எதிராக தமிழர்கள் மேற்கொண்ட அகிம்சைப்போராட்டமும், ஆயுதப்போராட்டமும் தோல்வியைத்தழுவிய நிலையில் இப்போது ஈழத்தமிழர்கள் தமக்கு ஏதாவது விமோசனம் கிடைக்குமா என்ற நம்பிக்கையுடன் சர்வதேசத்தையே நம்பியிருக்கின்றனர்.

இலங்கை ஆட்சியாளர்கள் இப்போதும் (இவ்வளவு மோசமான அழிவுகளை தமிழர்கள் சந்தித்த பின்னரும் ) தமிழர்களுக்கு எதுவும் கொடுக்கா மாட்டோம் என அடம்பிடித்துக்கொண்டு இறைமை பற்றி பேசிக்கொண்டிருக்கின்றனர். சீனாவும் இலங்கையின் இறைமையில் யாரும் தலையிடுவதற்கு தாம் ஒருபோதும் அனுமதிக்கோம் என ஒத்து ஊதிக்கொண்டிருக்கிறது. இந்த நிலையில் ஐ.நா.மனித உரிமைகள் கூட்டத்தொடரில் உரையாற்றிய இந்தியப்பிரதிநிதி பாண்டே "நாங்கள் இலங்கையின் இறைமையில் தலையிடவில்லை. ஆனால் இலங்கை 13 ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக தமிழர்களுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளிக்க வேண்டும் எனவும், 13 ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும்" எனவும் வலியுறுத்தியுள்ளார். ஐ.நா.மனித உரிமைகள் கூட்டத்தொடரின் 46 ஆவது அமர்வு அடுத்த வாரத்துடன் முடிவடைகிறது பார்ப்போம் இந்த ஒரு வாரத்தில் அப்படி என்ன பேரதிசயம் நிகழ்ந்துவிடப் போகின்றதென்று. ■




இ.சு.முரளிதரன்

ஒவ்வொரு உயிரியும் ஏதாவது ஒரு தருணத்திலே சுயவலிமையினை வியந்து பிறிதொரு உயிரி மீது வன்மத்தினை வெளிப்படுத்துவதைப் பார்த்திருக்கின்றோம். உயிரினப் பல்வகைமையானது வலிதினும் வலிது உண்டென்பதையே உணர்த்துகிறது. அகிலத்தை வாழ்வுக்குப் பொருத்தமான புலமாக வடிவமைப்பதில் உணவுச்சங்கிலியின் வகிபாகம் முதன்மையானது. உயிரின் எண்ணிக்கையில் சமனிலையைத் தக்க வைக்க உணவுச் சங்கிலி உதவுகின்றது. சூழலில் உயிரிகளுக்கு இடையில் உணவும் ஆற்றலும் படிநிலையாகப் பகிரப்படுவதைச் சுட்டுகின்ற தொடர்பே உணவுச்சங்கிலி எனப்படுகின்றது.

நுளம்புகளின் பெருக்கமானது கட்டுப்பாடின்றி நிகழாமல், நுளம்பு களைப் பூச்சிகள் உணவாக்குகின்றன. பூச்சிகளைத் தவளைகள் இரையாக்குகின்றன. தவளைகளைப் பாம்புகளும், பாம்புகளைப் பருந்துகளும் எனச் சங்கிலி விரிவடைகின்றது. தன்னிலும் வலிமை குறைந்த பூச்சியை இரையாக்குகின்ற தவளை, தன்னிலும் வலிமை மிகு பாம்புக்கு இரையாகிவிடுகின்றது.

திருக்குறளின் 250 ஆவது

குறட்பாவில்,

**"வலியார்முன் தன்னை நினைக்க தான் தன்னின்**

**மெலியார்மேல் செல்லுமிடத்து" என்று**

வலிதினும் வலிதின் முடிவிலிப் படிநிலையியை, மெலிந்ததன்மேல் வலிமை செலுத்தும் போது தன்னிலும் வலிமை உண்டென்பதை அறிதல் வேண்டுமென அழகாக உணர்த்தி விடுகின்றார்.

**உணவுச் சங்கிலி**




(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

# தாயின்....

எவ்வளவு புத்திசாலித்தனமாக பிராந்திய மற்றும் பூகோள அரசியல் நிலைமைகள் கையாளப்படுகின்றன என்பதே முக்கியமானது என்பதாலா?


இந்தக்கேள்விகளை முன்வைத்து தமிழ்ச் சமூகம் ஆழமாக உரையாட வேண்டும். தமிழ் மக்கள் ஏற்கனவே நிறைய இழக்க கொடுத்துவிட்டார்கள். கிட்டத்தட்ட நால்வருக்கு ஒருவர் புலம்பெயர்ந்து விட்டார்கள். எனவே தமிழ் சக்தி தொடர்ந்தும் சிதறக்கூடாது.அது சேமிக்கப்பட வேண்டும்.திரட்டப்பட வேண்டும். இந்த அடிப்படையில் சிந்தித்து நீதிக்கான தமது போராட்டத்துக்கென்று தமிழ் மக்கள் ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும்.தமிழ் மக்களின் ஒட்டுமொத்த அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கவல்ல ஒரு மக்கள் அமைப்பைக் கட்டியெழுப்ப வேண்டும். அது தாயகம்,தமிழ் புலம்பெயர்ந்த சமூகம் மற்றும் தமிழகத்தில் இருக்கும் தரப்புக்களையும் இணைக்க வேண்டும்.அவ்வாறு இணைக்கும் பொழுது ஒரு முக்கியமான முன் நிபந்தனையை நிறைவேற்ற வேண்டும். அது என்னவெனில்.புலம்பெயர்ந்த தமிழ் பரப்பில் போராட்டத்தை முன்னெடுப்பவர்கள் அங்கே முன்வைக்கும் கோஷங்கள் முன்நிறுத்தும் சின்னங்கள் கொடிகள் போன்றவை தாயகத்தில் தடை செய்யப்பட்டுள்ளன.

எனவே அவர்களோடு இணைவது தாயகத்தில் இருப்பவர்களுக்கு ஆபத்தானது.தமிழகத்திலும் அப்படித்தான்.இதனால் தாயகம், தமிழகம்புலம் பெயர்ந்த தமிழ்ச்சமூகம் ஆகிய மூன்று பரப்புகளும் ஒன்றிணையத்தக்க ஒரு பொதுக்கட்டமைப்பை அனைத்துலக அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு சிவில் வெளியைத் திறக்க வேண்டும். அதன் மூலமாகவே புலம்பெயர்ந்த தமிழ் பரப்பிலிருந்து அறிவும் பணமும் ஏனைய உதவிகளும் பரிமாறப்பட வேண்டும். இல்லையென்றால், தாயகத்தில் மிக அரிதாக தோன்றும் அரசியல் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் புலம் பெயர்ந்த தமிழ் சமூகத்தோடு கொண்டிருக்கும் உறவுகள் காரணமாக ஆபத்துக்குள்ளாகும் நிலைமைகள் ஏற்படலாம். எனவே இங்கு முக்கியமாக எடுக்கப்பட வேண்டிய முடிவு அதுதான்.

தாயகம்தமிழகம்புலம்பெயர்ந்த தமிழ்ப்பரப்பு ஆகிய மூன்று பரப்புகளையும் ஒன்றிணைக்கும் ஒரு இடையூடாட்டத் தளமாக கருதத்தக்க ஒரு கட்டமைப்பை முதலில் உருவாக்க வேண்டும். அந்தக் கட்டமைப்புக் கூடாவே நீதிக்கான தமிழ்மக்களின் போராட்டங்கள் பொருத்தமான வடிவத்தில் பொருத்தமான நேரத்தில் தீர்மானிக்கப்பட வேண்டும்.

சில தனிநபர்களின் தன்னார்வமான போராட்டங்கள் அல்லது தியாகங்கள் மக்களை ஒரு உணர்ச்சிப் புள்ளியில் இணைக்க உதவும். ஆனால் சில சமயம் ஒருங்கிணைக்கப்படாத போராட்டங்கள் தொடர்ச்சியற்ற போராட்டங்கள் தமிழ் மக்களின் ஒட்டுமொத்த போராட்ட உணர்வை நீர்த்துப் போகச் செய்துவிடும். எனவே இது விடயத்தில் உடனடியாக ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்கவேண்டும். உண்ணாவிரதம் இருக்கும் அந்தப்பெண்மணியின் பசியை முன்னிறுத்தியாவது தமிழ்ச்சமூகம் இது குறித்துச் சிந்திக்குமா? ■

# கீரிமலை பாசுபத: கபாலிகச் சைவ மரபுகளின் மூத்த மையங்களில் ஒன்றா?



கீரிமலை யாழ்ப்பாணத்தின் பழம் பெரும் ஊர்களில் ஒன்று. இலங்கைத் தீவில் காணப்படும் புராதனமான பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான நகுலேஸ்வரம் இங்குதான் காணப்படுகிறது. அத்துடன் யாழ்ப்பாணத்தின் பிரதான பிதிரர்களுக்கான கடமைகளை ஆற்றும் நீர்பெருக்கும் இங்குதான் உள்ளது. கீரிமலை பற்றிய கர்ண பரம்பரைக் கதைகளின் புராணிக அடிப்படைகளை வரலாற்று அறிவியற் கண்கொண்டு திறக்க முற்படுகையில் நீண்ட நெடிய சைவ மரபுகளின் ஆதிவேர்களை கண்டுகொள்ள முடிகிறது. இந்தக் கட்டுரையை எழுதிக்கொண்டிருக்கும் சிவராத்திரி இரவில் இருளிற் கசியும் புசை மணியொலிகள் அந்த ஆதிவேர்கள் பற்றிய எண்ணங்களை மேலும் கிளறுகின்றன.




கீரிமுகங் கொண்ட முனிவர் ஒருவர் இவ்விடத்திலுள்ள பொய்கையில் நீராடி கீரிமுகம் மாறப் பெற்றமையால் இவ்விடம் கீரிமலை ஆயிற்று என மரபுவழிக் கதை அதன் இடப்பெயர்வுக்கு காரணம் உரைக்கிறது. கீரியுடன் சம்மந்தப்பட்ட புராணிகங்களும், விக்கிரவியலும் மிகப்புராதன இயக்ச வழிபாட்டு மரபுடன் சம்மந்தப்படுபவை. இன்றும் யாழ்ப்பாணத்திலுள்ள நாட்டார் தெய்வங்கள் பலவும் தம் மூலத்தில் இயக்ச மரபுடன் சம்மந்தமுடையவைதான். உதாரணமாக பேய்ச்சி அம்மன், வல்லியக்கன் முதலான பலவும் இம்மரபு வழிப்பட்டு உருவானவையே ஆகும்.. ஏமக்கு நன்கு அறிமுகமான குபேரன் (குபேர இயக்சன்) தன்னுடைய மூலத்தில் இயக்ச மரபினைச் சேர்ந்தவர்தான். அதேவேளை இயக்ச நாக வழிபாட்டு மரபை வெற்றிகொண்டு (கீரி பாம்பு என்ற எதிரிடைக்கும், இயக்ச, நாக மரபு எதிரிடைக்கும் கூட சமூகவியல் ரீதியான குறியீட்டுப் பின்புலம் இருக்கலாம்). இதனைத் தொடர்ந்து, பௌத்த சமண மதங்கள் தாபிதமானபோது கீரி கீரியோடு இணைக்கப்பட்ட கடவுளர் என்பவை பௌத்த, இந்துப் புராணிக மரபுகளோடு இணைக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. பௌத்த மதத்தில் இது பிராந்தி யங்களின் காவற் தெய்வ மரபுள் உள்வாங்கப்பட்டுள்ளது. அதேநேரம் இவற்றுக்கேல்லாம் முற்பட்ட சிந்துவெளிப் பண்பாட்டிலும் கீரி முக்கியத்துவம் பெற்றிருந்தமையை சிந்து வெளி முத்திரைகள் காட்டி நிற்கின்றன. ஒருவேளை கீரிமலை இத்தகைய மிகப் புராதன மரபுகளோடு இணைவுற்ற நிலையில் இப்பெயரைப் பெற்றிருக்கலாம். அதேநேரம் கீரியின் தோலையும், கீரியையும் கூட நகுலக என்றழைக்கும் மரபுமுண்டு. இந்தப் பின்னணியில் இருந்து நகுலேச்சரம் என்ற தலப் பெயரும் உண்டாகியுள்ளதா? நிச்சயமாக அதற்கான வாய்ப்புகளுண்டு. அதேவேளை இக்கோயில் முன்னர் நகுலேஸ்வரம் என்றில்லாமல், திருத்தம்பலேஸ்வரம் என அழைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. அதேவேளை 1620களில், இக்கோயில் போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்டு, பின்னர் 1878களில் ஆறுமுகநாவலரது முன்முயற்சியின் பின்னணியில் மீளக்கட்டியெழுப்பட்டமை பற்றியும் வரலாற்று நூல்கள் பதிவுசெய்துள்ளன.







இது ஒருபுறம் இருக்க, பல வருடங்களுக்கு முன்பதாக அர்த்தநாரீஸ்வரர் விக்கிரகவியல் பற்றி கலாநிதி இரகுபதிக்கும் எனக்குமான தனிப்பட்ட உரையாடலில் அவர் மொழியியல் ரீதியாக நகுல என்பது லகுட என்பதன் திரிபு என்பதிலிருந்து தொடங்கி பண்டைய சைவ மரபில் வரும் லகுட முனி பற்றிக் கூறிய தகவல்கள் உருவாக்கிய எண்ணங்களின் விளைவாக ஏற்பட்டதே இக் கட்டுரை. லகுட முனி அல்லது அதன் திரிந்த வடிவில் லகுல அல்லது நகுல முனிவர் (சிலவேளைகளில் இலகுலீசர் ) பாசுபத சைவத்தைத் தோற்றுவித்தவராவார். அவர் பழங்குடி மரபில் இருந்த பண்டைய சிவவழிபாட்டைப் புதுப்பித்தார் எனவும், கி.பி 56ஆம் நூற்றாண்டுகளில் இது தமிழகத்தில் முதன்மை பெற்ற வழிபாடுகளில் ஒன்றாகக் காணப்பட்டதாகவும் வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். பாசுபத மரபில் வருகின்ற லகுடர் அல்லது சிவன் கையிற் தண்டமுடையவராகவும், அவரது குறி மேல்நோக்கி விறைப்பு நிலையில் நிற்பதாகவும் சித்திரிக்கப்படுகிறது. ஒரு வகையில் விக்கிரவியலின் இத்தகைய தன்மைகள் மிகத் தெளிவாகப் பண்டைய கருவள வழிபாட்டின் சைவ மூலத்தைக் கோடி காட்டுவதுடன். சிவலிங்க வழிபாட்டின் மூலங்களையும் எடுத்துக் காட்டுகின்றன. அதேசமயம், காரைக்காலம்மையும் தன் வழிபாட்டு முறையில் பாசுபத சைவப் பண்புகளை அதிகம் வெளிக்காட்டி நிற்கிறார். அவரது பேயுரு ஏற்றலின் மூலம் பாசுபத மரபாக இருக்கலாம். ஏனெனில் பாசுபத சைவ அடியவர்கள் சித்தராக,பித்தராக, பேய்வடிவு கொண்டோராகத் திரிவாரெனப் பண்டைய நூல்கள் கூறுகின்றன. தேகத்திற் சாம்பரை புசுதல் அவர்களது சடங்குசார் செயற்பாடுகளில் முக்கியமானதாகக் காணப்பட்டது.

கபாலிகம் மற்றும் களாமுகம் ஆகிய தீவிரமான சைவமரபுகளின் எழுச்சியோடு பாசுபதம் வீழ்ச்சியடைகிறது .அத்துடன் இன்னொரு புறத்தில் பாசுபதச் சிந்தனைகளது வேரில் இருந்தே சைவசித்தாந்தம் அதிகபட்சம் முளைவிடத் தொடங்கியது எனவும் சமய ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். அதேவேளை வேறு சில ஆய்வாளர்கள் பாசுபதத்தின் கருவிலிருந்தே காளாமுகம் மற்றும் கபாலிகம் என்பவை தோற்றம் பெற்றதாகக் கூறுவர். கபாலிகர்கள் மண்டையோடு என்பதனை தமது முதன்மைக் குறியீடாகக் கொண்டார்கள். ஆடையற்ற உடலை முதன்மைப்படுத்தும் அவர்கள் , சதையை உண்ணுதல் இரத்தம் அருந்துதல் என்பனவற்றை அவர்களது சமய வழிபாட்டின் பிரதான கூறாகக் கொண்டு இருந்தார்கள்.

கபாலிகத்தின் மிக முதன்மையான வழிபடு கடவுள் பைரவர் அல்லது கால பைரவர் ஆவார். யாழ்ப்பாணச் சைவத்தில் பைரவர் பிரதான காவற் தெய்வமாகக் காணப்படுபவர். அந்தவகையில் யாழ்ப்பாணத்தின் மூலை முடுக்கெல்லாம் பைரவ வழிபாடு பரவியும் காணப்படுகிறது. ஆயினும் கீரிமலைப் பிராந்தியம் உட்பட வலிகாமம் வடக்குப் பிராந்தியத்தில் மற்றெல்லா யாழ்ப்பாணத்து ஊர்களை விடவும் பைரவ வழிபாடு அதிகமாகும். இது இன்னொரு வகையில் கீரிமலை மையத்தில் பாசுபதச்சைவத்தின் தொடர்ச்சியாகவும், நீட்சியாகவும் நிகழ்ந்த கபாலிக சைவத்தின் எழுச்சியை மறைவாகக் காட்டி நிற்கும் இன்றைய வாழும் சான்றாதாரமா? என்ற கேள்வியை ஏற்படுத்துகிறது.

இதனுடைய விரிவாக வருகின்ற அடுத்த கேள்வி யாதெனில், எவ்வாறு காசியானது சிவ, சிவ பைரவ வழிபாடுகளோடு கூடிய பிதிரர் வழிபாட்டின் பெருமையமாகக் காணப்படுகிறதோ அவ்விதமான ஒரு பகைப்புலம் கீரிமலைக்கும் உண்டு. வுடக்கு இலங்கையில் இறந்தோருக்கான சடங்கு ஆற்றுகையின் தலையாய மையம் கீரிமலை தான். சமீப வருடங்களில் கீரிமலைப் பிரதேசமானது இராணுவத்தின் உயர்பாதுகாப்புப் பிரதேசமாக்கப்பட்டதில் அது தன்னுருவம் முதன்மை யாவையும் இழந்து, முன்னைய காலங்களோடு ஒப்பிடுகையில் பெருமளவுக்கு அழிந்து போயுள்ளது. அதற்குப் பதிலாக இன்று யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களில் பல புதிய இறப்புச் சடங்கு மையங்கள் உருவாகியுள்ளன. ஆனால் பண்டைய யாழ்ப்பாணத்தில் ஆடி அமாவாசை வழிபாடு தொடக்கம் மரணச் சடங்குகளின் வெவ்வேறு கட்டச் செயற்பாடுகளின் முதன்மை இடமாக கீரிமலையே காணப்பட்டது, குறிப்பாக அது ஒரு சிறு காசி போலக் காணப்பட்டது.


இதனைவிடவும், இவற்றோடு கூட்டிணைந்தும் இப்பிராந்தியத்தில் வீரசைவ மரபைச் சோந்தவர்களது பண்பாட்டுப் படர்ச்சியும் முதன்மையாகக் காணப்படுகிறது. ரேணுகாச்சிரம் இந்த மரபின் பிரதானமான குறிகாட்டியாகும். இவைதவிர பள்ளிப்படைக் கோயில்கள் (குழந்தைவேற் சமாதி ஆலயம்), மடங்கள் (சிறாப்பர் மடம் வைத்தியலிங்கம் மடம் கிருஷ்ணபிள்ளை மடம் பிள்ளையார்கோயில் மடம் நாராயணபூடர் புண்ணிய தரும மடம் துறவிகளாச்சிரமம்) எனப் பல்வேறு சமய நிறுவனங்கள் கீரிமலையில் முக்கியமாகக் காணப்படுகின்றன.

இத்தகைய பின்னணியில் முழுக்கீரிமலை நகுலேஸ்வரச் சுற்றாடல் சமய மரபுரிமை இடமாகப் (**religious heritage site**) பிரகடனப்படுத்தப்பட வேண்டும். அதன் பரந்துபட்ட மற்றும் வேறுபட்ட சமயப் பிரிவுகளும், அவர்களது வழிபாட்டு முறைகளும் அவற்றின் மரபுரிமை முதன்மை கருதிப் பாதுகாக்கப்பட வேண்டும். அதனை ஒட்டிய தேவாரப் பாடசாலைகள், பண்ணிசைப் பள்ளிகள், குருகுலங்கள் என்பவையும் அப் பிராந்தியத்திற் திறக்கப்படலாம். இந்த மூத்த சைவமரபுகளை பறைசாற்றும், அது பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ள விரும்புவோருக்கான ஆவணக் காப்பகங்கள் இவ்விடம் சார்ந்து உருவாக்கப்படலாம் அல்லது யாழ்ப்பாணச் சமயங்களது மிகப் பெரிய நூலகம் ஒன்று அங்கமையலாம்.

அசிங்கமான ஜனரஞ்சகக் கட்டுமானங்களை ஈஸ்மன்ட் கலரில் அவ்விடங்களில் சைவத்தின் பெயராற் செய்து சீரழிக்காமல் துறைசார் நிபுணத்துவத்துடன் கூடிய நிலவுருவாக்கம், கட்டட உருவாக்கம் என்பவை அவ்விடத்திற் செய்யப்பட வேண்டும். விகாரமான பார்க்கச் சகிக்காத இராட்சதக் குத்துவிளக்குகள் போன்ற அசிங்க உருக்களால் இவ்விடத்தின் அமைதியை அழிக்காமல் ஒரு அமைதியின் தியானத்தின் நிலவுரு அமைய வேண்டும். அது பாக்கு நீரிணையின் அலையோசையை, பரவெளியின் அழகை பேரண்டத்தின் இயல்பான தொடர்புகளை அறுக்காத கட்டுமானங்களால் உருவாக்கப்பட வேண்டும். இந்தியச் சிற்பிகள்தான் செய்கிறார்கள், எனவே அது கேள்விக்கிடமற்ற சாஸ்திரிய மற்றும் அழகியல் வசப்பட்டது என்ற நினைப்பில் கீரிமலையை கிதைக்காமல், சரியான பார்வையோடு நிபுணத்துவ ஆலோசனையுடன் கூடிய யாழ்ப்பாணச் சைவத்தின் உயர் மையங்களில் ஒன்றாக்க வேண்டும். அதனை விடுத்து வரலாறும் தொயாது, மதங்களின் உட்சாரமும் அறியாது இந்து அடிப்படைவாதத்துள் அகப்பட்டு எமது ஈழச் சைவத்தின் பெருவரலாற்றை அழிக்கும் பெரும் வேலைத்திட்டத்துக்கு முகவர்களாகிக் கொண்டு இருக்கிறோம் என்பதுதான் எல்லாவற்றையும் விடக் கவலைக்கிடமானது.

சிக்மலிங்கம் றெஜினோல்ட்


“இப்பொழுது எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள்,விற்பனையாளர்கள், அச்சகத்தினர் என்று இது ஒரு பெரிய தொழில்துறையாகவே உள்ளது. ஆனால் தமிழ் மக்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில் இந்த வளர்ச்சியும் கவனமும் போதாது.”



# நீளும் கேள்விகள்

எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள், வாசகர்களின் கொண்டாட்டமாக ஒவ்வொரு ஆண்டும் நடக்கும் சென்னை (44 ஆவது) புத்தகத் திருவிழா நடந்து முடிந்துள்ளது. 2021 பெப்ரவரி 24 தொடக்கம் மார்ச் 09 வரை நடந்த புத்தகத் திருவிழாவில் ஒன்றரைக் கோடி புத்தகங்கள் விற்பனையாகியிருக்கின்றன. 754 அரங்குகள், 400 க்கு மேற்பட்ட பதிப்பகங்களும் வெளியீட்டு நிறுவனங்களும் பங்கேற்றிருக்கின்றன. இலக்கியம், அரசியல், வரலாறு, சமூகவியல், நாட்டாரியல், உளவியல், மருத்துவம், அறிவியல், பொருளாதார வியல், வணிகம், தொழில்நுட்பம், விஞ்ஞானம், பண்பாடு, ஆராய்ச்சித்துறை, மொழி, பெண்ணியம், தொடர்பியல், இதழியல், தத்துவம், சூழலியல், விவசாயம், கலை, நாடகம், ஓவியம் எனப் பல துறைகள் ஏராளம் புத்தகங்கள் விற்பனையாகியுள்ளன. முக்கியமாகச் சிறார்களுஞ் காக புத்தகங்கள் மிக அதிகளவில் இந்தப் புத்தகக் காட்சியில் விற்பனையாகி யிருக்கின்றன என்று கூறப்படுகிறது.

வழமையாக இந்தப் புத்தகக் காட்சி ஜனவரியில் - தைப்பொங்கல் காலத்தோடுதான் நடப்பதுண்டு. கொவிட் 19 இதைத் தள்ளிப்போட்டதன் காரணமாக, இப்பொழுதே நடந்திருக்கிறது. அதுவும் கொரோனா அச்சுறுத்தல் - நெருக்கடிகளின் மத்தியில். இதனால் வழமையை விட இந்த ஆண்டு வாசகர்கள், எழுத்தாளர்களின் தொகை சற்றுக் குறைந்துள்ளது. குறிப்பாக புலம்பெயர் எழுத்தாளர்களும் இந்தியாவின் பிற இடங்களிலிருந்து வந்து கலந்து கொள்வோரின் தொகையும் குறைந்திருந்தாக கண் காட்சியில் பங்கேற்றிருந்த பதிப்பாளர் ஒருவர் தெரிவித்தார். இல்லையென்றால் ஏராளமான புலம்பெயர் வாசகர்களும் எழுத்தாளர்களும் புத்தகக் காட்சியில் பங்கேற்றிருப்பர். புத்தகக் காட்சியையொட்டி இவர்கள் சென்னையில் கூடுவது வழமை. அப்படி வரும்பொழுது புத்தக விற்பனை மட்டுமல்ல, புத்தக வெளியீடுகள், அதையொட்டிய உரையாடல்கள், பிற நிகழ்ச்சிகள், சந்திப்புகள் என பலவிதமான நிகழ்ச்சிகள் நடக்கும். ஆனாலும் இந்த ஆண்டும் புத்தகங்களின் வருகையும் விற்பனையும் நன்றாகத்தானிருந்தது என்கிறார்கள் விற்பனையாளர்கள். இளைய தலைமுறையினரின் வாசிப்பு ஆர்வம் மகிழ்ச்சியும் நம்பிக்கையும் அளிக்கிறது என்கிறார் பதிப்பாளர் ஒருவர். இது உண்மைதான். ஐ.ரி மற்றும் வங்கி, வணிகம், தொழில் நுட்பத் துறைகளில் வேலை செய்வோரில் ஒரு தொகுதியினர் புதிய வாசகர்களாக உருவாகியுள்ளனர். இதைவிட புத்தகப் பண்பாடு என்பது வரவர மெல்ல மெல்ல வளர்ச்சியடைந்து வருகிறது என்பதற்கான சாட்சியமே இதுவாகும். ஏனென்றால் இந்தத் தடவை வழமையையும் விட பிரபலங்களில் பலரும் புத்தகங்களைப் பற்றியும் புத்தகக் காட்சியைப் பற்றியும் பொது வெளியில் பேச முன்வந்திருக்கின்றனர். குறிப்பாக நடிகர்கள் கமல்ஹாசன், உதயநிதி, நாசர், பார்த்திபன், நடிகை ரோகினி, இயக்குநர்கள் சேரன், மிஸ்கின், பா.ரஞ்சித், ராம், தங்கர் பச்சான், கோபி நயினார் மற்றும் கவிஞரும் நடிகருமான வ.ஐ.ச. ஜெயபாலன், எனப் பல திரைத்துறையினர் புத்தகக் காட்சியைப் பற்றியும் அதையொட்டிய நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றிருக்கின்றனர். அந்தளவுக்கு புத்தகங்களும் வாசிப்பும் எழுத்தும் இன்று கரிசனைக்குரிய ஒன்றாக மாறி வருகிறது. அதாவது புத்தகப் பண்பாடு என்பது அறிவியக்கத்தின் தவிர்க்க முடியாத ஒரு அம்சம் என்ற புரிதல் ஏற்பட்டுள்ளது. திரைத்துறைக்கு அப்பாலும் பல்வேறு துறையைச் சேர்ந்தவர்களும் புத்தகங்களின் மீதான கரிசனையைக் கொண்டுள்ளனர். இந்தக் காட்சியில் அது நன்றாக வெளித்தெரிந்தது. ஏறக்குறைய இது 1960, 1970 களில் வாசிப்பில் ஏற்பட்ட ஒரு புரட்சியைப் போன்றது என்கிறார் விமர்சகரும் பண்பாட்டாய்வாளருமாக ஒருவர். அப்பொழுது படித்தோரின் புதிய அலையின் வருகைக்கு தீனி போடுவதற்கு எழுத்து தேவையாக இருந்தது. குறிப்பாகப் படித்த பெண்களும் அடி நிலைமக்களும் அதிகமான அந்தக் காலத்தில் உருவாகினர். அவர்களுக்கு வாசிப்பதற்கு எதையாவது கொடுக்க வேண்டும் என்ற தேவை இருந்தது. இதற்காகப் பலரும் எழுதத் தொடங்கினார்கள். பதிப்பகங்கள் உருவாகின. ஏறக்குறைய அது ஒரு தொழில்துறையாக - இண்டஸ்றி என்ற அளவுக்கு வளர்ச்சியடைந்தது. அதைப்போல இப்பொழுதும் இது மாற்றமடைந்து வருவதைக் காண முடிகிறது என்கிறார் அவர். இந்தப் புத்தகக் காட்சி ஒவ்வொரு ஆண்டும் விரிவடைந்து வருகிறது. இப்பொழுது எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள்,விற்பனையாளர்கள், அச்சகத்தினர் என்று இது ஒரு பெரிய தொழிற்றுறையாகவே உள்ளது. ஆனால் தமிழ் மக்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில் இந்த



வளர்ச்சியும் கவனமும் போதாது. ஆனாலும் இது இப்படித்தானிருக்கும். ஏனென்றால், இன்று புத்தக வாசிப்புக்குச் சவாலான யூரியுப் மற்றும் இணையம், சமூக வலைத்தளங்கள் எனப் பல சங்கதிகள் வந்து விட்டன. அதற்குள்ளும் புத்தகங்க ளுக்கென இந்த அளவுக்குப் பெரியதொரு விழாவும் ஏராளமான நிகழ்ச்சிகளும் லட்சக்கணக்கான மக்களும் இருப்பது மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் தருகிறது. அதிலும் இளைய தலைமுறையின் ஆர்வம் முக்கியமானது என்கிறார் அவர்.

இதோடு வழமையாக தமிழக அரசின் மெல்லிய அனுசரணையோடு ஊடகங்களின் கவனமிருப்பதுண்டுதான். ஆனால் இந்த ஆண்டு அதையும் மீறி தொடர்ச்சியாக புத்தக அறிமுகங்கள், கவனப்படுத்தப்பட வேண்டிய புத்தகங்கள், எழுத்தாளர்கள், நிகழ்ச்சிகளைப் பற்றிய உரையாடல்கள் எனப் பல நிகழ்ச்சிகளுக்கு ஊடகங்களின் கவனமும் ஏற்பட்டிருப்பது முக்கியமானது. ஏறக்குறைய புத்தகங்களும் எழுத்தும் வாசிப்பும் கவனிக்க வேண்டியவை. முக்கியமானது என்ற வகையில். இதில் இன்னும் ஒரு விசேசம் என்னவென்றால், தமிழகத்தில் நடக்கவுள்ள சட்டமன்றத் தேர்தல் அறிவிப்புகளில் புத்தகங்கள், பதிப்பு, எழுத்தாளர் ஊக்குவிப்பு, நூலக மேம்பாடு போன்றவற்றைப் பற்றியும் அரசியல் கட்சிகள் பேசத் தொடங்கியுள்ளன என்பதாகும். ஆகவே புத்தகங்கள் தமிழ்ப்பண்பாட்டிலும் தமிழ் அறிவியக்கத்திலும் செல்வாக்குச் செலுத்தும் போக்கு மீள வலுப்பெறத் தொடங்கியுள்ளது என்றே தோன்றுகிறது.

இதேவேளை ஈழக்கவிஞர்கள், எழுத்தாளர்களின் நூல்களும் இந்தக் காட்சியில் வந்துள்ளன. புலம்பெயர் எழுத்தாளர்களும் இதில் உள்ளடங்குவர். ஆனாலும் இது கடந்த ஆண்டுகளை விடக் குறைவே. இந்த ஆண்டில் வாசு முருகவேலின் புத்திரன், ஷோபாசக்தியின் மூமின், சயந்தனின் அஷேரா, ஷோபாசக்தி பதிப்பித்த தனுஜா, நடேசனின் அந்தரங்கம், என்னுடைய கருணாகரனின் கடவுள் என்பது துரோகியாயிருத்தல் (மத்தியூ கவிதைகள் 30) , ஸர்மிளா ஸெய்யித்தின் உயிர்த்த ஞாயிறு, ஆழியாளின் நெடுமரங்காய் வாழ்தல், ப்ரியா விஜயராகவனின் அற்றவைகளால் நிரம்பியவள், மணற்காடரின் கவிதை ஒரு சிறு புள்ளின் இறகு, ராஜாஜியின் நாராயணபுரம், தர்மினியின் அயலாள், கோ.நாதனின் ‘அரவம் புணர்ந்த அடவி’ மனோவின் கொரோணா கதைகள், இத்ரீஸ் தொகுத்த என்ட அல்லா, மின்ஹா வின் நாங் கூழ், தில்லையின் விடாய், அலெக்ஸ் பரந்தாமனின் ஒரு பிடி அரிசி, தர்மு பிரசாத்தின் ஆனைக்கோடரி, ரூபன் சிவராஜாவின் ‘எழுதிக் கடக்கின்ற தூரம்’ மற்றும் ரிஷான் ஷெரிப்பின் மொழிபெயர்ப்பிலான தக்ஸிலாவின் அந்திம காலத்தின் இறுதி நேசம், இஸுருவின் திருமதி பெரேரா, சுருக்கப் பட்ட நெடுங்கதை கள் எனப் பல பிரதிகள் வெளியாகி யிருக்கின்றன.

இதெல்லாம் தமிழ்ச் சூழலுக்கு நல்லதொரு வளமாக்கற் செயற்பாட்டின் விளைவுகளே. ஆனால், இங்கே ஒரு கேள்வி எழுகிறது. யாழ்ப்பாணப் பொது நூலகம் 1981 இல் இனவாதிகளால் (அன்றைய ஐக்கிய தேசியக்கட்சி அரசின் ஏற்பாட்டில்) எரியூட்டப்பட்டது.

இது தமிழ் மக்களுடைய மனதில் ஆழமான துயரத்தையும் காயத்தையும் ஏற்படுத்தியது. இதை இன்னும் நம்மில் பலரும் சொல்லிக் கொண்டேயிருக்கிறோம். குறிப்பாக அரசியற் தரப்பினர் இதை ஆண்டாண்டாகச் சொல்லி வருகிறார்கள். இவர்கள் உட்பட நாம் அனைவரும் புத்தகப் பண்பாட்டுககும் ஊர்கள் தோறும் நூலகச் செயற்பாடுகளுக்கும் என்ன வகையான பங்களிப்புகளைச் செய்து கொண்டிருக்கிறோம்.

எத்தனை பேர் புத்தகங்களை வாங்குகிறார்கள்? எழுத்தாளர்களை எத்தனை பேர் மதிக்கிறார்கள்? அல்லது எழுத்தாளர்களுக்கான சமூகப் பெறுமானம் என்ன? எத்தனை வீடுகளில் புத்தகச் சேகரிப்புண்டு? தம் பிள்ளைகளுக்கு புத்தகங்களை வாங்கிக் கொடுக்கும் பெற்றோர் யார்? கேள்விகள் மட்டுமே நீள்கின்றன.




# விடுகதைகள்

1. இலையுண்டு கிளையில்லை,பூ உண்டு மணமில்லை,காய் உண்டு விதையில்லை,பட்டை உண்டு கட்டை இல்லை,கன்று உண்டு பசு இல்லை அது என்ன?

**வாழை**

2. உயிரில்லாதவனுக்கு உடம்பெல்லாம் நரம்பு, அது என்ன?

**பாய்**

3. தன் மேனி முழுவதும் கண்ணுடையாள் தன்னிடம் சிக்கியபேரைச் சீரழிப்பாள் அவள் யார்?

**மீன் வலை**

4. மாமா போட்ட பந்தல் மறுபடி பிரிச்சா கந்தல் அது என்ன?

**சிலந்தி வலை**

5. சொன்ன நேரத்துக்கு தொண்டை கிழிய கத்துவான். அவன் யார் ?

**அலாரம்**

6. உடம்பெல்லாம் சிவப்பு, அதன் குடுமி பச்சை அது என்ன?

**தக்காளி**

7. கடலிலே கலந்து, கரையிலே பிரிந்து, தெருவிலே திரியும் பூ எது?

**உப்பு**

8. காதை திருகினால் பாட்டு பாடுவான்? அவன் யார்?

**வானொலி**


9. நீளவால் குதிரையின் வால் ஓடஓடக் குறையும் அது என்ன?

**தையல் ஊசியும் நூலும்**

10. வீட்டுக்கு வந்த தொந்தியப்பன் தினமும் கரைகிறான். அவன் யார்?

நாள்காட்டி

**எஸ். விதுர்சிகா**
தரம் 5
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை



# மண் உருண்டைகளும் வைரங்களும்

உசலம்பட்டி என்ற ஊரில் ஆனந்தன் எனும் வாலிபன் வாழ்ந்து வந்தான். அவன் ஒருநாள் பொழுது போக்கிற்காக ஆற்றங்கரையோரம் நடந்து சென்று கொண்டிருந்தான். அவன் செல்லும் வழியில் சிறிய குகை ஒன்றைக் கண்டான். ஆனந்தன் அக்குகைக்குள் என்ன இருக்கும் என்று அறிய ஆவல் கொண்டதால் அக்குகைக்குள் சென்று பார்த்தான். அக்குகையின் வாசலுக்கு சற்று அப்பால் ஒரு சிறிய பையொன்று இருந்தது. அப்பைக்குள் என்ன இருக்கும் என்ற ஆசை கொண்ட ஆனந்தன் அப்பையை எடுத்து திறந்து பார்த்தான்.

அப்பைக்குள்ளே பதின்மூன்று களிமண் உருண்டைகள் இருந்தன. அவன் அப்பையை எடுத்துக் கொண்டு ஆற்றங்கரைக்கு வந்து பின் அந்தப்பையிலிருந்து ஒவ்வொரு களிமண் உருண்டையாக எடுத்து ஆற்றுக்குள் எறிந்து கொண்டிருந்தான். கடைசியாக மூன்று களிமண் உருண்டைகள் தான் இருந்தன.

அவன் அவ்வுருண்டைகளை எறிய முற்படும் போது ஒரு களிமண் உருண்டைக்குள்ளே ஏதோ ஒன்று பிரகாசித்துக்கொண்டிருந்தது. ஆனந்தனும் அவ்வுருண்டையைப் பிரித்துப் பார்க்கும் போது அதில் வைரம் ஜொலிஜொலித்தது. அவ்வைரத்தைக் கண்டு ஆச்சரியப்பட்ட அவன் மற்றைய இரண்டு களிமண் உருண்டையையும் ஆவலுடன் பிரித்துப் பார்த்தான். அவற்றினுள்ளும் வைரங்கள் இருந்தன.

இதைப் பார்த்த ஆனந்தன் ஆற்றுக்குள் எறிந்த களிமண் உருண்டைகளையும் தேடினான். ஆனால் அவனுக்கு அவை கிடைக்கவில்லை. இதே போல் தான் நமக்கும் வாழ்க்கையில் முன்னேறுவதற்கான நல்ல வாய்ப்புக்கள் பல கிடைக்கின்ற போதும் நாம் அவற்றைக் கண்டு கொள்ளாது தவறவிட்டுவிட்டு பின் அவற்றிற்காக வருந்துகின்றோம்.

**தீ.பூர்வஜன்.** தரம் 7F
யா / சாவகச்சேரி இந்துக் கல்லூரி.



# பொதுஅறிவு

1) வரலாற்றின் தந்தை?
**ஹெரடோடஸ்**

2) புவியலின் தந்தை?
**தாலமி**

3) இயற்பியலின் தந்தை?
**நியூட்டன்**

4) வேதியியலின் தந்தை?
**இராபர்ட் பாயில்**

5) கணிப்பொறியின் தந்தை?
**சார்லஸ் பேபேஜ்**

6) தாவரவியலின் தந்தை?
**தியோபிராச்டஸ்**

7) விலங்கியலின் தந்தை?
**அரிஸ்டாட்டில்**

8) பொருளாதாரத்தின் தந்தை?
**ஆடம் ஸ்மித்**

9) சமூகவியலின் தந்தை?
**அகஸ்டஸ் காம்தே**

10) அரசியல் அறிவியலின் தந்தை?
**அரிஸ்டாட்டில்**

**ஜெ.ஆருசா, தரம் 5**
**யாழ்.ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்**

# பிஞ்சு தூரிகைகள்

**தெரியாத ஒன்றைத் தெரிந்து கொள்ளும் முயற்சியே கல்வி. அது மகிழ்ச்சியான வாழ்வுக்கு வழிகாட்டும்.**

**வ.மதுஜா**
தரம்-7
யா/ இந்து மகளிர் கல்லூரி.




**க.அஸ்மிகா**
தரம்-06
வவு/ நெளுக்குளம், கலைமகள் மகா வித்தியாலயம்.



**சந்திரசீலன் மகிழினி**
கிளி/கிளிநொச்சி இந்து ஆரம்பப் பாடசாலை.





**அக்ஷயா சந்திரதீபன்**
கிளி/ முழங்காவில் ஆரம்ப வித்தியாலயம்

38



# கவிதைகள்

தேர்செய் கலையோடு
இலகு தேர் செய்து
வீட்டோர வீதியிலே
வெள்ளோட்டம் பார்க்கும்
சிறுவர் இவர் சிந்தனை
அடுத்த பரம்பரைக்கு விதைக்கிறது
ஊர்கூடித் தேரிழுக்கும்
பண்பாட்டை...

**த. சிவா**, அல்வாய்.

பச்சிலம் பருவக் குயில்கள்
கைவண்ணம் கொண்ட ரதம்
வீதி விளையாடி வரும்
ஆன்மிக பற்றது
விளையாட்டினில் பறைசாற்றும்
பண்டைக்கால தேர்கோலம்
பார் முழுக்க தலை
வணங்கும் பக்குவம்

**தி.ராஜினி**, அராலி

வீனத்துவம் தலையசைக்க
குரும்பை தேரெல்லாம்
சக்கரமாய் சுழன்றாலும்
பழமை மாறா சமுதாயத்தில்
நவீன வாத்தியம் முழங்க
சிறுவர்களின் கையோடு
வீதி ஏறி வருகின்றார்
அன்றும் இன்றும் நிலைமாறா
எம்பெருமானாக

**சு.ஹரிஷான்**, இணுவில்

சின்னஞ்சிறு பாலகர்களே உம்
சிந்தனைக்கு எல்லை ஏது...
வண்ணத் தேர் செய்து உம்
எதிர்காலத்தின் வெள்ளோட்டமோ...
பிஞ்சுப் பாலகர்களே உம்
மாசற்ற படைப்பு இதுவோ...
சிங்கார தேரேறி இறைவா
திருவீதி ஊர்வலமோ...
பவனி வரும் இறைவா
பாலகர்களுக்கு அருள்புரிவாய்...

**உ.பிரியங்கா**, காரைநகர்

**பரிசு பெறும் கவிதை**

தென்னம் தோப்பின் தெரு ஓரம்
தென்றல் காற்றின் தாலாட்டில்
பசுமை இனிமை எழில் கோலம்
வண்ணத் தேரை வடம் இழுத்து
இன்பம் தேடும் இரு தோழர்
தமிழர் தாய்வழி பண்பாட்டால்
சிற்பக் கலையும் சித்திரமும்
கண்ணின் மணி போல்
காத்திடுவோம்

**ர.கார்த்திகாயினி**
வற்றாப்பளை

வண்ணத்தில் வடித்தெடுத்த
மாதிரித் தேரொன்றை
வடம்பிடித்து இழுக்கும்
வஞ்சனையிலா
சோதரர்களின்
செயலொழுங்கு கண்டீர்
மண்வாசனை மணம்கமழ
மகிழ்வுறும் மனசுகள்

*அம்பனூர் ஐங்கரன்*

பூவாடை வீசி எழ
பூந்தேரும் வீதிவர - சிவன்
மேலாடை தவிர்த்திங்கே
மேன்மை காக்கும் சைவநெறி
பண்பாட்டு மரபினிலே
பயணிக்கும் இருமலரே
தமிழ் உரிமை பலம் பெறவே
வடம் இழுத்து வாழ்ந்திடுக

**முல்லை**, ஆழ்வான்

நாற்சில்லு பூட்டிய அழகுத் தேர் அது
மண்மேட்டில் வெள்ளோட்டம்!
வர்ணக்கொடி வான் அசைய
வடம் பிடித்து இழுத்திடு!
ஊர் கூடித் தேர் ஒத்திகை இதுவா என
நம்பிடும் உனை நாம் நாளை நீ அமைத்திட!
வீரசைவர் என உரைத்திடும் இச் சிறார் வேண்டுதல்
கேட்டு இன்னருள் புரிந்திடு இறைவா!

**ராம்**

பாலகர் பண்ணிசைப் பாடல்களுடன்
பவனி வரும் பார்வதியின் பட்டு ரதம்
இது சிட்டுக்களின் சின்ன ரதமாயினும்
சிறுவர்களின் சிந்தையில் உதித்த சிறப்பு ரதம்
தென்னந் தோப்பு வழி வரும் தேரதனை
வடம் பிடித்திழுக்கும் சிறியவனும்
ரதமதனின் பின்னொரு சிறுவனுமாய்
அறநெறி வகையில் அவர் மனப்பயணம்

**வி.பி.சிவேஸ்**
தண்ணீரூற்று

## மௌன விழி 39

குயிலின் இசையின் எழிலாய் சோலை
கதிரொளி வீச்சில் மனம் மயங்கும்
இயற்கை எழுச்சி இன்பம் சேர்க்க
அரைநாண் நூலில் ஆடை அணிந்து
தேர் இழுக்கும் இரு மலர் அழகாய்
பாரில் பரந்த உறவின் நேசம்
தமிழர் மரபுப் பண்பாட்டில்
கூடி இழுக்கும் தேர் ஓட்டம்

**ஆர்.மதுசுதன்**
வற்றாப்பளை மகா வித்தியாலயம்




உங்கள் கவிதைகள் எங்கள்
கதவைத் தட்ட
வேண்டிய கடைசி நாள்:
**19.03.2021**

*அனுப்ப வேண்டிய முகவரி:*
**உதயன் சஞ்சீவி**
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி: *sanjeevi@uthayan.com*
0773165555

## ஒரு சோடி எறும்பு

மின் மினிக்கதை

மேசையின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டேன். அந்த மேசையில் கொஞ்சி விளையாடிய ஒரு சோடி எறும்பை விரலால் நசுக்கி விட்டதற்காகவா இப்படி என் வீட்டில் இருக்கும் ஸ்பூன்களெல்லாம் எறும்பாக மாறியிருக்கு. என்று, குறி சொல்பவரிடம் போய்க் கேட்டேன். இந்தப் பிரச்சினையை மிக இலகுவாக நான் முடித்துத் தருகிறேன் என்றார் அவர். நான் என்ன செய்யணும் சொல்லுங்க என்றேன். தினமும் இந்த மேசையின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்க வேண்டும். உங்கள் வீட்டில் இருக்கும் எறும்புகள் எல்லாம் மீண்டும் ஸ்பூனாக மாறும் வரை மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றார்.

அப்படியே நான் தினமும் மேசையின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டேன். தினம் ஒரு கால் என்ற முறைப் படி விழத் தொடங்கினேன். எந்த பலா பலனும் இது வரை இல்லை. என் வீட்டில் ஸ்பூனின் தேவை சொற்பம்தான்; இருந்தாலும் மிகவும் அவசியமானதாக இருக்கும். எப்போதும் சமையல் பண்ணும்போது மிளகாய்த் தூள், மஞ்சள் தூள் சேர்ப்பதற்கு ஸ்பூனையே தேடுவேன். தேநீர் தயாரிக்க அடிக்கடி தேவைப்பட்டது. நான் ஆசையாக வைத்திருந்த மரப் பிடி போட்ட ஸ்பூன்களின் பிரிவை என்னால் தாங்கிட முடியாமலிருந்தது. என் கணவர் வெளியிலிருந்து வாங்கி வந்த புதிய வகை ஸ்பூன்களும் வீட்டுக்குள் நுழைந்த மறு நிமிடமே எறும்பாக மாறிக்கொண்டிருந்தன.

ஒரு நாள் என் கணவர் ஒரு சாக்கு நிறைய எறும்புகளைக் கொண்டு வந்து அந்த மேசையில் கொட்டினார். கொட்டி ஒரு சில நிமிடங்கள்தான் ஆனது எல்லா எறும்பும் ஸ்பூனாக மாறிவிட்டன. அந்தக் குறி சொல்பவரை நான் ஒரு காலத்தில் அவருக்குத் தெரியாமல் காதலித்தது என்னவோ உண்மைதான். ஆனால் என் கணவர் எப்போதிருந்து இப்படி ஒரு மந்திரவாதியாக மாறினார் என்று தெரியாது.

## புகைக்காமல் புகைக்கிறோம்...



வீட்டுக்கு வீடு
பீடியோ சிகரெற்றோ
புகை குடிக்கும்
குடியாளி ஒருவர் இருப்பின்
வீட்டிலிருப்போர்
அத்தனை பேரும்
புகைக்காமல் புகைக்கின்ற
நிர்ப்பந்தம்.....

வீதி, கடைத்தெரு வெங்கும்
வித..விதமான புகையாளி
புகைவிட்டுப்
பொழுது போக்குவதால்
போய் வருவோர் எல்லாம்
புகைக்காமல் புகையும்
பாதகம் பெறுகின்ற
பரிதாபம்....

புகையாளி பேச்சிலும்
புகை முகர்ந்து
புகைக்காமற் புகைக்கிறோம்..
அவன் விடும் மூச்சிலும்
புகை கலந்துவர நாம்
புகைக்காமற் புகைக்கிறோம்..

"புகைபிடித்தல்
தீங்கு விளைவிக்கும் "
எழுத்து எழுதப்பட்டிருப்பினும்
புகை பிடிப்போனுக்கு அது
'தெரிகின்ற "
தலையெழுத்தோ?

புகை பிடிப்போன்
பிடித்துவிட்டுப் போக அதை
சுவாசிப்போனே
அதன் தீங்குகளைச்
சுமக்கும் வீதியோரச்
சுமைதாங்கி ஆகின்றான்...

மொத்தத்தில்
புகைபிடிக்கும் சிலர் போதுமே
சமூகத்தில் அனைவரையும்
புகைபிடிப்போர் ஆக்கிடுவர்..

த. சிவாஸ்கரன், அல்வாய்.

குழந்தையின்மை

# மகப்பேறின்மை

**குழந்தையில்லாத தம்பதிகளில் பெண்களை மட்டும் கேள்வி கேட்பதையும் குற்றஞ்சாட்டுவதையும் நிறுத்துங்கள்.**





**எனக்கு 32 வயது. என் கணவருக்கு 38 வயது. நான் திருமணம் முடித்து 9 மாதங்களாகின்றன. கிரமமான உடலுறவு இருப்பினும் நான் இன்னும் கர்ப்பம் தரிக்கவில்லை. நானொரு சுகதேகி. எனக்கு வேறு எந்தப் பிரச்சினையுமில்லை. குடும்பத்தாரின் வசைபேச்சுக்களைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. கொடுமைப்படுத்துகின்றனர். கடுமையான மன அழுத்தத்தில் இருக்கிறேன். எனக்கு என்ன பரிசோதனைகள் மேற்கொள்ள வேண்டும். அரசாங்க வைத்தியசாலைக்கு மட்டுமே என்னால் செல்லும் வசதியுள்ளது. அங்கு யாரை அணுகுவது எப்படி என் பிரச்சினையை கூறுவது என்று தயவு செய்து விளக்கம் தாருங்கள்.**


**மதுவந்தி, யாழ்ப்பாணம்.**






**மருத்துவர் ப்ரியா கமலசிங்கம்**
**(யாழ்.போதனா மருத்துவமனை,
- சிலாபம் மாவட்டப்
பொது மருத்துவமனை)**

கர்ப்பத்தடை முறைகள் ஏதுமின்றி, ஒருவருட காலப் பகுதியில் கிரமமான உடலுறவில் ஈடுபட்டும் உங்களால் கர்ப்பம் தரிக்க இயலாவிடின் மட்டுமே- உங்களுக்கு மலட்டுத்தன்மை, கர்ப்பம் தரிப்பதில் சிக்கல் இருப்பதாக நாம் மருத்துவத்தில் வரையறுத்து வைத்துள்ளோம்.
ஒரு தம்பதியினர் குழந்தையின்றி இருப்பின் பெண்களை மட்டுமே போட்டுத் தாக்குவது எந்தவிதத்திலும் நியாயமற்றது. குழந்தையில்லாத தம்பதியினரின் 1/3 பகுதியினர் ஆண்களில் உள்ள பிரச்சினைகளாலும் 1/3 பகுதியினர் பெண்களில் உள்ள பிரச்சனைகளாலும் 1/3 பகுதியினர் இருபாலரிடமுள்ள பிரச்சினைகள் காரணமாகவும் மலட்டுத் தன்மையை எதிர்நோக்க வேண்டியுள்ளது என மருத்துவ ஆய்வறிக்கைகள் கூறுகின்றன.
மலட்டுத்தன்மை ஒரு குழந்தை பெற்றுக்கொண்ட பின்னரும் ஏற்படலாம் அதாவது இரண்டாவது முறை கருத்தரிக்க இயலாமை secondary infertility!!!




**மலட்டுத்தன்மையை தூண்டும் காரணிகள்**

| ஆண் | பெண் | இருபாலாருக்கும் |
|---|---|---|
| Varicoccele | மாதவிடாயில் உள்ள சிக்கல்கள் | வயது அதிகரித்தல் (பொதுவாக >40) |
| cystic fibrosis | பலோம்பியன் குழாயில் அடைப்பு ஏற்படுதல் | சலரோகம் |
| விதைப்பையில் அடி/ காயம் விபத்து ஏற்படல் | சிறுநீரக கோளாறுகள் | anorexia nervosa or Bulimia - வியாதி |
| Steroid நீண்ட கால பாவனை | குருதிச்சோகை | அளவுக்கதிகமாக மதுவருந்துதல் |
| விதைப்பை புற்றுநோய் இறங்காத விதை (Undescended testicles) | பிட்டியூரிட்டி சுரப்பியில் கோளாறுகள் | நீண்டகால கிருமிநாசினி சாயவகை போன்ற இரசாயன பாவனை. |
| விதை - நீண்ட காலம் வெப்பத்தை உணரும் வேலைகள் (High heat exposure) | PCOS- ஒவேரியன் கட்டிகள் | புற்றுநோய்க்கான சிகிச்சைகள் |
| விந்தணு எண்ணிக்கை குறைதல் | தைரொயிட்- பிரச்சினைகள் | பாலியல் நோய்கள் (STD) |
| பரம்பரை | Celiac disease | புகைப்பிடித்தல் |
| | PID | மனவழுத்தம் |
| | கர்ப்பப்பை கட்டிகள் மற்றும் பிரச்சினைகள் | போதைப்பொருள் பாவனை (Substance abuse) |
| | | உடற்பருமன் அதிகரித்தல் (Obes) |
| | | நிறை குறைவு (Under weight) |

## பரிசோதனைகள்:

**ஆண்களில் :**

1. **விந்தணுப் பரிசோதனை-** Semen analysis
2. **ஹோர்மோன் பரிசோதனை**
3. Genetic testing **மரபணுப் பரிசோதனை**
4. Testicular
5. **சிலவேளைகளில்** MRI, USS

**பெண்களில்:**

1. **இரத்தத்தில் ஹோர்மோன்களின் அளவைப் பரிசோதிப்பதன் மூலம் முட்டையுரு வாக்கம்**
2. Ovulation testing
3. Hystero salpingography
4. **கர்ப்பப்பை (வாசல்), பலோப்பியன் குழாயில் ஏதும் அடைப்புண்டா என்று பரிசோதிக்கப்படும்.**
   Ovarian reserve testing
5. **முட்டையின் தரம் பற்றிய பரிசோதனை**
6. **இதர ஹோர்மோன் பரிசோதனை**
7. Pelvic uss
8. Hysteroscopy
9. laparoscopy

## சிகிச்சை

1. முட்டை உருவாக்கத்தை அதிகரித்தல்
   **Ovulation induction**
   - பெரும்பாலும் ஒழுங்கற்ற மாதவிடாய் சுழற்றி கொண்ட பெண்களுக்கு பலன்தரும்.
2. செயற்கை விந்தூட்டல்
   *artificial insemination*
   - கருக்கட்டும் சாத்தியக் கூறை அதிகரிக்கச் செய்ய ஆணிடமிருந்து பெறப்படும் விந்து சில சுத்தப்படுத்தல் படிமுறைகளின் பின்னர் நேரடியாக பெண்ணின் இனப்பெருக்கத் தொகுதியில் செலுத்தப்படும்.
3. நுட்பத்துணை இனப்பெருக்க தொழில்நுட்பம்
   **Assisted reproductive technology**
   - இங்கு சூல்முட்டை பெண்ணின் சூலகத்திலிருந்து அகற்றி வெளியூடகத்தில் கருக்கட்டலுக்கு உட்படுத்தப்பட்டு பின்பு மீண்டும் பாதுகாப்பான வகையில் பெண்ணின் உட்செலுத்தப்படும்.
4. வெளிநோதனை முறை கருக்கட்டல்
   *In vitro fertilization -IVF*
   - மிகவும் பிரபலமான தொழில் நுட்பம், முதிர்ந்த சூல்முட்டை பெண்ணின் சூலகத்திலிருந்து அகற்றப்பட்டு வெளியே தகுந்த முறையில் பெறப்படும் விந்துடன் கருக்கட்டு செய்யப்பட்டு கருக்கட்டியபின் முளையம் உருவாவதைத் தொடர்ந்து முளையம் மீண்டும் கருப்பையினுள் பதிக்கப்படும்.
5. குழியமுதலுரு உள்ளான விந்து உட்செலுத்துதல்
   *Intracytoplasmic sperm injection -ICSI*
   - முதிர்ந்த சூல்முட்டையினுள் கருக்கட்டியபின் முளையம் கருப்பையினுள் பதிக்கப்படும்.
   -

மேற்கூடிய சிகிச்சை முறைகள் கடினமாக தோன்றினாலும் மலட்டுத்தன்மை என்பது இதர நோய்கள் போன்ற சாதாரணமாக தீர்க்கப்படக்கூடிய ஒன்று என்ற புரிதலுடன் வைத்தியருடன் ஒத்துழைப்பு வழங்கி அவரின் ஆலோசனைகளை எவ்வித மனவழுத்தமும் இன்றி பின்பற்றினால் இலகுவாக குழந்தை பெற்றுக் கொள்ள முடியும்.

இங்கு மகப்பேறின்மை என்பது இருபாலாரிலும் பரிசோதிக்கப்பட வேண்டிய ஒன்று. உங்கள் கணவருடன் வைத்தியசாலைக்கு சென்று இலகுவாக உங்களை பரிசோதித்து தீர்த்துக் கொள்ளுங்கள். இதில் கூச்சப்படுவதற்கோ அவமானப்படுவதற்கோ எவ்வித காரணமுமில்லை.

### பெண்

நீங்கள் வைத்தியரை அணுக வேண்டிய சந்தர்ப்பங்கள்

1. 35 வயதுக்கு மேற்பட்டவராயும் 6 மாத கிரமமான உடலுறவின் பின்னரும் கருத்தரிக்காமை
2. வயது >40
3. ஒழுங்கற்ற மாதவிடாய்
4. மாதவிடாய் திடீரென நிறுத்தம்
5. ஏற்கனவே கர்ப்பப்பை / சினைப்பை சம்பந்தமான பிரச்சினைகள்
6. ஒன்றுக்கு மேற்பட்ட கருச்சிதைவு
7. புற்றுநோயாளியாக இருக்கும் பட்சத்தில்

### ஆண்

1. புற்றுநோயாளியாக இருப்பின்
2. விதைப்பை வீக்கம்/ ஹோர்மோன் பிரச்சினைகள்
3. அளவில் சிறிய விதைப்பை
4. உடலுறவு சம்பந்தமான பிரச்சினைகள்
5. பரம்பரையில் மகப்பேறின்மை

○ சூரியன்

# அறிந்தும் அறியாமலும்

## சரணடைகிறார் மைத்திரி!



ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன, வெகு விரைவிலேயே ராஜபக்சக்களுடன் முக்கியத்துவமிக்க சந்திப்பொன்றில் ஈடுபடவுள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோரையே மைத்திரிபால சிறிசேன ஒன்றாக சந்திக்கக்கூடும் எனவும், அலரிமாளிகையில் இச்சந்திப்பு இடம்பெறக்கூடும் எனவும் அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

2014 ஆம் ஆண்டு பொதுவேட்பாளராக களமிறங்கிய மைத்திரி, ராஜபக்சக்களை கடுமையாக விமர்சித்தி ருந்தார். ஆனாலும் 2018 அரசியல் சூழ்ச்சியின்போது ராஜபக்சக்களுடன் அவர் மீண்டும் சங்கமித்துவிட்டார். எனினும், 2019 ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் மைத்திரியை மறைமுகமாக ராஜபக்சக்கள் ஓரங்கட்டி வருகின்றனர்.

சுதந்திரக்கட்சியிலுள்ள 14 எம்.பிக்களில் சிலர் ராஜபக்சக்களுக்கு துணை நிற்பதால் அரசின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்துக்கு சவால் விடுக்கமுடியாத சூழ்நிலை மைத்திரிக்கு ஏற்பட்டுள்ளது. மறுபுறத்தில் 21/4 தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையும் மைத்திரிக்கு பெரும் தலையிடியாக மாறியுள்ளது.

எனவே, ராஜபக்சக்களுடனான சந்திப்பின் பின்னரே தனது அடுத்த கட்ட அரசியல் நகர்வுகள் தொடர்பில் மைத்திரிபால சிறிசேன முடிவொன்றை எடுக்கக்கூடும் என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது. அரசுக்கான ஆதரவை விலக்கிக்கொண்டால் பல சவால்கள் ஏற்படும் என்பதால் பெரும்பாலும் சரணாகதி அரசியலை அவர் நடத்தக்கூடும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

## புதிய முயற்சியில் ரணில்



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவுக்கும், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவுக்குமிடையில் கடந்தவாரம் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. இந்தச்சந்திப்பில் ராஜிதவின் மகனும் பங்கேற்றுள்ளார்.

எதிர்க்கட்சிகளை இணைத்து பிரமாண்டமான கூட்டணியை அமைப்பது தொடர்பில் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது. இதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவையும் ராஜித கோரியுள்ளார்.

இதற்கு சம்மதம் தெரிவித்துள்ள ரணில், மங்கள சமரவீர ஊடாக இதற்கான ஏற்பாடுகளை, தான் ஏற்கனவே செய்துவிட்டேன் என்பதையும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை தொடர்பிலும் சந்திப்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. பரிந்துரைகள் அமுலாவதைத் தடுப்பதற்கு நீதிமன்றத்தில் இடைக்காலத் தடை உத்தரவைப் பெறுவது தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது.

## ஜே.வி.பியுடன் கரு சங்கமம்

கரு ஜயசூரிய தலைமையிலான சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தையும் இணைத்துக்கொண்டு பயணிப்பது தொடர்பில் ஜே.வி.பி. கவனம் செலுத்தியுள்ளது. தேசிய மக்கள் சக்தி எனும் பெயரில் பெரும் கூட்டணியை ஜே.வி.பி. ஏற்கனவே கட்டியெழுப்பியுள்ளது. பல இடதுசாரிக் கட்சிகளின் பிரமுகர்கள் இதில் அங்கம் வகிக்கின்றனர்.

அரசின் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிராக பெரும் எதிர்ப்பு வேலைத்திட்டங்களை ஜே.வி.பி.தலைமையிலான தேசிய மக்கள் சக்தி தற்போது முன்னெடுத்து வருகின்றது. குறித்த ஜனநாயக சமரில் கரு ஜயசூரியவையும் இணைத்துக்கொள்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. இதற்கான பேச்சுகள் இடம்பெற்றிருந்தாலும் அது இன்னமும் வெற்றியளிக்கவில்லை என தெரிய வருகின்றது.

## அமைச்சரவையிலிருந்து விமல், கம்மன்பில அவுட்'?



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்துக்குள் ஏற்பட்டுள்ள மோதல் இன்னும் முடிவுக்கு வரவில்லை. நாளாந்தம் உக்கிரமடைந்தே வருகின்றது. இதனால் விரைவில் விரிசலொன்றுக்கான சாத்தியம் பிரகாசமாகத் தென்படுகின்றது.


கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தில் பிடித்த சனி, மொட்டுக் கூட்டணியை வாட்டி வதைத்துவரும் நிலையில், மொட்டு கட்சியின் தலைமைத்துவம் குறித்து விமல் வெளியிட்ட கருத்தும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இந்நிலையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைப்பதவியில் இருந்து மஹிந்தவை நீக்கிவிட்டு, அவ்விடத்துக்கு கோத்தாவை நியமிக்கப்பட வேண்டும் என கருத்து வெளியிடுவதற்கு விமலுக்கு என்ன அருகதை உள்ளது என மொட்டு கட்சி உறுப்பினர்கள் வினா தொடுத்து, விமலை சரமாரியாக விளாசித்தள்ளிவருகின்றனர். பஸில் ராஜபக்சவே இதன் பின்னணியில் செயற்படுகின்றார். விமல்வீரவன்சவும், உதய கம்மன்பிலவும் பஸிலுக்கு எதிராக செயற்படும் நிலையிலேயே இருவரின் தலைகளும் குறிவைக்கப்பட்டுள்ளன. பஸிலின் சகாக்களின் சொற்கணைத் தொடுப்பால் விமலும், கம்மன்பிலவும் கதிகலங்கி நிற்கின்றனர். ஆனால் ஊடகங்களின் முன்னால் மட்டும் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றனர். அவர்கள் பம்மினாலும்கூட மொட்டு அணியினர் ஓயவில்லை. பிரதமர் மஹிந்த ராஜபக்சவை நேரில் சந்தித்து விமலுக்கு எதிராக முறையிட்டுள்ளனர். சுமார் 43 எம்.பிக்கள் இணைந்தே விமல், கம்மன்பில ஆகியோருக்கு எதிராக முறைப்பாடுகள் முன்வைத்துள்ளனர்.

“ மொட்டுடன் இணைந்து தேர்தலில் வென்றுவிட்டு இவ்விருவரும் மக்கள் மத்தியில் தாங்கள் நாயகர்களாகுவதற்கு அரசின் செயற்பாடுகளை விமர்சிக்கின்றனர். கூட்டுப் பொறுப்பை மீறுகின்றனர். இதற்கு இடமளிக்கக்கூடாது. இவ்விருவரையும் அமைச்சரவையில் இருந்து தற்காலிகமாகவேனும் வெளியேற்றுங்கள். அவ்வாறு இல்லாவிட்டால் விமர்சனங்களை நிறுத்த சொல்லுங்கள். இல்லையேல் பொதுவெளியில் விமர்சிக்கவேண்டிய நிலை எமக்கும் ஏற்படும்.” என மேற்படி எம்.பிக்கள் பிரதமரிடம் எடுத்துரைத்துள்ளனர்.

"முரண்பட்டால் முன்நோக்கி பயணிக்க முடியாது. அனைவரும் கூட்டு பொறுப்புடன் செயற்படுவதே நல்லது என கூறியுள்ள பிரதமர், அமைச்சரவையில் இருந்து வெளியேற்றும் யோசனையை ஏற்க மறுத்துள்ளார் "எனத் தெரியவருகின்றது. ஆனாலும் இருவருக்கும் கடுந்தொனியில் மஹிந்த எச்சரிக்கை விடுக்கக்கூடுமாம்.





## தனிமைப்படுத்தப்படவுள்ள கட்சி!

தமிழ் முற்போக்குக் கூட்டணியிலிருந்து வெளியேறுமாறு மலையக மக்கள் முன்னணிக்கு, அந்தக்கூட்டணியில் அங்கம் வகிக்கும் இதர பங்காளிக்கட்சித் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர் என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஜனநாயக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம் ஆகியவற்றின் தலைவர்களே இவ்வாறு வலியுறுத்தியுள்ளனர்.

20 க்கு ஆதரவாக வாக்களித்த அரவிந்தகுமார் எம்.பிக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமை, தன்னிச்சையான வகையில் சில முடிவுகளை எடுத்தமை , ஆளுங்கட்சியுடன் மலையக மக்கள் முன்னணியின் ஒரு சாராருக்கு உள்ள இரகசிய உறவு உட்பட சில விடயங்களைக் கருத்திற்கொண்டே அந்தக்கட்சியை வெளியேற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனினும் அரவிந்தகுமார் எம்.பி மீது இன்னும் 2 மாதங்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என திடீரென மலையக மக்கள் முன்னணி அறிவித்துள்ளது. ஆனால் இவ்வளவு காலமும் நடவடிக்கை எடுக்காதவர்கள் இனியும் எடுப்பார்களா என்பது கேள்விக்குறியே.

எனவே, மாகாணசபைத் தேர்தலொன்று நடைபெறும் பட்சத்தில் மலையக மக்கள் முன்னணி கூட்டணியிலிருந்து தனிமைப்படுத்தப்படக்கூடும்.



# ஏரியின் பிசாசு

ஆங்கிலத்தில் : ஆர்ம்ஸ்ரோங் ஸ்பெர்ரி
( Armstrong sperry)
தமிழில்: கோகுலராகவன்

**ஆர்ம்ஸ்ரோங் ஸ்பெர்ரி**
**(Armstrong sperry)**

ஒரு அமெரிக்க எழுத்தாளர். குழந்தைக் கதைகளுக்காக அதிகம் எழுதியவர். நாடு காண் பயணியாக சென்று சுதேச நாடுகள் பற்றி எழுதியவர். அதிலும் சிறுவர்களின் சாகசங்களை கதைகளாக்கியதில் பெரும் பங்கு இவருக்கு உண்டு. 1941 இல் நியூ பெரி மெடல் (NEWBERY MED AL) எனும் அமெரிக்க இலக்கிய விருதை பெற்றுக் கொண்டார். ஹொலிவூட் சாகச திரைப்படங்களிலும் இவருக்கு பங்குண்டு. இவரின் நாவல் Call it courage, டிஸ்னியால் திரைப்பட மாக்கப்பட்டது. தென்பசுபிக் கடலில் அமெரிக்க பழங்குடியினர் வசித்த'போரா போரா' தீவில் அம்மக்களுடன் வாழ்ந்து அவர்களது வாழ்க்கையை கதையாக்கினார். அவற்றிலொன்றே இந்தச் சிறுகதை.

தென் பசுபிக் கடலின் தொலைவில் 'போரா போரா' தீவில் மாகோவும் அவனது குடும்பமும் இருந்தனர். அது ஒன்றும் பெரிய தீவல்ல. ஒரு நாளிலேயே யாரும் அந்தத் தீவை சுற்றி வந்துவிடலாம். கடலலைகள் கோட்டை மதில் உயரத்துக்கு எழுந்து தாக்கும். மலை ஆடுகள் ஒவ்வொரு குன்றாகத் தாவித் தாவி திரிவதையும் காண முடியும். மாகோவின் பெரும்பாலான நேரம் கடல் நீரேரியிலேயே கழிந்து கொண்டிருக்கும். மீன் பிடிக்கும் உபகரணங்களை தனது கைகளாலேயே தயாரிக்கக் கூடியவன். திமிங்கலத்தை கொல்லக் கூடிய ஐந்து முனை ஈட்டியை தானே தயாரித்துக் கொண்டான். தனது படகை மரத்தில் இருந்து செதுக்கி வடிவமைத்தும் கொண்டான். அது மிகவும் சிறியது. அவனும் ,அவனது நாயான ஆஃபாவும் அமர்ந்து செல்ல போதுமானதாக இருந்தது. ஆஃபா ஒரு போதும் அவனை விட்டு பிரிவதில்லை. ஒரு மாலை தனது பேரக்கிழவனுடன் பாயில் படுத்திருந்தவாறு கதைத்துக் கொண்டிருந்தான். கிழவன் நீரேரியின் பிசாசான 'ரூபா' பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தான். மாகோ சிறுவனாக இருந்தபோது இந்தப் பயங்கரமான பிசாசு பற்றி பல கதைகளை கேள்விப் பட்டிருக்கிறான். இரவின் நிசப்தத்தில் மீனவர்கள் பிசாசின் கதைகள் சொல்வார்கள்.


பிசாசான ரூபா 'போரா போரா' தீவின் ஏரி தனக்கு சொந்தமானதென்றே நினைத்துக் கொண்டு இருந்தது. தீவு வாசிகள் ரூபாவுக்கு முக்கியமான நாள்களில் கடற்கரையை அண்டி பன்றி, ஆடு போன்றவற்றின் இறைச்சியைப் படையல்களை படைத்து விடுவர். இரவு மீனவர்களின் வலைகள் கிழிக்கப்பட்டிருந்தாலும் ரூபாவே படையலை உண்டதாக மீனவர்கள் நம்பிக் கொண்டார்கள். ரூபாவை யாருமே கண்டதில்லை. சிலவேளை பேரக் கிழவன் கண்டிருப்பானோ, என்னவோ?

"தாத்தா அது எப்படியிருக்கும்?"

கிழவன் "ம்" என்பது போல தலையசைத்தான். சுருட்டுப் புகையின் வெளிச்சத்தில் கிழவனின் முகம் தெரிந்தது.

"அது கடலின் கீழேயுள்ள பெரிய குகையில் இருக்கும். இந்த வீட்டை விட நீளமானது. பின்பக்கம் பெரிய துடுப்பு மாதிரி வால் இருக்கும். வாயில் தீயைக் கக்கும். அந்தப் பாறைகளுக்கு அப்பால் நான் ஒரு படகின் கீழ் அதைக் கண்டேன்."

"பிறகு என்ன நடந்தது?" மாகோ ஆச்சரியத்துடன் எழுந்து பேரக் கிழவனை உற்றுப் பார்த்தான்.



இல்லை. கிழவனின் குரல் தாழ்ந்து ஒலித்தது.

"ரூபா அந்த படகை கடலுக்குள் கொண்டு போய் விட்டது. கடல் வெள்ளைத் தீப்பிடிப்பால் தகித்தது"

கிழவன் பெருமூச்செறிந்தான்.

"அதிலிருந்த மூன்று மீனவர்களும் உயிருடன் திரும்பவில்லை. நல்ல சுழியோடிகளாக இருந்தும் ரூபாவின் பசிக்கு இரையாகிவிட்டார்கள்"

"அதனால்தான் அரசர் ரூபாவை கொல்வதற்கு பரிசு வழங்குவதாக அறிவித்தாரோ?"

"ஆம், முப்பது ஏக்கர் தென்னந்தோப்பும், ஒரு பெரிய படகும்"

"ஆனால் எவரின் கைகளிலும் அந்த பிசாசு பிடிபடவேயில்லை"

மாகோவின் கண்கள் பிரகாசித்தன.

"முப்பது ஏக்கர் தென்னந்தோப்பும் ஒரு படகும் எனக்கு கிடைத்தால் எப்படியிருக்கும்?"

"போய்ப்படு, ரூபாவுக்கு கிட்டப் போனாலே நாசம்தான். உனது தந்தைக்கு நடந்தது போதும்" என்று துயரோடு சொன்னான் கிவன்.

"அப்பா...? அப்பாவுக்கு என்ன நடந்தது?" மாகோ ஆச்சரியமாகக் கேட்டான்.

மாகோவின் தாய் பெருமூச்சு விட்டுக் கொண்டாள்.

"சொல்லுங்கோ உங்கடை பேரனுக்கு" அவளின் குரல் தாழ்ந்து ஒலித்தது.

கிழவர் தளதளத்த தனது குரலை செருமிக் கொண்டார்.

"உன்ரை அப்பா..." கிழவன் இழுத்தான்.

"என்ரை அப்பா?"

"அந்தப் படகில் இருந்த மூன்று பேரில் ஒருவர் உன் அப்பாதான்"

கிழவனின் குரல் உயரத்தில் இருந்த கிணற்றுக்குள் போடப்பட்ட கல் போல அடங்கிப் போனது. மாகோவுக்கு உடல் நடுங்கியது. தலை முடியை பின்பக்கமாக கோதிவிட்டுக் கொண்டான்.

"நான் ரூபாவை அடித்து விழுத்துவேன். அரசரின் பரிசைப் பெறுவேன்"

"பேசாமல் படடா. இந்த முட்டாள் பேச்சை நிறுத்து இன்னும் எனக்கு கஸ்டத்தைத் தராதே" கிழவன் வேதனையோடு சொல்லிக்கொண்டான், மாகோ படுத்துவிட்டான். ஆனால் தூக்கம் நீண்ட தூரத்தில் இருந்தது. மாகோ காலையில் தாமதமாகவே எழுந்தான். அவனது கனவில் ரூபா வந்து மிகவும் தொல்லைப் படுத்தி இருந்தது. பகலில் ஒரு பாயை இழைத்து முடித்து விட்டு மாலையில் ஆஃபாவுடன் கடற்கரைக்கு நீந்தப் போனான். வீடு திரும்பியதும் கடும் பசி. தாயாரின் கையால் சாப்பிட்டு முடித்தான்.

"வாழைப்பழம் முடிந்து விட்டது. சின்னத்தீவுக்குப் போய் வெட்டிக் கொண்டு வா..."என்றாள் தாய். இவர்கள் வசிக்கும் தீவில் இருந்து மறுகரையில் உள்ள சிறிய தீவில் நிறைய வாழை மரங்களும் தோடை மரங்களும் இருந்தன. அங்கு போவதாக இருந்தால் மாகோவுக்கு மகிழ்வாகவே இருக்கும். மாகோ ஆஃபாவையும் தன் பயணத்தில் சேர்த்துக் கொண்டான். நீண்ட கத்தியையும் குத்தீட்டியையும் எடுத்துக் கொண்டான். படகைக் கடலில் தள்ளும்போது ஆஃபா படகின் அணியத்தில் ஏறி அமர்ந்து கொண்டது.

மாகோ ரூபாவை நினைத்துக் கொண்டான். சூரியன் தகித்துக் கொண்டிருந்தான். ரூபா கிழவர்களின் கதைகளில் மட்டும்தான் வருமோ? மாகோ தனது குத்தீட்டியை இறுகப் பிடித்துக் கொண்டான். அவனுக்கு இரவு, தான் செய்த சபதம் ஞாபகம் வந்தது.

'ஒரு குத்தீட்டியால் அந்தப் பிசாசை கொல்ல முடியுமா?'

"ஏன் முடியாது" உணர்ச்சி பிரவாகித்தது. படகைக் கரையில் நிறுத்திவிட்டு ஆஃபாவுடன் தீவுக்குள் நுழைந்தான்.

"ஏய் ரூபா! வாழைக்குலையை வெட்டி விட்டு வந்து உன்னைக் கவனித்துக் கொள்கிறேன்"

மூன்று பெரிய வாழைக்குலைகளையும் வெட்டி, கொஞ்சம் தோடம்பழங்களையும் பறித்து வள்ளத்தில் ஏற்றினான். ஆஃபா அணியத்தில் மீண்டும் ஏறிக் கொண்டது. படகு புறப்பட்டது.

பொழுது இருட்டத் தொடங்கிவிட்டது. மாகோ படகை வேகமாகச் செலுத்தத் தொடங்கினான்.

"ஏய் ரூபா இருட்டாகிவிட்டது. உன்னை நாளைக் கவனிக்கிறேன்" அப்போது பெரிய சுறா ஒன்றின் மேற்செட்டை இருளில் மின்னியது. மாகோவின் இதயம் நின்று விடும் போது இருந்தது. கைகள் மெதுவாகத் தளர்ந்தன.

"இது....இதுதான் ரூபா ! இதை நான் இதற்கு முன் இங்கு காணவில்லையே"

அவன் கண்களை அவனால் நம்ப முடியவில்லை. அது இவர்களது படகை நோக்கி வரத் தொடங்கியது. ஆஃபா கடுமையாகக் குரைக்க தொடங்கியது. ரூபாவின் இருபுறமும் மிகப் பெரிய செட்டைகள். அதன் உடல் முழுதும் பிரகாசமான பொஸ்பரஸ் வெளிச்சம் மின்னியது.

"இதுதான் பிசாசு ரூபா! இதுதான்"

மாகோவின் கால்கள் பலமிழக்கத் தொடங்கின. கத்தவோ அழவோ முடியாமல் தொண்டை அடைத்துக் கொண்டது. ரூபா படகைச் சுற்றி வளைக்கத் தொடங்கியது. மீண்டும் மீண்டும் அது படகை நெருங்கியது. மாகோ மிக அருகில் பார்த்துவிட்டான். அதன் மஞ்சள் நிறக் கண்கள் இவனை மிரட்டின.

(20ஆம் பக்கம் பார்க்க)

தமிழ் சட்டத்துறையில் தவிர்க்கவியலாத ஆளுமையாக விளங்கும் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா, இந்தமாதம் 16 ஆம் திகதியோடு சட்டத்துறையில் காலடி பதித்து 40 வருடங்கள் பூர்த்தியாகின்றன. இந்த நான்கு தசாப்தங்களும் அவரது சட்டத்துறைப் பயணப்பதிவுகளை 'உதயன்-சஞ்சீவி' வாசகர்களுக்கு தருகின்றது இந்த நேர்காணல்.

○ சந்திப்பு: ஔண்யன்

# குட்டிமணி மு
# அரசியல் வ



**ஓர் இனத்தின் விடுதலை என்று ஒரு தளம் உருவாகும் போது அதற்கு ஆதரவுக்குரல் கொடுப்போர், துணை நிற்போர், முழுமையாக ஈடுபடுவோர் என்றுபல்வேறுதரப்பினர் இருப்பார்கள். அவர்கள் அனைவருக்கும் எதிர்த் தரப்பிடமிருந்து அச்சுறுத்தல் வருவதென்பது சர்வசாதாரணமானது. அச்சுறுத்தல்களுக்கு முன்னுரிமை கொடுத்திருந்தால் 40 வருடங்களாக தலைநகரில் அரசியல் கைதிகளுக்காக வாதாடியிருக்கமுடியாது நமக்குள் இருக்கும் இனப்பற்றின் வீரியத்தைப் பொறுத்தே அவற்றை எதிர்கொள்வதற்கான மனநிலையும் எமக்குக் கிடைக்கும். எத்தகைய அச்சுறுத்தல் வந்தாலும் அவற்றை என்னால் இலகுவாக எதிர்கொள்ள முடியுமாக இருந்தது.**

**கே:** சட்டத்துறையில் நீங்கள் பணியாற்றத் தொடங்கி 40 வருடங்கள் பூர்த்தியாகியுள்ளன. உங்களது சட்ட அறிவை தமிழினத்துக்காகப் பயன்படுத்தி பலமுறை நீதியை நிலைநாட்டியுள்ளீர்கள். உங்களுக்கு சட்டத்துறையில் எவ்வாறு ஈடுபாடு ஏற்பட்டது?

**ப:** மக்கள் சார்ந்த சிந்தனை எனக்குள் துளிர்விடத் தொடங்கிய பாடசாலைக் காலத்தில் இருந்தே சட்டக்கல்வி குறித்த ஈடுபாடும் எனக்குள் இயல்பாகவே துளிர்விடத் தொடங்கியது. சட்டத்துறை சார்ந்து எனது மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற உந்தல் எனக்குள் இருந்தது. இப்போது மனநிறைவு ஏற்படும் விதமாக என்னால் முடிந்த அளவுக்கு, சட்டத் துறை சார்ந்து அனைத்து உபகாரங்களையும் தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் வழங்க முடியுமாக இருக்கின்றது. குறிப்பாக குற்றவியல் சட்டத்தரணியாக பல வழக்குகளில் வெற்றியீட்டியிருந்தேன். இவற்றில் பெரும்பாலானவை தமிழினத்தின் நலன் சார்ந்தவையே.

## 430 அரசியல் கைதிகளை விடுவித்தேன்

**கே:** **அவ்வாறு குற்றவியல் சட்டத்தரணியாக நீங்கள் வாதாடிய முக்கிய வழக்குகள் சிலவற்றை இங்கு வெளிப்படுத்தமுடியுமா ?**

**ப:** நான்கு தசாப்தங்களாக பல ஆயிரக்கணக்கான குற்றவியல் வழக்குக்களில் நாட்டிலுள்ள பல நீதிமன்றங்களில் ஆஜராகியதுடன் பயங்கரவாதத் தடைச்சட்டம், மற்றும் அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் இளைஞர்கள், யுவதிகள் மட்டுமின்றி வைத்தியர்கள், பொறியியலாளர், உதவி அரசாங்க அதிபர், ஊடகவியலாளர்கள், கோயில் தர்மகர்த்தாக்கள், கோயில் குருக்கள், அருட்தந்தையர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர், மாவட்ட அமைப்பாளர், மாநகரசபை உறுப்பினர், பல்கலைக்கழக மாணவர்கள், அரச சார்பற்ற அமைப்பின் அதிகாரிகள், சுங்கத் திணைக்களத்தின் உயரதிகாரிகள், ஆசிரியர்கள், கிராம சேவையாளர்கள், தொழில் அதிபர்கள் புலம்பெயர் தமிழர்கள், வங்கி முகாமையாளர், எனச் சமூகத்தின் பல தரப்பட்டவர்களும் பயங்கரவாதத் தடைச்சட்டம், மற்றும் அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். சட்டமா அதிபரால் இந்த அரசியல் கைதிகளுக்கு எதிராக பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு கொழும்பு, பாணந்துறை, களுத்துறை, காலி ஆகிய இடங்களில் உள்ள மேல் நீதிமன்றங்களில் ஆயிரக்கணக்கான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. இவற்றில் நான் 403 வழக்குகளில் வாதாடியதால், 402 அரசியல் கைதிகள் விடுதலையாகியுள்ளனர். அவற்றில் சில வழக்குக்கள் தமிழினத்தின் வரலாற்றோடும் பின்னிப்பிணைந்தவை என்பதால் சிலவற்றை இங்கு சொல்லமுடியும்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் 1981ஆம் ஆண்டு ,முதல் முதலாக கைது செய்யப்பட்ட, குட்டிமணி, ஜெகன், கறுப்பன் என்ற ஞானவேல் ஆகிய மூவருக்கும் எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் கொலை வழக்கு, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கொலை வழக்கு, மேஜர் ஜெனரல் பாரமி குலதுங்க கொலை வழக்கு, மேஜர் முத்தலிப் கொலை வழக்கு,பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் கொலை முயற்சி வழக்கு, யாழ்ப்பாண பிரதான பொலிஸ் அத்தியட்சகர் சால்ஸ் விஜயவர்த்தன கொலை வழக்கு, கொழும்பில் 5 தமிழ் மாணவர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட வழக்கு, கோத்தாபய கொலை முயற்சி வழக்கு, மஹிந்த- கோத்தாபய -சரத் பொன்சேகா கொலைமுயற்சி போன்ற நாட்டின் கவனத்தை ஈர்த்த பல முக்கிய வழக்குகளில் முன்னிலையாகியுள்ளேன்.

அத்தோடு ஊடகவியலாளர்களான சிறிகஜன், பரமேஸ்வரி, சுசந்திகா, யசிகரன், வளர்மதி, வித்தியாதரன் போன்ற ஊடகவியலாளர்கள் கைது செய்யப்பட்ட போதும், அவர்கள் தொடர்பான வழக்குகளில் முன்னிலையாகி அவர்களை விடுவித்துள்ளேன். அதேபோன்று பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பல அப்பாவித்தமிழ் இளைஞர்களுக்காகவும் வாதாடி, அவர்களில் பலரை சிறைகளில் இருந்து மீட்டுள்ளேன்; மீட்டு வருகின்றேன்.

## குட்டிமணி வழக்கு

**கே:** **பயங்கரவாதத் தடைச் சட்டம் அமுலுக்கு வந்த பின்னர் அதன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட முதலாவது வழக்கில் முன்னிலையானவர்களில் நீங்களும் ஒருவர். அந்த வரலாற்று முக்கியத்துவம் மிக்க வழக்குப் பற்றி சொல்ல முடியுமா?**

**ப:** பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் முதலாவது வழக்காக செல்வராஜா யோகச்சந்திரன் (குட்டிமணி), ஜெகநாதன் ஜெகன் மற்றும் கறுப்பன் என்ற ஞானவேல் ஆகிய மூவருக்கும் எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்குத்தான் நான் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் எடுத்த பின்னர் கனிஷ்ட சட்டத்தரணியாக ஆஜராகிய முதல் வழக்கு. அன்றிலிருந்து இன்று வரை நான்கு சகாப்தங்களாக அரசியல் கைதிகளின் விடுதலைக்காக பல ஆயிரக்கணக்கான வழக்குகளில் நாட்டிலுள்ள பல நீதிமன்றங்களில் வாதாடிய போதிலும் இந்த வழக்கின் நினைவுகள் மிகவும் முக்கியமானவை.

40 ஆண்டுகளுக்கு முன்னர் குட்டிமணி என்ற பெயர் இலங்கையில் பெரும் உணர்வலைகளை ஏற்படுத்தியது. அவர் 1970களில் இலங்கையில் தமிழ் போராளிக் குழுத் தலைவர்களில் ஒரு முன்னணித் தலைவராவார். 1983 ஜூலை 25 ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலையில் கொடுரமாகக் கொல்லப்பட்ட தமிழ் அரசியல்
கைதிகளில் அவரும் ஒருவ
ஆணையிறவுத் தடுப்பு மு
வைக்கப்பட்ட அவரைபி
புக்கு கொண்டு வந்தனர்
தடைச்சட்டத்தின்கீழ் பன
ணுவ முகாமில் தடுத்து
ரமாக சித்தரவதை புரிந்
மேலதிக விசாரணைகளை
விசாரணைகள் முடிவ
சட்டமா அதிபர் சிவா
கொழும்பு மேல் நீதிமன்
கும் எதிராக நீர்வேலி வங்
யில் கொலைக் குற்றச்ச
பட்டு மேல் நீதிமன்றில் வ
செய்யப்பட்டு தினசரி
எடுத்துக் கொள்ளப்பட்டு
ளில் விசாரணை முடிவ
விசாரணைகளின் போ
பல்கலைக்கழக மாணவ
ஏராளமான பொதுமக்க
வெளிநாட்டு பத்திரிகையா
றில் குழுமியிருந்தனர். வி
போனால் 1981-1982ஆ
கட்டத்தில் குட்டிமணியெ
தவர்களே கிடையாத அ
பிரபல்யமாகி இருந்தபடி
விசாரணையைப் பார்ப்ப
றம் வந்தவர்களை விட
பார்ப்பதற்காக வந்தவர்க
அரச தரப்பினரதும் எதிர்
வாதப் பிரதிவாதங்களின்
தீர்ப்புக்காக ஒத்திவைக்கப்
வழங்கப்படும் நாளில் நீதிம
ரளான பார்வையாளர்கள்
நீதிபதி சேனநாயக நீதிம
யில் அமர்ந்ததும் குட்டி
ஒரு சாதாரண குற்றவா
கவில்லை. ஆனாலும்
தேவைப்படுத்தப்பட்ட
வழங்க வேண்டியது தன
னக், குறிப்பிட்டு 'என்றே
திபதி குட்டிமணிக்கு மன
வாராயின், அதனைக் கே
மகிழ்ச்சியடைவேன்' எனச்
முக்கியத்துவம் வாய்ந்த
னைத் தீர்ப்பை 1983ஆம்
மாதம் முதலாம் திகதி வழ
மரண தண்டனைத் தீர்ப்பு
பின்னர் நீதிபதி குட்டிம
ரது இறுதி ஆசை என்ன
போது
"எனது மரண தண்டனை
படுவதற்கு முன்னர் தயவு
கண்களை அகற்றி கண்
ஒரு தமிழருக்கு அவற்றை
கள். என்னால் சுதந்திர
பார்க்க முடியாதுபோக
எனது கண்களாவது அத
டும். என்னைத் தூக்கிலி
பல்லாயிரக்கணக்கான குட்
வாகுவார்கள்" எனத் தெரி
கணப்பொழுதில் நீதிமன்
பார்வையாளர்களில் க
மேல் நீதிமன்ற நீதிபதியி
குட்டிமணியின் இறுதி வி
கேட்டு அதிர்ச்சி அடை
கலைக்கழக மாணவர்கள்
இந்த வழக்கு விசாரணை
பில் பிரதி சொலிசிட்டர்

# முதல் வரை...!



ரும் ஒருவர்.
தடுப்பு முகாமில் தடுத்து
அவரைபின்னர் கொழும்
வந்தனர். பயங்கரவாத
ன்கீழ் பனாகொடை இரா
தடுத்துவைத்துக் கொடு
தை புரிந்து, பொலிஸார்
ணைகளை நடத்தினர்.
முடிவடைந்த பின்னர்
பர் சிவா பசுபதியினால்
ல் நீதிமன்றத்தில் மூவருக்
வேலி வங்கிக் கொள்ளை
குற்றச்சாட்டு சுமத்தப்
மன்றில் வழங்குத் தாக்கல்
தினசரி விசாரணைக்கு
ளப்பட்டு நான்கு மாதங்க
முடிவடைந்தது. வழக்கு
ரின் போது கொழும்பு
மாணவ, மாணவிகள்
பாதுமக்கள், உள்நாட்டு,
த்திரிகையாளர்கள் நீதிமன்
தனர். விசேடமாகக் கூறப்
-1982ஆம் ஆண்டு கால
டிமணியென்றால் தெரியா
யாத அளவுக்கு மிகவும்
இருந்தபடியால் , வழக்கு
பார்ப்பதற்காக நீதிமன்
ளை விட குட்டிமணியை
வந்தவர்களே அதிகம்.
தும் எதிர்த்தரப்பினரதும்
தங்களின் பின்னர் வழக்கு
திவைக்கப்பட்டது. தீர்ப்பு
ாளில் நீதிமன்றில் பெருந்தி
யாளர்கள் கூடியிருந்தனர்.
யக நீதிமன்ற இருக்கை
ும் குட்டிமணியை தான்
குற்றவாளியாகப் பார்க்
னாலும் சட்டத்தினால்
தப்பட்டவாறு தீர்ப்பு
டியது தனது கடமையெ
' என்றோ ஒருநாள் ஜனா
ணிக்கு மன்னிப்பு வழங்கு
னைக் கேள்வியுற்று தான்
வேன்' எனக் கூறி வரலாற்று
வாய்ந்த மரண தண்ட
1983ஆம் ஆண்டு பங்குனி
திகதி வழங்கினார்.
னத் தீர்ப்பு வழங்கப்பட்ட
குட்டிமணியிடம் , அவ
ச என்ன என்று வினவிய

தண்டனை நிறைவேற்றப்
னர் தயவு செய்து எனது
கற்றி கண்பார்வையற்ற
அவற்றை பொருத்துங்
சுதந்திர தமிழ் ஈழத்தைப்
துபோகலாம். எனினும்,
வது அதனைப் பார்க்கட்
தூக்கிலிடுவதன் மூலம்
க்கான குட்டிமணிகள் உரு
எனத் தெரிவித்தார். அந்த
ல் நீதிமன்றுக்கு வந்திருந்த
களில் கணிசமானவர்கள்
நீதிபதியின் தீர்ப்பையும்
இறுதி விருப்பத்தையும்
சி அடைந்தனர். பல பல்
ணவர்கள் கண்கலங்கினர்.
விசாரணையில் அரச தரப்
லிசிட்டர் ஜெனரல் சுனில்

டி சில்வாவும், கனிஷ்ட சட்டத்தரணிகளாக மொஹான் பீரிஸும் காந்திலால் குமாரசிறியும் ஆஜராகியிருந்தனர். இதில் விசேட அம்சம் யாதெனில் இந்த வழக்கை தாக்கல் செய்த சட்டமா அதிபர் சிவா பசுபதியைத் தொடர்ந்து இந்த வழக்கில் அரச தரப்பில் ஆஜராகிய சுனில் டி சில்வாவும் கனிஸ்ட சட்டத்தரணியாக ஆஜராகிய மொகான் பீரிசும் சட்டமா அதிபர்களாகப் பதவி வகித்து பின்னர் மொகான் பீரீஸ் பிரதம நீதியரசராக பதவி வகித்து ஓய்வு பெற்றுள்ளனர்.

இந்த வழக்கில் எதிரிகளாக பெயர் குறிப்பிடப்பட்ட செல்வராஜா யோகச்சந்திரன் (குட்டிமணி), ஜெகநாதன் ஜெகன் மற்றும் கறுப்பன் என்ற ஞானவேல் ஆகிய மூவர் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி முருகேசு சிவசிதம்பரம், நவரட்ணம் (கரிகாலன்), உருத்திரமூர்த்தி சிறிஸ்கந்தராஜா ஆகியோருடன் கனிஷ்ட சட்டத்தரணியாக ஆஜராகும் சந்தர்ப்பம் எனக்கும் கிடைத்தது.

## ஒற்றுமையாக மாட்டார்கள்

இவ்வழக்கு இடம்பெற்றுக் கொண்டிருந்த காலப் பகுதியில்தான் இந்தியாவின் தமிழகத்தில் உள்ள பாண்டி பஜாரில் புலிகளின் தலைவர் பிரபாகரனும், உமா மகேஸ்வரனும் துப்பாக்கியால் ஒருவரையொருவர் சுட்டுக் கொல்ல முயற்சித்ததைத் தொடர்ந்து பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்ற செய்தி சட்டத்தரணி நவரட்ணத்துக்கு வந்தது. அவ்வேளையில் சட்டத்தரணி நவரட்ணம் (கரிகாலன்) "போராட்டம் நடத்தும் பொடியங்கள் தாங்கள் ஒருநாளும் ஒற்றுமையாக மாட்டார்கள். ஆனால் இராணுவத்துடன் சேர்ந்தாலும் அதற்கு ஆச்சரியப்பட ஒன்றுமில்லை" என்றார். சட்டத்தரணி நவரட்ணத்தின் கணிப்பு பிற்காலங்களில் நிஜமானது.

## இனப்பற்றே துணை!

**கே: இந்த நாட்டில் பரபரப்பாகப் பேசப்பட்ட மிகமுக்கியமான பயங்கரவாதத் தடைச்சட்டம் அல்லது அவசரகாலச்சட்டம் ஆகியவற்றின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்காக நீங்கள் வாதாடியதால், உங்கள் மீது பிரயோகிக்கப்பட்ட அச்சுறுத்தல்களை எவ்வாறு எதிர்கொண்டீர்கள்?**

ப: ஓர் இனத்தின் விடுதலை என்று ஒரு தளம் உருவாகும் போது அதற்கு ஆதரவுக்குரல் கொடுப்போர் ,துணை நிற்போர், முழுமையாக ஈடுபடுவோர் என்றுபல்வேறுதரப்பினர் இருப்பார்கள். அவர்கள் அனைவருக்கும் எதிர்த்தரப்பிடமிருந்து அச்சுறுத்தல் வருவதென்பது சர்வசாதாரணமானது. அச்சுறுத்தல்களுக்கு முன்னுரிமை கொடுத்திருந்தால் 40 வருடங்களாக தலைநகரில் அரசியல் கைதிகளுக்காக வாதாடியிருக்கமுடியாது. நமக்குள் இருக்கும் இனப்பற்றின் வீரியத்தைப் பொறுத்தே அவற்றை எதிர்கொள்வதற்கான மனநிலையும் எமக்குக் கிடைக்கும். எத்தகைய அச்சுறுத்தல் வந்தாலும் அவற்றை என்னால் இலகுவாக எதிர்கொள்ள முடியுமாக இருந்தது. ஆனால் ஒரு சந்தர்ப்பத்திலேனும் என்னால் துவண்டு போகவோஅல்லது பின்வாங்கவோ தோன்றவில்லை. நாம் வெறும் கல்வி, அறிவுத்துறைசார்ந்து சட்ட ரீதியில் பாதிக்கப்பட்டவர்களுக்காக துணைநிற்கின்றோம் என்ற திருப்தி, அச்சுறுத்தலை பொருட்படுத்திட வைக்கவில்லை. அரசியல் கைதிகளுக்காக வாதாடிய சிரேஷ்ட சட்டத்தரணிகளான குமார் பொன்னம்பலம், நடராஜா ரவிராஜ் ஆகியோர் பட்டப்பகலில் சுட்டுக் கொல்லப்பட்டனர் அப்படித்தான் ஏதாவது நடந்திருந்தாலும் இனவிடுதலைக்காக எனது உயிரும் அர்ப்பணமாகி இருக்கும். அதுகூடப் பெருமைதானே?

## புனைவைக் கண்டுபிடிக்க வேண்டும்

**கே: பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தொடுக்கப்பட்ட முக்கி யமான வழக்குகளில் சவாலாக இருந்தவைகள் பற்றி?**

ப: எல்லா வழக்குகளுமே ஏதோவொரு வகையில் சவாலாகவே இருக்கும். வழக்கின் தன்மையைப் புரிந்துகொண்டு சமர்ப்பிக்கப்படும் சான்றுகளையும், சாட்சிகளையும் ஆதாரங்களையும் தெளிவாக உள்வாங்கிக் கொண்டால் வழக்கை எதிர்கொள்வது இலகுவாகிடும். வழக்கை எந்த இடத்தில் உடைப்பது என்பது மிகவும் முக்கியமானது. எல்லா வழக்குகளும் உண்மைக்குப் புறம்பான புனைதலை ஏதோவோர் அடிப்படையில் எங்காவது ஓர் இடத்தில் கொண்டிருக்கும். விடுதலைப் போர் என்ற விடயத்தில் ஓர் இனத்துக்கு எதிராக முன்னெடுக்கப்படும் அடக்குமுறையில் உண்மை குறைவாக இருக்கும் அல்லது அறவே இருக்காது. இந்த விடயத்தை சட்டரீதியில் புரிந்து கொண்டு வழக்கை எதிர்கொள்ள வேண்டும். அதைத்தான் நான் செய்தேன்.விடுதலைப்போர் சம்பந்தப்பட்ட தளத்தில் பயங்கரவாதப் பிரச்சினைகளுடன் அல்லது அவசரகால நிலையில் என் மக்களுக்கு எதிராகப் போடப்பட்ட வழக்குகளில் பெரும்பான்மையானவை சட்டரீதியில் வலுவானவையாக இருக்கவில்லை. அதை அரச அதிகாரமும் இராணுவ அதிகாரமும் புரிந்துகொள்ளவே இல்லை. பொய்யைத் தான் முன்கொண்டு செல்கின்றோம் என்ற நிலையில் முன்னேறிக்கொண்டிருக்கும் பொலிஸார் உண்மையைக் கொண்டு திருப்பியடிக்கப்படும்போது நிலைலைந்து போகின்றனர். அந்த இடத்தைக் குறிவைப்பதும் அடையாளப்படுத்திக் கொள்வதும் தான் சவால்மிக்கது.

## அரசியல்கைதிகளை விடுவிக்கும் எண்ணமில்லை

**கே: அரசியல் கைதிகள் என்று யாருமே இல்லை என முன்வைக்கப்படுகின்ற கருத்தோட்டத்தை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?**

ப: இந்த விடயத்தை இன்னும் இன்னும் சிக்கல் மிக்கதாகமாற்றி வாதப்பிரதிவாதமாக்கி செய்யப்படுகின்ற எல்லாச் செயற்பாடுகளுக்குப் பின்னாலும் இருக்கின்ற ஒரேயொரு தமிழர்களுக்கு அரசியல் கைதிகள் என்ற பரப்பினூடாகஎவ்வித தீர்வையும் கொடுப்பதற்கு எந்தவொரு அரசாங்கமும் இந்நாட்டில் தயாரில்லை என்பதேயாகும்.

அரசியல் கைதிகள் என்ற பதம் அரசாங்கத்தினாலோ. ஐக்கிய நாடுகள் அமைப்பினாலோ. அல்லது எந்த ஓர் அமைப்பினாலோ பாவிக்கப்படாத வார்த்தையாகும். கொள்கை ஆய்வு மையமும் சரி தமிழ் சிவில் சமூக அமையமும் சரி ஏன் அரசியல் கைதிகள் என்ற சொல்லாடலை பாவிக்கின்றார்கள் என்பதனை 2015 தமிழ் சிவில் சமூக அமையத்தினால் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையில் மேற்கோள் காட்டப்பட்டுள்ள "அரசியல் காரணங்களுக்காக ஆயுதம் ஏந்திப்போராடியவர்கள் என்ற காரணத்திற்காக கைது செய்யப்பட்ட அவர்களை நாங்கள் (தமிழ் சமூகம்) அரசி யல் கைதிகளாக கருதுகின்றோம். இதன் அடிப்படையில் அவர்கள் சாதாரண குற்ற வியல் கைதிகளிடமிருந்து வித்தியாசமாகப் பார்க்கப்படவேண்டியவர்கள்" என்ற கருத்து வெளிப்பாடு மூலம் உணர முடியும். இந்த வரைவிலக்கணம் சர்வதேச மன்னிப்புச் சபையால் அரசியல் கைதிகளுக்கு கொடுக்கப்பட்ட வரை விலக்கணத்திலிருந்து எடுக்கப்பட்டதாகும்.

இலங்கையில் அரசியல் கைதிகள் என்று யாரும் இல்லையெனவும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் அரசியல் நோக்கங்களுக்காகவே அரசியல் கைதிகள் என பெயரிடப்படுகின்றனர் எனவும் சில சிங்கள அரசியல்வாதிகள் மீள மீளவலியுறுத்திக் கூறுகின்றனர். ஆயுதம் ஏந்திப் போராடிய ஜே.வி.பியினர் சிறைகளில் அடைக்கப்பட்டபோது அவர்களை அரசியல் கைதிகளாக ஏற்ற பெரும்பான்மையின அரசியல்வாதிகள், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட தமிழர்களை அரசியல் கைதிகளாக ஏற்க மறுக்கின்றனர்.

இப்போதைய நீதியமைச்சர் அலிசப்ரியும் இதே பார்வையில் அரசியல் கைதிகள் என்று யாருமே சிறைகளில் இல்லையென்று அன்மையில் ஒரு நேர்காணலில் குறிப்பிட்டு இருந்தார். இது முற்றிலும் ஒரு பக்கப் பார்வை மட்டுமே. அரசாங்கத்திடம் இப்பிரச்சினைக்குத் தீர்வுவழங்கும் எண்ணப்பாடு இல்லை. அதனையே அவர்கள் இப்படி வெளிப்படுத்தி வருகின்றார்கள்.

**கே: சட்டத்துறைச் செயற்பாடுகளில் மனிதாபிமானமிக்க சமூகப்பற்றாளராகவே எப்போதும் உங்களை முன்னிறுத்தி வந்திருக்கின்றீர்கள். ஒரு சட்டத்தரணியால் எப்படி இதெல்லாம் முடிகின்றது?**

ப: **எனது சட்டத்துறை வாழ்க்கை 2021ம் ஆண்டு பங்குனி மாதம் 16 ஆம் திகதியோடு நான்கு தசாப்தங்களை தொடுகின்றது . இந்தக் கால கட்டம் சோகமும், வேதனையும் நிறைந்த அனுபங்களைக் கொண்டது. இந்த அனுபவங்களை முழுமையாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பது எனது அவா.**

(23ஆம் பக்கம் பார்க்க)

# விதானையார் வீட்டு முற்றம்



# தென்னம் தோப்புகளில் மண் ஈரத்தை பேணல்-2

○ வடகோவை வரதராஜன்

செல்லையரின் தென்னம்தோப்பில் சிங்கம் வீசுகத்தி கொண்டு புற்களை வெட்டிக்கொண்டிருந்தார்.
என்னைக் கண்டதும்
“வா! வா!, நல்லாய் களை மண்டிப்போட்டுது மோனை, அதுதான் சிங்கத்தை வரச்சொன்னனான், இது களை வெட்டுவிப்பம் எண்டு .” என்றார் செல்லையார் .
“ம்” என்றேன் நான்.
“ என்ன 'இம்' கொட்டுறாய் . களையளை வெட்டுறது பிழையே ?”
“களையள் எண்டால் அதுளைக் களையத்தான் வேணும் .ஆனால் மண்ஈரத்தை பாதுகாக்கிறதுக்கு தரையைமூடி சில பயிர்களை வளர்க்கிற ஒருமுறையும் இருக்கண்ணை” “ இதென்ன கோதாரி விழுந்த கதை பறையிறாய். பயிருக்கை ஆரெண்டாலும் களையை வளரவிடுவானோ”
“இது, களை இல்லையண்ணை. இதுவும் ஒருசில நோக்கங்களுக்காக வளர்க்கப்படுகின்ற பயிர்தான்”
“ ஒவ்வொருமுறை வரேக்கையும் ஒவ்வொரு பிரகண்டக் கதையோடைதான் வாறாய் . சரி அதைப் பற்றி சொல்லன் பாப்பம்”
“தென்னம்தோப்புகளில் மண் ஈரத்தை பாதுகாக்கிறதுக்காக சில அவரையினத் தாவரங்களை மூடுபயிராக வளர்கிற முறையொண்டு இருக்கண்ணை”
“ இது பயிரைப் பாதிக்காதோ?”
செல்லையர்
“ இந்த மூடுபயிர் வளர்க்கிற முறையை தென்னை, மா, பலா, முந்திரி போன்ற பெருமரங்கள் உள்ள தோட்டங்களில்தான் செய்யலாம். வாழை , மரக்கறி போன்ற பயிர்களுக்கு இதைச் செய்யக் கூடாது”
“ அதுதானே, பயிருக்குபோற பசளையளை எல்லாம் இந்தக்களையள் உறிஞ்சிப் போடுமெல்லோ?”
“ பெரும்தோட்டங்களில் இந்த மூடுபயிர்கள் மண்ணுக்கு பசளையைக் கொடுக்குதண்ணை”



9

“ உதென்ன படிச்ச விசரனாட்டம் பேய்க்கதை பறையிறாய்”
“ முழுக்கதையையும் கேட்டுட்டு விசரனோ இல்லையோ எண்டதைச் சொல்லுங்கோ”
“சரி கோவிக்காமல் சொல்லு .”
“நிலத்தை மூடி வளர்கிற இந்த மூடுதாவரங்களில் இருந்து சொரிகிற இலைகள் மண்ணுக்கு பசளையாகப் போகிறது. மற்றது இந்த மூடுதாவரங்கள் அவரையினத் தாவரங்கள் எண்டபடியால் , இவற்றின் வேர்முடிச்சுகளிலை இருக்கிற றைசோபியம் என்ற பக்ரீறியா , காத்திலை இருக்கிற நைதரசனை இழுத்து மண்ணுக்கு பசளையாய் சேர்க்குது.”
“ஓகோ! அப்பிடியே. மிச்சத்தையும் சொல்லு மோனை”
“ இந்த மூடுபயிர்கள் மண்ணை அடர்த்தியாக மூடி இருப்பதால் பெருமழையின் போது , இந்த பயிர்களின் மீது தான் விசையான மழைத்துளிகள் விழுந்து பின்பு மண்ணை அடையுது .இதாலை பசளையுள்ள மேல்மண் கழுவுப்படாமல் பாதுகாக்கப்படுது .”
“நீ சொல்லுறது உண்மைதான். கடும் மழையிலை மேல்மண் அரிச்சுக்கொண்டு போறதைப் பாத்திருக்கிறான்”
“ அது மட்டுமில்லை இவற்றின் வேர்கள் நெருக்கமான வலைப்பின்னலாக மண்ணை இறுக்கிப்பிடித்து வைத்திருப்பதாலும் மண்அரிப்பு தடைப்படுகிறது. அத்தோடை மண்ணில் சூரியஒளி நேரடியாக விழுந்து மண்வெப்பமாவதை தடுக்குது. இதாலை, மண்ணிலை , மண்புழுக்களின் செயற்பாடு அதிகரிப்பதோடு மண்ணில் நுண்ணுயிர் பெருக்கமும் அதிகரிக்கும்.”
“ ஊரிப்பட்ட விஷயங்கள் கிடக்குது”
“ இன்னும் கிடக்கண்ணை. இந்த மூடுபயிர்கள் அவரையினத் தாவரவகையைச் சேர்ந்தவை எண்தால், இவை எங்கடை கால்நடைகளுக்கு நல்ல புரதச் சத்துள்ள உணவாய் அமையுது” இதற்கிடையில் பர்வதம்மாமி சைக்கிளில் அரக்கப் பறக்க வந்து இறங்கினார் . சேலை தடுக்குப்படாமல் , சேலையை சேர்த்து காலில் போட்ட கிளிப்பை கழற்றியபடி
“விதானையார் வந்து கனநேரமாச்சோ?” என வினவினார் .
“தம்பி வந்து அரைமணித்தியாலத்துக்கு மேலையாச்சு. என்ரை மோட்டுக் கதையளைக் கேட்டுக் கொண்டு மூடுபயிர்கள் எண்டதைப் பற்றி ஒரு குட்டிப்பிரசங்கமே நடத்திப் போட்டு இருக்கிறான். சரி சரி , தேத்தண்ணியை வாத்து தம்பிக்குக் குடும். பாவம் பொடி இந்தவெய்யிலுக்கை காஞ்சு கறுத்துப்போய் வந்து , இஞ்சையும் என்னோடை கத்தி தொண்டைத்தண்ணி வத்திப்போய் நிக்குது ” என்று செல்லையார் ஒரு நளினம் வைத்தார் .
பர்வதம்மாமி சைக்கிளில் கொளுவியிருந்த கூடையில் இருந்து சில உருண்டைகளை எடுத்து செல்லையருக்கும் எனக்கும் சிங்கத்துக்கும் தந்தபடி,
“விதானையாருக்கு எண்டு ஸ்பெசலாய் செய்தனான்” என்று என்னைப் பார்த்து குறும்பாக சிரித்தார்.
அவித்த பனம்கிழங்கை நன்கு தும்புபோக வார்ந்து , அதனுடன் உப்பு , உள்ளி , மிளகு என்பவற்றை சரியான அளவுகளில் போட்டு உரலில் துவைத்து எடுத்த உருண்டை அது . மிளகின் உறைப்பும் , உள்ளியின் காரமும் , உப்பின் உவர்ப்பும் சேர்ந்து விநோத சுவை காட்டியது .
அதன் மேல் சூடான தேநீரைக் குடிக்க நாக்கின் தடிப்பு குறைந்து , சுவையரும்புகள் தூண்டப்பட்டது போன்ற ஒரு இனிய அனுபவம் கிடைத்தது . தேநீரைக் குடித்தபடி பெருவிரலை உயர்த்திக் காட்டி மாமியை பாராட்டினேன் .
மாமி வெட்கச் சிரிப்புச் சிரித்தார் .
“கள்ளுக்கு இந்த உருண்டை சரியான வெஞ்சனம் கண்டியோ” என்று செல்லையர் என்னைப் பார்த்து கண் சிமிட்ட , பார்வதம்மாமியின் அக்கினி பார்வையால் கண்களை கீழே தாழ்த்தியபடி
“ நீ மிச்சத்தை சொல்லப்பு” என்றார்.
“ இந்த மூடுபயிர்த் தாவரங்களை தெரிவு செய்யேக்கை நாங்கள் பின்வரும் அவதானங்களை கடைப்பிடிக்க வேண்டும்.

1. மூடுபயிர் அவரையினத் தாவரமாய் இருக்க வேண்டும் .
2. இதை எங்கடை கால்நடைகள் சாப்பிடக் கூடியதாய் இருக்கவேணும் .
3. நிழலைச் சகிச்சு வளரக்கூடியதாய் இருக்க வேணும் .
4. விரைவில் படர்ந்து வளர்ந்து நிலத்தை மூடவேணும்
5. பிரதான பயிருடன் நீருக்கும் பசளைக்கும் போட்டிபோடக்கூடாது .
6. கடும் வறட்சியின்போது காய்ந்தாலும் , முதல் மழையில் மீண்டும் துளிர்த்து தரையை மறுபடி மூடவேண்டும் .”

“ எவ்வளவு விசயங்கள் இருக்கு விதானையார் . அப்ப என்ன தாவரங்களை மூடுபயிராய் வளர்க்க வேணும் “ எனக்கேட்டார் பர்வதம்மாமி .
“ சென்றோ என்கிற ,சென்றோசீமா பியூபசன்ஸ் (Centrosema Pubescens) சிராட்றோ என்று அழைக்கப்படுகின்ற மகிறோபில்லியம் அட்றோபியூறம் Macro plilium atropurpureum ஆகிய தாவரங்களை எங்கடை உலர் வலயத்தில் மூடுபயிர்களாக வளர்க்கலாம் .”
“ மண் ஈரத்தை பாதுகாக்கிற நல்ல ஒரு முறையைத் தான் சொல்லி இருக்கிறாய் . நீ சொன்ன உந்தப் பயிர் விதைகளை எங்காவது வேண்டித்தா , நானும் போடுவம் . மூடுபயிர் வைச்சு தறையை மூடுறது பற்றி எல்லாம் சொல்லுறாய் .ஆனால் உன்ரை மேல் காணியை வெறும் தறையாய்த்தானே வைச்சிருக்கிறாய்” என்று செல்லையார் மீண்டும் தன் நளினத்தை தொடங்கினார் .


• சிறுகதை
• கவிதை
• கட்டுரை
• பத்தி எழுத்து
• ஓவியம்

நீங்களும் எழுதலாம்

உங்கள் படைப்புக்களும் சஞ்சீவியில் பிரசுரமாக வேண்டுமா?

எதுவானாலும் அனுப்பி வையுங்கள்.
தரமானவற்றை பிரசுரிக்க
சஞ்சீவி
காத்திருக்கிறது.

அனுப்ப வேண்டிய முகவரி:
உதயன் சஞ்சீவி
இல.361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
sanjeevi@uthayan.com

தொடர்புகளுக்கு
0773165555


# 26 யாழ்ப்பாணப் பதிப்புத்துறை 1990 - 1995

○ தில்லைநாதன் கோபிநாத்










1990களின் யாழ்ப்பாணத்தில் இயக்க வெளியீடுகள், இலக்கிய வெளியீடுகள், சமய வெளியீடுகள், மாணவருக்கான வெளியீடுகள் எனப் பல்வேறு வகையான நூல், இதழ் வெளியீடுகள் நடைபெற்று வந்தமையைக் கடந்த வாரங்களில் பார்த்தோம். இவற்றிலிருந்து சற்று வேறுபட்டு ஒரு தனிமனித முயற்சியாக அறநெறிக் கருத்துக்களை வெளியிட்டுப் பரவலாக மக்களுக்குக் கிடைக்கச் செய்யும் தனிமனித முயற்சியொன்றும் நடைபெற்று வந்தது. புலோலி மேற்கு பருத்தித்துறையிலிருந்து விநாயகர் தரும நிதியம் மூலமாக அதன் நிறுவுனர் ஆ. சி. முருகுப்பிள்ளை அவர்களே இப்பணியை மேற்கொண்டவர் ஆவார்.

ஆ. சி. முருகுப்பிள்ளை வடமராட்சியின் வியாபாரி மூலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். விநாயகர் அரிசி ஆலை போன்ற தொழில் நிறுவனங்களை நடத்தி வந்தவர். தனது வருமானத்தைத் தரும காரியங்களில் செலவழிக்கவென 1990 ஜூலையில் அவர் உருவாக்கிய அறக்கட்டளையே விநாயகர் தரும நிதியம் என்பதாகும்.

இந்தத் தரும நிதியம் மூலம் ஊனமுற்றோர், இடம்பெயர்ந்தோருக்கான மாதாந்த உதவி, முதியோர்களுக்கான அரிசி விநியோகம், வாசிகசாலைகள் போன்ற சமூக நிறுவனங்களுக்கான நிதியுதவிகள், பாடசாலைகளுக்கான நிதியுதவி, பல்கலைக்கழகப் பரிசு நிதியப் பங்களிப்பு, அறநெறித் தேர்வு வைத்துப் பரிசுகள் எனப் பல்வேறு சமூகப் பணிகளை ஆற்றி வந்தார். இவை தவிர அவரது மிகப் பெரிய சமூகப் பங்களிப்பெனகொள்ளத் தக்கது. பெருமளவு நூல்களையும் சஞ்சிகைகளையும் வெளியிட்டு இலவசமாக விநியோகித்து வந்தமை ஆகும்.

விநாயகர் தரும நிதியத்தின் ஆரம்ப வெளியீடுகள் பெரும்பாலும் முருகுப்பிள்ளை எழுதிய சிறு நூல்களாகவே அமைந்தன. அறநெறி, ஞான வாழ்வு, உடல்நல வாழ்வு, மூலிகை மருத்துவம் போன்ற விடயப் பரப்புக்களில் அவரது எழுத்துக்கள் அமைந்தன. ஒவ்வொரு வெளியீடும் பல்லாயிரக்கணக்கான பிரதிகள் அச்சிடப்பட்டதுடன் ஒன்றுக்கு மேற்பட்ட பதிப்புக்கள் வெளியிடப்பட்டு இலவசமாக விநியோகிக்கப்பட்டன. "சாதி சமய இன வேற்றுமையற்ற பொது நிறுவனங்களுக்கான இலவச வெளியீடு" எனக் குறிப்பிடப்பட்டு இந்த நூல்கள் அமைந்தன. வடமொழிச் சொற்களுக்குப் பதிலான தமிழ்ச்சொற்களின் பட்டியல்களும் இந்த நூல்களில் இடம்பெற்றன. முருகுப்பிள்ளையின் சமூகப் பார்வை தொடர்பான பதிவுகளாகவும் இவை அமைந்தன..

நிறுவுனரின் நூல்களைத் தவிர ஏனைய எழுத்தாளர்களின் நூல்கள், மறுபதிப்புக்களையும் விநாயகர் தரும நிதியம் வெளியிட்டது. பா. தனபாலைனின் அறிவியல் சிந்தனை அலைகள், கழகத் தமிழ் அகராதியைத் தழுவி வெளியான அறத்தமிழ் அகராதி, ஔவையாரின் நல்வழி உள்ளிட்ட நீதி நூல்களைக் கொண்ட அறநெறி மணிகள் போன்ற நூல்கள் இத்தகையவை ஆகும்.

நூல் வெளியீடுகள் தவிர அறத் தமிழ் ஞானம், அறம் வளர் இளந்தமிழ் ஆகிய இரண்டு சஞ்சிகைகளையும் விநாயகர் தரும நிதியம் வெளியிட்டது. மாதாந்த ஆத்ம சிந்தனைச் சஞ்சிகையான அறத்தமிழ் ஞானத்தின் முதலாவது இதழ் 1992 தை மாதத்தில் வெளியானது. நிறுவனரின் சிந்தனைத் தொகுப்புகளும் பிற ஆக்கங்களும் எனக் குறிப்பிடப்பட்டு வெளியான இச்சஞ்சிகையில் அறநெறிக் கருத்துக்கள், சமயச் சிந்தனைகள், பொது அறிவுத் தகவல்கள் உள்ளிட்ட பலதரப்பட்ட ஆக்கங்கள் வெளியாகின. விநாயகர் தரும நிதியத்தின் சமூகப் பணிகள், கணக்கு வழக்கு விபரங்கள் ஆகியனவும் இச்சஞ்சிகையில் தொடர்ச்சியாகப் பதிவாகியுள்ளன.

விநாயகர் தரும நிதியத்தின் சிறுவர்களுக்கான சஞ்சிகையே அறம் வளர் இளந் தமிழ் ஆகு. இந்தச் சஞ்சிகையின் முதலாவது இதழ் 1992 ஆடி மாதத்தில் வெளியானது. காலாண்டு இதழாக மலர்ந்த இச்சஞ்சிகை சிறுவர்களுக்கான அறநெறிக் கட்டுரைகள், நீதிக் கதைகள், சிறுவர் கவிதைகள், கேள்வி பதில்கள் போன்றவற்றை உள்ளடக்கியிருந்தது. மாணவர்களுக்கான போட்டிகள் நடத்தப்பட்டுப் பரிசுகளும் வழங் கப்பட்டன. அத்துடன் மாணவர்களது ஆக்கங்களும் இச்சஞ்சிகையில் பிரசுரமாகின.

விநாயகர் தரும நிதிய வெளியீடுகள் இலவச வெளியீடுகளாக அமைந்தமையாலும் ஆயிரக்கணக்கான பிரதிகள் அச்சடிக்கப்பட்டமையாலும் பெருமளவு வாசகர்களைச் சென்றடைந்தன. 1990களின் யாழ்ப்பாணத்தில் அறநெறிக் கருத்துக்களை மிக அதிக வாசகர்களிடம் கொண்டு போய்ச் சேர்த்த பணியாக அது அமைந்தது என்றால் மிகையாகாது.



# மணிக்கதை

○ மௌனா




குருஜி நீண்ட நேர நிஷ்டை நிலையில் இருந்து மீண்டு எதிரே அவரது ஞானப் பார்வைக்காகக் காத்திருந்த சீடர்களை ஒரு கணம் உற்று நோக்கினார். அவர் அன்றைய தினம் தமக்கு எத்தகைய அருளுபதேசம் செய்யப் போகிறார் என அவர்கள் ஆவலாயிருந்தனர்.

அடர் தாடி மீசையுள் புதையுண்டிருந்த அவரது உதடுகள் பிரிய, வார்த்தைகள் வெளிவந்தன.

"உலகின் எல்லா சுதந்திர உயிர்ப்புகளுக்கும் பின்னால் ஏதோ ஒரு, ஜீவரகசியம் மறைந்தே உள்ளது. காரணமில்லாமல் காரியங்கள் எதுவும் நடப்பதில்லை. காரணமோ, காரணியோ மூன்று வகைப்படும். நிமித்த காரணி, முதற் காரணி மற்றும் துணைக் காரணி என்பனவே அவை. நிமித்தம் என்பது ஒரு படைப்புக்கான படைப்புச் சக்தி மூலத்தின் ஆத்ம உந்துதல், இரண்டாவதான முதற் காரணி என்பது அந்தப் படைப்புக்கான பிரபஞ்சத் தேவையின் அவசியம், மூன்றாவதான துணைக் காரணம் என்பது அந்தப் படைப்பு ஊழியத்தை செய்ய நியமிக்கப்பட்ட ஆளுமை ஆற்றல் மிகு பிரமை... புரிகிறதா?"

குருஜியின் முகத்தில் வினாவுக்கான விடை தேடும் அசைவு தெரிந்தது. சீடர்களிடையே மௌனம். புரிதலின் வெளிப்பாடோ புரியாமையின் பிரதிபலிப்போ தெரியவில்லை. குருஜியின் குறுநகையை அடர் தாடி மீசை மறைத்தது. ஒருவன் கேட்டான் "சுதந்திர உயிர்ப்பு என்று சொல்லி ஏதும் இருக்கிறதா குருவே... எல்லா ஜடமுமே உயிர்ப்பு நிலை அடைந்தவுடன் சுயத்தை, சுதந்திரத்தை இழந்து விடுகின்றனவே.. பின்னர் நிமித்தமுதல் மற்றும் துணைக் காரணங்களால் என்ன அர்த்தம் நிகழப் போகிறதாம்?"

குரு. கேட்டவனை உற்றுப் பார்த்தார். ஒரு கணம் கண்ணை மூடி மௌனித்தார். பின் சொன்னார்...

"நான் எல்லாவற்றுக்குமான படைப்பு மூல காரண காரணிகளின் அர்த்தம் தேடியே இதுநாள்வரை அலைந்தேன்... நீங்கள் எல்லாவற்றுக்கும் முடிவான அர்த்தத்தை அறிதல் சாத்தியமற்ற ஞானத் தேடல் என்பதை உணர்த்தி விட்டீர்கள்...." குருஜி மீண்டும் வானம் பார்த்தவராக மௌனித்திருந்தார். பின் எழுந்தார் சொன்னார்.

"எந்தப் படைப்பும் முழுமையற்றதாக படைப்பின் காரண கர்த்தாக்களுக்கு இருப்பதால் தான்... அதாவது திருப்தியின்மை தான் புதிய படைப்புகளுக்கான காரணிகளாகின்றன. எந்த ஒரு தத்துவமும் ஒரு அர்த்தம் தேடும் முடிவிலிப்பயணமாகவே இருக்கும். அதுவே அனைத்து சுதந்திர உயிர்ப்புகளுக்கும் காரணமும் காரணியுமாகும்"

குரு ஒரு திக்கில் நடக்கலானார்.... சீடர்கள் வேறு வேறு திக்குகளில் நடக்கலாயினர் தமது பயணத்துக்கான காரணம் புரியாமலேயே...!

# II குழைக்காட்டு கதைகள்

கோகுலராகவன்



கனகரத்தினம் என்கின்ற கனகண்ணை கூத்தாடுபவர். காத்தவராயன், சத்தியவான்-சாவித்திரி, அல்லி -அர்ச்சுனா என பலவிதமான கூத்துக்களிம் ஆடி இருக்கின்றார். இடைசுகம் கூத்து பழக்குவதிலும் ஈடுபட்டிருகின்றார். இதனால் அவருக்கு கலைஞர் என்ற மதிப்பு ஊருக்குள் இருந்தது.

தேவாரம், புராணம் படிப்பதிலும் அவருக்கிருந்த ஈடுபாடு கண்டு ஆள் பக்தி சிரத்தையான மனிதர் என்றால் எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள்.

ஒருமுறை வன்னிப் பக்கமாக (உடையார்கட்டு அல்லது விசுவமடுவாக இருக்கலாம்) கனகண்ணையின் உறவினர் முறையான ஒருவர் தங்கள் கோயில் திருவிழாவுக்கு நிகழ்ச்சிகள் நடத்த விரும்பினார். வில்லுப்பாட்டு ஒழுங்குசெய்ய நினைத்து இரண்டு மூன்று குழுவிடம்சென்றுபார்த்தார். ஆனால்அன்றைய தினம் அவர்களுக்கு ஏற்கனவே வேறு இடங்களில் நிகழ்ச்சிகள் இருந்ததால் அவர்கள் மறுத்துவிட்டனர்.

தற்செயலாக பஸ்ஸில் கனகண்ணையை சந்தித்தார். வில்லுப்பாட்டு பிடிக்க முயவில்லை என்று வருத்தம் தெரிவித்தார். "அண்ணை நீங்கள் நல்லாய் கூத்தாடுவியள். ஒருக்கா வில்லுப்பாட்டு செய்யுங்கோவன்"

"நானோ ?வில்லுப்பாட்டோ,? விசர்க்கதை பறையாதை"

"இல்லை அண்ணை பழகிப் பாருங்கோ"

"போடப்பா, போய் வேற வேலையைப் பார்"

"அண்ணை பிடியுங்கோ, இந்தாங்கோ நூற்றிஒரு ரூபா அச்சவாரம். அடுத்த மாதம் எங்கடை கோயில் திருவிழாவிலை வில்லுப்பாட்டு நீங்கள்தான்" என்று கண்டிப்பாக சொல்லிவிட்டு போய்விட்டார் அந்த உறவினர். கனகண்ணைக்கு சரியான குழப்பம்.

"'என்னடா இவன் இப்பிடிச் சொல்லிப் போட்டான். சரி பழகிப் பாப்பம்"

தன்னோடு நாலைந்துபேரைச் சேர்த்துக் கொண்டார். சத்தியவான் சாவித்திரி கதையை தேர்வு செய்து கொண்டார். வில்லும் அதற்கேற்ப பானையும் செய்து கொண்டார்கள்.

கிட்டத்தட்ட பதினைந்து இருபது தடவை ஒத்திகை பார்த்ததும் ஒரு நம்பிக்கை வந்தது. வடிவாகச் செய்யலாம் என்று நினைத்துக் கொண்டார்கள்.

வீட்டிலிருந்தவர்களும் நன்றாக இருக்கின்றது என்று நம்பிக்கை ஊட்டினார்கள்.

திருவிழா நாளும் வந்தது. கோயிலுக்கு போக மார்க்கண்டரின் 'ஏ40 ' காரை ஒழுங்கு செய்து கொண்டார்கள். வில்லிசைக் குழுவுக்கு பெயர் வேண்டுமே. "கலைமணி வில்லிசைக்குழு" என்று பெயரும் வைத்தாயிற்று.

கலைமணி வில்லிசைக்குழு கோயிலடிக்கு 3 மணிக்கு வந்து சேர்ந்துவிட்டது. முன்னதாக இரண்டு செற் மேளம் வாசித்து முடிய சரியாக பன்னி ரெண்டு மணிக்கு மேடை ஏற வேண்டும். கனகண்ணைக்கு கொஞ்சம் பதற்றம் வரத் தொடங்கியது.

ஒளித்துப் போய் குளக்கட்டுப் பக்கமாக ஒரு 'மண்டான்' சுருட்டை பற்ற வைத்துக் கொண்டார். கொஞ்சம் பதற்றம் குறைந்திருந்தது.

மேடை ஏறினார்கள். கோயில் கொஞ்சம் பிரபல்யமான கோயில். ஆயிரம் பேர் வரையில் வந்திருந்தார்கள். சனத்தைப் பார்த்ததும் கனகண்ணைக்கு மீண்டும் நடுக்கம் பிடித்துக் கொண்டது. சரி ஏறியாயிற்று இனியென்ன பாடுவோம்.

"தந்த னத்தோம் என்று சொல்லியே
வில்லினில் பாட..."

என்று தொடங்கினார். ஆனால் அதற்கு அப்பால் ஒரு வரியும் ஞாபகம் வரவேயில்லை. ஆர்மோனியக்காரர் 'சரிகமபதனிஸ' என்பதைத் தாண்டவில்லை, மிருதங்கம் வாசித்தவர் 'டொன் டக்கு டொன் டக்கு" என்பதைத் தவிர ஏதும் வாசிக்கவில்லை. கட்டம் சரியில்லை. இதற்கு மேலும் ஏதும் நகரவில்லை. ரசிகர்கள் குழம்பத் தொடங்கினார்கள். சும்மா இருப்பார்களா?

முதற் கல் வந்து கனகண்ணையின் மண்டையைப் பதம் பார்த்தது. இரண்டாவது, மூன்றாவது , நான்காவது என, கல் மழை பொழிந்தது.

எடுத்தார்கள் ஓட்டம். இவர்களின் போதாத காலம்.. காரும் ஸ்ராட் ஆகவில்லை.ஒரு மாதிரி அதைத் தள்ளித் தள்ளி , ஸ்ரார்ட் ஆக்கி,

பரந்தன் சந்தியில் நின்றுதான் திரும்பிப் பார்த்தார்கள்.

அதன் பின்னர் கனகண்ணை அடிக்கடி சொல்வார்,

"எறிஞ்சான் ஒரு எறி.
என்ரை மண்டையில் வந்து டொல் எண்டது"

# சொற்சிலம்பம் போட்டி 38

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ | 5 | | 6 |
| 7 | | | | 8 | | ■ | |
| 9 | | ■ | 10 | | ■ | 11 | |
| ■ | 12 | 13 | | ■ | 14 | | ■ |
| 15 | | | ■ | 16 | | | 17 |
| 18 | | ■ | 19 | | ■ | 20 | |
| | ■ | 21 | | | 22 | ■ | |
| 23 | | | ■ | 24 | | | |

அனுப்புபவர் பெயர்:........................................

முழுமையான தபால் விலாசம்: ............................

..............................................................

கையொப்பம்:................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. இரவு முழுவதும் முழு இருட்டு நாள் 5.வாகனம்/ வண்டி/ பயணக்கலம் 7. மிகக் கெட்டித்தனம் மிக்கவன் 9. உண்ணுமாறான ஏவல் 10. முகத்தில் இயற்கையாக இது வளரும் 11. நீரோட்டத்தைத் தடுக்கக் கட்டப்படுவது 12. அருளாளன்/ மகிமை மிக்கவர் 14. வேகம் 15. கூரையின் உச்சி 16. பத்துக்களின் எட்டுத் தடவைகளின் கூட்டுத்தொகை 18. இது உட்சென்றால் போதை தலைக்கேறும் 19. ஓரணியை இப்படியும் கூறுவர் 20. மூன்று என்பதைக் குறிக்கும் ஒத்த சொல். 21. வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிப்பவர் 23. முறையீடு 24. முழுமையின் பகுதி

## மேலிருந்து கீழ்

1. அயர்ச்சியால் ஏற்படுவது 2. முறைப்பெண்/ மச்சாள் 3. கச்சை/ பட்டி 4. பேய்/ பிசாசு 5.இறைச்சி/ நிணநீர் 6. முற்காலத்தில் வீடுகளின் முற்புறத்தில் இது நிச்சயம் அமைந்திருக்கும் 8. கம்பு 11. தலைவன்/ செல்வத்துக்கு உரியவன் 13. வனம்/ வனாந்தரம் 14. விழி 15. முன்புறத் தோற்றம் 16. ஏழு தடவைகள் பத்துக்கள் சேர்ந்தால் 17. வேகம்/ விரைவு 19. உயரத்திலிருந்து பாயுமாறான ஏவல். 21. தண்ணீர் 22. வலிமையானது / பலமானது.

**சொற்சிலம்பம் போட்டி 36 க்கான விடைகள்**

**இடமிருந்து வலம்**

1.குத்துமதிப்பு, 6.வதம், 7.ரவி, 9.குமர், 11.புகட்டு, 13.மறுப்பு, 15.தடு, 16.புத்தர், 20.திரு, 21.ஆம், 22.பாரதி, 24.மதிப்பு, 25.பாண்டவர், 26.புலி

**மேலிருந்து கீழ்**

1.குங்குமம், 2.துவர்ப்பு, 3.மத, 4.திம்பு, 5.புரட்டு, 8.விடு, 10.மறு, 12.கதர், 14.புத்தி, 17.தருமர், 18. அம்புலி 19.முரண், 21.ஆப்பு, 22.பாபா, 23.திட

**சொற்சிலம்பம் போட்டி இல.38**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு
**20.03.2021 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக** தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

## போட்டி இலக்கம் 36 இல் வெற்றி பெற்றோர்

**1 ஆம் பரிசு**
**ம.மே.ஹெற்றீஷியா**
இல.1625, இரத்தினபுரம்,
கிளிநொச்சி.

**2 ஆம் பரிசு**
**க.மதியழகன்**
குலனையூர், அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

**3 ஆம் பரிசு**
**மங்களம் மனோரஞ்சன்**
இல.69 வட்டை விதானை வீதி,
கல்முனை 02.

**4 ஆம் பரிசு**
**ர.சாகித்தியன்**
தரம் 10, ஸ்ரான்லி கல்லூரி,
யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**
**ரதி.சிவசீலன்**
நீர்வேலி வடக்கு, நீர்வேலி

# எப்ப வருவாரோ...?



ரகுபதி சர்மாவின் மனைவி

பொ.சோபிகா



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மீது கடந்த 1999 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டு தாக்கு தல் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்துதடுத்து வைக்கப்பட்டு 15 வருடங்களின் பின்பு நீதிமன்றத்தால் நிரபராதி என விடுவிக்கப்பட்டவர் வசந்தி. அதே சம்பவத்துக்காக கைது செய்யப்பட்ட அவரது கணவர் இரகுபதி சர்மா தற்போதும் சிறையில் தண்டனை அனுபவித்து வருகிறார்.

மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விசாரணை தொடங்கப்பட்டதன் பின்பு ஒருகட்டத்தில் இரகுபதி சர்மாவுக்கான சட்ட ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்கு கூட 15 மாதங்கள் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விசித்திரம் இவர்களுக்கு எதிரான வழக்கில் இடம் பெற்றது. இந்த அடிப்படை உரிமை மீறலுக்கு எவரிடம் எப்போது நீதி, நியாயம் கேட்பது ?

தனக்கான நீதி மறுக்கப்பட்டுக் கொண்டேயிருந்தாலும், இரகுபதி சர்மா தளரவில்லை. சிறைக்குள் இருந்தபடியே தனக்கான நீதிக்காக முயன்று கொண்டேயிருக்கிறார். சிறைப்பறவையாக இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக இருளிலேயே இருக்கும் இரகுபதி சர்மாவின் துன்பியல் பக்கங்களை ,அவரின் மனைவியான வசந்தி , ரகுபதி சர்மாவுடன் கூடவே சக கைதியாக இருந்த மு.கோமகனிடம் சொல்லி தன் மனப்பாரத்தை இறக்கி வைக்க முயன்றிருக்கிறார். அவர் நீதிமன்ற வழக்குகளுக்காக வரும் போது விபரித்தவற்றை 'உதயன் சஞ்சீவி' ஊடாக வாசகர்களிடம் பகிர்ந்து கொள்ள கோமகன் முனைகின்றார். அதாவது அவரிடம் வசந்தி ரகுபதி சர்மா சொல்வது போலவே ( அவரின் நிலையில் நின்று) சம்பவங்கள் இங்கே விபரிக்கப்படுகின்றன.

எனது கணவராகிய சந்திராஜயர் இரகுபதி சர்மா மற்றும் மூன்று சிறுபிள்ளைகளுடன் எமது பூர்வீக பூமியான யாழ். குடாநாட்டில் இருந்து சூரியகதிர் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்தோம். சொத்து, சுகம் என அனைத்தையும் இழந்து, படகேறி கிளாலி கடல் நீரேரி வழியாக கிளிநொச்சியை வந்தடைந்தோம். அங்கிருந்து பெரும் பாடுபட்டு வவுனியா வந்து 1996 இல் தலைநகர் கொழும்பில் தஞ்சமடைந்தோம். இந் நிலையில் , எனது கணவர் கொழும்பு புளுமென்டல் வீதியில் உள்ள சிறி முனியப்பர் சுவாமி மகா காளியம்மன் கோவிலில் பணியிாற்றியதன் மூலம் எமது அன்றாட வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது. தவிர உள நெருக்கீட்டினால் பாதிக்கப்பட்டிருந்த எனக்கான சிகிச்சையையும், பிள்ளைகளது கல்வி நடவடிக்கைகளையும் அவரே கவனித்துக்கொண்டார். இப்படி ஓரளவு சுமுகமாக வாழ் நாட்கள் கழிந்து கொண்டிருக்கும் போது, 1999 ஆம் ஆண்டு அந்தச் சம்பவம் இடம்பெற்றது.

## கைது செய்யப்பட்டார்

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, தேர்தல் பரப்புரை மேடையில் உரையாற்றிக் கொண்டிருந்த சமயம் அவரை இலக்கு வைத்து தற்கொலை குண்டுதாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது. அதற்கடுத்து என்ன நடக்கப்போகிறது என்பதை ஊகித்துக் கொண்ட தலைநகர் வாழ் தமிழர்கள் , தங்களுக்கு என்ன நடக்குமோ என்று அஞ்சினர்.

2000 ஆம் ஆண்டு மாசி 09 ஆம் திகதி வழமைபோல எனது கணவர் ஆலயப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்தார். அப்போது திடீரென ஆலய வளாகத்துக்குள் ஆயுதங்களுடன் நுழைந்த குற்றப் புலனாய்வு பிரிவினர்,குறித்த வெடிப்புச் சம்பவம் தொடர்பில் அவரைக் கைது செய்து 4 ஆம் மாடிக்கு கொண்டு சென்றனர். அதேபோன்று 2 வாரங்கள் கடந்த பின்பு வீட்டில் இருந்த என்னையும் 2 பிள்ளைகளையும் கைது செய்து 4 ஆம் மாடிக்குகொண்டு சென்றனர். அப்போது, எனது மகள் 2 ஆம் தரத்திலும் மகன் பாலர் வகுப்பிலும் படித்துக் கொண்டிருந்தனர். மூத்தமகன் குருத்துவக்கல்விக்காக அயல் தேசம் சென்றிருந்தார்.

## அநாதரவான பிள்ளைகள்

எங்களது பிஞ்சுக் குழந்தைகள் இரண்டும் சுமார் 3 மாதகாலம் படிப்பை தொலைத்து 4 ஆம் மாடியில் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் எனது தாயாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். தொடர்ந்து பிள்ளைகள் இருவரையும் பொறுப்பாக வைத்து பராமரிக்க யாரும் அற்ற நிலை ஏற்பட்டது. அப்போது நலன் விரும்பி ஒருவர் முன்வந்து அநாதரவாக நின்ற பிள்ளைகளை மட்டக்களப்பில் உள்ள ராமகிருஷ்ணமிஷன் ஆச்சிரமத்தில் சேர்த்துவிட்டார்.

4 ஆம் மாடி விசாரணை காலத்தின் போது,நாம் ஒரு பிராமண இந்து மத குரு குடும்பம் என்றோ அதிலும் அதிலும் நான் மனநிலை பாதிக்கப்பட்டவள் என்றோ கருதி குறைந்தளவிலானதொரு மனிதாபிமானத்தை கூட, அவர்கள் காட்டவில்லை. நானும் கணவரும் உடல் ,உள ரீதியில் வார்த்தைகளுக்கு அப்பாலான வரைமுறையற்ற வதை ,வலிகளை சந்தித்தாக வேண்டியிருந்தது. அந்த ஆண்டு ஆனி மாதம் 27 ஆம் திகதியான போது என்னை கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்து வெலிக்கடை பெண்கள் சிறைச்சாலையில் விளக்கமறியில் வைத்தனர். அவ்வாறே கணவரை புரட்டாதி 18 ஆம் நாள் மன்றில் முன்னிலைப்படுத்தி விளக்கமறியிலுக்காக களுத்துறை சிறைக்கு அனுப்பினர். அதன் பிறகு பூசா தடுப்புமுகாம், கொழும்பு விளக்கமறியில் சிறை என அவர் அங்குமிங்கும் மாற்றப்பட்டார்.

## 300 வருடச் சிறைத்தண்டனை

இவ்வாறு இருக்கும் போது,எம் இருவரையும் மேலதிக விசாரணை என்ற பெயரில் மீண்டும் பல தடவைகள் 4 ஆம் மாடிக்கு கொண்டு சென்று வெறுக்கத்தக்கவாறு கையாண்டனர். பின்னர் இந்தச் சம்பவம் தொடர்பில் சிறை அதிகாரிகளால் நீதிமன்றிலும் அறியக்கையிடப்பட்டது. சிங்கள மொழியினால் எழுதி நிரப்பப்பட்ட நூற்றுக்கணக்கான தாள்களில் பலவந்தமாக கையொப்பங்களை பெற்றுக்கொண்டனர். கடைசியில் அவற்றை அடிப்படையாக வைத்து குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றைத் தயார் செய்து எம்மிருவருக்கும் எதிராக 2002.05.31 அன்று கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வெடிப்பு சம்பவத்தின் குண்டுதாரியான பெண்ணுக்கு தற்கொலை தாக்குதல் அங்கியை நான் அணிவித்ததாகவும்,அதற்கு எனது கணவர் உடந்தையாகச் செயற்பட்டதாகவும் எமக்கு எதிராக குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

வழக்கு விசாரணையின் போது உள நலபாதிப்புக்காக நான் சிறை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்ததற்கான சான்றாதாரங்களை சமர்ப்பித்த போதிலும், நீதிமன்றம் எனக்கு பிணை வழங்கி பிள்ளைகளுடன் சேர்த்து வைக்கவில்லை. மாறாக தொடர்ந்து 15 வருடங்கள் எம்மை விளக்கமறியலில் வைத்துக்கொண்டு வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்தன.

குறித்த விசாரணை முடிவில் , 2015 புரட்டாதி 30 ஆம் திகதி எனக்கெதிராக சட்டமா அதிபரினால் சுமத்தப்பட்ட சகல குற்றச்சாட்டுக்களையும் நிராகரித்த நீதிமன்றம் என்னை நிரப்ராதி என விடுதலை செய்தது.

இங்கு கவலைக்குரிய விடயம் என்னவென்றால் என்னை விடுதலை செய்து தீர்ப்பளித்த நீதிமன்றம் எனது கணவருக்கு 30 ஆண்டுகளில் அனுபவிக்கத் தக்கதான 300 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை தீர்ப்பை வழங்கி விட்டது. ஒருபுறம் நாம் பெற்றெடுத்த பிஞ்சு குழந்தைகளை பரிதவிக்க விட்டுவிட்டு 15 வருடங்கள் சிறையில் இருந்த இருண்ட யுகம் முடிவுக்கு வந்துவிட்டதை நினைத்து மகிழ்வதா? அல்லது கணவருக்கு 300 வருடச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டதை நினைத்துக் கவலைப் படுவதா..?என்று இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவித்தேன்.ஆகையினால் கணவருக்கு வழங்கப்பட்ட தண்டனை தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீட்டு நீதிமன்றில் மேல் முறையீடு செய்தேன்.

### நோயால் பாதிப்பு

எமது வழக்கினுடைய தீர்ப்பு வெளியானதை அடுத்து மூத்த ஊடகவியலாளரும் 'ராவய'பத்திரிகையின் பிரதம ஆசிரியரான விக்டர் ஐவன் , 'ஐவன் எழுப்பும் ஐயங்களும் ஐயர் பெற்ற தண்டனையும் 'என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையின் மொழிபெயர்ப்பு 2015.11.13 வெள்ளிக்கிழமை உதயன் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது. இந்தக் கட்டுரை பல பரம இரகசியங்களை போட்டுடைத்துள்ளதாகவே பலரும் கருத்து வெளியிட்டிருந்தனர். கடந்த 21 வருடங்களாக கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரகுபதி சர்மா நீண்ட நாட்களாக நீரிழிவு. இரத்த அழுத்தம். மூட்டு வலி போன்றவற்றால் பாதிக்கப்பட்டு போதிய சிக்கிச்சையோ போசாக்கான உணவோ இன்றி கஷ்டப்படுகிறார். அதுதவிர, தடுப்புகாவல் விசாரணைக் காலத்தின் போது உண்மை அறிதல் என்ற பாங்கில் விசாரணையாளர்களால் புரியப்பட்ட வன்முறைகளின் தாக்கம் தற்போது வரை அவரின் தேகமெங்கும் பிரதிபலித்துக் கொண்டிருக்கிறது.

## வழி திறக்காதா?

இத்தனைக்கும் மத்தியில் ரகுபதி சர்மாவுக்கு அண்மையில் கொரோனா தொற்று ஏற்பட்டு அவரது கோலத்தையே மாற்றிவிட்டது. எனவே,நோயும் பாயுமாக சிறையில் வாடும் இவருக்கு இப்போதாவது நீதி நியாயம் கிடைக்க வேண்டும். எனதிந்தக் கருணை வேண்டுகை நாட்டின் தலைவரான ஜனாதிபதியின் மனதை தட்டி திறந்து மனிதாபிமான விடுதலைக்குவழி கோல வேண்டுகிறேன். சிறைச் சுவர்களுக்குள் அடைபட்டிருந்த போதிலும் தனது ஆன்மிகப் பணிகளை அவர் கைவிடவில்லை சிறைவளாகத்துக்குள் இருக்கும் இந்துக்கோவிலில் சமய விரதங்கள் ,பூஜை அனுட்டானங்களை முன்னின்று செய்து சக கைதிகளுக்கு இறைநம்பிக்கையையும் மன அமைதியையும் ஏற்படுத்தி வருகிறார். இந்த வருடம் சிவராத்திரியைக் கூட அவரே அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அனுசரணையோடு சிறப்பாக நடத்தி முடித்திருந்தார். எனது சொந்த தாய்நாட்டுக்குள்ளேயே எனது மொத்த குடும்பத்தினருக்கும் ஏற்படுத்தப்பட்டுள்ள நீதி மறுப்புகளுக்கு தகுந்த நியாயத்தை தேடுகிறேன். என் உள்ளக் குமுறலை கண்ணோக்கும் ,சட்டவாளர்களும் ,மனித உரிமை ஆர்வலர்களும் ,சமய சமூக அமைப்பினர்களும் ஆழ்ந்த கரிசனை கொள்ளவேண்டும். அதனூடாக எனது சிறைவாழ்வுக்கு முடிவு கிட்டி உருக்குலைந்து போய் கிடக்கின்ற எமது குடும்பத்தில் மறுபடியும் ஆனந்தம் துளிர்க்க வேண்டும்.

இதனை இறைவனின் பெயரால் கண்ணீ... கோரிக்கையாக முன்வைக்கிறேன். 'என்று ... யபடி, தன் கணவர் விடுதலையாகும் நாளை எதிர்... துக் காத்திருக்கிறார் ரகுபதி சர்மாவின் மனை...

● ஆரதி

# நெஞ்சம் மறப் லை






ரீமேக்' பாடல்களைப் போல பழைய படங்களின் பெயர்களில் புதிய படங்கள் வருகின்ற காலமிது. இப்படி வந்திருக்கும் இன்னொரு படமே நெஞ்சம் மறப்பதில்லை. 1963 இல் வந்த நெஞ்சம் மறப்பதில்லை படத்தை ஶ்ரீதர் இயக்கியிருந்தார். அதிலே கல்யாண்குமார், தேவிகா, நம்பியார், மனோரமா, நாகேஷ் நடித்திருந்தனர். நிறைவேறாக்காதல், மறுபிறப்பு போன்றவற்றை மையப்படுத்தி எடுக்கப்பட்ட படம் இது. இதில் வரும் "நெஞ்சம் மறப்பதில்லை..அது தன் நினைவை இழப்பதில்லை" என்ற பாடல் இன்றும் உச்சமே. கல்யாண்குமாரும் தேவிகாவும் உருகி உருகிப் பாடும் இந்தப் பாடலில் உருகாதவர்கள் இல்லை. அது விஸ்வநாதன் ராமமூர்த்தி இரட்டையர்கள் கொடிகட்டிப் பறந்த காலம். அதில் விளைந்த அற்புதப்பாடல் இது.

இப்பொழுது வந்திருக்கும் நெஞ்சம் மறப்பதில்லையில் எஸ்.ஜே.சூர்யா, நந்திதா தாஸ் நடித்திருக்கிறார்கள். செல்வராகவன் இயக்கியிருக்கிறார். யுவன் ஷங்கர்ராஜா இசை. இது ஒரு வகையில் பேய்ப்படம். மறுவிதத்தில் க்ரைம் படம் என்றும் சொல்லலாம். படத்தின் கதையை சுருக்கமாகச் சொல்வது என்றால், பணக்காரத் தம்பதிகளான எஸ்.ஜே.சூர்யா - நந்திதாஸ் வீட்டில் பணி செய்யவும் அவர்களுடைய பிள்ளையைப் பராமரிக்கவும் மரியம் என்ற இளம் பெண்ணொருவர் வருகிறார். அந்தப் பெண்ணை பலவந்தப் படுத்திக் கெடுத்துக் கொன்று விடுகிறார் சூர்யா. கொல்லப்பட்ட பெண், ஆவியாக, பேயாக வந்து சூர்யாவைப் பழிவாங்கத் துடிக்கிறார். இதற்குப் பிறகு என்னவெல்லாம் நடக்கின்றன என்று நீள்கிறது கதை.

இப்படிச் சொல்லும்போதே மீதியை நீங்கள் புரிந்து விடக் கூடும். வழமையான பேய்ப்படங்கள். அல்லது கொலையைத் துப்பறியும் கதை. அதன் இறுதி முடிவு என்பதெல்லாம் நீங்கள் யூகித்து விடக் கூடியவையே.

படத்தில் முக்கியமான இன்னொரு பாத்திரமாக இருப்பது ஒளிப்பதிவே. இந்த மாதிரிப் படங்களில் ஒளிப்பதிவில் வெளிப்படும் கோணங்களும் இருளும் ஒளியும் இணைந்த கலவையும் தனியொரு பாத்திரமாகி விடும். அதைச் செய்திருக்கிறார், அரவிந்த் கிருஸ்ணா. உண்மையில் பாராட்டும்படியாக - காட்சிப் புலத்தை மறக்கவே முடியாமல் உள்ளது ஒளிப்பதிவு.



இந்தப் படமும் வழமைகளின் வழித் தடத்திலேயே சென்று கொண்டிருக்கிறது. ஆனால், சிறிய வித்தியாசம், இதில் சூர்யாவின் பாத்திரமும் அந்தப் பாத்திரமாக மாறியிருக்கும் சூர்யாவும். ஆச்சரியமூட்டக் கூடிய வகையில் நடித்திருக்கிறார் சூர்யா. அதைப்போலப் பணிப்பெண்ணாக வரும் ரெஜினாவும் சிறப்பாகத் தன்னை வெளிப்படுத்தியிருக்கிறார். இங்கே அதிகமாகச் சோபிக்க மறுத்திருப்பது நந்திதா தாஸ்தான். இவ்வளவுக்கும் மிகத் திறமையான நடிகை அவர். அவர் ஓரளவுக்கு பின்பாதியில்தான் தன்னை வெளிப்படுத்தத் தொடங்குகிறார்.

அதற்கிடையில் படம் முடிந்து விடுகிறது. ஆனாலும் ஆற்றலும் திறனும் உள்ள நடிகை என்ற வகையில் பின்பாதியில் தவறிழைத்த கணவனைக் கையாளவும் ,கையாள முடியாமலும் தத்தளிப்பதிலே தன்னை வெளிப்படுத்துகிறார்.

படத்தில் முக்கியான இன்னொரு பாத்திரமாக இருப்பது ஒளிப்பதிவே. இந்த மாதிரிப் படங்களில் ஒளிப்பதி வில் வெளிப்படும் கோணங்களும் இருளும் ஒளியும் இணைந்த கலவையும் தனியொரு பாத்திரமாகி விடும். அதைச் செய்திருக்கிறார், அரவிந்த் கிருஸ்ணா. உண்மையில் பாராட்டும்படியாக - காட்சிப் புலத்தை மறக்கவே முடியாமல் உள்ளது ஒளிப்பதிவு. இதை தன்னுடைய வழமையான படங்களை விட்டு வித்தியசமாகக் காட்ட முற்படுகிறார் செல்வராகவன். ஆனால், அதில் அவர் வெற்றியடைந்திருக்கிறாரா என்றால் அது கேள்வியே! அதாவது நெஞ்சம் மறக்காமல் நெஞ்சம் மறப்பதில்லை இருக்குமா? என்று.

இந்தப்படம் இன்றைய சூழலில் ஐந்து ஆண்டுகள் வரையில் தயாரிப்பிலிருந்தது. இது இன்றைய நிலையில் ஆச்சரியமூட்டக்கூடியது.

இப்பொழுதெல்லாம் தயாரிப்புத் தொடங்கினால் அதிகபட்சம் ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குள்ளேயே படம் வெளிவந்து விடும். மற்றும்படி சாதாரணமாக ஆறு மாதங்கள் அல்லது ஓராண்டுக்குள் படம் வந்து வீடும். இது கால நீட்சியொன்றின் பிறகு வந்திருப்பது, இந்தப் படத்தில் நடித்துள்ளோருக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கும் தொழில் நுட்பம், காட்சிப்புலம் எல்லாவற்றுக்கும் இடையிலான வேறுபாடுகளை உணர்த்துகிறது. அதுவும் ஒரு வகையில் வேறான ஈர்ப்புக்குரிய ஒன்றே.


# விண்டோ சீற்



பஸ்ஸிலும் ரெயினிலும் யன்னலோர இருக்கைக்கு நம் உள்மனதில் ஒரு துடிப்பிருக்கும். அந்த இருக்கை, அந்த யன்னல் தருகின்ற காற்றும் ஒளியும் காட்சியும் அதற்கு அப்பால் வெளியுலகம் ஒன்று எப்போதும் நம்முடன் இணைந்திருக்கிறது என்ற உணர்வுத்துணையும் நமக்குப் பிடித்துப் போகிறது. நமக்கு வேண்டியதாகிறது. இது நாம் இருக்கின்ற வீட்டில் நம்முடைய அறையிலும் நம்மைக் கேட்கிறது. நம்முடன் இணைந்து கொள்கிறது. ஏறக்குறைய இதை இன்னொரு விதமாக உணர வைக்கிறது பரத்ராஜ் இயக்கிய "விண்டோ சீற்" என்ற படம். இது பத்துக்கும் மேற்பட்ட உலகத்திரைப்பட விழாக்களில் பங்கேற்று பாராட்டுகளையும் விருதுகளையும் பெற்றிருக்கிறது.

தமிழில் இந்த மாதிரியான படங்களின் வருகை குறைவு. ஏற்கனவே வெற்றிமாறனின் "விசாரணை" ஒளிப்பதிவாளர் செழியனின் "டுலெட்" அருண் கார்த்திக் இயக்கிய "நஸீர்", தரணி ராஜேந்திரன் இயக்கிய "ஞானச்செருக்கு" மற்றும் கூழாங்கல், தேன் போன்ற படங்கள் வெளிப்பரப்பில் பெருங்கவனம் பெற்றிருக்கின்றன. இது விலகல் சினிமாக்களை அல்லது மறுதலைச் சினிமாக்களை விரும்புவோருக்கு மகிழ்ச்சியளிக்கும், நம்பிக்கை தரும் சங்கதி.

"விண்டோ சீற்" ஒரு வெற்றிச் சினிமாவாக மாறுவதற்குப் பார்வையாளர்களின் பங்களிப்பு, ஊக்கம், ஆதரவு தேவை. இது பண்பாட்டுச் சினிமாவுக்கான வாய்ப்பை அளிக்கும்.





# பாரதி: கவிதைகளும் நம்பிக்கைகளும்

○ தருமராசா அஜந்தகுமார்

தமிழ்க்கவிதையுலகம் தரிசித்த இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞன் பாரதி. சொல்லுக்கும் செயலுக்கும் இடைவெளி இல்லாத காலத்தின் கொடை அவன். முப்பத்தொன்பது ஆண்டுகள் வாழ்ந்தாலும் இந்தப் புவி முழுதும் நிறைந் திருக்கும் பேறு பெற்றவன். தனது பல்வேறு ஆக் கங்களினாலும் பணிகளினாலும் உலகின் அத்தனை அடக்கமுறைகளுக்குமான விடுதலைக் குரலாக ஒலித்தவன். அவனது ஆக்கங்களால் இன் றும் நீக்கமற நிறைந்துள்ளான். நவீன கவிதையின் தந்தை அவன்தான்.

**"சுவை புதிது பொருள் புதிது வளம் புதிது**
**சொற் புதிது சோதிமிக்க**
**நவகவிதை எந்நாளும் அழியாத மகாகவிதை"**

பற்றிக் கூறியதோடு அமையாது, சாதாரண மக்க ளுக்கும் புலப்படும் மொழியில் ஆழ்ந்த அர்த்தத் தில் தன் கவிதைகளை வழங்கியவன். பாரதியின் கவிதைகளில் வெளிப்படும் நம்பிக்கை என்ற பொருண்மையை வெளிப்படுத்துவதே இந்தக்கட் டுரையின் நோக்கமாகும்.

## போராட்டமே வாழ்க்கை

தனது தாயை ஐந்து வயதிலும் தந்தையைப் பதி னைந்துவயதிலும் இழந்த பாரதி, வறுமையோடு போராடவேண்டிஏற்படுகின்றது. சமூகத்தின் உயர்ந்த குலத்திலே பிறந்தாலும் சமூகத்தின் சமத் துவமின்மைகளுக்காக சமூகத்துக்கு எதிராக வும் போராடவேண்டியிருந்தது. நடிப்புச்சுதே சிகளைப் போல இருக்க முடியாததால் தேசத் தின்விடுதலைக்காக ஆங்கிலேயர்களுக்கு எதிராகவும் போராட வைத்தது. வாழ்க்கை மட்டுமல்ல, அவன் தேர்ந்தெடுத்தபாதையும் போராட்டமாக இருந்தது. போராடுவதற்கு ரிய பலம் இல்லாத போதும், பின்னணி இல் லாத போதும்எழுத்து என்ற ஆயுதமும், துணிவு என்ற கவசமும் கொள்கை என்ற உயி ரும் அவனை இயங்க வைத்த; எழுத வைத் தன; போராட வைத்தன.

## கவிதைகளில் நம்பிக்கை

வாழ்வும் சூழலும் யதார்த்தவாதி என்ற முக மும் அவனுக்கு எப்போதும் இடரையே வழங் கின. இடருக்குள் அவன் விநாயகரை ஆதிபராசக் தியை கண்ணனை இறைஞ்சி இறைஞ்சி தன் நம் பிக்கையை வளர்த்துக்கொண்டான்.

சாதாரணமனித வாழ்வுக்கு அப்பால் மரணத்தைக் கடந்த ஒரு வாழ்வு தனக்கு இருக்கவேண்டும் என்று நம்பிக்கையுடன் உழைத்தான். நம்பிக்கை வளர்ப்பிற் காக முன்னோர் சொல்லித்தந்த அத்தனை விடயங் களையும் தன் வாழ்வின்மீது பிரயோகித்தான்.

அச்சத்தைத் துறந்த வைரமுடைய நெஞ்சை உரு வாக்கிக்கொண்டான். தனது அஞ்சாமையை எதிர் காலத் தலைமுறைக்கும் வலியுறுத்தினான். இந்த யுகத்தின் கேடுகளை நீக்கி உலகை நிலை நிறுத்தக் கூடிய ஆளுமைதன்னிடம் இருப்பதாக நம்பினான். தன்னை உலகத்தின் அனைத்து மாயும் நினைத்துக் கொண்டவன். ஊக்கத்தைஉருவாக்கிக்கொண்ட வர். நாட்டினது விடுதலையை நம்பிக்கையோடு எதிர்பார்த்தவன். பெண்கள் விடுதலை அடைவார் கள்என்ற நம்பிக்கைக் கனவை வளர்த்தவன். தமிழ் இனத்தின் மீதும் தன் நம்பிக்கையை விரித்தவன். தமிழ்மொழிஎன்றும் நிலைத்திருக்கும் என்று உறுதி கொண்டவன். தான் கவியரசனே என்ற நம்பிக்கை கொண்டவன். அவனது இந்தத் தன்னம்பிக்கையே அவரைத் தமிழ் உலகமே வியக்கும் மகாகவியாக்கி இருக்கின்றது எனலாம்.

## மரணத்தைத் தாண்டிய வாழ்வு

**"உலகமெலாமோர் பெருங்கனவு அஃதுள்ளே**
**உண்டு உறங்கி இடர் செய்து செத்திடும்**
**கலக மானிடப் பூச்சிகள் வாழ்க்கையோர்**
**கனவினுங் கனவாகும்"**

என்பதை நன்றாக உணர்ந்தவன் பாரதி. ஆனாலும் வாழ்வின் போராட்டமும் வாழ்வின் யதார்த்தமும்

**"நோவு வேண்டேன் நூறாண்டு வேண்டினேன் என்றும்**
**கனக்கும் செல்வம் நூறுவயது இவையும் தர நீ கடவாயே"**

என்றும் நூறாண்டு பக்தியுடன் வாழும்படிக்கு கேட்கவைத்துவிடுகின்றன. உண்மை பாரதிக்குத் தெரியாததல்ல. தன் செயல்களாலேயே தான் வாழ முடிமுடியும் என்பதைப் பூரணமாக உணர்ந்தவன் அவன்.

**"தேடிச் சோறுநிதந் தின்று**
**பல சின்னஞ் சிறுகதைகள் பேசி**
**மனம் வாடித் துன்பமிக உழன்று**
**பிறர் வாடப் பல செயல்கள் செய்து**
**நரை கூடிக் கிழப்பருவம் எய்தி**
**கொடுங் கூற்றுக் கிரையெனப்பின் மாயும்**
**பல வேடிக்கை மனிதரைப் போலே**
**நான் வீழ்வே னென்று நினைத்தாயோ?"**

சாதாரணமான வாழ்க்கையை வாழ அவன் விரும் பவில்லை. தன் கனவுகளாலும் கருத்துகளாலும் கவிதைகளாலும் செயல்களாலும் இந்த உலகத்தின் அழியாத மகாகவிஞனாக இருக்கவே விரும்பினான்.



**"சிலுவையிலே அடியுண்டு யேசு செத்தான்**
**தீயதொரு கணையாலே கண்ணன் மாண்டான்**
**பலர் புகழும் இராமனுமே ஆற்றில் வீழ்ந்தான்**
**பார் மீது நான் சாகாதிருப்பேன் காண்பீர்"**

என்ற அவனது நம்பிக்கை மிகப்பெரியது. அதனால் தான் அது சாத்தியப்படவும் செய்தது. அவனுடை யது வெறும் பிரார்த்தனையோ கோசமோ அல்ல. உள்ளமும் உயிரும் உறுதிபட எண்ணிய வாழ்வின் வெளிப்பாடு.

## அடைதல் பற்றிய நம்பிக்கை

உலகத்தில் உள்ள ஒரு விடயத்தை அடைவது என் பது மரத்தில் பழம் பறிப்பது போன்ற செயற்பாடு அல்ல. அது தன்னை வருத்தித் தன்னை ஒன்றித்து சிறிது சிறிதாக அடையும் நெடும்பயணம். அதற்கு ரிய மனவலிமை முக்கிய மானது.

முன்னோரின் கருத்துகளையும் சிரமேற்கொள்ள வேண்டும். இதையெல்லாம் பாரதி தன் கருவி யாகக் கொண்டான். அதைத் தனது சுயசரிதையில் பாரதி அழகாகக் கூறுகின்றான்.

**"புலங்களோடு கரணமும் ஆவியும்**
**போந்துநின்ற விருப்புடன் மானிடன்**
**நலங்களேதும் விரும்புவன் அங்கவை**
**நண்ணுறப் பெறல் திண்ணமதாமென**
**இலங்கு நாலுணர் ஞானியர் கூறுவர்:**
**யானும் மற்றது மெய்யெனத் தேர்ந்துளேன்"**

முன்னோர் கூறியதைப் பாரதி தன் உள்ளத்தில் ஏற்றி உருக்கொடுத்ததனாலேயே முன்னோடி என்று நாம் அவனைப் பேசிப் பெருமை கொள் கின்றோம். இன்று அவனது கருத்துகளை எம் வாழ் வின் வாசகங்களாக அணிந்துகொள்கின்றோம்.

## அஞ்சாமை உடைய வைரநெஞ்சம்

பாரதி எழுதிய கவிதைகள் அறையைப் பூட்டிவிட்டு கற்பனையில் சஞ்சரித்து எழுதியவை அல்ல. அவர் வாழ்வை எழுதியவன். போராட்டங்களுக்குள்ளே வாழ்ந்தவன். போராளியாகவும் இருந்தவன். வறுமை யோடு மட்டும் சாதாரணமானவர்களைப் போலப் போராடிக்கொண்டிருக்காமல் எல்லாவற்றுக்காக வும் இடைவிடாது போராடியவன். வறுமையில் இருந்து வெள்ளையவர் வரை அவனைத் துரத்திக் கொண்டே இருந்தார்கள். அவன் அஞ்சவில்லை.

**"அச்சமில்லை அமுங்குதலில்லை**
**நடுங்குதலில்லை நாணுதலில்லை**
**பாவமில்லை பதுங்குதலில்லை**
**ஏது நேரினும் இடர்ப்படமாட்டோம்"** என்பதே அவன் பிரகடனமாக இருந்தது.

**"எண்ணுவது உயர்வு, நினைப்பது முடியும், தோல்வி யிற் கலங்கேல் சிதையா நெஞ்சுகொள் வையத்தலைமை கொள்"** என்று புதிய ஆத்திசூடி யில் அவன் பாடியவை இந்த உலகத்திற்கு மட்டு மல்ல. அவன் தனக்கே சொல்லிக்கொண்ட நம் பிக்கை வாசகங்கள் அவை. அது தன்னிடம் மட்டு மல்ல எதிர்காலத் தலைமுறையிடமும்இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டான்.

அதனாலேயே **"வயிரமுடைய நெஞ்சு வேணும் இது வாழு முறைமையடி பாப்பா"** என்று குழந்தைகளுக்குப் பாடினான்.

## கிருதயுகத்தினைக் கேடின்றி நிறுத்தும் நம்பிக்கை

எல்லாவற்றையும் எண்ணும் சாதாரணன் அல்லன் பாரதி. ஆசைகளை வெறுமனே வளர்த்துக்கொண் டவன் அல்லன். நல்லவற்றைக் கனவு கண்டவன். அதற்குரிய உறுதியை மீண்டும் மீண்டும் உருவாக் கிக்கொண்டவன்.

குமிழிக்கனவுகளில் அவன் சஞ்சரிக்கவில்லை. எண் ணிய முடிதல் வேண்டும் என்று நினைத்தான் ஆனால் நல்லவே எண்ணல் வேண்டும் என்பதிலும் உறுதியாக் இருந்தான். அதற்கே திண்ணிய நெஞ் சத்தை நம்பிக்கையோடு உருவாக்கிக் கொண் டான். அவனின் எண்ணங்களையும் செயல்களை யும் அவனது ஆக்கங்களே வெளிப்படுத்தின. எழு துகோல் தெய்வம் இந்த எழுத்தும் தெய்வம் என்று எழுத்தையே தெய்வமாகவும் தெய்வங்கள் ஏந்திய ஆயுதமாகவும் பயன்படுத்தியவன் பாரதி.

**"கிருத யுகத்தினைக் கேடின்றி நிறுத்த விரதம் நான் கொண்டனன்"** என்ற அடிகளில் உலகை மட்டுமல்ல காலத்தையும் வெல்வேன் என்று உறுதிதொனிக்கும் ஒரு மகாகவிஞனின் குரலையே கேட்கின்றோம். பாட்டுத்திறத்தாலே இவ்வையத் தைப் பாலித்திட வேணும் என்று அவன் துடியாய்த் துடித்திருந்தான். அதற்காகவே தீயை நிகர்த்தொளி வீசுந் தமிழ்க்கவியைச் செய்தான்.

தன்னால் தனக்கு நன்மையைத் தேடியவன் அல் லன் அவன். தன்னால் இவ்வுலகம் முழுவதும்பயன டையும் என்பதை அவன் அறிந்து கொண்டவன். அதனால்தான் பராசக்தியிடம் "வல்லமை தாராயோ இந்தமாநிலம் பய னுற வாழ்வதற்கே" என்று கேட்டு நின்றான.

(தொடரும்)

# இரட்டைக்கரு முட்டைகள்

ம.பா. மகாலிங்கசிவம்

ஒரு சொல்லோ, சொற்றொடரோ ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் தரும்படி அமைந்து வருவது சிலேடை எனப்படும். காசா லேசா, ஆடையின்றிப் பால் கொண்டுவா முதலியவை தமிழ்மக்கள் அனைவருக்குமே தெரிந்த எளிமையான சிலேடைகள். இரு பொருள்களை ஒப்பிட்டுப் பாடல் முழுவதுமே சிலேடையாக அமையும்படி பாடியவர்களும் இருந்தனர்.

இவ்வகையில் நகைச்சுவையாக அமைந்த சிலேடைப் பாடல்கள் பலவற்றைப் பாடியவர் வசைபாடக் காளமேகம் எனப் போற்றப்பட்ட காளமேகப்புலவர். இவர் ஆமணக்கு, யானை, எண், பாம்பு, சந்திரன், மலை நாய், தேங்காய், பாம்பு, வாழைப்பழம், பாம்பு, எலுமிச்சைப் பழம் முதலியவற்றுக்கிடையே ஒற்றுமைகள் கண்டு சிலேடைப் பாடல்களாகப் பாடியுள்ளார். அவற்றுள் தென்னைக்கும் விலைமாது ஒருத்திக்கும் இடையிலே ஒற்றுமை கண்டு அவர் பாடிய சிலேடைப் பாடல் கீழே தரப்படுகின்றது.

பாரத் தலைவிரிக்கும் பன்னாடை மேல் சுற்றும்
சோர இளநீர் சுமந்திருக்கும் நேரே மேல்
ஏறி இறங்கவே இன்பமாம் தென்னைமரம்
கூறும் கணிகையென்றே கொள்.

இச்சிலேடைப் படலில் முதலில் தென்னைமரத்தின் பண்புகளாகக் கூறப்படுவனவற்றை முதலில் பார்ப்போம். தென்னை மரத்துக்கு எல்லா திசைகளிலும் ஓலைகள் நீண்டு அது தலைவிரித்து நிற்பது போலக் காணப்படும். பன்னாடை சுற்றியிருக்கும். இளநீரைச் சுமந்திருக்கும். தென்னை மரத்தின் மேல் ஏறி இறங்குவது மகிழ்ச்சியைத் தரும்.

அதுபோல விலை மகளும் தலைவிரித்திருப்பாள். பல வண்ண ஆடைகளை அணிந்திருப்பாள். இளநீர் போன்ற மார்பகங்களைச் சுமந்திருப்பாள். அத்துடன் அவன் தொடர்பான மகிழ்ச்சியைத் தரும் செயற்பாடு என்றும் கூறப்பட்டுள்ளது.

இனி தனியொரு கவிஞரால் ஈழத்தில் வெளியிடப்பட்ட சிலேடைத் தொகுப்பு ஒன்றினுட் செல்லலாம். இ.சு. முரளிதரனால் வெளியிடப்பட்ட 50 சிலேடை வெண்பாக்களைக் கொண்ட இரட்டைக்கருமுட்டைகள் என்னும் நூலிலுள்ள பாடல்கள் இன்றைய தேன்கூட்டை அலங்கரிக்கின்றன.

இ.சு.முரளிதரன் கரணவாயைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கவிஞர், சிறுகதை எழுத்தாளர், கட்டுரையாசிரியர், திரைப்படவிமர்சகர், சஞ்சிகை ஆசிரியர் எனப் பலதளங்களில் இயங்கிவருபவர். நுங்கு விழிகள், நெருதல், புழுவிற்கும் சிறகு முளைக்கும், கலையுருக்காட்டி என்னும் கவி



இ.சு. முரளிதரன்

தைத்தொகுதிகளையும், கடவுளின் கைபேசி எண் என்னும் சிறுகதைத் தொகுப்பு, நளதமயந்தி என்னும் நளன் கதையைப் புதுக்கவிதையிற் கூறும் நூல். தமிழ் சினிமாவின் பார்வையில் ஈழம், துரோடிங்கரின் பூனை ஆகிய கட்டுரைத் தொகுப்புக்களையும் வெளியிட்டவர்.

'புலவர்க்கு வெண்பாப் புலி' என்பர். அந்தளவுக்கு மிக இறுக்கமான இலக்கணக் கட்டுப்பாடுகளை உடையது வெண்பாயாப்பு.

அந்த யாப்பை லாவகமாகக் கையாண்டு சிலேடைப் பாடல்களை இ.சு. முரளிதரன் இயற்றியுள்ளார். சிலேடைக்குக்கவிஞர்வைத்த இரட்டைக்கருமுட்டை என்னும் பெயர் அவரது கற்பனா சக்தியை வெளிப்படுத்து கிறது.

முதலிலே பெண்ணுக்கும் வாழைக்கும் சிலேடையாக அவர் பாடிய பாடலை நோக்கலாம்.

தலை விரித்தே சீப்போ டிருக்கும் அகத்திற்
குலைநல்கும் பொத்திவைக்கும் வம்சம் விளைவிக்கும்
நல்மணநாள் நாணேறும் நல் மதிப்பால் வாழையும்
மெல்லியல்புப் பெண்ணும் நிகர்

இவ்வெண்பாவில் கவிஞர் கூறும் பெண்ணின் இயல்புகளை முதலிலே பார்த்தால், பெண் கூந்தலை விரித்தபடி சீப்புடன் இருப்பாள். வீட்டிற் குள் உலை வைத்துச் சமைப்பாள் பொத்தி போன்ற மார்புகள் வளர்ந்து வரும். வம்சத்தை விருத்தி செய்வாள். நல்நாளில் திருமணச் சடங்கில் தாலியை ஏற்பாள்.

அதுபோல வாழையின் இயல்புகளாவன, வாழை இலைகளை நாற்புறமும் விரித்திருப்பதுடன், சீப்பு களையும் சுமந்து இருந்தும். உள்ளிருந்து குலையை வெளியே தள்ளும். வாழையடி வாழையாக பரம்பரையை உருவாக்கும். நல்ல திருமண நாளிலே வாசலில் கயிற்றினால் கட்டப்படும். இவற்றினால் வாழையும் பெண்ணும் சமமானவர்கள் எனக் கவிஞர் கூறுகின்றார். அடுத்து நாடாளுமன்றத்துக்கும், மதுக்கடைக்கும் இடையே கூறப்படும் ஒப்புவமைகள் நகைச்சுவை பயப்பனவாக உள்ளன.

குடிக்காகக் கூடும் வரிசேர் விடமாம்
கடும்பேச்சும் நாக்கிலதிகாரம் நடைபோடும்
வாக்குடைந்து தள்ளாடும் பாராளுமன்றஞ்சீர்
தூக்கின் மதுக்கடையே தேர்

முதலிற் நாடாளுமன்றம் பற்றிக் கூறப்படும் விடயங்களை நோக்கலாம். நாடாளுமன்றம் குடிமக்கள் நலனுக்காகக் கூடுகின்றது. வரி சேர்ப்பது பற்றிய தீர்மானங்கள் எடுக்கும் இடமாகும். அதிகாரத்தொனி மிக்க கடுமையான பேச்சு வார்த்தைகள் நடைபெறும் இடமாகும். அரசிற்கு ஆதரவான வாக்குகள் உடைந்து போனால் அரசு தள்ளாடும். அதுபோல மதுக்கடைகளில் மக்கள் கூடுவர். நாட்டின் வரிப்பணத்திற் பெருமளவைப் பெற்றுத் தந்தாலும், மது உடலுக்கு விடமாகவே இருக்கும். கடுமையாக பேச்சுக்களுடன் "பைட்ஸ்" ஆக அதிக காரமுள்ள உணவுகளைச் சேர்த்துக் கொள்ளும். பேச்சுக் குழறி நடையில் தள்ளாட்டமும் ஏற்படும் எனச் சிலேடைப் பொருள் வெளிப்படுகின்றது. குரங்குக்கும் தமிழ் சினிமாவுக்கும் ஒன்றுமைகள் இருப்பதை எடுத்துக்காட்டும் சிலேடை வெண்பா அடுத்து இடம்பெறுகின்றது.

கடுவன் முறைக்கும் விதைபோடும் கட்டிப்
பிடித்து மரஞ்சுற்றிக் காதல் நடத்தும்
நகலெடுக்கும் கூத்தைத் தொடரும் குரங்கு
நிகர்க்கும் தமிழ்ச் சினிமா தான்

குரங்கின் இயல்புகளை நோக்கினால் கடுவன் குரங்கு முறைத் துப் பார்க்கும் பழத்தை உண்டு விட்டு விதையைக் கீழே போடும். ஒன்றையொன்று கட்டிப்பிடித்தும், மரத்தைச் சுற்றித் திரிந்தும் தமது காதல் விளையாட்டை நடத்தும். மனிதர்களைப் பார்த்து அவர்கள் செய்வதை நகலெடுத்துத் தனது கூத்தைத் தொடர்ந்து செய்யும். அது போலத் தமிழ் சினிமா கடுமையான வன்முறைக்கு விதைபோடும். சினிமாவிற் காதலர்கள் கட்டிப் பிடித்தும், மரத்தைச் சுற்றிப் பாடி ஆடியும் காதல் நடத்துவார்கள். பிறதிரைப்படக்கதைகளை நகலெடுத்து தமது என்று சொல்லிப் படமாக்கும் திருக் கூத்தைத் தொடர்ந்து செய்யும் எனச் சிலேடை அமைகின்றது. தொகுத்து நோக்கின் மரபுக் கவிதை செல்வாக்கிழந்து புதுக்கவிதை கோலோச்சும் ஒரு காலத்தில் வெண்பா என்னும் கடினமான யாப்பைத் தெரிவு செய்து யாத்த சிலேடைப்பாடல்கள் காளமேகப் புலவரை நினைவுக்குக் கொண்டு வருகின்றன. அதனாலேதான் தமிழகக் கவிஞர் பே.வன்னிமுத்து இவரை ஈழத்துக் காளமேகம் எனப் பாராட்டுகிறார். கவிஞர் பே.வள்ளிமுத்துவின் பாராட்டுப் பாடலுடன் கட்டுரை நிறைவு பெறுகிறது.

"செந்தமிழில் இன்பச் சிலேடைகளைச் சீர்தூக்கி
விந்தை பல செய்த வித்தகர்தான்முந்திநின்ற
காளமேகம் கண்டதில்லை!
கண்டேன் முரளிதரன் ஈழத்துக் காளமேகம் என்று.



# ஏரியின் பிசாசு

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரூபாவை நோக்கி ஆஃபா பாய முற்பட, மாகோ அதை இறுக்கி பிடிக்க முயல கைப்பிடி தவறி ,ஆஃபா கடலில் வீழ்ந்தது.

ரூபா ஆஃபாவை பிடித்துவிடும்.
ஆஃபாவைக் காப்பாற்ற வேண்டும்.
ஆஃபா அவனது நேசத்துக்குரிய நாய்.
"ஆஃபா... ஆஃபா..."
என்று கத்தியவாறு குத்தீட்டியை கையில் இறுகப் பிடித்துக் கொண்டான். ரூபா ஆஃபாவுக்கு கிட்ட போகும் போது ரூபாவின் இடது கண்ணை இலக்கு வைத்து மாகோ குத்தினான். சரியான குறி.

ரூபா தடுமாறியது. இலக்கை தவறவிட்டது. ஆஃபாவை மாகோ தூக்கி வள்ளத்துக்குள் போட்டுக் கொண்டான்.
ஆனால் ரூபா மீண்டும் ஒரு கண்ணால் பார்த்தபடி படகை நோக்கி வரத் தொடங்கியது. அது மீண்டும் தாக்கி படகைக் கவிழ்த்துவிடும்.
"வா பிசாசே ! இண்டைக்கு என் கையால்தான் உனக்கு சாவு"
உரத்துச் சொல்லிக்கொண்டான்
மீண்டும் ரூபாவின் வலது கண்ணை குறி வைத்துத் தாக்கினான். இப்போதும் அவன் இலக்குத் தவறவில்லை. ரூபா நிலை குலைந்தது. அதனால் படகைக் கண்டு பிடிக்கமுடியவில்லை. வேகமாக சுழன்று தலைகீழாகப் புரண்டது.
மாகோ இப்போது அதன் நெஞ்சைக் குறி வைத்தான். குத்தீட்டியால் ஓங்கிக் குத்தினான். ரூபா துடித்துக் கொண்டு மூச்சை விட்டது.
சற்றைக்கெல்லாம் அது கடலில் மிதக்கத் தொடங்கியது. மாகோ கயிற்றை எடுத்துக் கொண்டு ரூபாவின் உடலை படகோடு கட்டி தரையை நோக்கி வலிக்க தொடங்கினான்.
கிராமவாசிகள் ஓடி மாகோவுக்கு கிட்ட ஓடி வந்தனர்.கூச்சல் வானைப் பிளந்தது.
"மாகோ, ரூபா என்கிற பிசாசை கொன்று விட்டான்"
எல்லோரும் அவனைப் பற்றியே பேசிக்கொண்டனர்.
எல்லோரும் ரூபாவைச் சுற்றிச் சுற்றி வந்து பார்த்து, பிரமித்தனர்.
"அடேய்! இது ஒரு பொல்லாத பிசாசடா"
அன்றிரவு.
பேரக் கிழவன் அமைதியாகப் பாடிக் கொண்டிருந்தார். அது நாளை மாகோ அரசனிடம் பரிசு பெறும்போது பாடும் பாடல்தான். மாகோவின் தாய் நெருப்பை பெரிதாக மூட்டினாள். வானில் நட்சத்திரங்கள் பிரகாசித்தன. கிழவனின் பாடல் இதுதான். "முப்பது ஏக்கர் தென்னந்தோப்பும் ஒரு படகும்......!!" அந்தப் பாடல் அயர்ந்து தூங்கத் தொடங்கிய மாகோவின் காதுகளிலும் கேட்கத் தொடங்கியது.

# புதிர் 33




○ மாயன்

இந்தப் புதிர்மலையில் ஒரு காலசக்கரம் உண்டு. அதிலே ஏறி, நாம் எந்தக் காலத்துக்கு போக வேண்டுமென்று நினைக்கிறோமோ அந்தக் காலத்துக்கு போய்விடலாம். அப்படி தீபவர்மனும், பவளராணியும் மாயக்கண்ணாடியில் நுழையும் தருணத்தை மீண்டும் அடைய முடியும். அப்போது எப்படி இருந்தார்களோ, அதே போன்ற தோற்றத்தையும் மீண்டும் பெறுவார்கள்" காக்கை குப்தன் காலச்சக்கரத்தைப் பற்றிச் சொல்லச் சொல்ல, தீபவர்மனுக்கு மனதுக்குள் நம்பிக்கை பிறப்பெடுத்தது.

" காக்கை குப்தரே, அந்தக் காலச் சக்கரம் எங்கே என்று மட்டும் சொல்லுங்கள். இப்போதே நான் அந்த மாயக்கண்ணாடியில் நுழைந்த காலத்துக்குச் செல்ல வேண்டும்" என்று துடியாய் துடித்தான். அவனுக்கிருந்த அதே ஆவல் பவளராணிக்கும் இருந்தது. அதை காக்கை குப்தன் மட்டுமல்லாது அங்கிருந்த அனைவரும் உணர்ந்தே இருந்தார்கள்.

" நானும் அந்தக் காலச் சக்கரம் பற்றி சிலர் சொல்லக் கேள்விப்பட்டுள்ளேன். ஆனால் அதை அவ்வளவு எளிதில் நெருங்க முடியாதென்றல்லவா சொல்வார்கள்" என்று தமிழினி தன் சந்தேகத்தை வெளிப்படுத்தினாள்.

அவள் சொன்னதை செல்வனும் ஆமோதித்து தலையசைத்தான்.

" தமிழினி, அதை அடைய வேண்டுமானால் பஞ்ச பூதங்களின் புதிர்களுக்கு பதில் சொல்லவேண்டும். பதில் தவறென்றால் தலை வெடித்துச் சுக்குநூறாகிவிடுமாம்" என்று தான் அறிந்ததை செல்வன் சொன்னான்.

இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த காக்கை குப்தன் , தொண்டையைச் செருமிக் கொண்டு மீண்டும் உரைக்கத் தொடங்கினான்.

" நீங்கள் சொல்வது சரிதான். காலச் சக்கரத்தை அவ்வளவு எளிதில் அடையமுடியாத படி, பஞ்ச பூதங்கள் காவல் புரிகின்றன. அந்தப் பூதங்களின் புதிர்களை மட்டும் அவிழ்த்துவிட்டால், காலச்சக்கரம் நம் வசமாகிவிடும். தீபவர்மனும், பவளராணியும் தங்கள் கடந்த காலத்தை மீட்டு விடலாம். ஆனால் தவறாக விடையளித்தால் தலை சிதறிவிடும். எனவே காலச்சக்கரத்தை இளவரசர்கள் தேடிப்போகாமல், தீபவர்மனும், பவளராணியும் போவதே உசிதமானது. ஏனெனில் அவர்களுக்குதான் அது தேவை. அதைத் தேடிப்போய் இளவரசர்களை ஆபத்தில் சிக்க வைக்க நான் தயாரில்லை"

காக்கை குப்தனின் வார்த்தைகளில் உண்மை நிறைந்திருந்தது. அதனை தீபவர்மனும் ஏற்றுக்கொண்டான். ஆனால் இளவரசர்கள் அதை ஏற்க மறுத்தார்கள். தாமும் இணைந்தே அதைக் கண்டுபிடித்து தீபவர்மனுக்கும், பவளராணிக்கும் மறுவாழ்வளிக்க முடிவெடுத்தார்கள். அந்த முடிவு எவ்வளவு ஆபத்தானது என்று அவர்களுக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை. ( புதிர்கள் தொடரும்)



# வித்துவான் பதில்கள்!

**1** வித்தூ....நாட்டிலும் வீட்டிலும் பிரச்சினைக்குக் காரணம் யார்?

சுரேஸ், கோண்டாவில்.

தலைவர்களின் கைகளில் அதிகாரம் கிடைப்பது தான்.



**2** அயல் வீட்டு மங்கையின் உள்ளங்கவர் கள்வனாக விரும்புகின்றேன். அதற்கு முதலில் என்ன செய்ய வேண்டும்?

து. காண்டீபன், மானிப்பாய்.

முதலில் அவள் உள்ளங்கவர் கள்வர்கள் கணவன் உட்பட வேறு யாராவது இருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். கவர்ந்தவர் இல்லையாயின் அவளைக் கவர்ந்த விடயங்கள் எவை என ஆராய்ந்து கொண்டு நீங்கள் கவர முயலுங்கள். கடும் கவர்ச்சியின் போது கவரை மறந்து விடாதீர்கள்.

**3** வித்து அண்ணா... குடும்பத்தைக் கோயிலுடன் ஒப்பிடலாமா?

வைஷ்ணவி, துன்னாலை.

குடும்பம் ஒரு கோயில் தான். கணவன் முருகனாகவும் மனைவி பாஞ்சாலியாகவும் மாறாமல் இராமனாகவும் சீதையாகவும் இருக்க வேண்டுமே?




**4** காதலுக்கு கண் இல்லை என்கிறார்கள் ஏனைய புலனுறுப்புகளாவது இருக்கின்றனவா?

பிரேமிளா, வடமராட்சி.

காதல் கண் வழி நுழைவதால் தான் கண் இல்லை என்று கூறுகிறார்கள். அதற்கு ஏனைய உறுப்புக்கள் இருக்கின்றன என்பது பொருள் அல்ல. திருமணத்தை கை பிடித்தல் என்கிறார்களே? அதற்காகத் தம்பதிகள் முதலிரவில் கையை மட்டும் தான் பிடிக்கிறார்களா?



**5** சில ஐம்பதுகள் முருங்கைக்காயை விரும்பிச் சாப்பிடுகின்றனவே?

குமாரமூர்த்தி, சரசாலை.

ஐம்பதிலும் ஆசை உண்டு தானே?.



**6** வித்தூ... நாட்டில் ஒருதலைக் காதல் அதிகமா? இருதலைக் காதல் அதிகமா?

இனியவன், புன்னாலைக்கட்டுவன்.

தறுதலைக்காதல் தான் அதிகம்.



**7** பெண்கள் ஆடையைக் குறைப்பது சிக்கனமா?

ராஜீ. சண்டிலிப்பாய்.

அந்தச் சிக்கனம் இளசுகளின் தலையை 'கிக்'கனம் ஆக்கி வீழ்த்தி விடுகின்றதே.

**8** வாழ்க்கையில் இனிக்கும் பருவம் எது? கசக்கும் பருவம் எது?

நிலாந்தன். உடுவில்.

தி.மு., தி.பி. (திருமணத்துக்கு முன்) (திருமணத்திற்குப் பின்)

**9** முதலில் திருத்த வேண்டியது வடிப்பவர்களையா? குடிப்பவர்களையா?

சுந்தரலிங்கம். காரைதீவு.

வடிப்பவர் வடிப்பதால் தானே குடிப்பவர்கள் குடிக்கிறார்கள்.

**10** வித்தூ சூதும் வாதும்...

கணதீபன், சண்டிலிப்பாய்.

வேதனையைத் தரும்.

நீங்களும் வித்துவானிடம் கேள்விகள் கேட்கலாம்...
உங்களை கேள்விகளை கீழ்க்காணும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்

அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
0773165555

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)





### ஈஸ்டர் தாக்குதல்

ட்ரோன் கமராக்களின் பயன்பாடு இலங்கையில் சர்வசாதாரணமாக இருந்தது 2019ஆம் ஆண்டு நடந்த ஈஸ்டர் தாக்குதல் வரையும்தான். அதன்பின்னர் பாதுகாப்பு அமைச்சு ட்ரோன் பாவனையில் கட்டுப்பாடுகளை விதித்தது. ட்ரோன் கமராக்களை உபயோகிப்பவர்கள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற வேண்டும் என்று அறிவித்தது.

பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு ட்ரோன் கமரா தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படும் என்ற அச்சமே அதற்குக் காரணம். அதேநேரம் இலங்கை இராணுவம் தனது விமானப் படையில் ட்ரோன்களுக்கான தனிப் பிரிவொன்றையும் ஆரம்பித்தது. அப்போது அது பெரிதாகப் பேசப்படாவிட்டாலும், இலங்கை விமானப் படையின் 70 ஆண்டு நிறைவு நிகழ்வில் விமானப்படையினர் ஏந்தியிருந்த "ட்ரோன் ஜாமர்" என்ற ஸ்டைலான ஆயுதம் சமூக வலைத் தளங்களில் வைரலாகியிருந்தது.

### அது என்ன ஜாமர்?

வானில் பறக்கும் ஆளில்லா கமெராக்களுக்கும், அதனைத் தரையில் இருந்து இயக்குபவருக்கும் இடையிலான அலைவரிசைத் தொடர்பைத் துண்டிக்கும் தொழில்நுட்பமே இது வாகும். இதன் மூலம் உரிமையாளரின் அல்லது இயக்குபவரின் கட்டுப்பாட்டை இழந்த ட்ரோன் எங்காவது சென்று தொலைந்து போய் விடும். இல்லையேல் ட்ரோன் ஜாமரைப் பயன்படுத்துவோர் அதனைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும்.

அத்தோடு இந்த ஜாமர் சாதனங்கள் மூலம் ஆளில்லா விமானங்கள் கமராக்கள் மற்றும் அவ்வாறான சாதனங்களின் பாதையை மாற்றவோ அல்லது அவற்றை வானத்தில் தொடர்ந்து வைத்திருக்கவோ முடியும்.

### நாங்களும் ரவுடிகள்தான்!

ஈஸ்டர் தாக்குதல்களின் பின்னர் இவ்வாறான விசேட தொழில்நுட்பங்களில் கவனம் செலுத்திய இலங்கை விமானப்படை, அதி முக்கிய பிரமுகர்கள் மற்றும் இலக்குகளைப் பாதுகாக்கும் படையணியில் ட்ரோன் ஜாமர்களை இணைத்துள்ளது. இதன்மூலம் 'நாங்களும் ரவுடிகள்தான் 'என்று எச்சரிக்கை விடுத்திருக்கின்றது இலங்கை இராணுவம்.

இந்த ஜாமர்கள், துப்பாக்கி போன்ற ஒரு சாதனம்தான். இவை அலைவரிசையை அடிப்படையாகக் கொண்டே இயங்குகின்றன. தரையில் இருக்கும் நபரிடம் இருந்து டிரோனுக்குக் கிடைக்கும் அலைவரிசையைத் துண்டித்து டிரோனின் செயற்பாட்டை தடுப்பது அல்லது அலைவரியில் குறுக்கிட்டு டிரோனின் இயக்கத்தைத் தன் வசம் எடுப்பது என்று இந்தச் செயற்பாடுகள் வகைப்படுகின்றன.




### 'சீனச் சாமான்'

எந்த நிறுவனத்துக்கும் பெரும் தலை யிடி சீனாதான். தலையைப் பிய்த்து உதறி ஒரு பொருளைக் கண்டுபிடித்து பெருமிதத்துடன் சந்தையில் விட்டு, இதுதான் பெஸ்ட், இதுதான் விலை என்று பெருமைப் பட்டுக் கொண்டிருக்க, ஒரு மாதத்திலேயே அதே பொருள் "சீனச் சமான்" ஆக சந்தைக்கு வந்துவிடும். அது மட்டுமல்லாது, விலையோ அடிமாட்டு விலையில் இருக்கும்.

ட்ரோன் கமெரா விடயத்திலும் அதுதான் நடக்கிறது. ட்ரோன் தயாரிப்பில் முதலில் பெரும் முன்னணி நிறுவனங்கள் ஈடுபட்டிருந்தாலும், இப்போது ட்ரோன் கமெரா தயாரிப்பில் இப்போது சீனா கொடிகட்டிப் பறக்கின்றது. ஏனைய நாட்டுத் தயாரிப்புக்களை விட, சீனா தயாரிப்பு முன்னிலை பெற அடிமாட்டு விலைதான் காரணம்.

ட்ரோன் தயாரிப்பில் கொடிகட்டிப் பறக்கும் சீனாதான், ட்ரோன் ஜாமர் தயாரிப்பிலும் "மாஸ்டராக" இருக்கின்றது.

சீனாவின் செல்லப்பிள்ளையான இலங்கை, ஜாமரை வேறெங்கு வாங்கும்?. இலங்கை விமானப்படை வைத்திருக்கும் ட்ரோன் ஜாமர்களும் சீனாவின் டிஜிட்டல் ஈகிள் நிறுவனத்துடை யவையே. அட சீனச் சாமானா என்று என்று தலையைச் சொறியாதீர்கள். அலைவரிசை விடயத்தில் சீனாவை அடிக்க ஆளில்லை.

1998ஆம் ஆண்டளவில் 'ஒஸாக்கி' என்ற சீனத்தயாரிப்பான "சீடி பிளேயர்" யாழ்ப்பாணத்தில் வலு "பேமஸ்". எந்தக் கீறல் வீழ்ந்தசீடி என்றாலும் அதில் வேலை செய்யும் என்று பெரு மையாகப் பேசிக் கொள்வார்கள். ஆனால் அதில் இருந்த ஒரு சிக்கலால் பலர் மாட்டிக்கொண்டு விழித்த சம்பவங்கள் பல நடந்திருக்கின்றன. அந்த சிடி பிளேயரில் போட்டு பார்க்கும் படம் அடுத்த வீட்டு அன்ரெனா அலைவரிசையூடாகப் புகுந்து விடும்.

அதனால் பக்கத்து வீட்டில் சீடியில் போடும் படத்தை இந்த வீட்டில் இருப்போர் அன்ரனா அலைவரிசையூடாகக் காணமுடியும். அதுதான் பிரச்சினை. வீட்டில் 'அப்படியான'படம்பார்த்துப் பக்கத்து வீட்டில் பிடிபட்ட அனுபவம் பலருக்கு இருக்கின்றது. சாதாரண சீடி பிளேயரின் அலைவரிசையே இப்படி என்றால் ஜாமரின் திறன் எப்படி இருக்கும் என்று நீங்களே கணித்துக் கொள்ளுங்கள்.

### வைரல் புகைப்படம்

இலங்கை விமானப் படையின் 70ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வில் விமானப் படைச் சிப்பாய்கள் ஆங் கிலப் பட ஹீரோக்கள் போன்று ஸ்டைலாக ஏந்தியிருந்த இந்த ஜாமர்களுடனான ஒளிப்படங்கள் சமூக வலைத் தளங்களில் வைரலாகியிருந்தன.

இந்த ஜாமர்கள் சுமார் 4 கிலோவரை எடை கொண்டவை. லித்தியம் பற்றறி மூலம் இயங்குகின்றன. இந்த ஜாமர்கள் மூலம் ஆயிரத்து 500 மீற்றர் தூரத்தில் வரும் ட்ரோன் ஒன்றைச் செயலிழக்கச் செய்ய முடியும். இவ் வாறான ஜாமர்கள் இந்தியாவிலும் உற்பத்தி செய்யப்படு கின்றன.

ஆக, ட்ரோன் கமெராக்களைப் பயன்படுத்துவர்கள் இனிமேல் அவதானமாக இருக்க வேண்டும். திடீரென உங்கள் ட்ரோன்கள் வானத்தில் காணாமலும் போகக் கூடும். அதனால் சரியான நடைமுறைகளைப் பின்பற்றி ட்ரோனை இயக்குங்கள்.

**இலங்கை இராணுவம் தனது விமானப் படையில் ட்ரோன்களுக்கான தனிப் பிரிவொன்றையும் ஆரம்பித்தது. அப்போது அது பெரிதாகப் பேசப்படாவிட்டாலும், இலங்கை விமானப் படையின் 70 ஆண்டு நிறைவு நிகழ்வில் விமானப்படையினர் ஏந்தியிருந்த "ட்ரோன் ஜாமர்" என்ற ஸ்டைலான ஆயுதம் சமூக வலைத் தளங்களில் வைரலாகியிருந்தது.**



# ஆபிரகாம் சுமந்திரன் எம்.பி.க்கு...

## அவசரமா ஒரு கடுதாசி

ஐயா வணக்கம்,

அடுத்து என்ன செய்யிறதா உத்தேசம்? நிலைமை அப்பிடிக் கிடக்கு. 2009 இலை நடந்தது இனப்படுகொலைதான் எண்டு சொல்லி அதுக்கு நீதி கேட்டு வாய் நோக இப்ப பதினொரு வருசமா நாங்கள் கத்திறம். நாங்கள் நியாயம் கேட்டு ஏறாத படியள் இல்லை. காணாமல் ஆக்கப்பட்ட எங்கட பெடி பெட்டையளைத் தேடாத இடமும் இல்லை. அப்பவெல்லாம் "போர் எண்ட போர்வையிலை நடந்தது இனப் படுகொலை தான்" எண்டு சொன்னம். நாங்கள் சொல்லேக்கை நீங்கள் எங்கடை சொல்லைக் கேக்காமல் உங்கடை அரசியல் லாபத்துக்காக ரணிலுக்கு இனப்ப டுகொலை நடக்கவேயில்லை எண்டு கற்பூரம் கொளுத்திச் சத்தியம் செய்தியள். அப்பு சொல்லுற மாதிரி தனக்கு தனக்கெண்டால் சுளகு படக்குப் படக்கு எண்டு அடிக்குமாம்.

இப்ப உங்களுக்கு நோகுதெண்ட படியாலை நாங்கள் சொன்னமாதிரியே நீங்க ளும் சொல்லத் துவங்கிவிட்டியள். இறுதிப்போரில நடந்தது இனப்படு கொலை தான் எண்டு இப்பவாவது உணர்ந்திருக்கிறியளே. இப்ப சொல்லுறதை அப்ப சொல்லி இருந்தால் இன்னும் கொஞ்சம் நல்லா இருந்திருக்கும்.

முந்தி 'ஏக்க ராஜ்ஜிய 'எண்ட சிங்களச் சொல்லுக்கு நீங்கள் சொன்ன விளக்கத் தைப் போலை ஒரு சிங்களப் பண்டிதரும் சொல்லேல்லை. அவ்வளவு பக்குவமா 'இரண்டு இனத்தை உள்ளடக்கின ஒரு நாடு, ஒரு ஆட்சி' எண்டு உங்களுக்கெண்டு ஒரு புது விளக்கத்தைக் குடுத்து அரசாங்கத்தைக் காத்த அப்புக்காத்துவை இந்த அன்னமுத்து மறப்பனோ? ரணிலுக்கு வெள்ளை அடிக்க வெளிக்கிட்டு எங்கடை முகத்துக்குக் கறுத்தப் பெயின்றை அடிச்சதுதான் மிச்சம். அந்தக் கைங்கரியத்தை வடிவாச் செய்தனியள். இப்ப அதாலை ரணிலும் பிரியோசனப் படேல்லை. எங்களுக்குத்தான் பெரிய பின்னடைவு. லாபம் ராஜபக்சமாருக்குத் தான். ஆட்சிக்கு வந்து கொஞ்சக் காலம் அவையளை ஆசுவாசமா மூச்சுவிடப் பண்ணிப்போட்டியள். அந்த வெள்ளை அடிப்பை வைச்சுக் கொண்டுதானே அவையள் இவ்வளவு ஆட்டத்தையும் ஆடுகினம்!

கடைசியா நடந்த ஐ.நா மனித உரிமைப் பேரவையிலை உவையள் சிக்க வேண்டிய ஆக்கள். என்னத்தாலை அது நடக்கேல்லை? அதாலை ஏன் அவையளுக்குச் சர்வதேச அளவிலை அப்ப அழுத்தங்களும் ஏற்படேல்லை? நெருக்கடிகளும் வரேல்லை? உங்கடை பெயின்ற அடிப்புத்தான் அதுக்குக் காரணம் எண்டு எல்லாருக்கும் தெரியும். அப்ப சனம் உங்களைத் திட்டின திட்டு உங்களுக்கும் தெரியும் தானே? இப்பிடிப் பேசாமல் விட்டால் உங்களுக்கு இருக்கிற வாக்கு வங்கியும் இல்லாமல் போயிடும் எண்டு பயந்துதான் இப்ப உங்கடை வாயாலை இன அழிப்பு எண்ட சொல்லை பார்லிமென்டிலை வலு அழுத்திச் சொல்லி இருக்கிறியள் போல. இது ஒரு காலத்தின்ரை தேவை உங்களை அழுத்தியிருக்கு எண்டுதான் எண்ண வேண்டி இருக்கு.

போர்க்குற்றம், மனித உரிமை மீறல் தொடர்பிலை ஒரு சர்வதேச விசாரணைப் பொறிமுறை வேணும் எண்டு வலியுறுத்தியிருக்கிறியள். இலங்கையிலை போர்க்குற்றங்கள் நடைபெறேல்லை. மனித உரிமை மீறல்களிலை படையினர் ஈடுபடேல்லை எண்டு ஓயாமல் இனவாதியள் சொல்லிக்கொண்டு வந்தவை. அந்த முழுப் பூசணிக்காயைச் சோத்துக்கை மறைக்கிற வேலைக்குத் துணைபோன முக்கிய ஆக்களிலை நீங்களும் இருந்தனியள். அதை சுயசிந்தனையாலை நீங்கள் செய்ததாச் சொல்லமாட்டன். வேறை ஆற்றையோ நன்மைக்காகத்தான் நீங்கள் அப்பிடிச் செயற்பட்டனியள் எண்டும், சர்வதேசச் சக்திகளின்ரை ஆலோசனை அழுத்தத்தாலைதான் அரசாங்கத்துக்கு முட்டுக்குடுத்துப் பாதுகாத்தனியள் எண்டும் தெரியும். அதோடை மட்டும் நீங்கள் விடேல்லை .

அவை தொடர்பான விசாரணைகளும் முடிஞ்சு போச்சுது எண்டு கூடச் சில சமயங்களில் எங்கடை காலை வாரிவிட்டு அறிக்கையும் குடுத்தனியள். அதாலைதான் போன எலக்சனிலை உங்கடை கட்சி தோத்துப் போனதாயும் நீங்கள் வெண்டதாயும் கதைக்கினம். மறவன் புலவு சச்சி அடிக்கடி சொல்லுற விசயங்கள்தான் ஞாபகத்துக்கு வருகுது. இப்ப சொல்லுறியள் உள்ளக விசாரணைப் பொறிமுறையிலை எங்களுக்கு நம்பிக்கையில்லை. அதாலைதான் சர்வதேச விசாரணைப் பொறிமுறையைக் கிறிஸ்தவர்களும் கேக்கினம் எண்டு. இப்பவாவது சர்வதேச விசாரணைப் பொறிமுறையின்ரை அவசியத்தை நீங்கள் உணர்ந்திருக்கிறியள் எண்டு நினைக்க உடம்பு புல்லரிக்குது.

சர்வதேச விசாரணைப் பொறிமுறையைப் பற்றிப் பேரவை என்ன முடிவு எடுக்கப்போகுது? எண்டதை ஒரு பக்கம் வைப்பம். அப்பிடி இந்தமுறையும் அது நூந்துபோற நெருப்பாப்போற ஒரு சூழல் வந்தால் சர்வதேச நீதிமன்றத்திலை போய் ஞாயம் கேக என்ன மாற்று வழி வைச்சிருக்கிறியள்? இதை உங்களைப் போலை அப்புக்காத்துமார் சேர்ந்துதான் முடிவெடுக்க வேணும். எல்லாம்வல்ல கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

இப்படிக்கு,
அப்பாவி அன்னமுத்து.



(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

# குட்டிமணி...

முடிந்த அளவில் எவருக்கும் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாத வகையில் அந்த அனுபவப் பகிர்வு இருக்க வேண்டும் என்று மனம் ஏங்குகின்றது. ஆயினும் அதற்குக் காலமும் சூழலும் இடமளிக்கவில்லை. இது வேதனைக்குரியது. என்றாலும், நீண்டதொரு காலத்தின் பின்னராவது எனது அனுபவங்களை ஓரளவுக்கு பகிர முடிவது எனக்கு மன ஆறுதலைத்தருகின்றது

தமிழ் அரசியல் கைதிகளின் சார்பில் பல நூற்றுக் கணக்கான வழக்குகளில் ஆஜராகி வாதாடியமை இன்றும் வாதாடிக்கொண்டிருக்கின்றமை என் மனதுக்கு மிகுந்த மன ஆறுதலை தந்துள்ளது.

எப்போது உண்மையாக மக்களை நேசிக்கவும் இனத்தின்மீது பற்றுடன் செயற்படவும் ஒருவரால் முடிகின்றதோ அப்போது மனிதாபிமானமும் சமூகப்பற்றும் இயல்பாகவே வெளிப்படும். அவற்றைச் செயற்கையாகப் புனைந்துகொள்ள முடியாது. சட்டத்தரணியாக மட்டுமல்ல எந்தவொரு துறையில் இருப்பவருக்கும் இது மிகவும் முக்கியமானது. நாம் நமக்கு உண்மையாகஇருக்கும் போது மக்களுக்கும் சமூகத்துக்கும் உண்மையாக வெளிப்படுவோம்.

### முஸ்லிம்களுக்காகவும்....!

**கே:** **பயங்கரவாதத்தடைச் சட்டம் முஸ்லிம்கள் மீது பாய்ந்தபோதும் முக்கியமான பல வழக்குகளை நீங்களே கொரோனகால அச்சத்துக்குமப்பால் அர்ப்பணிப்போடு செய்கின்றீர்கள். அந்த ஞாபகங்களைப் பகிர்ந்துகொள்ள முடியுமா?**

**ப:** பயங்கரவாதத் தடைச்சட்டம் அவசரகால ஒழுங்கு விதிகள் என்பவை அரசாங்கம் தனது நிகழ்ச்சி நிரலை சிக்கலின்றிச் செய்து கொள்வதற்கு வசதியானசட்ட அங்கீகாரத்தைப் பெறுக்கொள்ளும் வழிவகையை ஏற்படுத்தும் ஒரு பொறிமுறையாகும். முன்னர் ஒரு காலத்தில் அது சிங்கள மக்களை இலக்கு வைத்தது. பின்னர் தமிழர்களை இலக்கு வைத்தது இப்போது முஸ்லிம்களை இலக்கு வைத்திருக்கின்றது. இங்குகவனிக்கப்பட வேண்டியது பாரபட்சமற்றசெயற்பாட்டைத்தான். ஆனால் எந்தவொரு அரசாங்கமும் அப்படி இருக்கவில்லை. தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் இப்போது வரையும் வெளிப்படையாக முன்வைக்கப்படும் பாரபட்சம் எத்தகையது என்பதை விளங்கிக் கொண்டாலே போதும் முஸ்லிம்மக்கள் மீது எத்தகைய நிலைப்பாடு அமுலாகும் என்பதைப் புரிந்துகொள்ள. தமிழ்பேசும் மக்களுக்காக எனது சட்டத்துறை அறிவுபயன்படுகின்றது என்றதிருப்திதான் கொரோனா கால அச்சத்தையும் தாண்டி முஸ்லிம் உறவுகளுக்காகவும் என்னால் நீதிவேண்டிக் குரல்கொடுக்க முடிகின்றது.

### ஒரு நாடு, நீதி வேறு

**கே:** **பயங்கரவாதத் தடைச் சட்டம் மறுபரிசீலனை செய்யப்படும் என அரசு ஐ.நாவுக்கு கூறியுள்ளதே. அரசியல் கைதிகள் விடுதலை யாவார்களா?**

**ப:** 2009ம் ஆண்டு யுத்தம் முடிவடைந்து விட்டதாக அரசு அறிவித்த பின்னர் அவசரகால ஒழுங்கு விதிகள் இல்லாதொழிக்கப்படும் என்றும் எந்த ஒரு அவசரகால நிலையும் இல்லாமல் நாடு சாதாரண நிலைக்குத் திரும்பிவிடும் எனவும் பொதுமக்கள் கருதினர்.

2011ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 25ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி மஹிந்த, அவசரகால ஒழுங்கு விதிகள் நீக்கப்பட்டுவிட்டதாக அறிவித்தபோது அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற எதிர்பார்ப்பு காணப்பட்டது. ஆனால் அவசர கால ஒழுங்கு விதிகளின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டவர்கள் எவருமே விடுதலை செய்யப் படவில்லை. இன்றும் வழக்கு விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதே வேளையில் தற்பொழுது மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலகத்துக்கு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மறுபரிசீலனை செய்யப்படவுள்ளதாக அரசாங்கத்தினால் பதிலளிக்கப்பட்டுள்ளது . அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கத்தின் முன்னேற்றத்துக்காக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் விதிமுறைகளை மறுபரிசீலனை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளதாக அரசாங்கம் கூறியுள்ளது. குறிப்பாக உயர் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குக்களை சட்டமா அதிபர் மறு ஆய்வு செய்கின்றார் . தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின்உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை விரைவாக முடிப்பது தொடர்பாகவும் ஆராயப்படுகின்றன என அரசாங்கம் தனது பதிவில் கூறியுள்ளது . ஆனால், "ஒரு நாடு ஒரு நீதி" என்பது அரசியல் கைதிகள் விடயத்தில் கடைப்பிடிக்கப்படாமை வெளிப்படையாகவே அவதானிக்கத்தக்கதாகும்.எனவே பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மறுபரிசீலனை செய்யப்போவதாக ஐ.நாவை ஏமாற்றவே அரசாங்கம் சொல்லியிருப்பதாக நான் கருதுகின்றேன். அவ்வாறில்லாமல் உண்மையாகவே அரசாங்கம் இதய சுத்தியோடு செயற்பட்டு தமிழ் அரசியல் கைதிகளை விடுவித்தால் அதை விட பேரானந்தம் எனக்கு வேறு கிடைக்காது.

### அமைதியும் அடையாளம் காட்டலும்

**கே:** **அரசியல்ரீதியில் சமூகத்தை வழிநடத்தும் ஆற்றல் மிக்க தகுதிவாய்ந்தான நீங்கள் ஏன் இன்னும் அமைதியாகவே இருக்கின்றீர்கள்?**

**ப:** அமைதியாகஇருத்தல் என்பதல்ல .எனது பணிகளை எப்போதும் நான் முன்னெடுத்துக் கொண்டேஇருக்கின்றேன். சில இடங்களில் அமைதியாக இருப்பதென்பது, கடமையைச் செய்வதில் இருந்து விலகுவதாக அர்த்தப்படாது. நமது மக்களுக்கு தமிழ்த் தேசியத்தின் எதிரிகளை அடையாளங்காட்ட வேண்டிய இருக்கின்றது. அத்தகைய எதிரிகள் தமிழ்த் தேசியத்துக்கு எந்தளவுக்கு அச்சுறுத்தல் மிகுந்தவர்கள்என்பது மிகவும் கவனமாகப்பார்க்கப்பட வேண்டியதாகும்.

**கே:** **சட்டத் தெரிவும் சமூகப்பற்றும் கொண்ட உங்களுக்கு எதிராக அரசியல் ரீதியில் முடுக்கிவிடப்பட்டுள்ள சதிகள் கட்சிக்குள் இருந்தே வெளிப்படுவதாக அறிய முடிகின்றது. அதை எப்படி எதிர்கொள்கின்றீர்கள்?**

**ப:** அரசியல் களம் சதிகாரர்களால் நிறைந்தது. அதற்காக மக்களுக்கான அரசியல் செயற்பாடுகளிலிருந்து நான் ஒதுங்கிக்கொள்ளப்போவதில்லை. தமிழ்த்தேசியத்தின் எதிரிகள் சிலரிடமிருந்தே எனக்கான எதிர்ப்பு திட்டமிட்டு ஏற்படுத்தப்படுகின்றது. அவற்றை வீட்டுக்குள்ளிருந்தே எதிர்கொள்வேன். போலிகள் எல்லாக் காலத்திலும் வெற்றியோடு நிலைப்பதில்லைதானே? மக்கள் வெகுவிரைவில் எல்லாவற்றையும் புரிந்து கொள்வார்கள்.



ஆர்.லயனல்

# அசத்திய அஸ்வின்

சர்வதேச கிரிக்கெட் சபையின் பெப்ரவரி மாதத்துக்கான சிறந்த வீரராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் இந்திய அணியின் சகலதுறை வீரர் அஸ்வின்.

இந்தியா இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் அண்மையில் முடிவடைந்தது. சென்னையில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் இந்திய அணி தோல்வியடைந்த போதிலும் அதன் பின்னர் நடைபெற்ற மூன்று ஆட்டங்களிலும் வெற்றிபெற்று தொடரை 3:1 என்று கைப்பற்றி 'டெஸ்ட் சம்பியன்ஸ் லீக்' இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது. இந்திய அணியின் இந்த வெற்றிக்கு முக்கிய காரணமாக அஸ்வினே இருந்தார்.

இறுதி மூன்று ஆட்டங்களிலும் அற்புதமான பந்துவீச்சை அஸ்வின் வெளிப்படுத்தினார். அத்துடன் துடுப்பாட்டத்திலும் ஒரு சதம் உள்ளடங்கலாக குறிப்பிடத்தக்க அளவு பங்களிப்பை வழங்கியுள்ளார். இந்தத் தொடரில் அஸ்வின் தொடராட்ட நாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டார். இந்திய அணியை இறுதியாட்டத்துக்கு அழைத்துச் சென்றதால், அவர் பெப்ரவரி மாதத்தின் சிறந்த வீரராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



# நாடகம் விடும் நேரம்தான் உச்சக்காட்சி நடக்குதம்மா..!

ஆர்.பிரகாஷ்

பிரிட்டனின், குறிப்பாக பக்கிங்ஹாமின் மனநிலை, நாடித்துடிப்பு என அனைத்திலும் இன்று வரை 'வெள்ளைத்துவ நிறத்து வேசம்' நிறைந்துள்ளது. அரச குடும்பத்துக்குள் வெள்ளையர்கள் என்ற ஆதிக்கப் போக்கு இன்றளவும் நிலைபெற்றுள்ளது என்பதற்கு சாட்சியாகியுள்ளனர் பக்கிங்ஹாம் அரண்மனையின் முன்னாள் இளவரசர் ஹரியும், அவரது மனைவி மேகனும். 'என் கருவில் வளர்ந்த மகனின் நிறம் தொடர்பில் அரச குடும்பத்துக்குக் கவலை இருந்தது. ஆபிரிக்க அமெரிக்கரான எனக்குப் பிறக்கும் மகனின் நிறம் கறுப்பாக இருந்துவிட்டால் அவனுக்குரிய பாதுகாப்பு, இளவரசர் அங்கீகாரம் என்பவை கிடைக்காமல் போகக்கூடும் என்ற உரையாடல்கள் என் கண்முன்னே நடந்தன. பல தடவைகள் தற்கொலை செய்ய எண்ணுமளவுக்கு பங்கிங்ஹாமில் நான் நடத்தப்பட்டேன்' என்று தற்போது தெரிவித்துள்ளார் மேகன். முப்பத்தெட்டு வயதாகும் மேகன் மார்கெல் அமெரிக்காவில் லொஸ் ஏஞ்சல்ஸில் பிறந்தவர். அவருடைய தாய் டோரியா ரேக்லேண்ட் ஆபிரிக்க இன அமெரிக்கர். தந்தையார் ஐரோப்பாவின் காகசஸ் மலைப்பகுதியிலிருந்து அமெரிக்காவில் குடியேறிய ஐரோப்பியர். எனவே, மேகன் ஆபிரிக்க அமெரிக்கர். 'தூய' பிரிட்டிஷ் குருதிக்குள் ஆபிரிக்க அமெரிக்கக் குருதி கலந்தது நிச்சயம் பிரிட்டிஷாரின் தோரணைக்கு சிறிது பங்கத்தை ஏற்படுத்தவே செய்திருக்கும்.

அரச குடும்பத்துக்கும் மேகன் ஹரி தம்பதிக்கும் இடையில் முறுகல்களும் மனஸ்தாபங்களும் கடந்த இரண்டு ஆண்டுகளாகவே இருந்து வருகின்றன. இந்த முறுகல்கள் காரணமாகத்தான் அரச குடும்பத்தை விட்டுப் பிரிந்த அவர்கள் இருவரும் அரச பணத்தை, பாதுகாப்பை, பரம்பரைச் சொத்தை உதறித் தள்ளிவிட்டு அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்து வாழ்கின்றனர். இந்த வரலாற்றுப் பிரிவுக்கு என்ன காரணம்?. அரச குடும்பத்தில் இருந்து அதுவும் இங்கிலாந்து அரச குடும்பத்தில் இருந்து பிரிந்து செல்லும் அளவுக்கு என்ன நடந்தது என்று பல வாதப் பிரதிவாதங்கள் சென்றுகொண்டிருந்த நிலையில்தான், அந்தப் பின்னணி பாரதூரமானதும் நியாயமானதும் என்று மேகனால் உணர்த்தப்பட்டிருக்கின்றது.

உலக உலா

ஒருவேளை ஹரி அரச குடும்பத்தில் இருந்து பிரியாமல், அனுசரித்துச் செல்லும் போக்கைக் கையாண்டிருந்தால் மேகனின் முடிவும்கூட இளவரசி டயானாவைப் போன்றதாக , அதாவது ஹரியின் தாயாரின் முடிவாகத்தான் அமைந்திருக்கும். தன் தாய்க்கு நிகழ்ந்தது தன் தாரத்துக்கு நிகழ்ந்துவிடக்கூடாது என்பதில் ஹரி உறுதியாக நின்றுள்ளார். டயானா, மேகன் இடையிலான பின்னணி வேறுபட்டிருந்தாலும் பிரிட்டன் அரண்மனைக்குள் இருந்து பார்க்கையில் இருவரும் கிட்டத்தட்ட ஒரே வகையறாதான். ஒருவேளை இந்தப் பிரிவுக்கு ஹரி உடன்பட்டிருக்காவிட்டால் நாளை மேகனுக்கும் ஹரிக்கும் இடையில் அன்பு குறைந்திருக்கும். டயானாவைப் போன்று மேகனும் அரச குடும்பத்தில் இருந்து தூரமாக வைக்கப்பட்டிருந்திருப்பார். பின்னர் விவாகரத்து நடைபெற்றிருக்கும். இது இன்னொரு டயானாவை பிரிட்டிஷுக்குக் காண்பித்திருக்கும். நல்லவேளையாக மாளிகையை விடவும் மனநிம்மதியே முக்கியம் எனக் கருதி ஹரி எடுத்த முடிவால், இன்றும் அவர் மகிழ்வோடு இருக்கிறார்.

ஆனால் ஹரியும், மேகனும் கொளுத்திப்போட்ட 'இனத்துவேசக்' குற்றச்சாடு குண்டால் பக்கிங்ஹாம் அரண்மனை அதிர்ந்து கொண்டிருக்கிறது. வேறு யாராவது சொன்னால் அதைக் கட்டுக்கதை என்று அரசகுடும்பம் பொய்க் குற்றச்சாட்டாக அதனை மாற்றியிருக்கும். ஆனால் இங்கோ நிலைமை வேறு. இதுநாள் வரை அந்த அரண்மனைக்குள் பிறந்து வளர்ந்த இளவரசரே இப்படி ஒரு குற்றச்சாட்டை முன்வைத்ததால் ஆடிப்போன அரச நிர்வாகம், 'இது குறித்து தீவிர கவனம் எடுக்கிறோம்' என்ற பாணியில் பட்டும் படாமல் ஒற்றைப்பதிலை தந்துவிட்டு, 'கப்சிப்' என்றிருக்கிறது. சிலவேளைகளில் அரண்மனையின் அமைதிக்குப் பின்னால், இன்னொரு கொலைக்கான திட்டங்களும் தீட்டப்படலாம். ஹரி, மேகன் கவனத்தோடு இருப்பது நல்லது என்று அவர்களின் அபிமானிகள் சொல்கிறார்கள். கடந்த கால வரலாறு , இங்கிலாந்து அரச குடும்பத்தைப் பற்றி சொல்லிச் சென்ற பாடம் அது. அதே பாடம் மீண்டும் செல்லுபடியாக ஹரியும், மேகனும் இடமளிக்கப்போவதில்லை என்றே படுகின்றது.



# பலமிழந்ததா பார்சிலோனா?

ஸ்பெய்ன் கழகங்களுக்கு இடையில் நடைபெறும் லா லிகா தொடரில் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தும் பார்சிலோனா அணி, லா லிகாவைத் தாண்டிய அதாவது ஸ்பெய்ன் எல்லைக்கு அப்பாற்பட்ட கிண்ணமொன்றைக் கைப்பற்றுவதென்பது அரிதான விடயமாகவே மாறியுள்ளது. கழகங்களுக்கு இடையிலான உலகக்கிண்ணத் தொடராக இருக்கட்டும், அல்லது உலகப் புகழ்பெற்ற சம்பியன்ஸ் லீக் தொடராக இருக்கட்டும் 16 அணிகளுக்கு இடையிலான சுற்றுடன் (காலிறுதிக்கு முன்னைய சுற்று) பார்சிலோனா வெளியேறிவிடுவது அண்மைக்காலமாகத் தொடர்கின்றது. தற்போது நடைபெற்றுவரும் சம்பியன்ஸ் லீக் தொடரிலும் அதேநிலைதான்.

சம்பியன்ஸ் லீக் தொடரில் பார்சிலோனாவின் '16' சுற்று பிரான்ஸின் பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணியுடன் என்று நிர்ணயிக்கப்பட்டது. இந்தச் சுற்றின் முதலாவது லெக்கில் (16 சுற்றில் இரு அணிகளும் சொந்த மைதானத்திலும் எதிரணியின் மைதானத்திலும் தலா ஒரு முறை மோத வேண்டும்) 1:4 என்று படுதோல்வியடைந்த பார்சிலோனா, இரண்டாவது லெக்கில் 1:1 என்று சமன்செய்தது. ஒட்டுமொத்தத்தில் 2:5 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்து வெளியேறியது.

நெய்மர் சுவாரஸ் மெஸ்ஸி கூட்டணி உடைந்த பின்னர் தன்னைப் பலமான அணியாக மீண்டும் நிரூபிக்க வேண்டும் என்ற கட்டாயத்தில் இருக்கும் பார்சிலோனாவுக்கு இந்த வருடம் பேரிடியே இறங்கியுள்ளது. அதிலும் ஸ்பெய்ன் கழகங்களுக்கு வெளியே ரொனால்டோவுக்கு நிகராகத் தன்னை நிரூபிக்க வேண்டும் என்ற கட்டாய நிலையில் உள்ள மெஸ்ஸிக்கும் இந்த வருடம் கடும் ஏமாற்றம்தான். பார்சிலோனாவின் பலமெல்லாம் உண்மையிலேயே ஸ்பெய்னில்தான் போலும்.

'குண்டுச் சட்டிக்குள் குதிரை...'